சிங்கிஸ் ஐத்மாத்தவ்

அன்னை வயல்



சிங்கிஸ் ஐத்மாத்தவ் (பிறப்பு 1928) பல தேசிய இனக் கூறுகள் இணைந்திருக்கும் சோவியத் இலக்கியத்தின் மிக முக்கிய மான, மிகச் சிறந்த எழுத்தாளர் மட்டு மல்ல; இன்றைய உலகத்தில் மிகவும் அதிக மாகப் படிக்கப்படுகின்ற எழுத்தாளர் களில் ஒருவராகவும் அவர் இருக்கிறார். சிங்கிஸ் ஐத்மாத்தவ் தன்னுடைய நூல் களில் தான் பிறந்த கிர்கீஸியாவையும் அதன் மக்களையும் ஸ்டெப்பி நிலங்களையும் அற்புதமான மலைகளைப் பற்றியும் எழுதுகிறார். அவருடைய உரை நடையில் கவித்துவமும் உண்மையான சமூகக் கடமையும் ஒளிவீசுகின்றன. ஏனென்றால் ''இந்த உலகத்தில் நம்முடைய நிலை எப்படி இருந்தாலும், மனிதர்களிடம் பிறப்பும் மரணமும் இருக்கின்ற வரை உண்மை அழியாது'' என்று அவர் கூறுகிறார்.

தந்தையே, நீ எங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கிறுயோ, அறியேன். உனக்கு, தோரேக்குல் ஐத்மாத்த வுக்கு, இதை அர்ப்பணிக்கிறேன். தாயே, எங்கள் நால்வரையும் நீயே பேணி வளர்த்தாய். உனக்கு, நகீமா ஐத்மாத்தவாவுக்கு, இந்நூலைச் சமர்ப்பிக்கிறேன்.

சிங்கிஸ் ஐத்மாத்தவ்

அன்னை வயல்

குறுநாவல்

ராதுகா பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்
பதிப்பாசிரியர்: நா. தர்மராஜன், எம். ஏ.
ஓவியர்: அலீன் மென்நிபாய்

Чингиз Айтматов

МАТЕРИНСКОЕ ПОЛЕ

Повесть

На тамильском языке

Chinghis Aitmatov

MOTHER-EARTH

Short Novel

In Tamil

வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தனமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் ராதுகா பதிப்பகம் மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து Raduga Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR. என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

முதலாவது பதிப்பு—1966
இரண்டாவது பதிப்பு—1985
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

A $\frac{4702280200-83}{031(05)-85}$ 296-85 ISBN 5-05-000444-6

1

அவள் புதிதாகச் சலவை செய்த வெள்ளை உடையும் பஞ்சு வைத்துத் தைத்த கறுப்பு ஜிப்ஸிக் கோட்டும் வெள்ளைத் தலைக்குட்டையும் அணிந்து, அரிதாள்களுக்கு நடுவே ஒற்றையடிப் பாதையில் மெதுவாக நடக்கிறாள். அக்கம் பக்கத்தில் யாருமே இல்லை. கோடைகாலச் சந்தடிகள் அடங்கிவிட்டன. வயலில் ஆட்களின் குரல்கள் கேட்கவில்லை. நாட்டுப்புறப் பாதைகளில் லாரிகள் புழுதி கிளப்பவில்லை. தொலையில் அறுவடை இயந்திரங்கள் தென்படவில்லை. கால் நடை மந்தைகள் அறுவடை முடிந்த வயல்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை.

பழுப்பு நிற நெடுஞ்சாலைக்கு அப்பால் தொலையில் கண்ணுக்கு எட்டாதவாறு பரந்திருக்கிறது கூதிர்கால ஸ்தெப்பி வெளி. புகை நிறத்தில் மேகக் கூட்டங்கள் அதற்கு மேலே ஓசையின்றி மிதக்கின்றன. வயல்மீது இரைச்சலின்றி வீசும் காற்று, சீகுகளையும் உலர்ந்த புல் தாள்களையும் திரட்டிக் கொண்டு சத்தமில்லாமல் ஆற்றை நோக்கிச் செல்கிறது. காலைக் குளிரில் நனைந்த

புல் மணக்கிறது. நிலம் அறுவடைக்குப் பின்னர் இளைப்பாறுகிறது. விரைவிலேயே மோசமான பருவம் தொடங்கிவிடும். மழை கொட்டும், முதல் வெண்பனி தரைமேல் பொடி தூவும், பனிப் புயல்கள் சீறும். இப்போதோ இங்கு நிசப்தமும் அமைதியும் இருக்கின்றன.

அவளுடைய செயலில் குறுக்கிட வேண்டாம். இதோ அவள் நின்று, ஒளியற்ற முதிய விழிகளால் நாற்புறமும் நெடு நேரம் நோக்குகிறுள்.

''வணக்கம் வயலே'' என்று தணிந்த குரலில் சொல்லுகிறுள்.

''வணக்கம் தல்கோனே. வந்து விட்டாயா? இன்னும் மூப்படைந்துவிட்டாய். ஒரேயடியாக நரைத்துப் போனுய். தடியூன்றி நடக்கிருய்.''

''ஆம், வயது ஆகிக்கொண்டு போகிறது. மேலும் ஓர் ஆண்டு முடிந்துவிட்டது. வயலே, உனக்கு, இன்னும் ஓர் அறுவடை நடந்து விட்டது. இன்று நினைவு நாள்.''

''தெரியும். உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன், தல்கோனே. நீ என்ன, இந்தத் தடவையும் தனியாகத்தான் வந்திருக்கிருயா?''

''அது தான் பார்க்கிருயே, மறுபடியும் தனியாகத் தான்.''

''அப்படியானுல் நீ அவனுக்கு இதைப் பற்றி இன்னும் ஒன்றுமே சொல்லவில்லையா?''

''இல்லை, நான் துணியவில்லை.''

''யாரேனும் தற்செயலாக வாய் தவறி ஏதேனும் சொல்லிவிட மாட்டார்கள் என்று நீ நினைக்கவில்லையா?''

''அப்படி நினைக்கவில்லை. ஒரு நாள் அவனுக்கு எல்லாம் தெரியத் தான் போகிறது. குழந்தை தான் இப்போது பெரியவன் ஆகிவிட்டானே. இனிமேல் மற்றவர்களிடமிருந்தும் அவனால் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும். ஆனாலும் எனக்கு அவன் இன்னமும் குழந்தை தான். எனக்கு பயமாயிருக்கிறது. பேச்சைத் தொடங் கவே அஞ்சுகிறேன்.''

''இருந்தாலும் மனிதன் உண்மையை அறிந்து கொள்ள வேண்டும், தல்கோனே.''

''புரிகிறது. எப்படி அவனுக்குச் சொல்வது என்பதுதான் சிக்கல். நான் அறிந்திருப்பதை, என் அருமை வயலே, நீ அறிந்திருப்பதை, எல்லோரும் அறிந்திருப்பதை, அறியாதவன் அவன் ஒருவனே அல்லவா? அதை அவன் அறிந்துகொள்ளும் பொழுது என்ன நினைப் பான்? நடந்ததை எப்படி மதிப்பிடுவான்? அறி வாலும் உள்ளத்தாலும் உண்மையை கிரகித்துக் கொள்வானா? பார்க்கப் போனால் சின்னவன் தானே இன்னும். அது தான் சிந்திக்கிறேன், அவன் வாழ்க்கைக்கு முதுகைத் திருப்பிக்கொள் ளாமல் எப்போதும் அதை நேரிட்டு நோக்கும் வகையில் எப்படி இருப்பது, எப்படிச் செய்வது என்று சிந்திக்கிறேன். ஆ, சும்மா இரண்டொரு வார்த்தைகளில் கதை போலச் சொல்ல முடிந் தால்! இப்போது கொஞ்ச காலமாக இதைப் பற்றியே நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். ஒரு நாளைப் போல ஒரு நாள் இருப்ப தில்லையே. திடீரென்று நான் கண்ணை மூடிவிட

லாமே. பனிக்காலத்தில் ஒரு தரம் நோய் வந்துவிட்டது, படுக்கையில் கிடந்தேன். இது தான் முடிவு என்று எண்ணினேன். சாவைக் கூட நான் அவ்வளவு அஞ்சவில்லை. சாவு வந் தால் நான் எதிர்க்கப் போகிறேனா? ஆனால் அவனைப் பற்றியே, அவன் கண்களைத் திறக்க எனக்கு வாய்க்காமல் போய்விடுமோ என்றே அஞ்சினேன். அவனைப் பற்றிய உண்மையை என்னோடே கொண்டு போய்விடுவேனோ என்று பயந்தேன். எதற்காக நான் அப்படி ஏங்கி னேன் என்பது அவனுக்குப் பிடிபடவில்லை... வருத்தப்படத் தான் செய்தான். பள்ளிக்கூடத் துக்குக் கூடப் போகாமல் கட்டிலின் பக்கத் திலேயே சுற்றி வந்துகொண்டிருந்தான் — எல் லாம் அவன் அம்மா போலவே. 'பாட்டீ, பாட்டீ! தண்ணீர் வேண்டுமா? அல்லது மருந்து தரட்டுமா? இன்னும் கொஞ்சம் கதகதப்பாகப் போர்த்துகிறேனே?' என்று பரிந்தான். ஆனால் எனக்கு உறுதிப்படவில்லை, சொல்ல மாட்டேன் என்று வாய் மறுத்துவிட்டது. அவனுக்கு ரொம் பவும் நம்புகிற சுபாவம், சூதுவாது தெரியாது. காலம் கழிகிறது, எதிலிருந்து பேச்சைத் தொடங்குவது என்று எனக்குத் தெரியவே இல்லை. எப்படி எல்லாமோ யோசித்துப் பார்த்து விட்டேன். எவ்வளவுதான் சிந்தித்தாலும் ஒரே முடிவுக்குத் தான் வருகிறேன். நடந்ததை அவன் சரியாக மதிப்பிட வேண்டும், வாழ்க் கையை அவ்ன் சரிவரப் புரிந்துகொள்ள வேண் டும் என்றால், அவனைப் பற்றி மட்டுமே அல்ல,

அவன் விதியைப் பற்றி மட்டுமே அல்ல, வேறு பல மனிதர்களையும் அவர்களுடைய விதிகளையும் பற்றி, என்னைப் பற்றி, என் காலத்தைப் பற்றி, என் வயலே, உன்னைப் பற்றி, நம் அனைவரு டைய வாழ்க்கையையும் பற்றி நான் அவனுக்குச் சொல்லியாக வேண்டும். எந்த சைக்கிளில் அவன் எதையும் சந்தேகிக்காமல் சவாரி செய் கிருனே, பள்ளிக்கூடம் போய் வருகிருனே, அந்த சைக்கிளைப் பற்றியுங்கூட நான் அவனுக்கு உண்மையைத் தெரிவிக்க வேண்டும். ஒரு வேளை அப்படிச் செய்வது தான் சரியாயிருக்கும். இதி லேதான் எதையும் விடவோ சேர்க்கவோ முடி யாதே: வாழ்க்கை நம் எல்லோரையும் ஒரே மாவாகப் பிசைந்துவிட்டதே, ஒரே முடிச்சில் சேர்த்துப் பிணைத்துவிட்டதே. இந்த வரலாருே, பெரியவர்களில் கூட எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாதபடி சிக்கலானது. தானே அதை அனுபவிக்க வேண்டும், உள்ளத்தால் புரிந்துகொள்ள வேண்டும்... அது தான் தயங்கு கிறேன்... இது என் கடமை என்பதை அறி வேன். இதை நிறைவேற்ற முடிந்தால் சாவது கூடப் பயங்கரமாக இருக்காது...''

''உட்கார், தல்கோனே. நிற்காதே, உன் கால் கள் நோய் உள்ளவை ஆயிற்றே. கல்லின் மேல் அமர்ந்துகொள். இருவரும் சேர்ந்து யோசிப்போம். நீ முதல் தடவை இங்கே எப் போது வந்தாய், நினைவு இருக்கிறதா?''

''ஞாபகப்படுத்திக்கொள்வது கடினம். அதற் குப் பின் எவ்வளவெல்லாம் நடந்துவிட்டது!''

''நினைவுபடுத்திக்கொள்ள முயன்று பார், தல் கோனே. தொடக்கத்திலிருந்து எல்லாவற்றையும் நினைவுபடுத்திக்கொள்.''

2

எல்லாம் எனக்கு மிக மங்கலாகவே நினைவுக்கு வருகின்றன: நான் சின்னவளாக இருந்த பொழுது அறுவடை நாட்களில் என்னைக் கையைப் பிடித்து இங்கே அழைத்துக்கொண்டு வந்து வைக்கோல் போரின் நிழலில் உட்கார வைப்பார்கள். நான் அழாமல் இருப்பதற்காக ஒரு ரொட்டித் துண்டு தருவார்கள். அப்புறம் நான் கொஞ்சம் வளர்ந்ததும் வயலைக் காவல் செய்வதற்காக இங்கே ஓடி வருவேன். இள வேனில் காலத்தில் கால் நடைகளை மலைகளுக்கு ஓட்டிச் செல்வோம். அந்தக் காலத்தில் நான் விரைந்த ஓட்டமும் பறட்டைத் தலையுமாக இருந்தேன். கூச்சலும் கும்மாளமும் நிறைந்த, கவலையற்ற காலம்—பிள்ளைப் பருவம்! எனக்கு நினைவு இருக்கிறது—தாழ்நில மஞ்சள் சமவெளி யிலிருந்து மேய்ப்பர்கள் செல்வார்கள். மந் தைக்குப் பின் மந்தையாகப் புதுப் புல்லை, குளுமையான மலைப் பகுதிகளை நோக்கி விரை யும். அப்போது நான் அசடாக இருந்தேன் என்று நினைக்கிறேன். குதிரைக் கூட்டங்கள் காட்டாற்று வெள்ளம்போல ஸ்தெப்பி வெளி யிலிருந்து பாய்ந்து ஓடும். எதிர்ப்பட்டோமோ, நொடிப்போதில் மிதித்துத் துவைத்துவிடும்.

புழுதிப் படலம் ஒரு மைல் வரை காற்றில் மிதந்துகொண்டிருக்கும். நான் கோதுமை வயலில் மறைந்துகொண்டு திடீரெனக் காட்டு மிருகம் போலத் துள்ளிப் பாய்ந்து குதிரைகளைப் பய முறுத்துவேன். அவை மிரண்டு ஒதுங்கும். குதிரை மேய்ப்பர்கள் என்னைத் துரத்துவார்கள்.

''ஏய் பறட்டை! இதோ பார் உன்னை என்ன செய்கிறோம்!'' என்பார்கள்.

ஆனால் நான் அவர்களுக்கு அகப்படாமல் தப்பிப் பாசன வாய்க்கால் வழியாக ஓடிவிடு வேன்.

செம்மறியாடுகளின் செம்பழுப்பு மந்தைகள் தினந்தோறும் இந்த வழியாகச் செல்லும். ஆடு களின் வால் சதை புழுதியில் புரண்டாடும். அவற்றின் குளம்புகள் ஆலங்கட்டிகள் விழுவது போலச் சடசடக்கும். தொண்டை கம்மிப் போன கறுத்த மேய்ப்பர்கள் ஆடுகளை ஓட்டிச் செல்வார்கள். பின்பு செல்வச் செழிப்புள்ள கிராமங்களைச் சேர்ந்த நாடோடிகள் ஒட்டக மந்தைகளை ஓட்டிப் போவார்கள். ஒட்டகப் பால் நிறைந்த தோல் பைகள் அவற்றின் சேணங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும். கன்னி களும் மணப் பெண்களும் பட்டுடை அணிந்து விரைவுள்ள சவாரிக் குதிரைகள் மேல் அசைந் தாடிச் செல்வார்கள், பசும் புல்வெளிகளைப் பற்றியும் தூய ஆறுகளைப் பற்றியும் பாட்டுக் கள் பாடுவார்கள். நான் வியப்பேன், உல கில் உள்ளவை யாவற்றையும் மறந்து அவர்கள் பின்னே ஓடுவேன். பார்வையிலிருந்து மறை

யும் வரையில் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, ''நமக்கும் இந்த மாதிரி அழகான உடையும் குஞ்சம் வைத்த தலைக்குட்டையும் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!'' என்று நான் நினைப்பேன். அப்பொழுது நான் யார்? ஜாத்தக் எனப்பட்ட பண்ணைத் தொழிலாளியின் மகள், வெறுங்காலோடு திரிந்து கொண்டிருந்தேன். கடனுக்குப் பிணையாக என் பாட்டனார் கிராம உழவராக வைக்கப்பட்டார். அதுவே எங்கள் குடும்பத் தொழில் ஆகிவிட்டது. நான் ஒருபோதும் பட்டு உடை அணிந்ததில்லை என்றாலும் அழகான பெண்ணாக வளர்ந்தேன். என் நிழலைப் பார்ப்பதில் எனக்கு விருப்பம். நடந்து கொண்டே, கண்ணாடியில் பார்த்துக் கொள்வது போல என் நிழலைப் பார்த்துக் கொள்வேன்... நான் மெய்யாகவே விசித்திரப் பிறவியாக இருந்தேன். எனக்குப் பதினேழு வயது நடக்கையில் தான் ஸுவான் குலை அறுவடையின்போது சந்தித்தேன். மேல் தலாஸ் என்ற இடத்திலிருந்து பண்ணைக் கூலியாளாக வேலை செய்ய அந்த வருஷம் அவன் வந்திருந்தான். இப்போதுகூட நான் கண்களை மூடிக்கொள்ள வேண்டியது தான், அந்தக் காலத்தில் அவன் எப்படி இருந்தானோ அப்படியே அவனைக் காண்கிறேன். கட்டான இளைஞன். பத்தொன்பது வயது இருக்கும்... சட்டை போட்டுக் கொள்ளாமல் பஞ்சுவைத்துத் தைத்த பழைய ஜிப்ஸிக் கோட்டை வெற்றும் உடம்பில் அணிந்திருப்பான். வெயிலில் அடிபட்டு

மேனி எல்லாம் புகையுண்டது போலக் கறுத்திருக்கும். கன்ன எலும்புகள் கரிய தாமிரம் போலப் பளபளக்கும். பார்வைக்கு ஒடிசலாக, மெலிந்தவனுகத் தோன்றுவான். ஆனுல் அவனுடைய நெஞ்சு உரம் உள்ளது, கைகளோ, இரும்பு தான். வேலையிலும் அவனைப் போலத் துடியானவனைக் காண்பது லேசல்ல. கோதுமைப் பயிரை அனுயாசமாக, துப்புரவாக அறுவடை செய்வான். அறுப்பரிவாளின் சரசரப்பும் அறுபட்ட கதிர்கள் விழும் ஒலியும் மட்டுமே பக்கத்தில் கேட்கும். சில பேர் வேலை செய்வதைப் பார்க்கவே இன்பமாயிருக்கும். ஸூவான்குல் அம்மாதிரி ஆள். நான் விரைவாக அறுவடை செய்பவள் என்று கருதப்பட்டேன். ஆனுலும் அவனுக்கு எப்போதுமே பின்தங்கிவிடுவேன். ஸூவான்குல் வெகு தூரம் முன்னே போய் விடுவான். அப்புறம், சில வேளைகளில் பின்னே பார்ப்பான். நான் அவனுக்குச் சமமாவதற்கு உதவும் பொருட்டுத் திரும்பி வருவான். எனக்கு ரோசம் பொத்துக்கொண்டு வரும். சீறி விழுந்து அவனை விரட்டுவேன்:

''உன்னை யார் அழைத்தார்கள், ஊம்? ஆளைப் பாரடா! விடு, நானே சமாளித்துக் கொள்வேன்!'' என்பேன்.

ஆனுல் அவன் மனத்தாங்கல் கொள்ள மாட்டான். வாய்க்குள் சிரித்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் தன் வேலையைப் பார்ப்பான். எதற்காகத்தான் நான் அப்போது எரிந்து விழுந்தேனே, அசடு?

நாங்கள் இருவரும் எப்போதும் வேலைக்கு முதலில் வருவோம். பொழுது அப்போது தான் புலரத் தொடங்கியிருக்கும். எல்லோரும் உறங்கிக் கொண்டிருப்பார்கள். அந்தச் சமயத்தில் நாங்கள் அறுவடைக்குப் புறப்பட்டுவிடுவோம். ஊருக்கு வெளியே, எங்கள் ஒற்றையடிப் பாதையில் ஸுவான்குல் எப்போதும் என்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பான்.

''நீ வந்துவிட்டாயா?'' என்பான்.

''நீ வெகு நேரத்துக்கு முன்பே போய்விட்டாயாக்கும் என்று நினைத்தேன்'' என நான் எப்போதும் பதில் சொல்வேன் — நான் இல்லாமல் அவன் எங்கும் போக மாட்டான் என்பது தெரிந்திருந்த போதிலும்.

அப்புறம் இரண்டு பேரும் சேர்ந்து செல்வோம்.

அதற்குள் பலபலவென்று விடிந்துவிடும். மலைகளின் மிக உயரமான, பனிச் சிகரங்கள் முதலில் பொன்மயமாக ஒளிரும். ஸ்தெப்பிக் காற்று எழில் நீல ஆற்றை நோக்கி ஓடை போலப் பாயும். இந்த வேனில் காலைகள் எங்கள் காதலின் உதயமாக விளங்கின. நாங்கள் இருவரும் சேர்ந்து நடக்கும் போது உலகம் முழுவதுமே கதைகளில் வருவதைப் போல வேறு விதமாகக் காட்சி அளிக்கும். மக்கள் மிதித்துத் துவைத்து உழுது போட்டிருக்கும் பழுப்பு நிற வயல் பூமியிலேயே எல்லாவற்றிலும் அழகான வயலாக மாறிவிடும். புலர் பொழுதை எங்களுடன் சேர்ந்து வரவேற்கும்

வைகறை வானம்பாடி. அது மிக மிக உயரே பறந்து புள்ளி போல வானில் மிதந்தவாறு மனித இதயம் மாதிரி அங்கே சிறகடித்துப் படபடக்கும். அதன் பாட்டுக்களில்தான் கட்டற்ற ஆனந்தம் எப்படி ஒலிக்கும்!..

''அதோ பார், நம்முடைய வானம்பாடி பாடத் தொடங்கிவிட்டது!'' என்பான் ஸுவான் குல்.

அற்புதம் என்ன வென்றால் எங்களுக்கே சொந்தமான வானம்பாடிகூட இருந்தது.

நிலாக்கால இரவோ? இனிமேல் ஒருபோதுமே அந்த மாதிரி இராத்திரி வராது போலும். அன்று மாலை நானும் ஸுவான்குலும் நிலவில் வேலை செய்வதற்காக வயலில் தங்கிவிட்டோம். பிரம்மாண்டமான தூய நிலா அதோ அந்த நீண்ட மலைச் சிகரங்களின் பின்னலிருந்து எழுந்ததும் வானத்தில் தாரகைகள் சட்டென்று கண்களை அகல விரித்தன. ஸுவான்குலையும் என்னையும் அவை நோக்குவது போல எனக்குத் தோன்றியது. நாங்கள் வரப்பு ஓரமாக ஸுவான்குலின் ஜிப்ஸிக் கோட்டை விரித்துப் படுத்துக் கொண்டிருந்தோம். வாய்க்கால் கரை தான் எங்களுக்குத் தலையணையாக விளங்கிற்று. அதைவிட மென்மையான தலையணை வேறு கிடையாது. எங்கள் முதல் இரவு அதுவே. அன்று முதல் வாழ்நாள் முழுவதும் ஒன்றாயி ருந்தோம்... உழைத்து உரமேறி இரும்பு போல் கனத்த கரத்தால் ஸுவான்குல் என் முகத் தையும் நெற்றியையும் கூந்தலையும் மெல்ல வரு

டிஞன். அவனுடைய நெஞ்சு அதிகமான ஆனந் தத்தில் எவ்வளவு தீவிரமாக, அடித்துக் கொண் டிருந்தது என்பது அவன் உள்ளங்கை வழி யாகக் கூட எனக்குக் கேட்டது.

''ஸுவான், நீ என்ன நினைக்கிறாய்? நாம் இன்பமாக இருப்போம், அல்லவா?'' என்று அப்போது நான் அவனிடம் தணிந்த குரலில் வினவினேன்.

''நிலமும் நீரும் எல்லாருக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டால், நம்மிடமும் சொந்த நிலம் இருந்தால், நாமும் உழுது, விதைத்து, நமது கோதுமையைக் கதிரடித்தால் அதுதான் நம்முடைய இன்பம். இதைவிட மேலான இன்பம் மனிதனுக்குத் தேவை இல்லை, தல் கோனே. குடியானவனின் இன்பம் தானே பயிரிடு வதும் அறுவடை செய்வதும்தான்'' என்று அவன் பதில் சொன்னான்.

எதனாலோ அவனுடைய வார்த்தைகள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன, இந்தச் சொற்கள் நெஞ் சுக்கு இதமாய் இருந்தன, நான் அவனை இறுகத் தழுவி, காற்றில் அடிபட்ட அவனுடைய கதகதப் பான முகத்தில் நெடுநேரம் முத்தமிட்டேன். அப்புறம் நாங்கள் வாய்க்காலில் நீந்திக் குளித் தோம், ஒருவர் மேல் ஒருவர் நீரை இறைத் தோம், கலகலவென்று சிரித்தோம். தண்ணீர் குளுகுளுவென்று இருந்தது, ஒளிவீசிற்று. அதில் மலைக் காற்றின் மணம் கமழ்ந்தது. பிறகு நாங்கள் கைகளைக் கோத்துக் கொண்டு படுத்து, வானையும் நட்சத்திரங்களையும் வெறுமே பார்த்துக்

கொண்டிருந்தோம். அந்த இரவு வானத்தில் நட்சத்திரங்கள் நிறைய இருந்தன.

அந்த நீல ஒளி மயமான இரவில் நிலமும் எங்களோடு இன்பத்தில் திளைத்தது. இதமான குளிர்ச்சியையும் அமைதியையும் பூமியும் அனுபவித்தது. ஸ்தெப்பி வெளி எங்கும் உயிர்ப்புள்ள நிம்மதி நிலவிற்று. வாய்க்காலில் நீர் மழலை கொஞ்சியது. 'தோன்னிக்' செடிகளின் தேன் மணத்தால் தலை கிறுகிறுத்தது. அவை பூத்துச் சொரிந்தன. சில வேளைகளில் எங்கிருந்தோ காஞ்சிரையின் வெதுவெதுப்பான நெடியுடன் வறண்ட காற்று வீசும். அப்போது வரப்பின் மேல் கோதுமைக் கதிர்கள் ஆடி அசைந்து சலசலக்கும். அந்த மாதிரி இரவு ஒரே ஒரு தடவை தான் இருந்தது போலும். நள்ளிரவில், சரியாகப் பாதி ராத்திரி வேளையில் நான் ஆகாயத்தில் பார்வையைச் செலுத்தினேன். வைக்கோல்காரனின் வழி என்று கிர்கீஸியர்கள் சொல்லும் ஆகாசகங்கை நட்சத்திரங்களுக்கு இடையே அகன்ற வெள்ளி வீதி போல வான முகடு முழுவதிலும் நெடுகச் சென்றிருந்ததைக் கண்டேன். ஸுவான்குலின் சொற்களை நினைவு படுத்திக்கொண்டேன். இந்த இரவில் வலிமை மிக்க, நல்ல வைக்கோல்காரன் ஒருவன் பிரமாண்டமான வைக்கோல் கட்டுடன் வான வழியில் நடந்து சென்றிருக்கலாம், பதர்களும் தானியங்களும் அவன் பின்னே தடங்காட்டும் அடையாளங்களாகச் சிதறியிருக்கலாம் என்று எண்ணமிட்டேன். எப்போதாவது எங்கள் கனவு நன

வானுல், என் ஸுவான்குலும் களத்திலிருந்து முதல் போரடித்த வைக்கோல் கட்டை இதே மாதிரிச் சுமந்துவருவான் என்று கற்பனை செய்து கொண்டேன். எங்கள் சொந்தக் கோதுமை வைக்கோலின் முதல் கட்டாக இருக்கும் இது. மணம் வீசும் இந்த வைக்கோல் கட்டுடன் அவன் நடக்கும்போது அவன் பின்னேயும் சிதறிய தானியங்களும் பதர்களும் இதே போன்ற தடம் இட்டுச் செல்லும். இந்த விதமாக எனக்குள் ளேயே கனவு கண்டேன். தாரகைகளும் என் னேடு சேர்ந்து கனுக் கண்டன. இந்த எண்ணங் கள் எல்லாம் பலிக்க வேண்டும் என்ற ஆசை திடீரென்று என் மனத்தில் தீவிரமாக எழுந் தது. அப்போதுதான் நிலத் தாயிடம் மனித மொழியில் முதன் முதலாகப் பேசத் தொடங் கினேன். நான் சொன்னேன்: ''நிலமே, எங்கள் எல்லோரையும் நீ நெஞ்சின் மீது தாங்குகிருய். எங்களுக்கு நீ இன்பம் அளிக்காவிட்டால் நீ எதற்காக நிலமாய் இருக்க வேண்டும், நாங் கள் பூமியில் எதற்காகப் பிறக்க வேண்டும்? நிலமே, நாங்கள் உன் குழந்தைகள். எங்களுக்கு இன்பம் தா. எங்களை மகிழ்ச்சியோடு வாழ வை!'' அன்று இரவு நான் இப்படிப் பேசிக் கொண்டேன்.

காலையில் கண்விழித்துப் பார்த்தபோது ஸுவான்குல் பக்கத்தில் இல்லை என்பதைக் கண்டேன். எப்போது எழுந்திருந்தானே தெரி யாது. மிக முன்னமே எழுந்துவிட்டான் போலும். அறுவடை நிலத்தில் புதிய கதிர்க்

கட்டுகள் எங்கும் வரிசை வரிசையாகக் கிடந்தன. எனக்கு ரோசமாயிருந்தது. அதிகாலையில் அவனோடு சேர்ந்து எவ்வளவு நன்முக வேலை செய்திருப்பேன்!..

"ஸாவான்குல், நீ ஏன் என்னை எழுப்ப வில்லை?" என்று கத்தினேன்.

என் குரல் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான். அந்தக் காலை நேரத்தில் அவன் எப்படி இருந்தான் என்பது எனக்கு நினைவு இருக்கிறது. இடுப்புக்கு மேல் வெற்று உடம்பு. அவனுடைய கறுத்த, வலிய தோள்கள் வியர்வையால் பளபளத்தன. அவன் நின்று, என்னை அடையாளம் கண்டுகொள்ளாதவன் போலக் களிப்புடனும் வியப்புடனும் நோக்கினுன். அப்புறம் உள்ளங்கையால் முகத்தைத் துடைத்துவிட்டு, "நீ நன்முகத் தூங்க வேண்டும் என்று விரும்பினேன்" எனப் புன்னகையுடன் கூறினுன்.

"நீயோ?" என்று கேட்டேன்.

"நான் தான் இப்போது இரண்டு பேர் வேலையைச் செய்கிறேனே" என்முன்.

இதைக் கேட்டு உள்ளுக்குள் எனக்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. ஆனுலும் ரோசமடைந்தவன் போலப் பாசாங்கு செய்தேன். கூச்சல் கிளப்பாதது தான் குறை.

"நேற்றைக்கு நீ கொடுத்த வாக்கு எங்கே போயிற்று? எல்லாவற்றிலும் நாம் சமமாயிருப்போம், ஈருடலும் ஒருயிருமாக இருப்போம் என்று சொன்னுயே" என்று கடிந்துகொண்டேன்.

ஸுவான்குல் அறுப்பரிவாளைக் கீழே போட்டான், அருகே ஓடிவந்து என்னைப் பற்றிக் கைகளில் தூக்கிக்கொண்டு முத்தமிட்டான்.

''இனிமேல் எல்லாவற்றிலும் இணைபிரியா திருப்போம், ஈருடலும் ஒருயிருமாக, என் அருமை வானம்பாடி, என் கண்ணே, அன்பே!..'' என்று கனிந்தான்.

அவன் என்னைக் கைகளில் தூக்கிக்கொண்டு இன்னும் என்னென்னவோ சொன்னான். வானம் பாடி என்றும் வேறு பல வேடிக்கைப் பெயர் களாலும் என்னை அழைத்தான். நானே அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு கலகலவென்று சிரித் தேன், கால்களை உதைத்தேன். சின்னக் குழந் தைகளைத் தானே வானம்பாடி என்று அழைப் பது வழக்கம்! அதனால்தான் நகைத்தேன். என்றாலும் அம்மாதிரிச் சொற்களைக் கேட்க எவ்வளவு இன்பமாக இருந்தது!

அப்போதுதான் சூரியன் உதித்தது, மலைக்குப் பின்னாலிருந்து விழிக் கோடியால் எட்டிப் பார்த் தது. ஸுவான்குல் என்னைத் தரையில் விட்டு விட்டு என் தோள்களைத் தழுவிக்கொண்டு, கதிரவனைப் பார்த்துக் கத்தினான்:

''அடேய், சூரியா, பார், இவள்தான் என் மனைவி! எப்பேர்ப்பட்டவள் என்று பார்! கிரணங்களாலும் ஒளியாலும் இந்தக் காட்சிக் காக எனக்குக் கட்டணம் செலுத்து!''

அவன் ஆழ்ந்த உணர்ச்சியுடன் சொன்னானோ அல்லது வேடிக்கைக்காகவோ, அறியேன். ஆனால் உடனே நான் வாய்விட்டு அழுதுவிட்டேன்.

பொங்கும் உவகையை அடக்க மாட்டாமல் வெறுமேதான் அழுதேன். ஆனந்தம் என் உள்ளத்தில் நிரம்பி வழிந்தது...

இதோ, இப்போதும் அதையெல்லாம் நினைத்துப் பார்க்கையில் எதனுலோ அழுகிறேன், அசடு. அதுவோ, வேறு கண்ணீர். வாழ்க்கையில் ஒரு தடவைதான் அந்தக் கண்ணீர் மனிதனுக்கு வாய்க்கும். எங்கள் வாழ்க்கை நாங்கள் கனவு கண்டதுபோலவே அமையவில்லையா என்ன? அமையத்தான் செய்தது. ஸுவான்குலும் நானும் இந்த வாழ்க்கையை எங்கள் கைகளாலேயே அமைத்துக்கொண்டோம். உழைத்தோம். கோடையோ பனியோ ஒருபோதும் களைக்கொட்டைக் கையிலிருந்து விடவில்லை. எவ்வளவோ வியர்வை சிந்தினேம். எவ்வளவோ பாடுபட்டோம். இதற்குள் புதிய காலம் வந்து விட்டது. நாங்கள் வீடு கட்டிக் கொண்டோம். ஏதோ சில கால்நடைகளை வாங்கிக்கொண்டோம். சுருங்கச் சொன்னல் மனிதர்களாக வாழத் தொடங்கினேம். எல்லாவற்றிலும் பெரிய விஷயம் என்னவென்ருல் ஒருவர் பின் ஒருவராக மூன்று மகன்கள் எங்களுக்குப் பிறந்தார்கள் — பொறுக்கி எடுத்தது போல. இப்போது சில சில வேளைகளில் ஒரே துயரம் நெஞ்சை வாட்டி வதைக்கிறது. அசட்டுத்தனமான எண்ணங்கள் மனத்தில் எழுகின்றன: எதற்காக இவர்களைப் பெற்றெடுத்தேன், ஆடுகள்போல, ஒரு, ஒன்றரை வருஷத்துக்கு ஒருவராக. மற்றவர்கள் மாதிரி மூன்று, நான்கு

ஆண்டுகள் இடை விட்டுப் பெற்றிருந்தால் ஒரு வேளை இந்தத் துன்பம் நேர்ந்திருக்காது. ஒரு கால் அவர்கள் பிறக்காமலே இருந்தால் நன்று யிருக்கும். என் குழந்தைகளே, துக்கம் காரண மாக, வேதனை பொறுக்க முடியாமல் நான் இப்படிச் சொல்லுகிறேன். தாய் அல்லவா நான், தாய்...

அவர்கள் எல்லோரும் முதல் தடவை இங்கே வந்தது எனக்கு நினைவு இருக்கிறது. ஸுவான் குல் முதல் டிராக்டரை இங்கே ஓட்டிவந்த நாளன்று இது நிகழ்ந்தது. இலையுதிர் காலத் திலும் குளிர் காலத்திலும் ஸுவான்குல் இடை விடாமல் அக்கரையிலுள்ள ஜரேச்யே கிராமத் துக்குப் போய், டிராக்டர் ஓட்டிகள் வகுப்பில் சேர்ந்து பயின்றான். டிராக்டர் என்றால் என்ன என்பதே எங்களுக்கு அப்போது சரியாகத் தெரி யாது. ஜரேச்யே போய் வருவது நெடுந்தூர நடை. ஸுவான்குல் வீடு திரும்புவதற்கு நள் ளிரவு ஆகிவிடும். அதனால் எனக்கு ஸுவான் குல் மேல் இரக்கமாகவும் மனத்தாங்கலாகவும் இருக்கும்.

''எதற்காக நீ இந்த விவகாரத்தில் தலையிட் டிருக்கிறாய்? குழுத் தலைவன் வேலை என்ன, மோசமாயிருந்ததோ?..'' என்று அவனைக் கடிந்து கொண்டேன்.

அவன் எப்போதும் போலவே அமைதியுடன் புன்னகைத்தான்.

''இரையாதே, தல்கோனை. கொஞ்சம் பொறு. இதோ இளவேனில் வந்து விடும், அப்போது

நீயே கண்டு தெளிந்துகொள்வாய். கொஞ்சம் பொறுத்துக்கொள்...'' என்ருன்.

நான் சொன்னது வெறுமே கோபத்தினுல் அல்ல. தன்னந்தனியாகக் குழந்தைகளையும் வீட்டு வேலையையும் கவனித்துக் கொள்வதும் அதோடு கூட்டுப்பண்ணையில் வேலை செய்வதும் லேசாயில்லை. இருந்தாலும் விரைவிலேயே நான் தன்னிலைக்கு வந்துவிட்டேன். அவனைப் பார்த்தேன். வழியில் அவன் குளிரால் விறைத்திருந்தான், பசித்திருந்தான். போதாக்குறைக்கு நான் வேறு அவனைச் சமாதானம் கூறும்படி நிர்ப்பந்தித்தேன். எனக்கே இது அசட்டுப் பிசட்டென்று இருந்தது.

''போனுல் போகிறது. கணப்பு அருகே உட்கார். சாப்பாடு எப்போதோ ஆறிப் போய் விட்டது'' என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் முணுமுணுத்தேன்.

ஸுவான்குல் வெறுமே விளையாடிக்கொண்டிருக்கவில்லை என்பதை என் உள்ளம் புரிந்துகொண்டது. டிராக்டர் ஓட்டியாகப் பயிற்சி பெறுவதற்கு ஏற்ற படிப்பாளி ஒருவன் கூட எங்கள் கிராமத்தில் அப்போது இல்லை. ஆகவே ஸுவான்குல் தானுகவே முன்வந்தான். ''நான் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளப் போகிறேன். குழுத் தலைவன் வேலையிலிருந்து எனக்கு விடுதலை அளியுங்கள்'' என்று கேட்டுக்கொண்டான்.

அவன் என்னவோ முன்வந்து விட்டான், ஆனுல் தலைக்கு மேல் வேலையைச் சுமத்திக் கொண்டான். இப்பொழுது நினைத்துப் பார்க்

கிறேன்—அது வேடிக்கையான காலம், குழந்தைகள் தகப்பன்களுக்குக் கற்பித்தார்கள். காஸிம், மாஸெல்பேக் இருவரும் பள்ளி மாணவர்கள். அவர்கள் தான் ஆசிரியர்களாகவும் விளங்கினுர்கள். மாலைகளில் வீடு உண்மையான பள்ளிக்கூடமாக மாறிவிடும். மேசை நாற்காலிகள் அப்போது கிடையாது, ஸுவான்குல் தரையில் படுத்துக்கொண்டு நோட்டுப்புத்தகத்தில் எழுத்துக்களைப் பெயர்த்து எழுதுவான். மூன்று மகன்களும் மூன்று புறங்களில் அவனைச் சூழ்ந்து கொண்டு கற்பிப்பார்கள். ''அப்பா, பென்சிலை நேராகப் பிடித்துக்கொள். பார், கோடு கோணி விட்டதே, கையைக் கவனி, அது நடுங்குகிறது, பார்த்தாயா? இதோ, இப்படி எழுது. நோட்டுப் புத்தகத்தை இப்படி வைத்துக் கொள்'' என்பார்கள். இல்லாவிட்டால் திடீரென்று தங்களுக்குள் பூசலிடத் தொடங்குவார்கள். தானே மற்றவர்களைவிட நன்ருக அறிந்தவன் என்று காட்டிக்கொள்ள ஒவ்வொருவனும் முயல்வான். மற்ற விவகாரங்களில் தகப்பன் அவர்களை அடக்கியிருப்பான். இப்போதோ அவர்கள் பேச்சை மரியாதையுடன் கேட்பான், ஏதோ அவர்கள் உண்மையான ஆசிரியர்கள் போல. ஒரு வார்த்தை எழுதுவதற்குள் படாத பாடு பட்டு விடுவான். வியர்வை அவன் முகத்திலிருந்து அருவியாய்க் கொட்டும்—ஏதோ அவன் எழுத்துக்கள் எழுதவில்லை, கதிரடிப்பு இயந்திரத்தில் வேலை செய்துகொண்டிருப்பது போல. நோட்டுப் புத்தகத்தையோ எழுத்துப் பாடபுத்தகத்தையோ

வைத்துக்கொண்டு அவர்கள் நால்வரும் ஒரே கூட்டமாக ஏதோ மாயம் பண்ணிக்கொண்டிருப்பார்கள். அவர்களைப் பார்க்கையில் எனக்குச் சிரிப்பு பீறிடும்.

''குழந்தைகளா, அப்பாவை நிம்மதியாய் இருக்க விடுங்களடா. அப்பாவை முல்லா ஆக்குவதாக உத்தேசமா என்ன? ஸுவான்குல், நீயும் இரண்டு முயல்களை ஏககாலத்தில் வேட்டையாடாதே. முல்லா ஆவது, டிராக்டர் ஓட்டி ஆவது, இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்'' என்பேன்.

ஸுவான்குலுக்குக் கோபம் வந்துவிடும். என்னை ஏறிட்டுப் பார்க்காமல் தலையை அசைத்துக் கொண்டு ஆழ்ந்த பெருமூச்சு விடுவான்.

''அடி அசடே, நாங்கள் பெரிய வேலையில் ஈடு பட்டிருக்கிறோம், நீயானால் கேலி செய்கிறாய்'' என்று கடிந்துகொள்வான்.

சுருங்கச் சொன்னால் வேடிக்கையாகவும் இருந்தது, வருத்தமாகவும் இருந்தது. என்ன ஆயினும் ஸுவான்குல் தான் பிடித்ததைச் சாதித்துவிட்டான்.

இளவேனில் தொடங்கியிருந்தது. வெண்பனி பெய்வது நின்று நல்ல பருவம் அப்போது தான் வந்திருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு நாள் கிராமத்தில் ஏதோ கடகடத்தது, சங்கு ஊதியது. மிரண்டுபோன குதிரைக் கூட்டம் நாற்கால் பாய்ச்சலாக வீதியில் வெறித்து ஓடிற்று. நான் பாய்ந்து முகப்புக்கு வெளியே போனேன். காய்கறித் தோட்டங்களுக்கு அப்

பால் வந்தது டிராக்டர்—கறுத்த, இரும்பா லான, புகை சூழ்ந்த டிராக்டர். அது சீக்கிர மாக வீதியை நெருங்கிவிட்டது. கிராமம் முழு வதிலிருந்தும் மக்கள் டிராக்டரைச் சுற்றி ஓடி வந்து கொண்டிருந்தார்கள். சிலர் குதிரைகள் மேலும் சிலர் கால் நடையாகவும், கூச்சலிட்டுக் கொண்டும் ஒருவரை யொருவர் நெட்டித் தள்ளிக்கொண்டும்—சந்தையில் போல. நானும் அண்டை வீட்டாருடன் அங்கே ஓடினேன். முதன் முதலாக என் கண்ணில் பட்டவர்கள் என் மகன்கள்தான். மூன்று பேரும் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு டிராக்டரில் தகப்பன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். சிறுவர் கள் அவர்களைப் பார்த்துச் சீட்டியடித்தார்கள், தொப்பிகளை உயரே வீசினார்கள். என் மகன் களோ, அடேயப்பா வீரர்களைப் போல. ஒரே கர்வத்துடன் நின்றார்கள், அவர்கள் முகங்களில் ஒளி வீசியது. கிறுக்குப் பயல்கள் வெகு நேரத் துக்கு முன்பே ஆற்றுக்கு ஓடிப் போனார்கள். தகப்பனின் டிராக்டரை எதிர்கொள்ளச் சென் றிருக்கிறார்கள், என்னிடம் ஒன்றுமே சொல்ல வில்லை. நான் அனுமதிக்க மாட்டேன் என்ற பயம். உண்மையும் அதுதான். குழந்தைகளுக் காக நான் அஞ்சினேன்—திடீரென்று ஏதாவது இசைகேடாக நேர்ந்துவிட்டால்!

''காஸிம், மாஸெல்பேக், ஜைனுக், இதோ உங்களை என்ன செய்கிறேன் பாருங்கள்! இறங் குங்கள் உடனே!'' என்று கத்தினேன். ஆனால் டிராக்டர் இயந்திரத்தின் கடகடப்பில் எனக்கே

என் குரல் கேட்கவில்லை.

ஸுவான்குல் என்னைப் புரிந்துகொண்டு சிரித்தான். பயப்படாதே, ஒன்றும் நேர்ந்துவிடாது என்று தலை அசைத்துச் சைகை செய்தான். டிராக்டர் ஓட்டியின் ஆசனத்தில் பெருமிதமும் மகிழ்வும் மிருந்த இளமையும் ததும்ப அவன் வீற்றிருந்தான். உண்மையிலேயே அப்போது அவன் கருமீசை கொண்ட இளம் 'ஜிகித்' தாகவே இருந்தான். தகப்பனும் பிள்ளைகளும் எப்படி ஒரே சாயலாக இருந்தார்கள் என்பதை அந்தச் சமயத்தில்தான், முதல் தடவையைப் போல நான் கண்டேன். அவர்கள் நால்வரையும் அண்ணன் தம்பிகள் என்று மதிக்கலாம். அதிலும் மூத்தவர்கள்—காஸிமும் மாஸெல்பேக்கும்—அப்படியே தகப்பனை உரித்து வைத்தது போல் இருந்தார்கள். ஸுவான்குல் போலவே ஒடிசலான எஃகு உடல், வலிய, கருந் தாமிரம் போன்ற பழுப்பு நிறக் கன்னப் பொருத்துக்கள். இளையவன் ஜைனுக்குக்கு என் சாயல் அதிகமாய் இருந்தது. தோற்றத்தில் மற்றவர்களைவிடச் சிவப்பு. கண்கள் கரியவை, கனிவு நிறைந்தவை.

டிராக்டர் நிற்காமல் நேராகச் சுற்று வேலியை நோக்கிப் போயிற்று. நாங்கள் எல்லோரும் ஒரே கூட்டமாக அதன் பின்னே திரண்டு சென்றோம். டிராக்டர் எப்படி உழப்போகிறது என்று பார்க்க எங்களுக்கு ஆசையாக இருந்தது. மூன்று பிரமாண்டமான கொழுக்கள் கன்னி நிலத்தை எளிதில் கீறி உட்புகுந்து குதிரைப்

பிடரி போன்ற கனத்த உழுமண்ணைப் புரட்டி எடுத்தவாறு முன்னே சென்றதும் எல்லோரும் ஆனந்தக் கூச்சலிட்டு இரைந்து பேசிக்கொண் டும் ஒருவரையொருவர் முந்த முயன்று கொண் டும், பின் கால்களில் நின்று கம்மலாகக் கனைத்த குதிரைகளைச் சவுக்கால் அடித்துக் கொண்டும் சால் வழியாகக் கூட்டமாக முன்னே போனார்கள். எதனால் அப்போது நான் மற்றவர் களிடமிருந்து தனியாகப் பிரிந்து விட்டேனோ, எதனால் ஜனங்களிடமிருந்து பின்தங்கி விட் டேனோ தெரியாது. திடீரென்று நான் தனி யாய் இருப்பதை உணர்ந்தேன். அப்படியே நின்று விட்டேன். முன்னே போக என்னால் முடிய வில்லை. டிராக்டர் மேலும் மேலும் தூரத்தில் சென்றது. நானோ திராணி அற்றவளாக நின்று கொண்டு அது போவதைப் பார்த்துக்கொண் டிருந்தேன். ஆனால் அந்தக் கணத்தில் என்னை விடப் பாக்கியசாலி உலகத்திலேயே எவரும் இல்லை! ஸுவான்குல் கிராமத்துக்கு முதலாவது டிராக்டரை ஓட்டிவந்ததற்காகவா, அல்லது எங் கள் குழந்தைகள் எப்படி வளர்ந்துவிட்டார்கள், தகப்பனை அவர்கள் எவ்வளவு அற்புதமாக ஒத் திருக்கிறார்கள் என்பதை அன்று நான் கண்டதற் காகவா, எதற்காக ஆனந்தப் படுவது என்று எனக்குத் தெரியவில்லை. பின்னாலிருந்து அவர் களைப் பார்த்துக் கண்ணீர் சிந்தினேன். ''என் அருமைப் புதல்வர்களே, எப்போதும் இது போலவே தகப்பன் அருகே இருப்பீர்களாக! நீங்கள் அவன் போன்ற மனிதர்களாக மட்டும்

வளர்ந்து விட்டால், எனக்கு வேறு ஒன்றும் வேண்டியதில்லை...'' என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டேன்.

எனது தாய்மையின் மிகச் சிறந்த பருவம் அது. என்னால் அனாயாசமாக வேலை செய்ய முடிந்தது. எனக்கு எப்போதுமே உழைப்பில் பிரியம். மனிதன் ஆரோக்கியமானவனாக இருந்து கைகால்களும் ஊனமின்றி இருந்தால் உழைப்பைக் காட்டிலும் மேலானது வேறு எது?

காலம் கழிந்துகொண்டு போயிற்று. மகன்கள் நான் அறியாமலே ஒற்றுமையாக வளர்ந்து விட்டார்கள், ஓராண்டுப் பாப்ளார் மரங்களைப் போல. ஒவ்வொருவனும் தனக்கு ஏற்ற பாதையை நிச்சயித்துக்கொள்ளலானான். காஸிம் தகப்பன் வழியைப் பின்பற்றினான். டிராக்டர் ஓட்டி ஆனான், பின்பு அறுவடை இயந்திரத்தைச் செலுத்தப் பயின்றான். ஆற்றின் அக்கரையில், மலையடிவாரத்தில் உள்ள ''கைந்தீ'' என்ற கூட்டுப் பண்ணையில் ஒரு கோடைகாலம் அறுவடை இயந்திரத்தைச் செலுத்தினான். ஓர் ஆண்டுக்குப் பிறகு அறுவடை இயந்திர ஓட்டியாகச் சொந்த கிராமத்துக்குத் திரும்பி விட்டான்.

தாய்க்கு எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரி. எல்லோரையும் ஒருப்போல நெஞ்சில் வைத்துப் பேணுகிறாள் தாய். ஆனாலும் மாஸெல் பேக்கிடம் எனக்கு ஒரு வகையில் அதிக அன்பு. அவன் மேல் எனக்குப் பெருமை. பிரிந்திருந்த போது அவனுக்காக நான் ஏங்கியது இதன்

காரணமாக இருக்கலாம். முன்னதாகச் சிறகு முளைத்துவிட்ட பறவைக் குஞ்சு போல அவன் முதன்முதலில் கூட்டை விட்டுப் பறந்து போய் விட்டான், வீட்டிலிருந்து · மற்றவர்களுக்கு முன்பு வெளியேறிவிட்டான். பள்ளிக்கூடத்தில் சிறு வயதிலிருந்தே அவன் நன்ருகப் படித்தான். எல்லாப் புத்தகங்களையும் கரைத்துக் குடித்துவிட்டான். அவனுக்குச் சாப்பாடுகூட வேண்டாம், புத்தகம் மட்டும் கிடைத்தால் போதும். பள்ளிப் படிப்பு முடிந்ததுமே மேல் படிப்புக்காக நகரத்துக்குப் போய்விட்டான். ஆசிரியன் ஆக விரும்பினுன்.

சின்னவன் ஜைஞக் வடிவும் வனப்பும் உள்ள வாலிபஞக மலர்ந்தான். ஒரே கஷ்டம் என்ன வென்ருல் அவன் வீட்டில் கால் தரிப்பதே கிடையாது. கூட்டுப் பண்ணையில் இளங் கம்யூனிஸ்ட் கழகச் செயலாளஞக அவன் தேர்ந்தெடுக்கப்பட்டான். எப்போது பார்த்தாலும் ஏதோ கூட்டமோ, வட்டமோ, சுவர்ச் செய்தித்தாளோ, வேறு ஏதேனுமோ அவனுக்கு இருந்துகொண்டே இருக்கும். இரவிலும் பகலிலும் இவன் கண் காணுமல் தொலைந்துவிடுவதை எண்ணும் போது எனக்கு ஆத்திரம் பெருகும்.

''டேய், உருப்படாக் கட்டை, நீ உன் அக்கார்டியன் வாத்தியத்தையும் தலையணையையும் எடுத்துக் கொண்டு கூட்டுப் பண்ணை அலுவலகத்திலேயே குடியேறிவிடேன். உனக்கோ, எங்கு வசித்தாலும் ஒன்றுதான். வீடு வேண்

டாம், தகப்பன் வேண்டாம், தாய் வேண்டாம்'' என்று திரும்பத் திரும்ப எரிந்து விழுவேன்.

ஆனல் ஸுவான்குல் மகனுக்குப் பரிந்து பேசுவான். நான் கத்தித் தீர்க்கும்வரை காத்திருந்துவிட்டு, அப்புறம் பேச்சோடு பேச்சாகச் சொல்வது போல, ''நீ மனத்தை அலட்டிக் கொள்ளாதே. மக்களோடு சேர்ந்து வாழக் கற்றுக்கொள்ளட்டும் அவன். அர்த்தமில்லாமல் அவன் உளறியிருந்தால் நானே அவன் மண்டையைத் தட்டிச் சரிப்படுத்தியிருப்பேன்'' என்பான்.

அதற்குள் ஸுவான்குல் மறுபடியும் குழுத் தலைவன் வேலைக்கு வந்துவிட்டான். இளைஞர்கள் டிராக்டர் ஓட்டினர்கள்.

எல்லாவற்றிலும் முக்கியமான நிகழ்ச்சி இது தான்: காஸிம் விரைவில் மணம் செய்துகொண்டான். முதலாவது மருமகள் நிலைவாயிலைத் தாண்டி வீட்டுக்குள் அடிவைத்தாள். அவர்கள் வீட்டு விவகாரங்களை எல்லாம் நான் துருவிக் கேட்கவில்லை. ஜரேச்யே கிராமத்தில் காஸிம் கோடை காலத்தில் அறுவடை இயந்திரப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த போது இருவரும் சந்தித்துப் பழகியிருக்கிருர்கள். கைந்தீ கிராமத்திலிருந்து அவன் அவளை அழைத்து வந்தான். அலிமான் இளம் கன்னி, மலை நாட்டாள், சாமள நிறத்தினள். மருமகள் நமக்கு ஏற்றவள், அழகி, துடியானவள் என்பது ஆரம்பத்தில் எனக்கு மகிழ்ச்சி அளித்தது. அப்புறம்

அவள்மேல் எப்படியோ விரைவிலேயே அன்பு கொண்டுவிட்டேன். அவளை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மகள் பிறக்க வேண்டும் என்று நான் உள்ளுக்குள் ஆசைப்பட்டுக்கொண்டிருந் தது, நமக்கு ஒரு பெண் வேண்டும் என்று மிகவும் விரும்பியது ஒருவேளை இதற்குக் காரண மாயிருக்கலாம். ஆனால் அது மட்டுமே காரணம் அல்ல. அவள் விவரம் அறிந்தவளாக, உழைப் பாளியாக, கண்ணாடி போலத் தெளிந்தவளாக இருந்தது தான் காரணம். என்னுடைய சொந்த மகள்போலவே அவள் மேல் பற்று வைத்துவிட்டேன். அனேகருக்கு ஒருவருக்கொரு வர் மனப் பொருத்தம் இல்லாமல் போய்விடு வதுண்டு. ஆனால் எனக்கு அதிர்ஷ்டம்: இம்மா திரி மருமகள் வீட்டில் இருப்பது பெரிய பாக்கி யம். ஒரு பேச்சுக்குச் சொல்வதானால் உண்மை யான, கலப்பற்ற பாக்கியம், நான் அறிந்து கொண்டபடி, தற்செயலாக வாய்ப்பதல்ல. கோடைகால அடை மழை போல அது திடீ ரென்று தலை மேல் கொட்டுவதில்லை. ஒருவன் வாழ்க்கையை நோக்கும் விதம், சுற்றியிருப்பவர் களிடம் பழகும் முறை, இவற்றுக்குத் தக்க வாறு கொஞ்சம் கொஞ்சமாக அது வருகிறது. துளித்துளியாக, பகுதி பகுதியாக அது சேர் கிறது, ஒன்று மற்றொன்றை இட்டு நிரப்பு கிறது, முடிவில் நாம் பாக்கியம் என்று அழைப் பது உருவாகிறது.

அலிமான் எங்கள் வீட்டுக்கு வந்த ஆண்டுக் கோடைகாலம் நினைவில் பதியக்கூடியதாக

வாய்த்துக்கொண்டது. கோதுமைப் பயிர் முன்னதாகவே முற்றிவிட்டது. ஆற்றில் வெள்ளப் பெருக்கும் முன்னதாகவே தொடங்கிவிட்டது. அறுவடைக்குச் சில நாட்கள் முன்னர் மலை மேல் அடை மழை கொட்டியது. அங்கே மலைக்கு மேலே பனி சர்க்கரை போல உருகுவது தொலைவிலிருந்தே தென்பட்டது. விசாலமான வெள்ளப்படுகைகளில் முழங்கும் நீர் கொந்தளித்தது, மஞ்சள் நுரையும் சோப்புச் சிதள்களும் சேர்ந்தது போலக் கலங்கிக் குழம்பிப் பெருகிற்று, மலையிலிருந்து பிரமாண்டமான தேவதாரு மரத்தை அடியோடு பெயர்த்து இழுத்துக்கொண்டுவந்து நீர் வீழ்ச்சிகளில் அவை சிம்பு சிம்பாகச் சிதறிப் போகும்படி அடித்தது. சிறப்பாக முதல் இரவு மிகப் பயங்கரமாக இருந்தது. பொழுது புலரும் வரையில் ஆறு சரிவுகளில் அடித்து மோதுவதும் முனகுவதுமாக இருந்தது. காலையில் பார்த்தால் பழங்காலத் தீவுகளைக் காணவே காணோம். இரவிலேயே அவை அடித்துச் செல்லப்பட்டு விட்டன.

ஆனாலும் வெப்பம் மிகுதியாக இருந்தது. கோதுமைப் பயிர் அடியில் பசுமையும் உச்சியில் தங்க முதிர்வுமாக ஒழுங்காக வளர்ந்திருந்தது. அந்தக் கோடையில் கதிர் முற்றிய விளை நிலம் ஓர் எல்லையில்லாமல் பரந்திருந்தது. அடிவானம் வரையில் ஸ்தெப்பி நிலத்தில் கோதுமைப் பயிர் அசைந்தாடியது. அறுவடை இன்னும் தொடங்கவில்லை. ஆனால் நாங்கள்

வயலோரங்களில் அறுவடை இயந்திரத்திற்குப் போக்கு விடுவதற்காகக் கைகளால் நேரத்தோடு கதிரறுத்து இடம் செய்தோம். வேலை செய்கையில் நானும் அலிமானும் அக்கம் பக்கத்திலேயே இருந்தோம். சில பெண்கள் இதற்காக என்னை ஏசுவது போல, ''வயது காலத்தில் நீ மருமகளுடன் போட்டி போடுவதற்குப் பதில் வீட்டிலேயே உட்கார்ந்திருக்கலாம். தன் மதிப்பு வேண்டாமோ?'' என்றார்கள்.

ஆனால் நான் வேறு விதமாக நினைத்தேன். வீட்டிலே உட்கார்ந்திருப்பது எந்த வகையில் தன் மதிப்பு?.. என்னால் வீட்டிலே குந்தியிருக்கவும் முடியாதே, அறுவடை எனக்குப் பிடித்த வேலை ஆயிற்றே.

இந்த மாதிரி அலிமானும் நானும் சேர்ந்து வேலை செய்தோம். அப்போதுதான் ஒருகாலத்திலும் என்னால் மறக்க முடியாத ஒரு விஷயத்தை நான் கவனித்தேன். வயல் ஓரத்தில் கோதுமைப் பயிருக்கு இடையே காட்டு மால்வாச் செடி அந்தப் பருவத்தில் பூத்திருந்தது. கோதுமைக் கதிர்களின் உச்சி அளவுக்கு வளர்ந்து, வெள்ளையும் ரோஜா நிறமுமான பெரிய பூக்கள் குலுங்க நின்ற அந்தச் செடி, பயிருடன் சேர்ந்து அறுபட்டுவிட்டது. அலிமான் பூங்கொத்தை எடுத்து, எனக்குத் தெரியாமல் எங்கோ கொண்டு போனாள். நான் ஒருவரும் கவனிக்காத வகையில் நோட்டமிட்டு, பூக்களை அவள் என்ன செய்யப் போகிறாள் என்று சிந்தனை செய்தேன். அவள் அறுவடை இயந்

திரம் வரை ஓடி, மலர்களை அதன் படி மேல் வைத்துவிட்டு ஒன்றும் பேசாமல் திரும்ப ஓடி வந்துவிட்டாள். அறுவடை இயந்திரம் வழியில் தயாராக நின்றது. ஒவ்வொரு நாளும் அறுவடை தொடங்குவது எதிர்பார்க்கப்பட்டது. இயந்திரத்தில் ஒருவரும் இல்லை. காஸிம் வேறு எங்கோ போயிருந்தான்.

நான் எதையும் கவனிக்காதது போலத் திரும்பிக்கொண்டேன். அலிமான் இன்னும் கூச்சம் உள்ளவளாக இருந்தாள், அவளைச் சங்கடமான நிலைமைக்கு உள்ளாக்க நான் விரும்பவில்லை. மனதுக்குள் எனக்கு ஒரே சந்தோஷம்—மலர்கள் மகனைக் காதலிக்கிறாள் என்று தெரிந்ததால். இது நிரம்ப நல்லது. நன்றி உனக்கு, மலர்களே என்று அலிமானுக்கு நெஞ்சுக்குள் வந்தனம் செலுத்தினேன். அந்தக் கணத்தில் அவள் எப்படி இருந்தாள் என்பதை இப்போதும் கண்ணெதிரே காண்கிறேன். சிவப்புத் தலைக் குட்டை, வெள்ளை உடை, கையில் மால்வா மலர்களின் பெரிய கொத்து, சிவப்பேறிய முகம், களிப்பினாலும் குறும்பினாலும் பளிச்சிடும் விழிகள். இதுதான் இளமை என்பது! ஆகா, அலிமான்! மறக்க முடியாத என் மருமகள்! பூக்கள் மேல் அவளுக்குக் கொள்ளை ஆசை, சின்னஞ் சிறுமி போல. இளவேனில் தொடக்கத்தில், வெண்பனி இன்னும் குவியல்களாகக் கிடந்த சமயத்தில். ஸ்டெப்பி வெளியிலிருந்து முதல் முதல் பூத்த 'வெண்பனித்துளி' எனப்படும் மலர்களைப் பறித்துவந்தாள்... ஆகா, அலிமான்!..

அடுத்த நாள் அறுவடை தொடங்கிற்று. கடும் வேலையின் முதல் தினம். எப்போதுமே அன்று கொண்டாட்ட நாள். ஏக்கம் பிடித்தவன் எவனையும் அன்று நான் கண்டதில்லை. இந்தக் கொண்டாட்டத்தை யாரும் அறிவிப்பதில்லை. ஆனால் அது வாழ்கிறது மக்களில், அவர்களுடைய நடையில், குரலில், விழிகளில்... வண்டிகளின் கடகடப்பிலும் வயிமுர உண்ட குதிரைகளின் விரைந்த ஓட்டத்திலும் கூட வாழ்கிறது இந்தக் கொண்டாட்டம். உண்மையாகச் சொன்னால், அறுவடையின் முதல் நாளில் ஒருவரும் சரிவர வேலை செய்வதில்லை. கேலிகளும் விளையாட்டுக்களும் இடைவிடாது நடந்த வண்ணமாயிருக்கும். அன்று காலையிலும் எப்போதும்போலவே ஆரவாரமும் நெரிபிரியுமாக இருந்தது. ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை உற்சாகக் குரல்கள் ஒலித்த வண்ணமாயிருந்தன. ஆனால் எல்லாவற்றையும் விடக் குதூகலமாக இருந்தது எங்கள் பகுதியில், கை அறுவடை நடந்துகொண்டிருந்த இடத்தில் தான். ஏனென்றால் இங்கே மணமான இளம் பெண்களும் கன்னிகளும் ஒரே கூட்டமாக மொய்த்திருந்தார்கள். குறும்புக்காரிகள். அந்த நேரம் பார்த்துக் காஸிம் இயந்திர டிராக்டர் நிலையத்திலிருந்து உழைப்புக்குப் பரிசாகக் கிடைத்த தனது சைக்கிளை ஓட்டிக்கொண்டு வந்து சேர்ந்தான். விஷமக்காரிகள் அவனை வழியிலேயே பிடித்துக்கொண்டார்கள்.

''அறுவடை இயந்திர ஓட்டி! இறங்கு சைக்

ிலிருந்து. அறுவடைப் பெண்களுக்கு முகமன் கூறப் போகிறயே, ஏன்? மண்டை கனத்துப் போயிற்ற? ஊம், வணங்கு எங்களை, உன் மகளுக்கு வணக்கம் தெரிவி!'' என்ருர்கள்.

நாலா புறமிருந்தும் அவனைக் கட்டாயப் படுத்தி, அலிமானுக்கு முன் முழந்தாளிட்டு வணங்கி மன்னிப்புக் கேட்கும்படி செய்துவிட்டார்கள்.

அன்பார்ந்த அறுவடைப் பெண்களே, தவறு நேர்ந்துவிட்டது. மன்னித்துக்கொள்ளுங்கள். இனி மேல் ஒரு காத தூரத்திலிருந்தே உங்களுக்கு வணக்கம் தெரிவிப்பேன்'' என்று கிண்டலும் கேலியுமாகச் சொன்னன் காஸிம்.

ஆனல் அவர்கள் அவனை அத்துடன் விட்டு விடவில்லை.

இப்போது எங்களைச் சைக்கிளில் நகர நங்கையர்போல உட்கார வைத்துக்கொண்டு ஓட்டு. ஊம், காற்றய்ப் பறக்க வேண்டும்!'' என்றர்கள்.

ஒருவரையொருவர் சைக்கிளில் ஏற்றுவதற்குப் போட்டி போட்டுக்கொண்டு பாய்ந்தார்கள். மற்றப் பெண்கள் சைக்கிளின் பின்னே ஓடினர் சில விழுந்து விழுந்து சிரித்தார்கள். அமைதி யாக உட்காரவுமில்லை, நெளிந்தார்கள், கூச்ச லிட்டார்கள்.

சிரிப்பினல் காஸிமுக்குப் பெடலை மிதிப்பதே பெரும்பாடாயிருந்தது.

போதும் போதும். விடுங்கள் என்னை, சைத் தான்களே!'' என்று கெஞ்சினன்.

அவர்களோ, விடுகிற பாடாய்க் காணும். ஒருத்தியை ஏற்றிச் சென்று திரும்பியதும் அடுத்தவள் தொற்றிக்கொண்டாள்.

கடைசியில் காஸிம் உண்மையான கோபத்துடன் கத்தினன்:

''உங்களுக்கென்ன,' மூளை குழம்பிவிட்டதா? பனித்துளிகள் உலர்ந்து போய்விட்டன, நான் அறுவடை இயந்திரத்தைச் செலுத்த வேண்டும். நீங்கள் என்னடா என்ருல்! வேலை செய்ய வந்தீர்களா, வேடிக்கை பண்ணவா? விடுங்கள் என்னை!''

அடேயப்பா, அன்றுதான் என்ன சிரிப்பும் கும்மாளமும்! வானமும் எப்படி இருந்தது, ஒரே நீலமாக! சூரியன் எப்படி ஒளி வீசிற்று!

நாங்கள் வேலையில் ஈடுபட்டோம். அரிவாள்கள் மின்னின. வெயில் இன்னும் உக்கிரமாக எறித்தது. ஸ்தெப்பி வெளி எங்கும் சில்வண்டுகள் சப்தித்தன. பழக்கம் விட்டுப் போனல் மறுபடி கை பழகும் வரை வேலை செய்வது கடினம். இருந்தாலும் காலையில் ஏற்பட்ட மகிழ்ச்சி நிறைந்த மனநிலை அன்று முழுவதும் என்னை விட்டு அகலவில்லை. உள்ளம் விசாலமாக, ஒளி நிறைந்து திகழ்ந்தது. என் கண்கள் என்னவெல்லாம் கண்டனவோ, என்னவெல்லாம் நான் கேட்டேனே, உணர்ந்தேனே, அவை யாவும் எனக்காகவே, என் இன்பத்துக்காகவே படைக்கப் பட்டிருப்பதாக எனக்குத் தோன்றியது. எல்லாமே அசாதாரண அழகும் மகிழ்ச்சியும் நிறைந்து விளங்குவதாக எனக்குப்

ட்டது... கோதுமைப் பயிரின் உயரமான அலைகளில் மூழ்கியவாறு யாரோ எங்கோ துள்ளிச் சென்றதைக் காணவே இன்பமாயிருந்தது. ஒரு வேளை அது ஸுவூான்குல்தானோ? அரிவாள்களின் ஓசையையும் அறுபட்டு விழும் கோதுமைக் கதிர்களின் சலசலப்பையும் ஜனங்களின் சொற்களையும் சிரிப்பையும் கேட்கவே மகிழ்ச்சியாயிருந்தது. காஸிமின் அறுவடை இயந்திரம் அருகாமையில் வந்து மற்ற எல்லா ஓசைகளையும் அமுக்கிவிட்டபோது களிப்பு உண்டாயிற்று. காஸிம் அறுவடை இயந்திரத்தின் இயக்கு சக்கரத்துக்குப் பக்கத்தில் நின்று, இயந்திரத்தின் கீழ் அறைக்குள் கொட்டும் பழுப்பு தானியத் தாரைக்கு அடியில் மறுபடி மறுபடி கை ஏந்தி, ஒவ்வொரு தடவையும் அதை முகத்தருகே கொண்டுபோய் தானிய மணத்தை நுகர்ந்துகொண்டிருந்தான். முதிர்ந்த தானியத்தின் இதமான பால் மணத்தை, தலையைக் கிறுங்கவைக்கும் வாசனையை நானே முகர்வது போல எனக்குத் தோன்றியது. இயந்திரம் எங்களுக்கு எதிரே வந்து நின்றதும் காஸிம் மலை உச்சியிலிருந்து கத்துவதுபோல, ''ஏய், குறும்புக்காரி, துரிதப்படுத்து, நேரங் கடத்தாதே!'' என்று கூவினான்.

அலிமான் மோர்ப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, ''இதோ, அவருக்குத் தாகத்துக்குக் கொடுத்துவிட்டு வருகிறேன்!'' என்றாள்.

அறுவடை இயந்திரத்தை நோக்கி ஓடினாள். இயந்திரத்தால் புதிதாக அறுவடை செய்யப்

பட்ட பகுதி வழியே ஓடிச் சென்ருள் அவள். வடிவான மேனியும் இளமையும் பொலிய, சிவப்புத் தலைக்குட்டையும் வெள்ளை உடையும் அணிந்து விரைந்த அவளைப் பார்த்தபோது அவள் கைகளில் கொண்டு சென்றது பாத்திரம் அல்ல, காதல் மனைவியின் பாட்டு என்று தோன்றிற்று. அவளுடைய ஒவ்வொரு அசைவும் காதலை வெளியிட்டது. ''ஸுவான்குலுக்கு மோர் குடிக்கக் கொடுத்தால் நன்ருயிருக்குமே'' என்று நான் தன் வசம் இன்றியே எண்ணினேன், ஆனுல் அவனைக் கண்டு பிடிப்பது எங்கே?.. வேலை தொடங்கியது முதல் குழுத் தலைவனைக் காணவே முடியாது. நாள் முழுவதும் குதிரைமேல் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குப் பாய்ந்து சென்ற வண்ணமாயிருப்பான். அவனுக்குத் தலைக்கு மேலே வேலை இருந்தது.

அன்று மாலை வயல் முகாமில் புது அறுவடைக் கோதுமை ரொட்டி எங்களுக்காகத் தயாராயிருந்தது. மலைச் சரிவில் நாங்கள் ஒரு வாரத்துக்கு முன்பே அறுவடை செய்யத் தொடங்கியிருந்த தானியக் கதிர்களை அடித்து அரைத்து இந்த மாவு தயார் செய்யப்பட்டிருந்தது. புது அறுவடைக் கோதுமை மாவினுல் செய்த முதல் ரொட்டியைத் தின்னும் வாய்ப்பு எனக்கு வாழ்க்கையில் எத்தனையோ தடவை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் முதல் ரொட்டித் துண்டை வாயருகே கொண்டுபோகும் போது ஏதோ புனிதச் சடங்கை நிறை வேற்றுவது

[illegible] எனக்குப்படும். இந்த ரொட்டி ஓரளவு [illegible] நிறமானது, கொழகொழவென்று பிசைந்த [illegible] சுட்டது மாதிரி, கொஞ்சம் பிசுபிசுப் [illegible] என்றாலும் அதன் இனிப்புள்ள சுவைக் [illegible] அசாதாரண மணத்துக்கும் உலகில் [illegible] ஈடாகாது. வெயிலும் பசிய வைக் [illegible] புகையும் சேர்ந்த வாசனை அதில் [illegible].

[illegible] அறுவடைக்காரிகள் வயல் முகா [illegible] வந்து வாய்க்கால் ஓரமாகப் புல்லில் [illegible] பார்த்து அமர்வதற்குள் சூரியன் அஸ்த [illegible]விட்டது. வயலின் மறு கோடியில் கோது [illegible] பயிர் மீது மாலை வெயிலொளி தகதகத் [illegible] அந்தி நேரம் வெளிச்சமாகவும் நீடித்தும் [illegible] என்று எதிர்பார்க்கப்பட்டது. நாங் [illegible] கூடாரத்துக்கு அருகில் புல்லில் குழுமி [illegible]. ஸுவான்குலை இன்னும் காணோம், [illegible] விரைவில் வர வேண்டும். ஜெனுக் எப் [illegible] போலவே மறைந்துவிட்டான். அண் [illegible] சைக்கிளில் ஏறி, கூட்டுப் பண்ணைக் [illegible] அறைக்குப் போய்விட்டான் — ஏதோ அறிக் [illegible] காகிதத்தைத் தொங்கவிடுவதற்காக.

[illegible] புல்மேல் துணியை விரித்து, [illegible] அதில் போட்டாள். சூடான [illegible]டிகளை வாங்கி வந்தாள். கோப்பைகளில் [illegible] ஊற்றினாள். காஸிம் வாய்க்காலில்

க்வாஸ் — ரை ரொட்டிகள் ஊற வைத்த சாறு. — [illegible])

கை கழுவிக் கொண்டு, விரிப்பின் பக்கத்தில் உட்கார்ந்து ரொட்டிகளை நிதானமாகத் துண்டு களாக்கினான்.

''இன்னும் சூடாய் இருக்கின்றன. இந்தா அம்மா, புது ரொட்டியை நீ முதலில் ருசி பார்'' என்றான்.

நான் ரொட்டியை ஆசீர்வதித்தேன், பின்பு ஒரு துண்டைக் கடித்தேன். ஏதோ பழக்கமில் லாத ருசியும் மணமும் அதில் இருப்பதாக உணர்ந்தேன். இயந்திர ஓட்டிகளின் கைகள், புதுத் தானியம், சூடேறிய இரும்பு, மண் ணெண்ணெய் ஆகியவற்றின் மணம் இது. நான் வேறு ரொட்டித்துண்டை எடுத்துக்கொண் டேன். எல்லாத் துண்டுகளிலும் மண்ணெண் ணெய் வாடை வீசிற்று. ஆயினும் அவ்வளவு சுவையுள்ள ரொட்டியை நான் ஒருபோதும் தின்றதில்லை. ஏனென்றால் இதைத் தன் கரங் களில் வைத்திருந்தான் அறுவடை இயந்திர ஓட்டியான என் மகன். இது மக்களின் ரொட்டி — கோதுமை பயிரிட்டவர்களின், வயல் முகாமில் என் மகனுக்கு அருகே அப்போது உட்கார்ந் திருந்தவர்களின் ரொட்டி. புனித ரொட்டி! மகன் மீது கர்வத்தால் என் உள்ளம் நிரம்பிப் பொங்கியது. ஆனால் இது ஒருவருக்கும் தெரி யாது. தாயின் மகிழ்ச்சி மக்களது மகிழ்ச்சி யிலிருந்தே, வேரிலிருந்து தண்டு போல வரு கிறது என்று அக்கணத்தில் நான் எண்ணமிட் டேன். மக்களது ஆக்கம் இல்லாவிட்டால் தாயின் ஆக்கமும் இராது. இப்போதும், நான்

என்னதான் துன்பப்பட்டிருந்த போதிலும், வாழ்க்கை எனக்கு எவ்வளவுதான் கடினமாய் இருந்தபோதிலும் எனது இந்த நம்பிக்கை இன்னும் போகவில்லை. மக்கள் வாழ்கிறார்கள், ஆகையால் நானும் வாழ்கிறேன்...

அன்று மாலை ஸுவான்குல் நெடு நேரம் வரை வரவில்லை. அவனுக்கு நேரமில்லை. இருள் —ர்ந்தது. இளைஞர்கள் ஆற்றுப் பக்கத்தி லிருந்த மேட்டில் நெகிடி மூட்டி, பாட்டுக்கள் பாடினார்கள். எத்தனையோ குரல்களுக்கு நடுவே என் ஜைனக்கின் குரலை நான் இனங் கண்டு கொண்டேன்... அவன் பாட்டுக் குழுவுக்கு அக் —டியன் வாசித்தான், அவன்தான் இதன் அமைப்பாளன். மகனுடைய பரிச்சயமான குரலைக் கேட்டபடி நான் எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்: ''பாடு மகனே, இளை ஞனாயிருக்கும் வரை பாடு. பாட்டு மனிதனைத் தூய்மைப் படுத்துகிறது, மக்களை நண்பர்கள் ஆக்குகிறது. அப்புறம் எப்போதாவது இந்தப் பாட்டைக் கேட்பாய், இந்தக் கோடைகால —லையில் உன்னுடன் சேர்ந்து இதைப் பாடிய உங்களை நினைவு படுத்திக்கொள்வாய்.'' மீண்டும் நான் என் புதல்வர்களைப் பற்றி எண்ணமிடலா னேன். ஒருவேளை இதுவே தாயின் இயல்பு போலும். நான் சிந்தித்தேன்: காஸிம் ஆண் —டவன் அருளால் ஏற்கனவே சுதந்திர மனிதன் ஆகிவிட்டான். இளவேனிலில் அவனும் அலி —னும் தனிக் குடித்தனம் வைத்துவிடுவார் கள். வீடு ஏற்கனவே கட்டத் தொடங்கிவிட்

டார்கள், தங்கள் வீட்டுக் காரியங்களைத் தாங்களே பார்த்துக்கொள்வார்கள். அவர்களுக்குக் குழந்தைகள் பிறப்பார்கள் — என் பேரர்கள். காஸிமைப் பற்றி எனக்குக் கவலையில்லை. தகப்பனைப் போலவே உழைப்பாளி அவன். கண நேரமும் சும்மா இருக்க மாட்டான். எப்போதோ இருட்டத் தொடங்கிவிட்டது. அவனோ இன்னும் அறுவடை இயந்திரத்தில் சுற்றிக் கொண்டிருந்தான். ஓர நிலத்தில் ஒரு சிறு பகுதியை அறுவடை செய்து முடிப்பது இன்னும் பாக்கி இருந்தது. டிராக்டரும் அறுவடை இயந்திரமும் முன் விளக்குகளைப் போட்டுக்கொண்டு வேலை செய்தன. அலிமானும் அவனுடன் இருந்தாள். அறுவடைக் காலத்தில் ஒரு நிமிடம் சேர்ந்திருப்பது கூட விலைமதிப்பற்றது ஆயிற்றே.

மாஸெல்பேக்கை நினைத்து நான் ஏக்கம் அடைந்தேன். முந்திய வாரம் அவன் கடிதம் எழுதியிருந்தான். இந்தக் கோடை விடுமுறையில் அவனால் வீட்டுக்கு வர முடியாதாம். இஸ்ஸீக்-குல் ஏரிக் கரையில் எங்கோ இருந்த முன்னோடி இளைஞர் முகாமுக்கு நடைமுறைப் பயிற்சிக்காகக் குழந்தைகளுடன் அனுப்பப்பட்டிருக்கிறானாம். ஊம், ஒன்றும் செய்வதற்கில்லை. இம்மாதிரி வேலையை அவன் மேற்கொண்டிருக்கிறான் என்றால் அது அவனுக்குப் பிடித்திருக்கிறது என்று அர்த்தமாகிறது. எங்கே இருந்தாலும் சௌக்கியமாயிருக்க வேண்டும். அது தான் முக்கியம். என் நினைவுகள் இப்படிச் சுழன்றன.

ஸுவான்குல் வெகு நேரம் சென்றபின் வந்

தான். அவசர அவசரமாகச் சாப்பிட்டான். அப்புறம் அவனும் நானும் வீட்டுக்குப் போனோம். காலையில் வீட்டுக் காரியங்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. மாலையில் கால்நடைகளைப் பார்த்துக் கொள்ளும்படி நான் எங்கள் பக்கத்து வீட்டுக்காரி ஆயஷாவைக் கேட்டுக்கொண்டிருந் தேன். அவள், பாவம், அடிக்கடி நோய்ப்பட்டு விடுவாள். ஒருநாள் கூட்டுப் பண்ணையில் வேலை செய்வாள், இரண்டு நாள் வீட்டில் இருப்பாள். அவளுக்குப் பெண் நோய்—இடுப்பு எலும்பு முறிந்துவிட்டது. அதனால்தான் அவளுக்கு பெக் தாஷ் என்ற ஒரே மகன் மட்டுமே இருந்தான்.

நாங்கள் வீட்டுக்குப் போனபோது இரவு ஆகி விட்டது. காற்று வீசிற்று. நிலா ஒளி கோது மைக் கதிர்களில் அசைந்தாடிற்று. சரிவுகளில் அடர்ந்திருந்த முதிரும் குராய் மஞ்சரிகளை அங்க வடிகள் தொட்டு உராய்ந்தன. சுள்ளென்ற நெடியுள்ள கதகதப்பான மகரந்தம் காற்றில் எழுந்து ஓசையின்றிப் பரவியது. தோன்னிக் செடிகள் பூத்துவிட்டன என்பது மணத் திலிருந்தே தெரிந்தது. அந்த இரவில் ஏதோ மிக மிக அறிமுகமான ஒன்று இருந்தது. நெஞ் சில் வேதனை உண்டாயிற்று. குதிரை மேல் சவாரன்குலின் பின்னால் சேணத் திண்டில் நான் உட்கார்ந்திருந்தேன். என்னை முன்னால் உட் காரும்படி அவன் எப்போதும் சொல்வான். எனக்கோ, அவனுடைய இடுப்புவாரைப் பற்றிக் கொண்டு இந்த மாதிரிச் சவாரி செய்வது தான் பிடிக்கும். பகல் பூராவும் கடுமையாக

உழைத்த களைப்பினால் அவன் ஒன்றும் பேசாமல் சவாரி செய்தது, அவ்வப்போது தூங்கி விழுந்தது, பின்பு திடுக்கிட்டு, குதிரையைக் குதிகளால் உதைத்து விரட்டியது — இவை எல்லாமே எனக்கு விலை மதிப்பற்றவையாக இருந்தன. அவனது கூனிய முதுகை நோக்கினேன். தலையை அதன்மேல் சாத்திக்கொண்டு சிந்தித்தேன், வருந்தினேன்: ''நாம் கொஞ்சம் கொஞ்சமாகக் கிழவர்களாகிக் கொண்டு போகிறோம், ஸுவான்குல். ஊம், என்ன செய்வது? காலம் தான் கழிந்துகொண்டு போகிறதே! ஆனாலும் வாழ்நாளை நாம் வீண் போக்கவில்லை என்றே எண்ணுகிறேன். அதுதான் எல்லாவற்றிலும் முக்கியமானது. ஏதோ இப்போதுதான் நாம் வாலிபர்களாக இருந்தது போலத் தோன்றுகிறது. ஆண்டுகள்தாம் எவ்வளவு விரைவாகக் கழிகின்றன!.. ஆயினும் வாழ்வது இன்னும் இன்பமாகவே இருக்கிறது. இல்லை, அதற்குள் நாம் ஓய்ந்து விடலாகாது. இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியது பாக்கி இருக்கிறது. உன்னோடு நீண்ட காலம் வாழ விருப்பம் ஏற்படுகிறது...''

நான் நிமிர்ந்து, தலையை உயர்த்தி வானத்தை நோக்கினேன். என் உள்ளத்தில் சிலிர்ப்பு உண்டாயிற்று. தெள்ளிய தாரகைகளுக்கு இடையே வெகு உயரத்தில், முன் ஒரு முறை தென்பட்டது போலவே விண் முகடு முழுவதையும் வியாபித்துக்கொண்டு அகன்ற வெள்ளிப் பட்டை போன்று நீண்டு சென்றிருந்தது ''வைக்கோல்

காரனின் பாதை.'' புது அறுவடை வைக் கோலின் பெரிய கட்டை எடுத்துக்கொண்டு யாரோ ஒருவன் அப்போதுதான் அந்த வழி யாகப் போயிருப்பது போலவும் அது பாதை யில் சிதறியிருப்பது போலவும் எனக்கு மறுபடி பிரமை உண்டாயிற்று. அங்கே, உயரத்தில் தங்க வைக்கோல் சிலும்பும் பதருமாக, காற்றில் போல அசைந்தது. பதருடன் சேர்ந்து சிதறும் தானிய மணிகளைக்கூடக் காண முடிந்தது. ''அட என் கடவுளே!'' என்று வியந்தேன். சட்டென்று எனக்கு நினைவு வந்தது: அந்த முதல் இரவு, எங்கள் காதல், இளமை, நான் கனவில் கண்ட அந்த விறல் மிக்க அறுவடைக்காரன் — எல்லாம். யாவும், எவற்றைப் பற்றி நாங்கள் கனவு கண்டோமோ அவை அனைத்தும் உண்மையாகி விட்டன! நிலமும் நீரும் எங்களுடையவை ஆகிவிட்டன. நாங்கள் உழுது பயிரிட்டோம், எங்கள் கோதுமையை அடித்தோம். ஆகவே, முதல் இரவில் நாங்கள் எண்ணியது எல்லாம் பலித்துவிட்டது. புது யுகம் பிறக்கப் போகி றது, புது வாழ்வு தொடங்கப் போகிறது என்று நாங்கள் அப்போது அறிந்திருக்கவில்லை தான். ஆனாலும் சாதாரண மனிதனின் உல கியல் கனவு, காலத்தின் விருப்பத்தை, நல்லி யல்பு, நியாயம், இவற்றின் விருப்பத்தை ஒத் திருந்தது என்று ஆகிறது. இந்த எண்ணங்களின் வசப்பட்ட நான் அசையாமல் உட்கார்ந்து மௌனமாயிருந்தேன். ஸுவான்குல் திரும்பிப் பார்த்தான்.

''நீ என்ன, உறங்கிவிட்டாயா, தல்கோனே? களைத்துப் போனாய். பரவாயில்லை. இதோ வீடு சேர்ந்துவிடுவோம். எனக்குந்தான் தளர்வா யிருக்கிறது'' என்றான். அப்புறம் சற்று நேரம் பேசாதிருந்துவிட்டு, ''ஒருவேளை, புதுத் தெரு வுக்குத் திரும்புவோமா?'' என்று கேட்டான்.

''திரும்புவோம்'' என்று இசைந்தேன்.

புதுத் தெரு கிராமத்தை ஒட்டினாற்போல் இருந்த வெறும் வெளியில் கட்டப்பட்டுக்கொண் டிருந்தது. தெரு என்னவோ இன்னும் இல்லை. இளவேனிலில்தான் வாலிபர்களுக்காக இடங்கள் அளந்து ஒதுக்கப்பட்டன. சிற்சில இடங்களில் சுவர்கள் அதற்குள் எழும்பிவிட்டன. காஸி முக்கும் அலிமானுக்கும் கூட இங்கே இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதனால்தான் அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று பார்க்க எங்களுக்கு ஆசை உண்டாயிற்று. அறு வடைக் காலத்தில் பகல் வேளையில் சொந்தக் காரியத்தைக் கவனிக்க நேரம் கிடைப்பதில்லை. வசந்தகாலம் முதலே காஸிமும் அலிமானும் ஜைனக்கும் செங்கல்கள் அறுத்துத் தயாராக வைத்திருந்தார்கள். இப்போது அவை வரிசை களாக அடுக்கப்பட்டுக் காய்ந்துகொண்டிருந்தன. வானக் கிடங்குகள் தோண்டப்பட்டுவிட்டன. போன வாரமே ஆற்றிலிருந்து கட்டுமானக் கற்கள் அஸ்திவாரம் போடுவதற்காகக் கொண்டுவரப் பட்டிருந்தன. வெள்ளம் வருவதற்கு முன்பே இதைச் செய்து முடித்தது நல்லதாயிற்று. வளைவின் நடுவே பெருங்குவியலாகக் கிடந்தன

கர்கள். இளைஞர்களின் வேலை ஸுவான்கு மிக்கத் திருப்தி அளித்தது.

''நல்லது, தொடக்கம் ஆகிவிட்டது. கற்கள் தாராளமாகப் போதும். மிஞ்சக்கூடச் செய்யும். அறுவடை முடிந்ததும் சுவர் எழுப்புவோம், கூரை வேய்வோம். பாக்கிச் சில்லறைக் காரியங்களை அப்புறம் வசந்த காலத்தில் செய்து முடிப்போம். எப்படியும் பனிக்காலத்துக்குள் எல்லா வேலையும் ஆகிவிடாது. நான் சொல்வது சரி தானே? நீ என்ன நினைக்கிறாய், தல்கோனே?'' என்றான் ஸுவான்குல்.

''சரிதான். சுவர் எழுப்பிக் கூரை வேய்வது தானே முக்கியம். மற்றதெல்லாம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம்'' என்று நான் விடையளித்தேன். அதற்குள் ஜைனக்கின் நினைவு வந்துவிடவே பக்கென்று சிரித்துவிட்டேன். ''இந்த ஜைனக் இருக்கிறானே, இவனுக்குக் களைப்பே கிடையாது. புதிய தெருவுக்கு ''காம்ஸமோல் தெரு'' என்று பெயர் வைப்பதாக அவர்களுடைய கூட்டத்தில் தீர்மானித்திருக்கிறார்களாம். அலிமான் அவனைக் கேலி செய்கிறாள். 'ஜைனக், நீ நஸீருத்தீன் போலத் தான். குழந்தை பிறப்பதற்கு முன்பே பெயர் வைக்கக் கிளம்பிவிட்டாய். முதலில் கலியாணம் செய்துகொள், வீடு கட்டிக்கொள், தெருவை அமை, அப்புறம் என்ன பெயர் வைப்பது என்று யோசி' என்கிறாள். ஜைனக்கோ, 'உனக்கு ஒன்றுமே விளங்காது' என்கிறான்.''

இப்படி நான் சொன்னதைக் கேட்டு ஸுவான்

குல் தலையை ஆட்டி வாய்க்குள் சிரித்துக்கொண்டான்.

''உண்மைதான். அவன் பொறுமை அற்றவனுகப் பிறந்துவிட்டான். ஆனுல் தெருவுக்கு அவன் வைக்க எண்ணியிருக்கும் பெயர் சரியானதுதான். இந்தக் கட்டிடங்கள் எல்லாம் புதியவை, இவற்றின் எஜமானர்கள் வாலிபர்கள். நாம் பல்குகிருேம், ஆண்டுக்கு ஆண்டு மக்கள் தொகை அதிகமாகிக்கொண்டு போகிறது. பழைய கிராமத்தில் நமக்கு இடம் பற்றவில்லை, புதிய தெருக்கள் அமைக்கிருேம். இது நல்லதே. தெரு அமைந்த பிறகு நீயே பார்ப்பாய், உன் மகன் சொன்னது சரிதான் என்பதை...'' என்ருன்.

நாங்கள் இப்படிப் பேசிக்கொண்டிருந்த போது அந்த இரவு எல்லா இரவுகளிலும் சாபத்தீடானது என்பதை நாங்கள் அறியவில்லை...

3

''தலையை நிமிர்த்து, தல்கோனை. நெஞ்சைத் தேற்றிக்கொள்.''

''நல்லது. நான் செய்வதற்கு என்ன பாக்கி இருக்கிறது? முயற்சி செய்கிறேன். அந்த நாள் நினைவிருக்கிறதா உனக்கு, என் அருமை நிலமே?''

''நினைவிருக்கிறது... நான் ஒன்றையும் மறப்பதில்லை, தல்கோனை. உலகு தோன்றிய நாள்

பூத்தக் எல்லா யுகங்களின் சுவடுகளும் எனக்குள் பதிந்துள்ளன, தல்கோனே. எல்லா வரலாறும் புத்தகங்களில் இல்லை, எல்லா விருத்தாந்தமும் மக்கள் நினைவில் இல்லை. அது எல்லாம் என்னுள் இருக்கிறது. தல்கோனே, உன் வாழ்வும் எனக்குத் தான், என் இதயத்தில் தான். நீ சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன், தல்கோனே. இன்று உன் நாள்.

4

மறு நாள் சூரியன் உதிப்பதற்கு முன்பே நாங்கள் வேலையைத் தொடங்கிவிட்டோம். அன்றைக்கு ஆற்றங்கரைச் சரிவுக்குப் பக்கத்தில் மேட்டு வயல் பகுதியில் அறுவடை ஆரம்பித்தோம். இந்தப் பகுதி அமைந்திருந்த விதத்தில் அறுவடை இயந்திரம் திரும்ப வாய்ப்பு இல்லை. கதிர்களோ, ஏற்கெனவே முற்றி உலர்ந்துவிட்டன. ஓரத்தில் கதிர் எப்போதுமே முன்கூட்டி உதிர்ந்துவிடுமே. நாங்கள் வரிசையாக நின்று கொண்டு இரண்டிரண்டு பிடிக் கதிர்களை அறுத்திருப்போம், அதற்குள் மறு புறம் யாரோ குதிரைமேல் நாற்கால் பாய்ச்சலில் வரக் கண்டோம். அவன் ஐரேச்யே கிராமத்தின் ஓர வீட்டு முகப்புக்களுக்குப் பின்னிருந்து துள்ளிப் பாய்ந்து, புழுதிப் படலத்தை வால் போல் பின்னே விட்டுக்கொண்டு புதர்களையும் கற்களையும் தாவித் தாண்டியவாறு நேராக விரைந்து

வந்தான் — யாரோ பின்னுலிருந்து விரட்டியது போல. குதிரை அவனை ஆற்றங்கரைக் கூழாங் கற்கள் மேல் இட்டுச் சென்றது. அவனே, குதிரையைத் திருப்பாமல் கற்கள் மேலாக நேரே ஆற்றை நோக்கிச் செலுத்தினுன். நாங் கள் வியப்புடன் முதுகை நிமிர்த்திப் பார்த் தோம். இந்த மனிதனுக்கு அப்படி என்ன அவ சரம் பாழ்போகிறது? ஆற்றின் போக்கில் இரண்டு மைல் தொலைவில் இருந்த பாலத் துக்குக் குதிரையை ஓட்டிச் செல்வதற்கென்ன? குதிரை ஏறிவந்தவன் ருஷ்ய இளைஞன் என்று தெரிந்தது. அவன் ஓட்ட ஓட்டமாகச் செம் பழுப்புக் குதிரையை நீரின் பக்கம் விரட்டினுன். மலைப்பினுல் எங்களுக்குக் கைகால் மரத்து விட்டது. இவன் என்ன, சாகப் பார்க்கிருனு? இம்மாதிரி நேரத்தில் ஆற்றுடன் விளையாட லாமா? வெள்ளப் பெருக்கின்போது குதிரை எம்மாத்திரம், ஒட்டகம்கூட ஆறு அடி சென்று விடுமே, எலும்புகூட அகப்படாதே!

''ஏய், ஏய், எங்கே போகிருய்? நிறுத்து, நிறுத்து!'' என்று நாங்கள் கூச்சல் போட் டோம்.

அவன் எங்களைப் பார்த்துக் கைகளை ஆட்டி ஏதோ கத்தினுன். ஆனுல் ஆற்றின் இரைச் சலில் ஒன்றையும் புரிந்துகொள்ள முடிய வில்லை.

''ஆ-ஆ-ஆ-ஆ...'' என்ற நீண்ட முழக்கம் மட்டுமே காதில் பட்டது.

எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அப்போது

அவன் குதிரையைப் பின்னங்கால்களில் எம்பச் செய்து, சவுக்கால் அடித்து அதை ஆற்றுப் பெருக்கில் விரட்டினான். தண்ணீர் சவாரிக் காரனை உடனே சூழ்ந்துவிட்டது. கொந்தளிக்கும் அலைகளுக்கு நடுவே, பற்கள் தெரியத் திறந்த வாயும் ஒன்றோடு ஒன்று இணைந்து காதுகளுமாகக் குதிரையின் தலை மட்டுமே லேசாகத் தென்பட்டது. சவாரி செய்பவன் இரு கரங்களாலும் பிடரி மயிரை இறுகப் பற்றியிருந்தான். அவன் தலையிலிருந்த தொப்பி அடித்துச் செல்லப்பட்டு விட்டது. அது அலை களில் சுழன்றது. நாங்கள் சரிவில் ஓடிவந் தோம். குதிரைக்காரனை வெள்ளம் விரைவாக அடித்துச் சென்றது. ஆனால் அவன் பெருக்குக்கு ஏற்றவாறு தன்னை இசைத்துக்கொண்டு, சாய் வாக மறு கரையை நோக்கி முன்னேறினான். ஆறு அவனை வெகு தூரம் இழுத்துக்கொண்டு போயிற்று. மாவரைக்கும் இயந்திரத்துக்கு அப்பால் அவன் கரை ஏறினான். நாங்கள் எல் லோரும் அப்பாடா என்று பெருமூச்சுவிட் டோம். குதிரைக்காரனின் துணிவை மெச்சி ஒரு சிலர் ''சபாஷ்!'' என்று அவனைப் பாராட் டினார்கள். இது சாதாரண விஷயமாயிருக்காது, என்ன காரியம் என்று விசாரித்து அறிய வேண்டும் என்றான் ஒருவன்.

''எவனோ குடிகார முட்டாள் அசட்டுத் துணிச்சலைக் காட்டுகிறான், நீங்கள் அவன் பின்னே ஓடப் போகிறீர்களாக்கும்!'' என்று மற்றொருவன் அதிருப்தியுடன் சொன்னான்.

அத்துடன் பேச்சு அடங்கிவிட்டது. எங்களுக்கு வேலை செய்ய வேண்டியிருந்தது. ''இது தான் உண்மை. நிதான புத்தியுள்ள மனிதன் இந்த மாதிரி ஆபத்தை மேற்கொண்டிருக்க மாட்டான்'' என்று நான் எண்ணமிட்டேன்.

காஸிம் அன்றைக்கும் அரவை இயந்திரத்தின் அருகிலுள்ள ஓர வயலை அறுவடை செய்து கொண்டிருந்தான். திடீரென அவனுடைய அறுவடை இயந்திரம் நின்றுவிட்டது; அதில் எதுவும் விசேஷ அர்த்தம் இருப்பதாக எனக்குப் படவில்லை. இயக்கு சக்கரத்தின் பட்டை கழன்றிருக்கலாம் அல்லது சங்கிலி அறுந்திருக்கலாம்—வேலை நடக்கும் போது எத்தனையோ விதமான கோளாறுகள் ஏற்படக் கூடுமே—என்று எண்ணினேன். அலிமான் என் அருகிலேயே அறுவடை செய்து கொண்டிருந்தாள். திடீரென அவள் காதைத் துளைக்கும் பயங்கரக் குரலில் ''அம்மா!'' என்று வீரிட்டாள்.

நான் திடுக்கிட்டு நிமிர்ந்தேன். அலிமான் அரிவாளை நழுவ விட்டு விட்டு ஒரேயடியாக வெளிறிப் போய் நின்றாள்.

''உனக்கு என்ன? பாம்பு கடித்துவிட்டதா?'' என்று கத்திக்கொண்டே நான் அவள் பக்கம் ஓடினேன்.

அவள் ஒன்றும் பேசவில்லை. அவளுடைய அகல விரிந்த, திகிலடித்த விழிகள் நோக்கிய திக்கில் நானும் பார்வையைச் செலுத்தினேன், பேயறைந்தவள் போல நின்றுவிட்டேன். அறுவடை இயந்திரத்தின் பக்கத்தில் ஏதோ கூக்

குரல்கள் கேட்டன, ஜனங்கள் எல்லாப் புறங் களிலிருந்தும் நேராகக் கோதுமைப் பயிரில் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள், குதிரை களில் ஏறி விரைந்தார்கள். சிலரோ, அங்கவடி களில் நின்றபடி குதிரைகளைச் சவுக்கால் விளாறி விரட்டினார்கள்.

''ஏதோ நேர்ந்துவிட்டது, அம்மா!'' என்று கத்திவிட்டு அலிமான் பாய்ந்து ஓடினாள்.

''அரிவாள் அடியில் எவனோ அகப்பட்டுக் கொண்டிருப்பான்! இல்லாவிட்டால் உருளையில் மாட்டிக்கொண்டிருப்பான்! ஓடுவோம்!'' என்று யாரோ சொன்ன சொற்கள் என் காதைப் பிளந்தன.

எல்லாப் பெண்களும் அலிமான் பின்னே தாவி ஓடினார்கள்.

ஓடியவாறே கைகளை மேலே உயர்த்திக் கொண்டு, ''ஆண்டவனே, காப்பாற்று! ஆண்ட வனே, காப்பாற்று!'' என்று நான் வேண்டிக் கொண்டேன். கால்வாயைத் தாண்டும் பொழுது தொப்பென்று விழுந்து விட்டேன். துள்ளி எழுந்து மறுபடி ஓடினேன். அடேயப்பா! வயலின் குறுக்கே நான்தான் அப்போது எப்படி ஓடினேன்! மற்றவர்கள் எனக்காகக் காத்திருக் கும்படி கத்த விரும்பினேன், ஆனால் குரலே கிளம்பவில்லை.

கடைசியில் நான் அங்கு போய்ச் சேர்ந்த தும் அறுவடை இயந்திரத்தைச் சுற்றிலும் கூட்டம் நெரிந்தது. ஜனங்கள் சளசளவென்று பேசிக் கொண்டிருந்தார்கள். நான் எதையும்

காதில் வாங்கிக்கொள்ளவில்லை, எதையும் புரிந்து கொள்ளவில்லை. ''நில்லுங்கள்! விலகுங்கள்!'' என்று கத்திக்கொண்டே கூட்டத்தில் இடித்துப் புகுந்து முன்னே சென்றேன். ஆட்கள் விலகிக் கொடுத்தார்கள். நான் குருடிபோல, நடுங்கும் கைகளால் தட்டித் தடவிக்கொண்டு மகனை அணுகினேன். காஸிம் முன்னே வந்து என்னைத் தாங்கிக் கொண்டான்.

''யுத்தம், அம்மா!'' என்று அவன் சொன்னது எங்கோ தொலைவிலிருந்து வருவதைப் போல என் காதில் பட்டது.

நான் அவனை நோக்கினேன், இந்தச் சொல் என்ன என்று புரியாதவள் மாதிரி.

''யுத்தமா? யுத்தம் என்ரு சொல்லுகிருய்?'' என்று திரும்பத் திரும்பக் கேட்டேன்.

''ஆமாம் அம்மா, போர் தொடங்கிவிட்டது'' என்று பதிலளித்தான் அவன்.

இந்த வார்த்தையில் மறைந்துள்ள அர்த்தம் என் மூளைக்கு இன்னும் சரியாக எட்டவில்லை.

''யுத்தமாவது? எதற்காக யுத்தம்? நீ என்ன சொல்கிருய்—யுத்தம் என்ரு?'' இந்த விந்தையான, பயங்கரமான சொல்லை மீண்டும் மீண்டும் உரைத்தேன். திடீரென என்னைத் திகில் பற்றிக் கொண்டது. நான் அனுபவித்த பயம், இந்த எதிர்பாராச் செய்தி ஆகியவை காரணமாக அழத் தொடங்கினேன்.

கண்ணீர் என் முகத்தில் பெருகி வழிந்தது. என்னைப் பார்த்த மாதர்கள் அழுது அரற்றத் தொடங்கினுர்கள்.

''கூச்சல் போடாதீர்கள்! ஊம், பேசாதிருங்கள்!'' என்று ஓர் ஆண் குரல் கூட்டத்தில் ஒலித்தது.

எல்லோரும் உடனே மௌனமாகி விட்டார்கள். இது உண்மையல்ல என்று அர்த்தப்படும் வார்த்தைகளை இந்த மனிதன் சொல்லுவான் என்று எதிர்பார்ப்பவர்கள் போல. ஆனால் அவன் ஒன்றும் சொல்லவே இல்லை. ஒருவருமே ஒன்றும் பேசவில்லை. ஸ்தெப்பியில் ஒரே நிசப்தம் நிலவியபடியால் ஆற்றிலிருந்து வந்த வெள்ளத்தின் முழக்கம் தெளிவாகக் கேட்டது. யாரோ ஒருவன் இரைந்து பெருமூச்சுவிட்டான், அசைந்தான். எல்லோரும் மறுபடி எச்சரிப்பு அடைந்தார்கள், ஆனால் ஒருவனும் ஒரு பேச்சுக் கூடப் பேசவில்லை. பின்னும் ஸ்தெப்பி வெளியில் ஓசை அடங்கிவிட்டது. காதில் கொசுவின் ரீங்காரத்தின் வடிவில் வெக்கை ஒலித்தது. அப்போது, சுற்றிலும் நின்று கொண்டிருந்த மனிதர்களைப் பார்வையிட்டு விட்டு காஸிம் தனக்குத்தானே சொல்லிக்கொள்வது போலத் தணிந்த குரலில் முணுமுணுத்தான்:

''இப்போது சீக்கிரமாக அறுவடையை முடித்துத் தானியத்தைச் சேமிக்க வேண்டும், இல்லாவிட்டால் வெண்பனி விழத் தொடங்கி விடும்.'' சற்று நேரம் பேசாதிருந்தான். பின்பு திடீரென்று தலையை வெடுக்கென்று அசைத்து, அறுவடை இயந்திர ஓட்டியைப் பார்த்து, ''என்ன நிற்கிறாய்? எஞ்சினை முடுக்கு! நீங்கள் எல்லோரும் என்ன பார்க்கிறீர்கள்? அறு

வடையைப் பொழுதோடு செய்து முடிக்காவிட்டால் உங்களுக்குத் தான் சங்கடம்! ஊம், வேலையில் முனையுங்கள்!..'' என்று கட்டளையிட்டான்.

ஆட்கள் நகரத் தொடங்கினார்கள். ஐரேச்யாவிலிருந்து வந்த ருஷ்ய இளைஞனை அப்போதுதான் நான் பார்த்தேன். தலை முதல் கால் வரை நனைந்த உடையுடன், கரும்பழுப்பாகியிருந்த குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான் அவன். ஜனங்கள் நடக்கத் தொடங்கியதும் அவன் தன் உணர்வை அடைந்து, தொய்ந்த செந்தலையை நிமிர்த்தி, சேணவாரை இறுக்கலானான். அவன் புத்திளைஞன், என் ஜைனுக் வயதினன், உயரம் மட்டும் அதிகம், தோள்கள் அகன்றவை என்பதை நான் கண்டேன். நனைந்த மயிர்க் குச்சங்கள் அவன் நெற்றியில் ஒட்டிக்கொண்டிருந்தன. உதடுகளிலும் முகத்திலும் புதிய கீறல்கள் தென்பட்டன. இன்னமும் சிறு பிள்ளைத்தனம் ஒளிர்ந்த அவன் கண்கள் கடும் வேதனையைத் தோற்றுவித்தன. அப்போதுதான் அவன் தன் பாலப் பருவத்தைக் கடந்திருக்கிறான், அப்போதே, அன்றே, ஒரே காலையில் அவன் முதிர்வு அடைந்திருக்கிறான் என்பதை நான் புரிந்து கொண்டேன். அவன் ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, சேணத்தில் அமர்ந்து, எங்கள் கிராமப் பையன் ஒருவனிடம் சொன்னான்:

''கேள் நண்பா, நீ இப்போதே குதிரை மேல் ஏறி, கூட்டுப்பண்ணைத் தலைவரையும்

குழுத்தலைவர்களையும் தேடிப் பிடித்து, வட்டாரக் கமிட்டிக் காரியாலயத்துக்கு உடனே வந்து சேரும்படி அவர்களிடம் சொல். நான் போகிறேன். இன்னும் இரண்டு கூட்டுப்பண்ணைகளுக்கு நான் தகவல் தெரிவித்தாக வேண்டும்.'' இவ்வாறு சொல்லிவிட்டு அவன் கடிவாள வாரைக் கையில் பிடித்தான்.

ஆனால் கிராமப் பையன் அவனை நிறுத்தினான்: ''நில்லு. உன் தொப்பிதான் ஆற்றோடு போய்விட்டதே. இந்தா, என்னுடையதைப் போட்டுக் கொள். இன்று ஒரே வெக்கை'' என்றான்.

இளம் குதிரைக்காரன் பின்னே நாங்கள் நெடு நேரம் பார்த்துக்கொண்டிருந்தோம். காற்றாகப் பறந்த செம்பழுப்புக் குதிரையின் குளம்புகளுக்கு அடியில் உலர்ந்த பாதை கலவரத்துடன் சடசடத்ததைக் கேட்டுக்கொண்டிருந்தோம். விரைவில் புழுதி சவாரி செய்பவனை மறைத்துவிட்டது. நாங்களோ இன்னும் வழியில் நின்றுகொண்டிருந்தோம்—அவரவர் தம் தம் எண்ணங்களில் ஆழ்ந்தவர்களாக. அறுவடை இயந்திரம், டிராக்டர், இவற்றின் எஞ்சின்கள் திடீரென முழங்கத் தொடங்கியதும் நாங்கள் திடுக்கிட்டு ஒருவரை ஒருவர் நோக்கினோம்.

அந்தக் கணம் முதல் ஆரம்பித்தது புதிய வாழ்க்கை—போர் வாழ்க்கை...

போரின் ஆரவாரம் எங்கள் காதுகளுக்கு எட்டவில்லை. ஆனால் எங்கள் நெஞ்சுத் துடிப்பையும் மக்களின் கூக்குரலையும் நாங்கள் கேட்

டோம். என் வாழ்நாளிலேயே அந்த மாதிரிப் பொசுக்கும் வெக்கையையும் அது போன்ற புழுக்கத்தையும் நான் கண்டதே இல்லை. கல்லில் துப்பினல் உமிழ் நீர் தளதளத்தது. தானியப் பயிர் திடீரென்று, மூன்று, நான்கு நாட்களில் முற்றிவிட்டது. உலர்ந்து மஞ்சள் ஆகியிருந்த பயிர் தொடுவானம் வரை அடர்ந்து பரந்து அறுவடையை எதிர்பார்த்துக் காத்திருந்தது. எப்பேர்ப்பட்ட செல்வம் கொட்டிக் கிடந்தது! அவசர வேலையில் எவ்வளவு செல்வம் வீணுகி விட்டது என்பதைப் பார்க்கவே எனக்கு வேதனையாயிருந்தது. எவ்வளவு தானியம் வழியில் மிதிபட்டு, சிந்திச் சிதறிப் போய்விட்டது! எங்களுக்கு ஒரே அவசரம்! ஆதலால் அறுப்பறுத்த கதிர்களைக் கட்டக் கூட நேரமில்லை. கவர்க் கோல்களால் அவற்றை வாரிப் பாரவண்டியில் போட்டோம். போரடிப்பதற்காகக் களத்துக்கு விரைந்தோடியது வண்டி. கதிர்களோ வழி நெடுகச் சரிந்து விழுந்து கொண்டே போயின. இது கூடப் போனல் போகிறது, ஜனங்களைப் பார்ப்பதற்கு இன்னும் வேதனையாயிருந்தது. ஒவ்வொரு நாளும் இராணுவத்தின் அழைப்பின் பேரில் ஆட்கள் போனர்கள். பாக்கி இருந்தவர்கள் வேலை செய்தார்கள். வெயில் கொளுத்தும் பகலிலும், புழுக்கம் நிறைந்த வறண்ட இரவுகளிலும், அறுவடை வயலிலும் களத்திலும் சரக்கு வண்டிகளிலும் ஜனங்கள் ஓயாமல், உறங்காமல் உழைத்தார்கள், பாடுபட்டார்கள். ஆண்களின் எண்ணிக்கை வர வரக்

குறைந்துகொண்டே போனபடியால் வேலை மேலும் மேலும் அதிகமாகச் சுமந்துகொண்டு போயிற்று. பாவம், என் மகன் காஸிம் தன் வசத்தை மீறிச் சென்றுவிட்ட நிலைமையைத் தன்முயற்சியால் வசத்துக்குக் கொண்டுவர எண்ணினான் போலும். அறுவடை நம்பிக்கைக்கு இடமின்றி இழுத்துக் கொண்டு போயிற்று. அவனோ, ஆவேசம் வந்தவன்போல அறுவடை இயந்திரத்தை வயலில் குறுக்கும் நெடுக்குமாக ஓட்டிய வண்ணமாயிருந்தான். அவனுடைய இயந்திரம் அல்லும் பகலும் ஓய்வின்றி, பகுதி பகுதியாக அறுவடை செய்து கொண்டேயிருந்தது, கொதிக்கும் புழுதிப் படலங்களால் சூழப்பட்டு ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்குப் பாய்ந்து சென்ற வண்ணமாயிருந்தது. பொசுக்கும் காற்றில் நாள் கணக்காக அவன் இயந்திரச் செலுத்து மேடையில் நின்றுகொண்டிருந்தான், மங்கிய கானலைப் பருந்து போல நோட்டமிட்டுக்கொண்டிருந்தான். இன்னும் அறுவடை ஆகாத கோதுமை வயல்கள் அதற்கு அப்பால் மறைந்திருந்தன. மகனை, அவனுடைய கறுத்த முகத்தை, தொங்கிப்போய், மயிர் அடர்ந்திருந்த அவனது கன்னங்களைப் பார்க்கவே எனக்கு அச்சமாகவும் வருத்தமாகவும் இருந்தது. என் நெஞ்சு விண்டு போயிற்று. ''என் குழந்தை இறந்து விடுவான், வெயிலில் சுருண்டு விழுந்துவிடுவான்'' என்று நினைத்துக் கொண்டேன், ஆயினும் வெளியே சொல்லத் துணியவில்லை. அவன் பின்வாங்க மாட்டான், கடைசிக்

கணம் வரை அறுவடை நடத்திக்கொண்டிருப் பான் என்பதை அவன் கண்களில் அடர்ந்த கடுமையான ஒளியிலிருந்து கண்டுகொண்டேன்.

அந்த நேரமும் வந்துவிட்டது. ஒரு நாள் அலிமான் அறுவடை இயந்திரத்துக்கு ஓடிவந்து விட்டு, தொங்கிய தலையுடன் அங்கிருந்து திரும்பி னாள்.

''அவனுக்கு அழைப்பு வந்திருக்கிறது'' என்று மெல்லெனக் கூறினாள்.

''எப்போது?''

''இப்போதுதான். கிராம சோவியத்தின் அஞ் சல்காரன் மூலமாக.''

மற்ற எத்தனையோ பேர்களைப் போலவே காஸிமும் விரைவிலோ தாமதித்தோ இராணு வத்துக்குப் போக வேண்டி வரும் என்பதை நான் அறிந்து தான் இருந்தேன். ஆயினும் இந்தச் செய்தியைக் கேட்டதும் என் கால்கள் துவண்டன. மரத்துப் போன கைகளில் ஒரே யடியாக வலி எடுத்தது. அரிவாளை நழுவ விட்டு விட்டுத் தரையில் உட்கார்ந்து விட்டேன்.

''அங்கே என்ன செய்கிறான்? நாம் கூடிப் பேச வேண்டுமே'' என்று நடுங்கும் உதடு களைச் சிரமத்துடன் கட்டுக்குள் வைத்தவாறு சொன்னேன்.

''சாயங்காலமாக வருகிறேன் என்றான். நான் போகிறேன், அம்மா, நீங்கள் அப்பாவிடம் சொல்லுங்கள். ஜைனுக்கை இன்று காணவில்லை. எங்கே போய்விடுகிறான்?..''

''போ அலிமான், போ, மாவு பிசைந்து

வை. நான் சீக்கிரம் வந்து விடுகிறேன்'' என்று நான் அவளிடம் கூறினேன்.

அறுவடை நிலத்தில் முன்போலவே சிலையாக உட்கார்ந்திருந்தேன். இப்படி நெடு நேரம் அமர்ந்திருந்தேன். அவிழ்ந்து விழுந்த தலைக்குட்டையைத் தரையிலிருந்து எடுப்பதற்குக்கூடத் திராணி இல்லை எனக்கு. அப்பொழுதுதான் பார்த்தேன் — எறும்புகள் சாரி சாரியாகப் பாதையில் ஊர்ந்துகொண்டிருந்தன. அவையும் உழைத்தன, வைக்கோலையும் தானியத்தையும் சுமந்து சென்றன. துயரத்தில் ஆழ்ந்த மனிதப் பிறவி, உழைப்பாளி, அவற்றுக்கு எவ்விதத்திலும் குறையாத உழைப்பாளி அருகே வீற்றிருப்பது, அந்தக் கணத்தில் அவற்றின் மேல், அற்ப உழைப்பாளிகளான எறும்புகள் மேல்கூட அந்த மனிதப் பிறவி பொறாமைப்படுவது அவற்றுக்குத் தெரியவே தெரியாது. நிம்மதியுடன் தங்கள் வேலையைச் செய்ய அவற்றுக்கு முடிந்தது. யுத்தம் மட்டும் மூளாவிட்டால், எறும்புகளின் வாழ்வைக் கண்டு நான் பொறாமைப் படுவேனா? சொல்லவே வெட்கமாயிருக்கிறது.

அதற்குள் ஜைனுக் தன் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்து சேர்ந்தான். அந்த நாட்களில் அவன் கம்யூனிஸ்ட் இளைஞர் சங்கச் சுமை வண்டிக் குழுவில் தானியத்தை ரயிலில் ஏற்றும் வேலை செய்து வந்தான். அண்ணனுக்கு அழைப்பு வந்திருக்கும் செய்தி கிடைத்து, என்னைப் பார்க்க வந்திருக்கிறான் என்பது தெரிந்தது. ஜைனுக் வண்டியிலிருந்து குதித்து, தலைக்குட்டையைத்

தரையிலிருந்து எடுத்து என் தலைமேல் போர்த்தினான்.

''வா அம்மா, வீட்டுக்குப் போவோம்'' என்று, நான் எழுந்திருப்பதற்கு உதவி செய்தான்.

நாங்கள் பேசாமல் வண்டியில் சென்றோம். இப்போது சில நாட்களாக ஜைனைக் அடையாளம் கண்டுகொள்ள முடியாதப்படி மாறியிருந்தான், ஆழ்ந்த நிதானமுடையவனாக மாறியிருந்தான். எதனாலோ அவன் செய்தி கொணர்ந்த அந்த ருஷ்ய இளைஞனை மிகவும் ஒத்திருப்பதாக எனக்குப் பட்டது. இவனுடைய குழந்தை விழிகளிலும் அதே போன்ற கடுமையான உணர்வு குடிகொண்டிருந்தது. இந்த நாட்களில் ஜைனைக்கும் அந்த ருஷ்ய இளைஞன் போலவே பிள்ளைப் பருவத்திடம் விடை பெற்றுக்கொண்டு விட்டிருந்தான். எத்தனையோ சிறுவர்கள் அப்போது பாலப் பருவத்தை விட்டுப் பிரிந்திருந்தார்கள்... ஜைனைக்கைப் பற்றி எண்ணமிடுகையில், மாஸெல் பேக்கிடமிருந்து நீண்ட காலமாகத் தகவல் எதுவும் இல்லை என்பது எனக்கு நினைவு வந்தது. ''அவனுக்கு என்ன நேர்ந்து விட்டது? இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப் பட்டுவிட்டானா என்ன? அவன் ஏன் எழுதுவதில்லை? சிறு செய்தியாவது அவனால் ஏன் அனுப்ப முடியவில்லை? வீட்டுப் பழக்கம் அவனுக்கு விட்டுப் போய்விட்டது, தாயார்-தகப்பனாரை மறந்து விட்டான், நகரத்தில் அவன் நெஞ்சம் கடினமாகி விட்டது போலும். இப்போது என்ன பயிற்சி வேண்டிக் கிடக்கிறது? வீட்டுக்குத் திரும்புவதே மேல்.

அங்கே செய்வதற்கு இப்போது என்ன இருக்கிறது?''—வண்டியில் உட்கார்ந்தவாறே இத்தகைய எண்ணங்களில் மூழ்கினேன்.

''ஜைனுக், நீ ரயிலடிக்குப் போய்வருகிறாயே, அங்கே எப்படி? யுத்தம் சீக்கிரத்தில் முடிந்துவிடும் என்று ஏதாவது பேச்சு காதில் படவில்லையா?'' என்று அப்புறம் ஜைனுக்கிடம் கேட்டேன்.

''இல்லை அம்மா. சீக்கிரம் முடியாது, நமது நிலைமை இப்போது மோசமாயிருக்கிறது. ஜெர்மானியர்கள் மேலும் மேலும் முன்னேறி வருகிறார்கள். எங்கேயாவது அவர்களைத் தேக்கி நிறுத்தி ஒரு தரம் அவர்கள் இடுப்பை முறிக்க நமக்கு வாய்த்தால் அப்புறம் நமது கை ஓங்கிவிடும். விரைவிலேயே இப்படி நேரும் என்று நினைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு ஜைனுக் கொஞ்ச நேரம் பேசாமல் குதிரையை விரட்டினான். அப்புறம் திரும்பிப் பார்த்து, ''அம்மா, நீ என்ன, பயப்படுகிறாயா? நிரம்பவுமா? நீ சிந்திக்காதே, நீ சிந்திக்க வேண்டாம் அம்மா, கவலைப் படாதே. எல்லாம் நன்றாகவே முடியும். நீயே காண்பாய்'' என்றான்.

அட, என் அசட்டுப் பிள்ளையே! இந்த மாதிரிச் சொல்லி என்னைத் தேற்றப் பார்த்தான் அவன், எனக்கு இரங்கினான்! சிந்திக்காமல் இருக்க முடிந்ததா என்ன? நான் கண்களை மூடிக் காதுகளைப் பொத்திக்கொண்டால் கூட எண்ணமிடுவதை நிறுத்தியிருக்க மாட்டேன்.

வீடு வந்து சேர்ந்தோம். அங்கேயோ, அலி

5—538

மான் உட்கார்ந்து தேம்பிக்கொண்டிருந்தாள். ரொட்டி மாவு இன்னும் பிசையவில்லை. எனக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. ''நீ என்ன, மற்றவர்களை விட உயர்த்தியோ? எல்லோரும் தாம் படையில் சேர்கிறார்கள், உன் கணவன் மட்டுமே அல்ல. என்னவோ கேவிக் கேவி அழுதுகொண்டு கை சோர்ந்து உட்கார்ந்து விட்டாயே. இப்படி இருக்கக் கூடாது. அப்புறம் நாம் வாழ்க்கை நடத்துவதுதான் எப்படி?'' என்று அவளை இடித்துக் காட்ட விரும்பினேன். ஆனால் அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டேன். அவளைக் கடிந்து கொள்ளவில்லை. அவளுடைய இளமைக்காக இரங்கினேன். ஒரு வேளை இந்தப் பரிவு வீண்போலும். ஆரம்ப நாட்களிலேயே அவளுடைய உள்ளத்திற்குச் சூடுபோட்டு, அப்புறம் அவளுக்கு லேசாயிருக்கும்படிச் செய்திருக்க வேண்டும் போலும். அறியேன். ஆனால் அப்போது நான் அவளிடம் ஒன்றுமே சொல்லவில்லை.

காஸிம் மாலையில், அநேகமாகச் சூரியன் மறையும் தறுவாயில் வந்தான். அவன் வெளி வாயிலில் தென்பட்டதுமே அலிமான் அடுப்பு மூட்டுவதை அப்படியே போட்டுவிட்டுக் கண்களில் நீர் சோர அவனருகே ஓடிச் சென்று அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டாள்.

''நான் இங்கே இருக்க மாட்டேன், இருக்க மாட்டேன் நீ இல்லாமல்! இறந்து போவேன்!''

காஸிம் அறுவடை இயந்திரத்திலிருந்து புழுதி

யும் அழுக்கும் எண்ணெய்ச் சிக்குமாக அப்படியே நேராக வந்திருந்தான். மனைவியின் கைகளைத் தோளிலிருந்து அகற்றிவிட்டுச் சொன்னான்:

''இரு அலிமான். நான் நிரம்ப அழுக்காக இருக்கிறேன். சோப்பும் துண்டும் கொடுத்தா யானால் நல்லது. ஆற்றுக்குப் போய்க் குளித்து விட்டு வருகிறேன்.''

அலிமான் திரும்பி என்னை நோக்கினாள். நான் புரிந்துகொண்டேன். அவள் கையில் காலி வாளியைக் கொடுத்தேன்.

''கையோடு தண்ணீரும் கொண்டுவா.''

அன்று இரவு அவர்கள் ஆற்றிலிருந்து வெகு நேரம் கழித்துத் திரும்பினார்கள். சந்திரன் முக்கால் பங்கு மேலே வந்துவிட்டிருந்தது. வீட்டுக் காரியங்களை எல்லாம் நானே செய்தேன், ஜைனுக்கும் ஒத்தாசை செய்தான். பாதி ராத்திரி ஆகும் போது ஸுவான்குலும் வந்து சேர்ந்தான். நானோ, பொழுதெல்லாம் எதிர்பார்த்துக் காத்திருந்தேன், அவன் எங்கே கண்காணாமல் மறைந்துவிட்டான் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். பகலிலேயே மலைக்குச் சென்று சாம்பல் நிறச் சவாரிக் குதிரையைக் கூட்டத்திலிருந்து கொண்டுவந்திருந்தான். அது குட்டியாய் இருக்கும் போதே நாங்கள் காஸிமுக்காக அதை வாங்கியிருந்தோம். அப்போது அவன் டிராக்டர் ஓட்டியாக வேலை செய்யத் தொடங்கியிருந்தான். அது நல்ல குதிரை, விரைந்த ஓட்டமுள்ளது, ஆழ்ந்த குழிவுள்ள வலிய குளம்புகளும் பின் முழங்கால்களுக்குக் கீழ் வெண்

மயிரும் கொண்டது. கிராமம் பூராவிலும் பிர சித்தமானது அது.

. . . குதிரை வரும் சத்தம் சாலையில் கேட்டதுமே,
வீட்டு முகப்பில் ஓடிச் சென்று பார்த்திடுவேனே...''

என்று பெண்கள் அதைப் பற்றிப் பாட்டுக்கள் கூடப் பாடுவார்கள்.

விடை பெற்றுச் செல்வதற்கு முன்பு மகன் ஓரிரண்டு நாட்களாவது தன் குதிரையில் சவாரி செய்யட்டும் என்று தகப்பன் எண்ணியிருக் கிறான்.

அதிகாலையில் நாங்கள் எல்லோரும் கிராமத் திலிருந்து இராணுவக் காரியாலயம் சென்றோம். நானும் அலிமானும் ஜைனுக்கின் வண்டியிலும் காஸிமும் ஸுவான்குலும் தங்கள் தங்கள் குதி ரைகள் மீது. மிகப் பெரிய படை திரட்டல் நடந்து கொண்டிருந்த காலம் அது. மக்கள் இன்னமும் ஏராளமாக இருந்தார்கள். கன்னங் கறேல் என்று, ஒரு கோடி பெரிய மலைப்பதி விலும் மற்றொரு கோடி கண்ணுக்குத் தெரி யாமலும் நீண்டிருந்த நெடுஞ்சாலையை நான் எப்படி வைத்த கண் வாங்காமல் நோக்கி னேன்! குதிரைகள் மேலும் காளைகள் மேலும் ஏறிக் கொண்டு ஜனங்கள் எல்லாக் கிராமங் களிலுமிருந்து வந்தார்கள். வட்டாரக் கேந்தி ரத்தில் மக்களும் வண்டிகளுமாக நெரிந்த கூட் டத்தில் முன்னேறவே இடமில்லை. குழந்தை களும் கிழவர்களும் கிழவிகளும் கூட்டத்தில்

ருந்தார்கள். எல்லோரும் தங்களவர்களின் பக்கத்தில் இடித்து நெருக்கினார்கள், ஓர் அடி கூடப் பின்தங்கவில்லை. சிலர் அழுதுகொண் டிருந்தார்கள், சிலரோ போதையேறக் குடித் திருந்தார்கள். ஜனங்கள் கடல் போல. அதில் ஆழமும் உண்டு திடரும் உண்டு என்று சொல் வது சரிதான். அதே போல இங்கேயும், யுத்தத் திற்குச் செல்லும் இந்த ஆரவாரம் நிறைந்த வழியனுப்பல்களிலும், உறுதியைக் கைவிடாமல், கலகலவென்று பேசிக்கொண்டு, மற்றவர்களைக் குதூகலப்படுத்தக் கூடச் செய்து கொண்டு, அக்கார்டியன் வாத்திய இசையுடன் பாடி ஆடிக்கொண்டிருந்த திண்மையும் தெளிவும் வாய்ந்த ஜிகித்துக்கள் இருந்தார்கள். கிர்கீஸியப் பாட்டுக்களும் ருஷ்யப் பாட்டுக்களும் ஒன்றன் பின் ஒன்றாக முழங்கின. ''கத்யூஷா'' என்ற பாட்டை எல்லோரும் பாடினார்கள். அப்போதுதான் இந்தப் பாட்டை நான் தெரிந்து கொண் டேன்.

படைதிரட்டப்பட்டவர்கள் எல்லோருக்கும் ராணுவக் காரியாலயத்தின் விசாலமான முகப்பு வெளியில் இடம் போதவில்லை. கிரா மத்தின் பிரதானத் தெரு நடுவே அவர்களை வரிசைகளாக நிறுத்தி, ஒவ்வொருவருடைய தகப் பெயரையும் சொந்தப் பெயரையும் சொல்லி அழைத்தார்கள். மக்கள் அக்கணமே பேச்சை நிறுத்தி விட்டார்கள், மூச்சுக் காட்ட வில்லை. போருக்குச் செல்பவர்கள் மீது நான் கண்ணோட்டினேன். துயர அலை என் தொண்டை

வரை பரவிற்று. அவர்கள் எல்லோருமே பொறுக்கி எடுத்தவர்கள் போல இருந்தார்கள்— இளமையும் உடல் கட்டும் உள்ள ஜிகித்துக்கள். அவர்கள் நெடுங்காலம் வாழவும் உழைக்கவுமே ஏற்றவர்கள். ஒவ்வொரு முறையும் ஒருவனுடைய பெயர் கூப்பிடப்பட்டதும் அவன் ''ஆஜர்'' என்று பதில் அளித்து விட்டு எங்கள் பக்கம் பார்வையைச் செலுத்தினான். ''ஸுவான்குலோவ் காஸிம்'' என்ற அழைப்பைக் கேட்டதும் என்னை அறியாமலே என் உடம்பு நடுங்கிற்று. புதிய வேதனை அலை என் கண்களை மறைத்தது. ''ஆஜர்'' என்று பதிலளித்தான் காஸிம். அலிமான் என் கையை இறுகப் பற்றினாள். ''அம்மா'' என்று கிசுகிசுத்தாள். நான்தான் என்ன செய்ய முடியும்? நான் புரிந்து கொள்ளத்தான் செய்தேன். பிரிவு அவளுக்குக் கடினமாக, பயங்கரமாக இருந்தது. ஆனால் மக்களிடமிருந்து, அதுவும் ஆபத்து வந்திருக்கையில், விலகி ஒதுங்க யாரால் முடியும்? ஐயோ, அலிமான், என் அருமை அலிமான்! இது இராணுவத் தேவை, நாடு முழுவதின் தேவை என்பதை அவளுந்தான் புரிந்து கொண்டாள். ஆனால் அவளைப் போல் கணவன் மேல் அவ்வளவு உயிராயிருந்த வெறொரு பெண்ணை நான் என் வாழ்நாளில் காணவே இல்லை.

அன்று நாங்கள் கிராமத்துக்குத் திரும்பினோம். படையில் சேர்ந்தவர்கள் ஒரு நாளுக்குப் பின் முகாம்களுக்கு அனுப்பப்படுவார்கள் என்று அறிந்துகொண்டோம். இராணுவக் காரியாலயத்தில்

இடர்ப்படுவதில் அர்த்தம் ஒன்றுமில்லை; நல்ல வேளையாக நமது கூட்டுப் பண்ணை நெடுஞ் சாலையை ஒட்டினாற் போலிருக்கிறது; போகிற வழியில் உங்களிடம் வந்து விடை பெற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறி எங்களை வீடு திரும்பச் செய்தான் காஸிம். ஸுவான் குலின் குதிரையை அலிமானுக்காக விட்டுவிட்டு நாங்கள் மற்றவர்களுடன் வண்டியில் திரும் பினோம். ஜைனுக்கும் வட்டாரக் கேந்திரத்தி லேயே தங்கிவிட்டான். படைதிரட்டப்பட்டவர் களைத் தன் வண்டியில் அவன் ரயில் நிலையம் சேர்க்க வேண்டியிருந்தது.

ராத்திரி வெறும் வீட்டை அடைந்ததும் நான் என்னுடைய உள்ளத்தைக் கட்டவிழ்த்து விட்டு ஆறாகக் கண்ணீர் பெருக்கினேன். ஸுவான்குல் நீர் கொதிக்க வைத்துக் கடும் தேநீர் எனக்கு ஊற்றிக் கொடுத்து, கட்டாயப்படுத்திக் குடிக்க வைத்தான். அப்புறம் என் அருகே உட்கார்ந்து கொண்டான்.

''தல்கோனை, நானும் நீயும் எந்த நிலையில் இருந்தோம்? இந்த மக்களோடு சேர்ந்தே நாம் மனிதர்கள் ஆனோம். ஆகவே, எல்லாவற்றை யும் — இன்பத்தையும் துன்பத்தையும் — அவர் களோடு சமமாகப் பகிர்ந்து கொள்வோம். எல் லாம் நன்றாயிருந்தபோது எல்லாரும் சந்தோஷ மாயிருந்தார்கள். இப்போது, ஒவ்வொருவனும் தன்னைப் பற்றியே எண்ணித் தன் விதிக்காக அழுவதா? இல்லை, அது நேர்மை அற்ற செயல். நாளை உன்னைக் கட்டுப்படுத்திக்கொள். அலி

மான் செத்துப் போகிருள் என்ருல் அது வேறு விஷயம். வாழ்க்கையில் நாம் கண்டவற்றை அவள் காணவில்லை. நீ இதை நினைவில் இறுத்திக் கொள். போர் நீண்டால் நானும் படையில் சேர்ந்துவிடுவேன், மாஸெல்பேக்குக்கும் வயது வந்துவிடும், அவனும் படையில் சேர்த்துக் கொள்ளப்படலாம். தேவைப்பட்டால் எல்லோ ருமே இராணுவ சேவைக்குப் போய்விடுவோம். ஆகையால், தல்கோனே, எல்லாவற்றுக்கும் தயா ராயிரு, பழக்கப்படுத்திக் கொள்...''

அடுத்த நாள் நடுப்பகலுக்குப் பிறகு படை வீரர்கள் அனுப்பப்பட்டார்கள். காஸிமும் அலி மானும் அணிவரிசைக்கு முன்னே குதிரைகளில் ஏறி விரைந்து வந்தார்கள். வீட்டுக்குப் போய் விடை பெற்று வருவதற்குக் காஸிம் அனு மதிக்கப் பட்டிருந்தான். அலிமானுடைய கண் கள் கொப்புளங்களைப் போல வீங்கியிருந்தன. அவள் வழி நெடுக அழுதிருக்கிருள் என்பது தெரிந்தது. காஸிம் உணர்ச்சிகளை அடக்கிக் கொள்ள முயன்ருன், உறுதிப்படுத்திக்கொண் டான், ஆனுல் அவனுக்கும் இது எளிதாயில்லை. நாங்கள் ரயிலடிக்கு வர வேண்டாம் என்றும், டிராக்டர் ஓட்டிகளையும் அறுவடை இயந்திர டிரைவர்களையும் அறுத்து முடியும் வரை முகாம் களுக்கு அனுப்ப வேண்டாம் என்று தீர்மா னிக்கப் பட்டிருப்பதால் தான் வீடு திரும்பக் கூடும் என்றும் காஸிம் எங்களிடம் சொன்னுன். எதனுல் தூண்டப்பட்டு அவன் இப்படிக் கற்பனை செய்தான், அலிமானுக்காக பயந்து, அவளுக்குப்

பிரிவு இலகுவாயிருக்கும் படிச் செய்ய எண்ணி ஞனோ, அல்லது உண்மையாகவே அவனுக்கு அந்த மாதிரிக் கூறப்பட்டதோ அறியேன். உத் தரவு சரியான நேரத்துக்குள் கிடைத்துவிட் டால் ரயில் நிலையத்திலிருந்து தங்களைத் திருப்பி அனுப்பிவிடுவார்கள் என்று அவன் சொன்னான். அலிமான் மேலும் எங்கள் மேலும் அவன் பரிவு காட்டினன் என்பது இப்போது எனக்குப் புரிகிறது. ரயில் நிலையம் வரை ஒரு நாள் வண்டிப் பயணம். அங்கிருந்து திரும்பு வது எங்கே? வழி முடிவற்றது ஆகிவிடுமே, வடிக்கும் கண்ணீர் எல்லாம் போதாதே. ஆனல் அப்போது காஸிமின் சொற்களை நம்பினேன். சாகும் வரை மனிதனுக்கு நம்பிக்கை போகாது என்பார்கள். நெடுஞ்சாலை வரை அவனை வழி யனுப்ப நாங்கள் சென்ற போதே என் மனதில் ஐயம் துளிர்த்துவிட்டது.

அறுவடை வயலில் வேலை செய்தவர்கள் அத்தனை பெயரும் வழியில் காஸிமுக்கு விடை கொடுத்தார்கள். அறுவடைக்காரர்கள், சுமை வண்டிக்காரர்கள், போர் அடிப்பவர்கள், எல் லோரும் ஒரே பரபரப்புடன் ஓடிவந்தார்கள். அறுவடை இயந்திரமும் அருகாமையில் தான் இருந்தது. காஸிமின் துணையாட்கள் இயந்திரத் தைப் பக்கத்தில் நிறுத்திவிட்டு விடை பெற்றுக் கொள்ள விரைந்தார்கள்.

போருக்குப் புறப்படும் கொல்லன் பட்டடை யிடமும் சம்மட்டியிடமும் விடை பெற்றுக் கொள்கிருன். என் காஸிமோ தேர்ந்த தொழி

லாளி, தனது வேலையில் நிபுணன். அறுவடை இயந்திரம் நின்றதும் காஸிம் தனது கிராம நண்பர்களுடன் உரையாடிக் கொண்டே சாலை மீது கண்ணோட்டினான். படைதிரட்டப்பட்டவர்களின் நீண்ட அணிவரிசை சுமை வண்டிகளுடனும் குதிரைகளுடனும் செங்கொடிகளுடனும் அப்போதுதான் திருப்பத்தில் வந்துகொண்டிருந்தது.

''அப்பா, இந்தா, பிடித்துக்கொள்!'' என்று கூறிக் குதிரையின் கடிவாளவாரை ஸூவான் குலிடம் கொடுத்துவிட்டுக் காஸிம் அறுவடை இயந்திரத்தை நோக்கி நடந்தான். அதைச் சுற்றி வந்து எல்லாப் பக்கங்களிலிருந்தும் அதை நோட்டமிட்டான். அப்புறம் திடீரென்று இயக்கு மேடை மேல் தாவி ஏறினான். ''எஷென்குல், வா போட்டி போடு! அப்போது போட்டோமே, அது போல!'' என்று டிராக்டர் ஓட்டியைப் பார்த்துக் கத்தினான்.

லேசாக ஒலித்தவாறு அரை வேகத்தில் இயங்கிக்கொண்டிருந்த எஞ்சின்கள் விரைந்து இயங்கி முழங்கலாயின. அறுவடை இயந்திரம் கடகடத்தது, சங்கிலிகள் கிலுகிலுத்தன, கதிரடி இயந்திரத்தின் வழியே வைக்கோல்களைச் சூறுவளி போல இறைத்தவாறு கோதுமை வயலைச் சரசர வென்று அறுத்துத் தள்ளத் தொடங்கிற்று. காஸிம் வெப்பக் காற்றின் பக்கமாக முகத்தை வைத்துக்கொண்டு தோள்களைச் சீர்படுத்தியவாறு சிரித்தான். அவன் எல்லாவற்றையும் மறந்து விட்டான் என்று தோன்றியது. அவனும்

டிராக்டர் ஓட்டியும் ஒருவருக்கொருவர் ஏதோ சொல்லிக் கொண்டார்கள், தலைகளை ஆட்டினார் கள், வயல் ஓரம் வரை போய்த் திரும்பி மறுபடி வந்தார்கள். அறுவடை இயந்திரம் ஸ்டெப்பி வெளிப் பறவை போன்று வயல் மீது பறந்தது. நிமிட நேரத்துக்கு நாங்கள் எல்லோரும் யுத்தத்தை மறந்து விட்டோம். ஆட்கள் மகிழ்ச்சி பொங்கும் விழிகளுடன் நின்றார்கள். ஆனால் எல்லோரையும் விடப் பெருமை பீறிட நின்றாள் அலிமான். அவள் பேசாமல் அறுவடை இயந்திரத்தை எதிர் கொள்ள முன் சென்றாள், வாய்க்குள் சிரித்துக் கொண்டாள். அறுவடை இயந்திரம் நின்றது. மறுபடியும் எங்களை ஏக்கம் கவ்விக் கொண்டது. எங்கள் அண்டை வீட்டுக்காரி ஆயஷாவின் பதின்மூன்று வயது மகன் பெக்தாஷ் (அறு வடை இயந்திரத்தில் வைக்கோல் காரனாகப் பணியாற்றிவந்தான் அவன்) காஸிம் அருகே பாய்ந்து சென்று அவனை முத்தமிட்டு அழத் தொடங்கினான். நான் உதடுகளைக் கடித்துக் கொண்டேன். வாய்விட்டு அரற்ற வேண்டும் போலிருந்தது. ஆனால், ஸுவான்குலின் எச் சரிக்கை நினைவுக்கு வரவே எனக்குத் துணிவு உண்டாகவில்லை. காஸிம் பெக்தாஷைக் கைகளால் தூக்கி அறுவடை இயந்திர இயக்கு சக்கரத்தின் பக்கம் அமர்த்திவிட்டு மெதுவாகப் படிகள் வழியே கீழே இறங்கினான். நாங்கள் அவனைச் சூழ்ந்து கொண்டோம். அவன் தன் துணையாட் களிடம்—இயக்குபவர்களிடமும் டிராக்டர் ஓட்டி

யிடமும் — விடை பெற்றுக்கொண்டான். படை வீரர்கள் அணிவரிசை நெடுஞ்சாலையில் எங்களுக்கு நேராக வந்துவிட்டது. எனவே துரிதப் படுத்த வேண்டியிருந்தது.

நாங்கள் காஸிமை இப்படி வழியனுப்பினோம். அவன் குதிரையில் ஏறிக்கொள்ளும் நேரம் வந்ததும் அலிமான், பாவம் அலிமான், பெரியவர்களும் குழந்தைகளும் இருப்பதையும் பொருட்படுத்தாமல் வீரிட்டழுது, காஸிமின் தோள்களைப் பற்றிக்கொண்டு உயிரற்றவள் போலத் துவண்டாள். அவள் முகம் இரத்தம் செத்து வெளிறியிருந்தது. கண்கள் மட்டுமே சுடர்ந்தன. நாங்கள் அவளைப் பலவந்தமாக அப்புறப்படுத்தினோம். அவளோ, திமிறிக்கொண்டு மீண்டும் கணவனை நோக்கிப் பாய்ந்தாள். இந்த மாதிரி ஒவ்வொரு தடவையும் குழந்தை போல அவன் கையைப் பிடித்து இழுத்து, அங்கவடியில் கால் வைக்க விடாமல் அவனைத் தடுத்தாள்.

''நில்லு! ஒரு நிமிடம்! இன்றும் ஒரு நிமிடம்!'' என்று அவனைக் கெஞ்சினாள்.

காஸிம் அவளை முத்தமிட்டான்.

''இப்படி அழாதே, அலிமான்! பார்த்துக் கொண்டே இரு, நான் நாளைக்கே ரயில் நிலையத்திலிருந்து திரும்பி வருவேன். என்னை நம்பு!'' என்று தேற்றினான்.

''நீ போ அலிமான். சாலை வரையிலும் நீயே அவனை வழியனுப்பி விட்டு வா. நாங்கள் இங்கேயே பிரிவு சொல்லிக் கொள்கிறோம். தவக்கப் படுத்த மாட்டோம்'' என்று ஸுவான்குல் மரு

மகளிடம் சொன்னான். பின்பு மகன் கையைப் பற்றிக்கொண்டு ''என் விழிகளை நேராகப் பார்'' என்று மெதுவாகக் கூறினான்.

அவர்கள் ஒருவரை ஒருவர் நேரிட்டு நோக்கினார்கள்.

''என்னைப் புரிந்துகொண்டாயா?'' என்று கேட்டான் தகப்பன்.

''ஆம், அப்பா, புரிந்துகொண்டேன்'' எனப் பதில் அளித்தான் மகன்.

''நல்லது, சுகமாகப் போய் வா!'' என்று கூறி விட்டு ஸுவான்குல் குதிரைமேல் ஏறி அமர்ந்து திரும்பிப் பார்க்காமல் அப்பால் போய் விட்டான்.

''மாஸெல்பேக்கிடமிருந்து கடிதம் வந்தால் அவனுடைய முகவரியை எனக்கு எழுதி அனுப்புங்கள்'' என்று என்னிடம் விடை பெற்றுக் கொள்கையில் காஸிம் சொன்னான்.

காஸிமும் அலிமானும் குதிரையைக் கடிவாளத்தைப் பிடித்து நடத்தியவாறு சாலையை நோக்கி நடந்தார்கள். நான் அவர்கள் மேல் பதித்த பார்வையை அகற்றவே இல்லை. நெடுஞ் சாலையில் படைவீரர்களின் அணிவரிசை ஏற்கெனவே கடந்து சென்று விட்டது. முதலில் அலிமான் அங்கவடியைப் பற்றிக்கொண்டே ஓடினாள். அப்புறம் காஸிம் சேணத்திலிருந்து குனிந்து அவளைக் கடைசித் தடவையாக முத்தமிட்டு விட்டுக் குதிரையை விரைவாக முடுக்கினான். அலிமானோ, குளம்புப் புழுதியின் பின்னே மேலும் மேலும் ஓடிக்கொண்டே இருந்

தாள். நான் அவளைத் தொடர்ந்து போய் வீட்டுக்கு அழைத்து வந்தேன்.

அடுத்த நாள் மாலையில் ஜைனுக் ரயில் நிலையத்திலிருந்து திரும்பி வந்தான். சேணம் கழற்றப்பட்ட சவாரிக் குதிரை வண்டியின் பின்னே கட்டப்பட்டிருந்தது.

5

தூரத்தில் சண்டை நடந்துகொண்டிருந்தது, இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது, ஆனால் நாங்களோ, உழைப்பு என்ற போரில் ஈடுபட்டிருந்தோம். காஸிம் எச்சரித்தது சரியாயிற்று: நாங்கள் எவ்வளவுதான் முயற்சி செய்தும் கடைசிப் பயிர் கொஞ்சம் வயலிலும் கொஞ்சம் களத்திலும் எஞ்சியிருக்கையிலேயே வெண்பனி பெய்யத் தொடங்கிவிட்டது. சிற்சில இடங்களில் உருளைக்கிழங்கு வெண்பனிக்கு அடியில் தங்கிவிட்டது. நேரத்தோடு வெட்டி எடுக்க முடியவில்லை. நாள்தோறும், ஒருவர்பின் ஒருவராக, ஆண்கள் போர்முனைக்குச் சென்றார்கள். நாங்களோ காலைமுதல் மாலைவரை கூட்டுப் பண்ணையில் கழித்தோம். ஓயாமல் போரைப் பற்றியே—அங்கே எப்படி இங்கே என்ன என்று—பேசிக்கொண்டிருந்தோம். எல்லோரிலும் அதிகமாகத் தபால்காரனை வரவேற்றோம்.

காஸிமை நாங்கள் வழியனுப்பியதற்குப் பின் ஒரு வாரம் கழித்து மாஸெல்பேக்கிட

மிருந்து கடிதம் வந்தது. பயிற்சி நிலையத் தோழர்களுடன் கூடத் தானும் படையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தற்போதைக்குத் தனது இருப்பிடம் முன்போலவே நகரத்தில் தான் என்றும் முதல் கடிதத்தில் எழுதியிருந் தான். சொல்லிக்கொண்டு போவதற்கு, விடை பெற்றுக்கொள்வதற்கு வாய்க்காதது பற்றி வருந்த வேண்டாம்; இப்படி நேரும் என்று யாருக்குத் தெரிந்திருக்க முடியும்; இதைப் பற்றி மனம் வருந்த வேண்டியதில்லை; வெற்றியுடன் திரும்பிவருவதே எல்லாவற்றிலும் முக்கியமானது என்று கூறியிருந்தான். அவனுடைய இரண்டா வது கடிதம் நோவொஸிபீர்ஸ்க்கிலிருந்து வந்தது. படைத் தலைவர்கள் பயிற்சி நிலையத்தில் பயின்று வருவதாக எழுதி, தன் புகைப்படம் ஒன்றும் அனுப்பியிருந்தான். இந்தப் படம் இப்போதும் கண்ணாடி மாட்டப்பட்டுத் தொங்குகிறது. அதற் குள் மங்கிவிட்டது. அழகான புகைப்படம். இராணுவ உடுப்பு அவனுக்குப் பொருந்துகிறது. அடர்ந்த முடி பின்னே வாரிவிடப் பட்டிருக் கிறது. கண்கள் சிறிது துயரத்துடன், சிந்தனை யுடன் காணப்படுகின்றன. இன்றளவும் அவன் இதே உருவத்தில்தான் என் கனவுகளில் காட்சி யளிக்கிறான்... அலிமான் மாஸெல்பேக்கை ஒரு தடவை மட்டுமே, அவன் தன் அண்ணனின் கலி யாணத்துக்கு வந்திருந்த போதுதான் பார்த் திருந்தாள்.

அவள் புகைப்படத்தை நன்றாகப் பார்த்தாள். ''பாருங்கள் அம்மா. நமது மாஸெல்பேக் அழ

கான இளைஞன் போலிருக்கிறதே. அப்போது நடுவில் திரை இருந்தபடியால் அவனை நான் சரியாகப் பார்க்கவில்லை. மணப்பெண்ணை எனக்கு மறு புறமிருந்து அவனை உறுத்துப் பார்க்கக் கூச்சமாயிருந்தது. நான் நாணினேன். அவன் திரும்பி வந்து தன்னைப் போலவே படிப் பாளியான அழகிய பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டால் நன்றாயிருக்கும். அல்லவா, அம்மா?'' என்றாள்.

நான் ஒப்புக்கொண்டேன். அந்த நாளைப் பற்றி நானே கனவு காணத் தொடங்கினேன்.

பனிக்காலத்தின் நடுப்பகுதி வரையில் என் மனம் ஓரளவு நிம்மதியுடன் இருந்தது. மகன் களிடமிருந்து கடிதங்கள் வந்துகொண்டிருந்தன, அதனால் மன நிறைவு உண்டாயிற்று. அந்தச் சமயத்தில் காஸிமின் கடிதம் வந்தது. தன் படையினர் போர் முனைக்கு அனுப்பப்படுவதாக எழுதியிருந்தான். என் உள்ளத்தில் அச்சம் குடி கொண்டது. இதயம் உறைந்து போகலாயிற்று. போதாக்குறைக்கு ஸுவான்குலுக்கு வேறு இராணுவ நிலையத்திலிருந்து எப்போது பார்த் தாலும் அழைப்பு வந்த வண்ணமாயிருந்தது — கமிஷன் முன் ஆஜராகும்படியோ, பதிவு செய்து கொள்ளும் படியோ, மறுபடி பதிவு செய்து கொள்ளும் படியோ, நாள் தவறாமல் அழைப்பு வரும். இராணுவ நிலையப் பயணங்களுக்கும் கூட்டுப்பண்ணையில் குழுத்தலைவன் வேலைக்கும் இடையே அலைந்தே அவன் ஒரேயடியாகத் தேய்ந்து தளர்ந்து போனான். ஸுவான்குலைப்

படையில் சேர்த்துக்கொள்வார்கள் என்று நான் எண்ணவே இல்லை. கூட்டுப்பண்ணையில் குழுத் தலைவன் இல்லாவிட்டால் கைகள் இல்லாதது போல ஆயிற்றே. ஆனாலும் அவனுக்குப் படையில் சேர அழைப்பு வந்து விட்டது. வெண்பனி படிந்த கதிர்களை நாங்கள் களத்தில் போர் அடித்துக் கொண்டிருந்தபோது எனக்கு இந்தத் தகவல் கிடைத்தது. செய்தி தெரிந்ததுமே நான் கவர்த்தடியை வைக்கோலுக்குள் செருகிவிட்டு, குளிர்ந்து போயிருந்த பிடியில் முகத்தை ஊன்றிக் கொண்டு அப்படியே நின்றுவிட்டேன். எண்ணங்களை முறைப் படுத்திக்கொள்ள என்னால் முடியவில்லை. எப்படி இருப்பது, மேற்கொண்டு எப்படி வாழ்வது? இரண்டு மகன்கள் ஏற் கனவே அங்கே இருக்கிறார்கள். இப்போது கண வனும் அங்கேயே, போர்முனைக்குப் போகிறான்...

இதற்குள் ஸுவான்குல் தானே குதிரைமீது வந்து சேர்ந்தான். ஒன்றும் பேசாமல் இறங்கி என்னிடம் வந்தான்.

''வா, வீட்டுக்குப் போகலாம். ஏற்பாடுகள் செய்ய வேண்டும்'' என்றான்.

நான் குதிரை மேல் சவாரி செய்தேன். அவன் அருகாக நடந்தான். நடந்துகொண்டே பேசுவது அதிகச் சௌகரியமாக இருக்கும் என்றான். ஆனால் பேச்சு ஓடவில்லை. பெரும்பாலும் மௌனமாகவே இருந்தோம். பேசுவதற்கு விஷயம் இல்லாததால் அல்ல, பேசுவது சங்கட மாய் இருந்ததால். எண்ணங்கள் உள்ளுக்குள் ளேயே பிணிக்கப் பட்டிருந்தன. அவற்றை

வெளிப்படுத்துவது பயங்கரமாக இருந்தது. இந்த விதமாக நாங்கள் சென்றோம் -- நான் குதிரை மேலும் அவன் கால் நடையாகவும். மங்கிய சாம்பல் நிற மேகங்கள் வானில் கவிந் திருந்தன. மஞ்சள் நிறச் சமவெளியிலிருந்து வாடைக் காற்று வீசியது, கூதல் அடித்தது. பனிப்புயல் வருவதற்கான அறிகுறிகள் தென் பட்டன. நான் இரு புறங்களிலும் பார்வை யைச் செலுத்தினேன். வயல் ஓய்ந்து போய் வெறுமையாகக் கிடந்தது. ஆட்கள் இன்றி, அரவம் இன்றி, இயக்கம் இன்றி, குளிர்ந்து, கறுத்துக் காணப்பட்டது.

ஸுவான்குல் சுருட்டுக்குப் பின் சுருட்டாகப் புகைத்துக் கொண்டு நடந்தான். அப்புறம் என் கையைப் பிடித்துக்கொண்டான்.

''குளிரில் விறைத்துவிட்டாயோ?'' என்று கேட்டான்.

நான் ஒன்றும் சொல்லவில்லை. அவன் ஏதோ கூற வாயெடுத்தவன் மௌனமாகி விட்டான். ஒருவேளை தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்பினான் போலும்: ''இதோ நானும் மகன்கள் போன வழியிலேயே போய் விடுவேன். அங்கே என்ன நடக்குமோ! வீடு திரும்ப வாய்க்குமோ வாய்க்காதோ!.. ஒரு கால் இப்போதே என்றென்றைக்கும் பிரிவு சொல்லிக் கொள்கிறோமோ என்னவோ. அப்படி யானால், என்ன வந்து விட்டது? இத்தனை ஆண்டுகள் நட்புடன் இசைந்து வாழ்ந்து விட் டோம். ஏதேனும் குறைகள் நிகழ்ந்திருந்தால்

ஒருவரையொருவர் மன்னித்துவிடுவோம். விதியில் என்ன திருப்பம் நேரிடும் என்று யார் கண்டது?..'' என்னிடம் இந்தச் சொற்களை அல்லது வேறு வார்த்தைகளைக் கூற அவன் விரும்பினுனே, நான் அறியேன். ஆனல் அப்போது அவன் என்னை மௌனமாக நோக்கியவாறு உதட்டைக் கடித்துக்கொண்டு நின்றான். அவனுடைய பழுப்பு மீசையில் நரையோடத் தொடங்கியிருப்பது என் கண்ணில் பட்டது. அதற்கு முன்பு நான் இதை ஏனே கவனிக்கவில்லை.

நானும் ஸுவான்குலும் இதே வயலில் இளமையில் சந்தித்தது, இருபத்திரண்டு ஆண்டுகள் இங்கே ஒன்ருக உழைத்தது, நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டது, குழந்தைகள் பெற்று வளர்த்தது, கோதுமை பயிரிட்டது, எல்லாவற்றையும் நான் நினைவு கூர்ந்தேன். கணப்போதில் எங்கள் வாழ்க்கை முழுவதும் என் கண்ணெதிரே காட்சியளித்தது. நாங்கள் இந்த மாதிரி, ஒருவேளை என்றென்றைக்கும், பிரிய நேரிடும் என்று நான் எண்ணவே இல்லை, அனுமானிக்கவே இல்லை. கோடை காலத்தில், முதல் அறுவடை நாள் அன்றே இரவு நேரத்தில் இதே வழியாக நாங்கள் குதிரை ஏறிச் சென்றது என் நினைவுக்கு வந்தது. ஊர்க் கோடியில் இருந்த புதிய வீதி கவனிப்பாரற்று, கட்டி முடிக்கப்படாமல் இருந்ததைக் கண்டேன். அலிமானுக்கும் காஸிமுக்கும் உரிய இடத்தில் கற்களும் செங்கல்களும் குவியல்

களாகக் கிடந்ததைப் பார்த்தேன். குதிரையின் பிடரிமீது விழுந்து அரற்றத் தொடங்கினேன். நெடு நேரம் அழுதேன். ஸுவான்குல் பேசாமல் பொறுமையுடன் காத்திருந்தான். பின்பு சொன்ஞன்:

''தல்கோனே, ஒரேயடியாக மனதில் இருப்பது எல்லாவற்றையும் அழுது தீர்த்துவிடு. இங்கே ஒருவரும் இல்லை. ஆனல் இனிமேல், ஜனங்களுக்கு எதிரே கண்ணீரைக் காட்டாதே. இனி நீ வீட்டுத் தலைவியாக, அலிமானுக்கும் ஜைனுக்குக்கும் ஆதரவாளியாக மட்டும் இருக்க மாட்டாய். எனக்குப் பதிலாகக் குழுத் தலைவியாகவும் நீ இருக்க நேரும், வேறு யாரும் இல்லை.''

நான் இன்னும் அதிகமாகக் கண்ணீர் பெருக்கினேன்.

''உன்னுடைய குழுத் தலைமை எனக்கு எதற்கு? இம்மாதிரி நேரத்தில் அதைப் பற்றிப் பேச உனக்கு எப்படி வாய் வந்தது? எனக்கு ஒன்றுமே வேண்டாம். கேட்கக்கூட இஷ்டமில்லை எனக்கு!'' என்றேன்.

ஆனல் மாலையில் நான் கூட்டுப்பண்ணை நிர்வாக அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டேன். எங்களது புதிய கூட்டுப்பண்ணைத் தலைவன், காயமடைந்த முன்னணிப் போர்வீரன் உஸேன்பாய், ஸுவான்குல், வேறு சில கிழவர்கள், கிராம அக்ஸாகால்கள் — முதியவர்கள் — ஆகியோர் அங்கே குழுமியிருந்தார்கள். உஸேன்பாய் உடனேயே என்னிடம் கூறிஞன்:

''என்னதான் சொன்னலும் சரியே, தல் கோனே அத்தை, ஆண்கள் போல நீங்கள் வேலே செய்ய வேண்டி வரும். இடுப்பை வரிந்து கட்டிக்கொண்டு குழுத் தலேவன் குதிரை மேல் நீங்கள் அமர வேண்டியதுதான். நமது கிரா மத்து நிலத்தையும் நீரையும் மக்களேயும் உங் களேக் காட்டிலும் நன்ருக அறிந்தவர் யாரும் இல்லே. நாங்கள் உங்களே நம்புகிருேம். எவரை நாம் இப்போது மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு போர்முனேக்கு வழியனுப்புகிருேமோ, அந்த நமது தலேசிறந்த குழுத் தலேவர் உங்களே நம்புகிருர் என்பதனுலும் நாங்கள் உங்களே நம்புகிருேம். ஒன்றும் செய்வதற்கில்லே. நாளே முதல் வேலேயை ஏற்றுக்கொள்ளுங்கள், தல் கோனே அத்தை.''

அக்ஸாகால்களும் அறிவுரை கூறலானுர்கள். ஆக எல்லாரும் வற்புறுத்தியதன் பேரில் நான் குழுத் தலேவியாக இருக்க ஒப்புக்கொண்டேன். ஒப்புக்கொள்ளாமல் இருப்பதுதான் எப்படி? நாம் எந்த மாதிரிக் காலத்தில் வாழ்கிருேம் என்பதை நான் புரிந்து கொள்ளவில்லேயா என்ன? என் ஸுவான்குலின் கடைசி விருப்பம் இது என்ற ஒரு காரணமே நான் செய்தது சரி எனக் காட்டப்போதுமானது. ஸுவான்குல் அன்று இரவு முழுவதும் உறங்காமல் எனக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தான்: ''இள வேனில் காலத்துக்கு வேண்டிய முன்னேற்பாடு களே இப்போதே தொடங்கு. பிராணி உரத்தை ஆறப்போடு. கலப்பைகளேயும் பரம்புச் சட்டங்

களையும் வண்டிகளையும் செப்பனிட்டு வைத்திரு... அதிகக் குழந்தைகள் உள்ள குடும்பங்களையும் கிழவர்களையும் கவனித்துக்கொள்... இதை இப்படிச் செய், இதை அப்படிச் செய்...'' ஆகா என் நிம்மதியற்றவனே, என் அன்புக் கணவனே, ஆருயிர் நண்பனே...

விடியும் வரையிலும் வெளியே பனிப்புயல் அடங்கவில்லை, காற்று புகைபோக்கியில் சீட்டியடித்தது.

ஸுவான்குலேயும் நாங்கள் நெடுஞ்சாலைவரை உடன் சென்று வழியனுப்பினோம். வயது சென்ற மற்ற மனிதர்களோடு அவனும் ஜைனுக்கின் வண்டியில் உட்கார்ந்து கொண்டான். பனிப்புயலுக்கு நடுவே அவர்கள் சென்று வெண்பனி மூட்டத்தில் மறைந்து விட்டார்கள். அடேயப்பா, என்ன குளிராய் இருந்தது! கடுங்கூதல் காற்று முகத்தைக் கன்றச் செய்தது. நான் மெதுவாக நடந்தேன், அடிக்கடி திரும்பிப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழுதேன்.

எங்கள் கூட்டுப்பண்ணைத் தலைவன் உஸேன்பாய் சொன்னது போலவே அன்றுமுதல் நான் இடுப்பை வரிந்து கட்டிக்கொண்டு குதிரைமேல் அமர்ந்து குழுத்தலைவி வேலையைக் கவனிக்கலானேன். இப்போது கூட இந்த வேலை லேசல்ல, எல்லோராலும் செய்யக் கூடியதல்ல. அப்போதோ, இன்னும் கடினமாக, பெருந்தொல்லையாக இருந்தது. திடகாத்திரமான ஆண்கள் இல்லவே இல்லை. நோயாளிகளும் நொண்டிகளும் முடங்களும்தான். மற்ற உழைப்

பாளிகளோ, பெண்கள், கன்னிகள், குழந்தை கள், கிழவர்கள், இவர்களே, உற்பத்தி செய்த தை எல்லாம் போர் முனைக்கு அனுப்பி வந் தோம். பண்ணையில் வண்டிகளுக்குச் சக்கரங் கள் இல்லை, கடிவாளவார்கள் முடிச்சுப்போட்ட கயிற்றுத் துணுக்குகள், குதிரைகளின் கழுத்துப் பட்டைகள் பிய்ந்து போனவை. கொல்லன் பட்டடையில் நிலக்கரிகூடக்கிடையாது. வெள்ளப் படுகையில் உலர்ந்த நிலத்தில் வளர்ந்திருந்த புட் புதர்களை வெட்டிக் கொணர்ந்து எரித்து நாங்கள் உலை அணையாமல் காத்தோம். வாழ்க் கையோ முன்போல இல்லை. பட்டினி தலைவா யிலில் காத்திருந்தது. ஆயினும் கூட்டுப்பண்ணை நிர்வாகம் நின்றுவிடாமல் இருப்பதற்கு எங் களால் ஆனவற்றை எல்லாம் செய்தோம். எங் கள் சக்திக்கு இயன்ற வரையில் அதை இழுத்து முன்னே கொண்டு சென்றோம். இப்போதும் நன்றாக நினைவிருக்கிறது: வேலையின் பொருட்டுச் சிலரை நல்ல வார்த்தைகளுடன் அணுகுவேன், சிலரைக் கடிந்துரைப்பேன், சிலரையோ தலை மயிரைப் பிடித்து இழுக்காததுதான் குறை. எல்லாவித நடவடிக்கைகளும் நடந்தன. அப் போது நான் என்ன தான் அனுபவிக்கவில்லை... எல்லாம் இருந்தாலும், அந்த நாட்களில் மக்கள் உலைந்து சிதறிப் போகாமல் மக்களாகவே ஒன் றித்து இருந்ததற்காக இப்போதும் அவர்களுக்கு அடி பணிகிறேன். அப்போதைய மாதர்கள் இப்போது கிழவிகள். சிறுவர் சிறுமிகளோ, எப்போதோ பல குழந்தைகளின் பெற்றோர்

ஆகிவிட்டார்கள். அந்த நாட்களை அவர்கள் உண்மையாகவே மறந்து விட்டார்கள். எனினும் ஒவ்வொரு தடவையும் அவர்களைப் பார்க்கும் போது அந்தக் காலத்தில் அவர்கள் எப்படி இருந்தார்கள் என்பதை நான் நினைவு படுத்திக் கொள்கிறேன். ஆடைகள் இன்றி, பட்டினியால் வருந்தும் அதே கோலத்தில் அவர்கள் எனக்குக் காட்சி தருகிறார்கள். அப்போது அவர்கள் கூட்டுப்பண்ணையில் எப்படி உழைத்தார்கள், வெற்றியை எவ்வாறு ஆவலுடன் எதிர்பார்த் தார்கள், எம்மாதிரி அழுது அரற்றினார்கள், எங்ஙனம் முதிர்ச்சி அடைந்துவிட்டார்கள்! அழி வற்ற பெருஞ்செயலைத் தாங்கள் ஆற்றியிருப் பது அவர்களுக்குத் தெரியாது. என்னவெல் லாம்தான் அனுபவிக்க நேர்ந்த போதிலும், எனது தோள்கள் எவ்வளவுதான் கூனிப் போய் விட்ட போதிலும், குழுத் தலைவியாக வேலை செய்ததற்கு நான் ஒருக்காலும் வருந்த மாட் டேன். பொழுது புலரும் வேளைக்கே கிளம்பிக் கூட்டுப்பண்ணை அலுவலக முகப்பு வெளியைச் சேர்ந்து விடுவேன். அப்புறம் பகல் முழுவதும் குதிரை மேல் ஏறிச் சுற்றிவந்த வண்ணமாயிருப் பேன்: அங்கே போக வேண்டும், பின்பு இங்கே போக வேண்டும்; ஸ்தெப்பி வெளியிலும் பிறகு மலை மேலும் பார்வையிட வேண்டும்; பொழுது சாய்ந்த பின்னர் நள்ளிரவு வரையில் அலுவலக வேலை—இவ்வாறாக நாட்கள் எப்படிக் கழிந்து விட்டன என்று நிதானிக்கவே எனக்கு முடிய வில்லை. ஒருவேளை இதுதான் என்னைக் காப்

பாற்றியது போலும். சில சமயங்களில் ஆட்கள் துயரம் காரணமாக, துக்க மிகுதியால் என்னை வைது திட்டினார்கள், கழுத்தைப் பிடித்தார்கள், வேலையைச் செய்யாமல் போட்டு விட்டார்கள். என்றாலும் எனக்கு மனத்தாங்கல் இல்லை. ஊஹூம், அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் நான் ஜைனக்கின் தலையிலும் அலிமானின் தலையிலும் அதிக வேலையைச் சுமத்தி விடுவேன். அல்லும் பகலும் அவர்களுக்கு நிம்மதி கிடைக்காது. அவர்களை அப்படி ஈவிரக்கமின்றி வேலை வாங்கியதற்கும் நான் பச்சாத்தாபப் படவில்லை. இப்படி வேலையில் ஈடுபட்டிரா விட்டால் வேதனை நிறைந்த எண்ணங்களும் அச்சமும் எங்களை நசுக்கியிருக்கும். ஒரே குடும்பத்திலிருந்து மூன்று பேர்கள் போருக்குச் சென்றிருந்தார்களே. அதைப் பற்றிச் சிந்தனை செய்யாதிருக்க முடியுமா? காஸிமிடமிருந்து இரண்டாவது மாதமாகியும் ஒரு சேதியோ ஆள்வழித் தகவலோ இல்லை. நானும் அலிமானும் ஒருவரையொருவர் நேராக நோக்காமல் கண்களை மறைத்துக் கொள்வோம்—ஏற்கனவே பயங்கரமாயிருந்த விஷயத்தை, காஸிமைப் பற்றி ஒன்றும் பேசிவிடாமல் இருப்பதற்காக. நாங்கள் எப்போதாவது உரையாடினாலும் எதையெல்லாமோ பற்றியும், வேலையையும் வீட்டு விவகாரத்தையும் பற்றியுமே பேசிக்கொள்வோம். நினைவுபடுத்திக் கொள்ளாதிருக்கக் குழந்தைகள் போல முயன்றோம்.

பனிக்காலத்தில் ஒரு நாள் நான் பட்டடைக்கு

ஒத்தாசை செய்வதற்காகப் போயிருந்தேன். எங்கள் குதிரைகளுக்கு அங்கே லாடம் கட்டிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று பார்க்கிறேனே, எங்கள் கூட்டுப்பண்ணைத் தலைவன் உஸேன்பாய் குதிரையைக் கெச்சை நடையில் விரட்டிக் கொண்டு வந்தான். அவன் கையில் சிறு கடிதம் ஒன்று இருந்தது. ''உங்களுக்கு அவசரத் தந்தி வந்திருக்கிறது'' என்று என்னிடம் சொன்னான். எனக்கு மூச்சுத் திணறிற்று. உலைக் கூடத்தில் லாடமடிக்கும் சம்மட்டிகளின் ஓசை என் நெஞ்சில் தாக்குவது போலப் பட்டது. என் முகம் தொங்கிப் போயிற்று.

''இது என்ன நீங்கள், தல்கோனை அத்தை! நோவொஸிபீர்ஸ்க்கிலிருந்து மாஸெல்பேக் தந்தி அடித்திருக்கிறான். வாருங்கள், வாங்கிக்கொள்ளுங்கள், பயப்படாதீர்கள்!'' என்று கத்தினான் உஸேன்பாய். சேணத்திலிருந்து குனிந்து என்னிடம் காகிதத்தைக் கொடுத்தான். ''நீங்கள் உடனே ரயிலடிக்குப் போங்கள். உங்கள் மகன் இந்த வழியாகப் பயணம் செய்கிறான். உங்களைப் பார்க்க விரும்புகிறான். உங்களுக்காக வண்டி தயார் படுத்தி, குதிரைகளுக்கு வேண்டிய புல்லையும் ஓட் தானியத்தையும் எடுத்துக்கொள்ளும்படி உத்தரவிட்டிருக்கிறேன். நிற்காதீர்கள், புறப்படுங்கள்'' என்றான்.

எனக்கு மகிழ்ச்சியில் தலைகால் தெரியவில்லை. பறந்து பறந்து வேலை செய்தேன், உலைக் கூடத்தில் ஓடிச்சாடினேன்.

''நாங்களே எல்லாவற்றையும் சமாளித்துக்

கொள்ளுகிறோம், குழுத் தலைவி. நீ சீக்கிரமாக ரயிலடிக்குப் போ, நேரமாவதற்கு முன்பு'' என்று கொல்லர்கள் என்னை அவசரப்படுத்தினார்கள்.

நான் வீட்டைப் பார்க்க ஓடினேன். என்ன ஏது என்று எனக்கே சரியாகப் பிடிபடவில்லை. மாஸெல்பேக் ரயிலடிக்கு வரும்படி கேட்டுக் கொள்கிறான், மாஸெல்பேக் சந்திக்கும்படி வேண்டிக் கொள்கிறான் என்பது ஒன்றைத்தான் நான் அறிந்துகொண்டேன். தெருவில் ஓடினேன். குளிர் ஆனபோதிலும் ஒரே கதகதப்பு. வியர்வை குப்பென்று துளிர்த்தது. ஓடிக் கொண்டே அறிவு நிதானம் இல்லாதவள் போல எனக்கு நானே பேசிக்கொண்டேன்:

''வேண்டிக் கொள்கிறானாவது? என் அருமை மகனே, நான்தான் ஆயிரங் காதமானாலும் கால்நடையாக ஓடோடி வந்து உன்னைப் பார்க்கச் சித்தமாய் இருக்கிறேனே, பறந்து வந்துவிடுவேனே!''

அடி தாயே, தாயே... என் மகன் எங்கே, எந்தத் திசையில் பயணம் செய்கிறான் என்பதை அப்போது நான் புரிந்துகொள்ளவில்லை.

வீட்டுக்கு ஓடி வந்து பரபரப்பாகச் சாப்பாடு தயாரித்தேன். இறைச்சிக் கறி சமைத்தேன். மாஸெல்பேக் நிச்சயமாகத் தனியாய் இருக்க மாட்டான், அவன் தோழர்களும் உடன் இருப்பார்கள், வீட்டில் சமைத்த பண்டங்களை அவர்களுக்கும் கொடுத்து உபசரிக்கட்டும். சேணப் பையில் தின் பண்டங்களை எல்லாம் போட்டு

எடுத்துக்கொண்டு அன்றே நானும் அலிமானும் ரயில் நிலையத்துக்குப் புறப்பட்டோம். ஜைனுக் குடன் போகவே முதலில் நான் விரும்பினேன். ஆனால் அவன் மறுத்துவிட்டான்.

''இல்லை அம்மா, அலிமானை அழைத்துக் கொண்டு போ, நான் வீட்டுக் காரியங்களைக் கவனித்துக் கொள்கிறேன். அதுதான் சரி'' என்றான்.

என் இளைய மகன் செய்தது சரி என்பதை அப்புறம் தான் நான் புரிந்துகொண்டேன். வயதில் சின்னவன் ஆனாலும் அவன் முட்டாள் அல்ல. அந்த நாட்களில் அலிமானின் மனம் என்ன பாடுபட்டது, அவள் எப்படித் துன்பமும் துயரமும் பட்டுத் தவித்தாள் என்பதை அவன் ஊகித்துத் தெரிந்துகொண்டிருந்தான் போலும். அலிமான் வேலை செய்துகொண்டிருந்த தீனிப்புல் வளைவுக்கு ஜைனுக் தானே ஓடிப்போய் அண் ணியை அழைத்தான். என் மருமகள் அவ்வளவு குதூகலமாக இருந்ததை நான் வெகு கால மாகக் காணவில்லை. அவள் மேனி எல்லாம் ஒளி சுடர்ந்தது, உற்சாகம் பீறிட்டது, என்னை விட அதிக அக்கறையுடன் ஆயத்தங்கள் செய் தாள், என்னைத் துரிதப்படுத்தினாள்:

''சீக்கிரம் அம்மா, சீக்கிரம் தயாராகு. இந்தா, மென்மயிர்த்தோல் மேல் கோட்டு, இந்தா, பஞ்சிறகுத் தொப்பி அணிந்துகொள், புறப்படுவோம்!'' என்று பறந்தாள்.

வழியில் போகும் போது கூட அவளுக்கு இருப்புக் கொள்ளவில்லை.

''விரட்டு, இன்னும் வேகமாக ஓட்டு!'' என்று வண்டிக்காரனை அவசரப்படுத்தினாள். சில வேளைகளில் கடிவாள வாரைத் தானே கையில் பிடித்துக்கொண்டு 'ட்ரியோ, ஹைற' என்று உசுப்பியவாறு குதிரைகளைச் சாட்டையால் அடித்தாள்.

தடம்பதிந்த வெண்பனிச் சாலையில் வண்டி வேகமாக உருண்டோடிற்று. குதிரைகள் உற்சாகமாக விரைந்தன. வண்டிச் சக்கரங்கள் மெல்லெனக் கடகடத்தன, மசை போட்ட இருசுகளில் மெதுவாக இடித்தன. வெண்பனி வழி நெடுக ஒரே சீராக, குதூகலமாகப் பெய்தது. இளங்கூதல் அடித்தது. அலிமானுடைய உடல் முழுவதும் வெண்பனி படிந்திருந்தது. அது அவளுக்கு எவ்வளவு அழகாக இருந்தது என்பதை அவள் அறியவில்லை. அவளுடைய தலை, கம்பளித் தலைக்குட்டை, வெளியே நீட்டிக்கொண்டிருந்த தலைமயிர்க் குச்சங்கள், கழுத்துப்பட்டை ஆகியவற்றின் மேல் வெண்பனி அடர்த்தியாகப் படிந்திருந்தது. சிவ்வெனச் சிவப்பேறிய கன்னங்கள் கொண்ட அவளது சாமளவதனமும், சஞ்சலத்துடன் பளிச்சிடும் கரு விழிகளும் வெண்பற்களும் முன்னிலும் அதிக வனப்புடன் பொலிந்தன. இளமையில் மனிதனுக்கு எல்லாம் பொருந்துகிறது—வெண்பனி கூட. அலிமான் வழி முழுவதும் வாய் ஓயாமல் பேசிக்கொண்டே இருந்தாள். மாஸெல்பேக்கின் ரயில் வந்ததும் தன்னைப் பற்றி ஒன்றும் சொல்ல வேண்டாம் என்றும் அவன் தன்னை அடையாளம் கண்டு

கொள்கிறுள் என்று பார்க்கலாம் எனவும் என்னிடம் சொன்னுள். மாஸெல்பேக்குக்குத் தெரியாதபடி அவன் பின்னே போய் அவன் கண்களைப் பொத்தி வேடிக்கை செய்யப் போவதாக மற்ருெரு சமயம் கூறிஞள். அவன் என்ன சொல்லுவான்? பயந்து நடுங்கிப் போவானே? யாரது இங்கேயும் அசட்டு வேடிக்கைகள் செய்வது என்பானே?—இவ்வாறு சொல்லி, தனது கற்பனைகளை எண்ணித் தானே கடகடவென்று வாய்விட்டுச் சிரித்தாள். அடீ அலிமான், அலிமான், என் ஆசை மருமகளே! அவள் இப்படி நடந்துகொண்டதன் காரணத்தை நான் புரிந்து கொள்ள மாட்டேன் என்று நினைத்தாளோ ஒரு வேளை? அவள்தான் மனத்திலிருந்ததைத் தானகவே வெளிக்காட்டிவிட்டாளே! திடீரென்றுசிறுது நேரம் சிரிப்பதை நிறுத்திவிட்டு மௌனமானுள். அப்புறம் தணிந்த குரலில் முணுமுணுத்தாள்:

''மாஸெல்பேக் காஸிமின் அச்சு. அவர்கள் இரட்டைப் பிள்ளைகள் போல, அப்படித்தானே?''

இது என் காதில் படவில்லை போல நான் பாசாங்கு செய்தேன். அவள் ஏதோ தன் சிந்தனையில் ஆழ்ந்தவளாகப் பேசாதிருந்தாள். பிறகு வண்டி ஓட்டியிடமிருந்தது கடிவாளவாரை வாங்கி, 'டிர்ர்ரியோ' என்று கத்திக் குதிரைகளை விரட்டினுள்.

மாலைவருவதற்குள் நாங்கள் ரயில் நிலையத்தை அடைந்துவிட்டோம். வண்டியை நிறுத்தியது தான் தாமதம், அலிமானும் நானும் பிளாட்பாரத்துக்கு ஓடினேம்—ஏதோ மாஸெல்பேக்

அந்தக் கணமே வர வேண்டும் போல. அங்கே ஒருவரும் இல்லை. நாங்கள் சுற்றுமுற்றும் பார்த்தோம். எங்களை ஏக்கம் கவ்விக்கொண்டது. எங்கே போவது, என்ன செய்வது என்று தெரியாமல் அநாதைகளைப் போல நின்று கொண்டிருந்தோம். தண்டவாளங்களுக்கும் குறுக்குக் கட்டைகளுக்கும் இடையே தரைக்காற்று வீசிக் கொண்டிருந்தது. எஞ்சின் உறைபனி அடர்ந்து, நின்ற இடத்தில் குளிரில் விறைத்துப் போயிருந்த பெட்டிகளைக் கறமுறப்புடன் நகர்த்தியவாறு முன்னும் பின்னும் ஊர்ந்துகொண்டிருந்தது, கம்பிகளில் காற்று சீட்டி அடித்துக் கொண்டிருந்தது.

நாங்கள் அதற்கு முன் ஒருபோதும் ரயில் நிலையத்தில் யாரையும் எதிர்பார்த்து நின்றதில்லை. வண்டி எப்போது வரும் என்ற தகவலை யாரிடமாவது விசாரித்துத் தெரிந்துகொள்ளக் கூட எங்களுக்குத் தோன்றவில்லை. அந்தச் சமயத்தில் எஞ்சினின் ஊதல் சத்தம் தூரத்தில் கேட்டது, ரயில் கண்ணுக்குத் தென்பட்டது.

''போவோம் அம்மா!'' என்றாள் அலிமான்.

என் முழங்கால்கள் நடுங்கின. திகில் பற்றிக் கொண்டது. ரயில் வண்டி விரைவாக நெருங்கி வந்துகொண்டிருந்தது. இதோ, வெண் பனித்துகள் கிளப்பியவாறு எஞ்சின் எங்களைக் கடந்து சென்று விட்டது. ரயில் நின்றது, நாங்கள் பெட்டிகளின் அருகே ஓடினோம். பெட்டிகளில் திணியத்திணிய மக்கள் அடைந்திருந்தார்கள். மாதர்களும் குழந்தைகளும் ஏராளமான படை

வீரர்களும். அவர்கள் யார், எங்கே போகிறார்கள் என்பதை எவர் அறிவார்? நாங்கள் ஒவ்வொரு பெட்டியின் பக்கத்திலும் நின்று விசாரித்தோம்:

''ஸுவான்குலோவ் மாஸெல்பேக் இங்கே இருக்கிறானா? தயை செய்து சொல்லுங்கள், ஸுவான்குலோவ் மாஸெல்பேக் இங்கே இல்லையா?''

சிலர் தெரியாது என்று பதில் சொன்னார்கள், சிலர் பேசாதிருந்தார்கள், இன்னும் சிலர் சிரித்தார்கள். நாங்கள் விசாரித்துக்கொண்டிருக்கும் போதே ரயில் புறப்பட்டுப் போய்விட்டது. எங்கள் நிலையத்தில் மொத்தம் மூன்றே நிமிஷ நிறுத்தம் என்று தெரிய வந்தது. கையிலிருந்து பறவையைத் தப்பவிட்டவர்கள் போல நாங்கள் நின்று கொண்டே இருந்தோம். கறுப்பு மென்மயிர்த்தோல் அரைக்கோட்டும் நமுதா பூட்சுகளும் அணிந்த முதிய ருஷ்ய ரெயில்வே ஊழியர் ஒருவர் அப்போது எங்கள் அருகே வந்தார். ரயில் வண்டியை அவர் எதிர்கொள்ளப் போனதை நான் கவனித்திருந்தேன். நாங்கள் யாரை எதிர் பார்க்கிறோம் என்று அவர் கேட்டார். நாங்கள் அவருக்கு விஷயத்தை விவரித்து மாஸெல்பேக்கின் தந்தியைப் படிக்கக் கொடுத்தோம். அவர் கண்ணாடியை மாட்டிக் கொண்டு உதடுகளை நெடு நேரம் அசைத்துக் கொண்டிருந்துவிட்டு அப்புறம் சொன்னார்:

''உங்கள் மகன் இராணுவ ரயிலில் வருவார். அது எந்த ரயில், எத்தனை மணிக்கு

நமது நிலையத்தைக் கடந்து செல்லும் என்பது தெரியாது. தாமதம் ஆகாவிட்டால் இன்று இரவோ அல்லது நாளையோ வர வேண்டும். ஒருவேளை ஏற்கெனவே போய்விட்டதோ என்னவோ. இப்போதெல்லாம் எத்தனையோ இராணுவ ரயில்கள் ஏதாவதொரு திசையில் சென்றவண்ணமாயிருக்கின்றன. சில ரயில்கள் இங்கே நிற்பது கூட இல்லை, நேராகப் போய்விடுகின்றன.''

நாங்கள் ஒரேயடியாகத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டோம்.

''அட, யுத்தம், பாழும் யுத்தம்'' என்று பெருமூச்செறிந்தார் ரயில்வே ஊழியர். ''எல்லாவற்றையும் தலை கீழாக மாற்றிவிட்டது. நீங்கள் என்ன, இங்கே காற்றில் நின்றுகொண்டிருக்கப் போகிறீர்களா? நிலையத்துக்குப் போங்கள். பார்க்க வருபவர்களுக்கான அறை அங்கே இருக்கிறது. அங்கே உட்காருங்கள். ரயில் வண்டிகள் கடந்து செல்லும்போது மட்டும் எதிர்கொள்ள வாருங்கள்... வேறு வழி இல்லை'' என்றார்.

நிலைய அறையில் பத்து பேர் போல இருந்தார்கள். அவர்கள் பெஞ்சுகளில் படுத்துக்கொண்டிருந்தார்கள். பல்வேறு சாலைகளிலும் பல்வேறு ரயில் நிலையங்களிலும் வாழ்க்கை அவர்களை அலைக்கழித்திருக்க வேண்டும். அவர்கள் இந்தத் தொல்லைகளுக்குப் பழகிப் போய்விட்டார்கள், இதைச் சொந்த வீடாகப் பாவித்தார்கள் போலும். ஒரு சிலர் நிம்மதியாக உறங்கிக்

கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் உரையாடிக் கொண்டும் புகை பிடித்துக்கொண்டும் இருந் தார்கள். மூலையில் இருவர் தகரக் குவளையில் கொதிக்கும் பானத்தைப் பருகிவாயைப் பொ சுக்கிக் கொண்டு நீரில் ஊதினார்கள். ஒருவன் கித்தார் வாத்தியத்தை மெல்ல வாசித்துக் கொண்டு தணிந்த குரலில் ஏதோ மூக்கால் பாடிக் கொண்டிருந்தான். துடைக்கப்படாத உடைந்த சிம்னி கொண்ட மண்ணெண்ணெய் விளக்கு குதித்துக் குதித்து எரிந்து புகை கக்கி யது. அரைகுறை இருட்டில் சுற்றுமுற்றும் பார்த்து நானும் அலிமானும் ஒரு பெஞ்சின் ஓரத்தில் ஒண்டிக் கொண்டோம். சிறிது நேரம் உட்கார்ந்திருந்தோம். அதற்குள் ரயில் வரும் சத்தம் கேட்கவே வாரியடித்துக் கொண்டு கதவை நோக்கிப் பாய்ந்தோம். இருட்டில் காற்று எங்கள் ஆடைகளின் ஓரங்களையும் கோட்டுக் கைகளையும் பரத்தியது. அது சரக்கு வண்டிப் பெட்டிகள் மட்டுமே கொண்ட ரயில். அவற் றுக்குள் படைவீரர்கள் தென்படவில்லை. ஆயினும் நாங்கள் ரயிலை ஒட்டினாற் போல ஓடிக்கொண்டே கத்தினோம்:

''ஸுவான்குலோவ் மாஸெல்பேக் இங்கே இருக்கிறானா?''

''ஸுவான்குலோவ் மாஸெல்பேக் இருக்கிறானா இங்கே?''

யாரும் பதிலளிக்கவில்லை. ஒருவருமே இல்லை. நாங்கள் நிலையம் திரும்பியபோது எல்லோரும் ஏற்கனவே உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

''அம்மா, நீ கொஞ்சம் படுத்துக்கொண்டு
இளைப்பாறு. ரயிலை நான் கவனித்துக்கொள்
கிறேன்'' என்றாள் அலிமான்.

நான் அவள் தோளில் தலையைச் சாய்த்துக்
கொண்டு சற்றே கண் அயர்வோம் என நினைத்
தேன். ஆனால் எங்கே? கண் அயர்வது எப்படி?
செவிகளால் மட்டுமல்ல, இதயத்தாலும் அறி
யும் ரயில்கள் வருவதை அனுமானித்துக்
கொண்டிருக்கையில், எங்கோ நெடுந்தொலைவில்
எழும் முதலாவது மெல்லிய அதிர்வைக் கூட
உணர்ந்து சட்டென எண்ணத் தொடங்கிவிடு
கையில், உறக்கத்தைப் பற்றிச் சிந்திக்கக்கூட
எப்படி முடியும்? எந்தத் திசையிலிருந்து ரயில்
வந்தாலும் நாங்கள் துள்ளி எழுந்து, பையைக்
கையில் பிடித்துக்கொண்டு பாதையில் ஓடினோம்.

இராணுவ ரயில்கள் வந்தன. ஆனால் ஒன்றி
லாவது மாஸெல்பேக் இல்லை. நடு நிசியில்
மறுபடியும் காலடியில் தரை அதிர்ந்தது. நாங்
கள் விழித்துக்கொண்டு வெளியே பாய்ந்தோம்.
மேலைப் பதிவின் இரு கோடிகளிலிருந்தும் எஞ்
சின்களின் விரைந்து வரும் ஊதல் ஒலிகள்
ஒரே சமயத்தில் கேட்டன. இரு புறங்களி
லிருந்தும் ரயில்கள் ஏககாலத்தில் வந்தன. நாங்
கள் கலக்கமடைந்து இருபாதைகளுக்கு நடுவே
வேறு வழியின்றி மாட்டிக் கொண்டோம்.
காதைச் செவிடாக்கும்படி அதிகரித்துவரும்
ஊதல் ஒலிகளுடன் ரயில்கள் வந்து, நிற்காமல்
மேலும் மேலும் விரைவாக அப்பால் போய்
விட்டன. சக்கரங்கள் கடகடத்தன, காற்று

உறுமிச் சீறியது, பனி சுழல்காற்றில் எங்களை உந்தியது, ரயிலுக்கு அடியில் தள்ளப் பார்த்தது.

''அம்மா!'' என்று வீரிட்டாள் அலிமான். என்னைப் பற்றி விளக்குக் கம்பத்தின் மேல் சாய்ந்தவாறு நிறுத்தி, இறுகத் தழுவிக் கொண்டாள், அசையவிடவில்லை.

நான் மின்னலைப் போலப் பாய்ந்து சென்று சன்னல்களுக்கு உள்ளே உற்றுப் பார்த்தேன்: ஒருவேளை என் மாஸெல்பேக்கைக் காண்பேனோ? என் மகன் ஒருவேளை அங்கே இருந்து நான் அதை அறியாமல் போய்விட்டால்? உருண்டோடும் சக்கரங்களுக்கு அடியில் தண்டவாளங்கள் முனகின, மகனைப் பற்றிய அச்சத்துக்கு ஆளான என் இதயத்தைப் போலவே. வெண்பனிப் படலங்களைக் கூடவே எடுத்துச் சென்றவாறு ரயில்கள் போய்விட்டன. நாங்களோ, வெகுநேரம் விளக்குக் கம்பத்தின் அருகே ஒருவரோடு ஒருவர் ஒன்றி நின்று கொண்டிருந்தோம்.

பொழுது புலரும் வரையில் நானும் அலிமானும் நிம்மதியாக உட்காரவே இல்லை. ரயில்களை ஒட்டினாற் போல முன்னும் பின்னும் ஓடிய வண்ணமாயிருந்தோம். பலபலவென்று விடியும் தறுவாயில், திடீரெனப் புயல் அடங்கி விட்ட சமயத்தில் மேற்கே இருந்து ஒரு ரயில் வந்தது. அது மாதிரி ரயிலை நாங்கள் முன்னர் காணவேயில்லை. அதன் பெட்டிகள் எல்லாம் கரிந்து பொசுங்கியிருந்தன, முகடுகள் பிய்ந்து போயிருந்தன, கதவுகள் உடைந்து தகர்ந்திருந்

தன. ரயில் முழுவதிலும் உயிருள்ள ஜீவன் ஒன்றுகூட இல்லை. வெற்று ரயில் பெட்டிகளில் சக்கறையைப் போன்ற அமைதி நிலவிற்று. புகை, பொசுங்கிய இரும்பு, கரிந்த பலகைகள், உக்ஷ்ணம் ஆகியவற்றின் நெடி அடித்தது.

எங்களுக்கு அறிமுகமான, கறுப்பு மென் பட்டுத்தோல் கோட்டு அணிந்த ரயில்வே ஊழியர் விளக்கும் கையுமாக வந்து சேர்ந் தார்.

"இந்த ரயில் வண்டி ஏன் இப்படி இருக்கிறது?" என்று அலிமான் அவரிடம் காதோடு கேட்டாள்.

"விமானக் குண்டுகளால் தாக்கப்பட்டிருக்கிறது" என்று தணிந்த குரலில் பதிலளித்தார் அவர்.

"இப்போது இந்தப் பெட்டிகள் எங்கே கொண்டு செல்லப்படுகின்றன?"

"செப்பனிடும் இடத்துக்கு" என்று முன்போலவே தாழ்ந்த குரலில் பதிலளித்தார் ரயில்வே ஊழியர்.

நான் இந்த உரையாடலைக் கேட்டேன். எவர் கள் இந்தப் பெட்டிகளில் பயணம் செய்தார் களோ, புகைக்கும் கூச்சல்களுக்கும் அனல் பிழம் புகளுக்கும் இடையே எவர்கள் உயிரை விட்டார் களோ, அவர்களைப் பற்றி, கைகளையும் கால் களையும் இழந்தவர்கள், என்றென்றைக்கும் செவிடர்களும் குருடர்களும் ஆகிவிட்டவர்கள் முதலியவர்களைப் பற்றிச் சிந்தனை செய்தேன்... இந்த வெடிகுண்டுகளோ, போரின் எதிரொலி

மட்டுமே. அப்படியானல் யுத்தமே எப்படி இருக்கும்?

உடைந்து சிதைந்த ரயில் வண்டி நீண்ட நேரம் நிலையத்தில் நின்று கொண்டிருந்தது. அப்புறம் அது மெதுவாகப் புறப்பட்டு இடைவிடாது கட கடத்தவாறே எங்கோ சென்றுவிட்டது. அது போன வழியை நான் ஏங்கிய உள்ளத்துடன் பார்த்துக் கொண்டிருந்தேன்: உடைந்து சிதைந்த ரயில் எந்தத் திக்கிலிருந்து வந்ததோ அதே திக்கில் மாஸெல்பேக்கும் இதோ போகப்போகிருன். அப்புறம் காஸிம் என்னவாஞன்? ஸுவான்குல் எப்படி இருக்கிருன்? தாங்கள் ரியஸானுக்குப் பக்கத்தில் எங்கோ இருப்பதாக அவன் எழுதியிருந்தான். போர்முனையிலிருந்து இந்த இடம் நிச்சயமாக வெகு தூரத்தில் இருக்காது...

காலை நேரம். நாங்கள் கிராமம் திரும்பும் வேளை வந்துவிட்டது. குதிரைகளுக்குத் தீவனம் தீர்ந்து போயிற்று. மாஸெல்பேக் இன்னும் வரவில்லை என்று வைத்துக்கொள்வோம், அப்போது? இவ்வளவு நேரம் காத்திருந்தபின் சந்திக்காமல் போவது எவ்வளவு வருத்தமாயிருக்கும்! நானும் அலிமானும் எல்லா விதமாகவும் எண்ணிப் பார்த்தோம், முடிவுகள் செய்தோம். ஆயினும் ரயில் நிலையத்திலிருந்து போய்விடுவதற்குத் துணியவில்லை.

அந்நாள் போலவே பருவநிலை ஒரே காற்றும் குளிருமாயிருந்தது. ரயில் நிலையம் இருந்த மலைப்பதிவு காற்றுக்களின் வழித்தங்கல் என்று

அழைக்கப்படுவது சரியே. திடீரென்று மேகங்கள் விலகின, சூரியன் எட்டிப்பார்த்தது. ''அட ...டீ மகனும் மேகத்தின் பின்னிருந்து சூரியன் ...த் திடீரென்று வெளிப்பட்டால், நொடிப் ...தாவது காட்சி அளித்தால் எவ்வளவு நன்று ...க்கும்!'' என்று எண்ணினேன்.

அப்போது தொலைவிலிருந்து ரயில் ஓசை கேட்டது. அது கிழக்கேயிருந்து வந்தது. எஞ்சினின் ...த்த இரட்டை ஊதல் மலைப்பதிவில் உருண்டு ...ித்தது.

...லடியில் தரை அதிர்ந்தது. தண்டவாளங்கள் கணகணத்தன. பேரிரைச்சலுடன் புகையும் ஆவியும் கக்கிக்கொண்டு, சிவந்த சக்கரங்களுடனும் வெப்பம் வீசும் விளக்குகளுடனும் ...ண்டு கறுத்த எஞ்சின்கள் வந்தன. அவற்றின் ...ன்னே டிரக் மேடைகள் மேல் டாங்கிகளும் ...ங்கிகளும் கித்தான் போர்வையால் மூடப்பட்டு வந்தன. அவற்றின் அருகே மென்மயிர்த் ...தோல் மேல் கோட்டுக்கள் அணிந்து கைகளில் துப்பாக்கிகள் தாங்கி நின்றார்கள் பாராக்காரர்கள். திறந்த சரக்கு ரயில்பெட்டிகளுக்குள் பளிச் ...டார்கள் படைவீரர்கள். ஒவ்வொரு பெட்டி ...ம் எங்களைக் கடந்து சென்றன. முகங்களும் ...ன் மயிர்த்தோல் மேல்கோட்டுக்களும் மின்னி மின்னி மறைந்தன, பாட்டுத் துணுக்குகளும் ...ற்பகுதிகளும் அக்கார்டியன், பலாலாய்க்கா ...ன்ற வாத்தியங்களின் ஒலிகளும் காதில் ...டன. நாங்கள் உற்றுப் பார்த்துக்கொண் ...ந்தோம். இதற்குள் சிவப்பு, மஞ்சள் கொடி

களும் கைகளுமாக ஒருவன் எங்கள் அருகே ஓடிவந்தான்.

''ரயில் நிற்காது! நிற்காது! அப்பாலே போங்கள்! வழியைவிட்டு அப்பாலே போங்கள்!'' என்று காதுக்குள் கத்தி எங்களை நெட்டித் தள்ளலானான்.

அந்தக் கணத்தில் அருகே கூச்சல் கேட்டது:

''அம்மா-ஆ-ஆ! அலிமா-ஆ-ஆ-ன்!''

அவன்! மாஸெல்பேக்! அடக் கடவுளே, கடவுளே! அவன் எங்களுக்கு மிக அருகாகக் கடந்து சென்றான். ஒரு கையால் கதவைப் பற்றிக்கொண்டு, உடம்பு முழுவதையும் பெட்டிக்கு வெளியே நீட்டியபடி, மறு கையால் எங்களை நோக்கித் தொப்பியை ஆட்டியவாறு கத்திப் பிரிவு சொல்லிக்கொண்டான். ''மாஸெல் பேக்!'' என்று நான் கூவியது மட்டுமே எனக்கு நினைவு இருக்கிறது. அந்தக் குறுகிய கணத்தில் அவனைத் துல்லியமாகவும் தெளிவாகவும் கண்டேன். காற்று அவன் தலைமயிரைப் பரத்தியது. அவனுடைய மேல்கோட்டு முனைகள் இறக்கைகளைப் போல அடித்துக்கொண்டன. முகத்திலும் விழிகளிலுமோ, மகிழ்வும் துயரமும் வருத்தமும் பிரிவும் தென்பட்டன. அவன்மீது பதித்த பார்வையை அகற்றாமலே நான் அவனைத் தொடர்ந்து ஓடினேன். ரயிலின் கடைசிப் பெட்டி என்னைக் கடந்து போய்விட்டது, எனினும் நான் தண்டவாளக் குறுக்குக் கட்டைகள் மீது மேலும் மேலும் ஓடிக் கொண்டே இருந்தேன். அப்புறம் விழுந்துவிட்டேன். ஐயோ, நான்தான் எப்படித்

தேம்பித் தேம்பி அழுது புலம்பினேன்! என் மகன் போர்க்களம் சென்றுவிட்டான். நானோ, குளிர்ந்த இரும்புத் தண்டவாளத்தைத் தழுவிக்கொண்டு அவனை வழியனுப்பினேன். சக்கரங்களின் கடகடப்பு வர வரத் தொலைவில் சென்று கடைசியில் ஒரேயடியாக அடங்கிவிட்டது.

இந்த ரயில் வண்டி என் தலை மேலாகக் கடந்து செல்வது போல இப்போது கூடச் சில சமயங்களில் எனக்குப் பிரமை உண்டாகிறது, சக்கரங்கள் நெடுநேரம் காதுகளில் கடகடக்கின்றன.

அலிமான் ஆறுதகக் கண்ணீர் பெருக்கியவாறு என் அருகே ஓடிவந்து பக்கத்தில் குனிந்து என்னைத் தூக்க முயன்றாள். ஆனால் அவளுக்கு மூச்சுத் திணறுகிறது, கைகள் வெடவெடக்கின்றன, என்னைத் தூக்கி நிறுத்த முடியவில்லை. அப்போது ஒரு ருஷ்ய மாது—பாதை இணைப்புத் தொழிலாளி—ஓடி வந்தாள். அவளும் ''அம்மா! அம்மா!'' என்று என்னைத் தழுவிக் கொண்டு கண்ணீர் வடித்தாள். அவர்கள் இருவருமாக என்னைப் பாதைத் திருப்பத்துக்கு நடத்திச் சென்றார்கள். நாங்கள் ரயில் நிலையத்துக்குப் போகும் பொழுது அலிமான் படைவீரன் தொப்பி ஒன்றை என்னிடம் கொடுத்தாள்.

''இந்தா அம்மா. மாஸெல்பேக் விட்டுச் சென்றிருக்கிறான்'' என்றாள்.

நான் ரயிலைத் தொடர்ந்து ஓடியபோது அவன் தனது தொப்பியை வீசிப் போட்டிருக்கிறான்.

இந்தத் தொப்பியும் கையுமாக நான் வீட்டுக்குப் போனேன். வண்டியில் உட்கார்ந்து கொண்டு, தொப்பியை மார்புடன் சேர்த்து இறுக அணைத்துக்கொண்டேன்.

இப்போது கூட அது சுவரில் தொங்குகிறது. சர்வசாதாரணமான படைவீரன் தொப்பி, சாம்பல் நிறமானது. நெற்றிப் பக்கம் நட்சத் திரச் சின்னம் கொண்டது. சில வேளைகளில் அதைக் கையில் எடுத்து அதில் முகத்தைப் புதைத்துக்கொண்டு மகனின் மணத்தை முகர் கிறேன்.

6

''சொல், என் அருமை நிலமே. ஒரு தாய், தன் மகனை ஒரே ஒரு தடவை, மின் வெட்டுப் போல மட்டுமே காண்பதற்கு ஒரு தாய் எந்தக் காலத்தில் இவ்வளவு துன்பம் உழன்று, இவ் வளவு தொல்லைப் பட்டிருக்கிறாள்? சொல்.''

''எனக்குத் தெரியாது, தல்கோனே. உன் காலத்தில் நடந்தது போன்ற யுத்தம் உலகம் இது வரை அறிந்திராத ஒன்று.''

''மகனை இவ்வளவு பதைப்புடன் எதிர் பார்த்த கடைசித் தாய் நானாகவே இருப் பேனாக, இரும்புத் தண்டவாளத்தைத் தழுவிக் கொண்டு, குறுக்குக் கட்டைகளில் தலையை மோதிக்கொள்ளும் நிலைக்கு வேறு எவரையும்

ஆண்டவன் ஆளாக்காதிருப்பானுக.''

''நீ வீடு திரும்பிய போது, நீ மகனைச் சந்திக்கவில்லை என்பதைத் தொலைவிலிருந்தே அனுமானிக்க முடிந்தது. நீ மஞ்சள் பாரித்துப் போய்க் குழிவிழுந்து துயர் ததும்பும் விழி களுடன் காணப்பட்டாய், நீண்ட காலம் நோயுற் றிருந்தவள் போல.''

''ஒரு மாதம் நான் உண்மையில் காய்ச்ச லுடன் கிடந்திருந்தால் மேலாயிருக்கும்.''

''பாவம், தல்கோனே. அந்த ஆண்டுதான் உன் முடி நரையோடத் தொடங்கிற்று. அதற்கு முன்பெல்லாம் உன்னுடைய பின்னல்கள் எவ் வளவு கனமாக, அடர்த்தியாக இருக்கும்... அப்போது முதல் நீ கடுகடுவென்று மௌன மாக இருக்கத் தொடங்கி .விட்டாய். பேசாமல் நீங்கி வருவாய், பற்களை இறுகக் கடித்துக் கொண்டு போய்விடுவாய். ஆயினும் நான் புரிந்துகொண்டேன். தடவைக்குத் தடவை உன் நிலைமை முன்னிலும் அதிகக் கஷ்டமாகிவந்ததை உன் கண்களிலிருந்து கண்டுகொண்டேன்.''

''ஆமாம், அன்னை நிலமே! என் வசமின்றியே நிலைமை கஷ்டமாகிக்கொண்டு போயிற்று. என் ஒருத்திக்கு மட்டும் துன்பம் வந்திருந்தாலாவது பரவாயில்லை! யுத்தத்தின் இடர்களுக்கு ஆளா காத ஒரு குடும்பம் கூட, ஒரு மனிதன்கூட இல்லையே. இழவுக் குறி காட்டும் கறுப்புக் காகிதங்கள் வந்து, கிராமத்தில் ஒரே நாளில் இரண்டு மூன்று வீடுகளில் அழுகையும் சாபக் குரல்களும் ஏககாலத்தில் கிளம்பிய போது

இரத்தம் கொதித்தது, பழிவாங்கும் விருப்பத்தால் கண்கள் இருண்டன, நெஞ்சு பற்றி எரிந்தது. அதே நாட்களில் நான் குழுத்தலைவியாக இருந்தேன், என் துயரையும் பிறருடைய துன்பத்தையும் வெளிக்காட்டாது அடக்கிக் கொண்டேன், கெட்டகாலம், பஞ்சம், குளிர் எல்லாவற்றையும் மக்களுடன் பகிர்ந்து கொண்டேன் என்பது பற்றிப் பெருமைப் படுகிறேன். அதனால் தான் நான் நிமிர்ந்து நின்றேன், மற்றவர்கள் பொருட்டுத் தாங்கிக்கொண்டேன். இல்லாவிட்டால் விழுந்திருப்பேன், யுத்தம் என்னை மிதித்துத் துவைத்துப் புழுதியாக்கியிருக்கும். அப்போது நான் புரிந்துகொண்டேன்: யுத்தத்தில் ஒரே ஒரு நீதிதான் உண்டு—அடிக்க வேண்டும், போராட வேண்டும், வெல்ல வேண்டும். இல்லாவிட்டால் சாவு! என் அருமை வயலே, அதனால்தான் நான் எப்போதும் குதிரை மேல் ஏறி இங்கு வந்தேன், உன்னைக் கலவரப் படுத்தாமல் மௌனமாக அஞ்சலி செலுத்தி விட்டுப் பேசாமல் திரும்பினேன்.''

7

ஒரு நாள் காஸிமிடமிருந்து கடிதம் வந்தது. நான் குதிரை மேல் பாய்ந்து ஏறி, கடிதமும் கையுமாக வாய்க்கால்கள் வழியாகவும் வெண் பனிக் குவியல்களைக் கடந்தும் நாற்கால் பாய்ச்சலில் கண்தலை தெரியாமல் விட்டடித்தேன்.

அலிமானும் ஜைனுக்கும் இங்கே கால்நடை உரத்தைக் குவித்துக்கொண்டிருந்தார்கள். நான் பாய்ச்சலில் வந்தபடியே அவர்களை நோக்கிக் கூவினேன்:

''ஸூய் ஊஞ்சு! ஸூய் ஊஞ்சு! — மகிழ்ச்சி!''

அவர்களுக்கு இதைச் சொல்லி மகிழ்வூட்டாமல் எப்படி இருக்க முடியும்? சேர்ந்தாற் போல இரண்டு மாதங்களாகக் காஸிமிடமிருந்து ஒரு வரிகூட வரவில்லை. அவன் என்ன ஆனான் என்பதே எங்களுக்குத் தெரியாதிருந்தது. மாஸ்கோ நகரைத் தற்காப்பதற்கான போரில் இரண்டு தடவை தான் பங்கு கொண்டதாகவும் இரு முறையும் உயிரிழக்காமல் தப்பிவிட்டதாகவும் இப்போது எழுதியிருந்தான். ஜெர்மானியர்களின் முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டதாகவும் அவர்களுடைய பற்கள் உடைக்கப்பட்டுவிட்டன என்றும் கூறிவிட்டு, தன்னுடைய பட்டாளத்துக்கு இடை நேர ஓய்வு அளிக்கப்பட்டிருப்பதாகக் குறித்திருந்தான்.

அலிமான் எப்படிக் களிதுள்ளினாள்! உர வண்டியிலிருந்து தாவிக்குதித்து ஜைனுக்குடன் போட்டி போட்டுக்கொண்டு ஓடி அவனை முந்தி விட்டாள்.

''அம்மா, உங்கள் வாய்க்குச் சர்க்கரை!'' என்று கூறிவிட்டு நடுங்கும் கைகளால் கடிதத்தை வாங்கியவள், உவகை பெருகவே, படிக்க முடியாமல் தவித்தாள். ''உயிரோடிருக்கிறான்! சௌக்கியமாய் இருக்கிறான்!'' என்று மட்டுமே திரும்பத் திரும்பச் சொன்னாள்.

அதற்குள் பெண்கள் ஓடி வந்து அவளைச் சூழ்ந்து கொண்டு நெருக்கினார்கள்.

''ஊம், படி அலிமான், வீட்டுக்காரன் எழுதியிருப்பதை. ஒருவேளை எங்களவர்களைப் பற்றி அவனுக்கு ஏதாவது தெரிந்திருக்குமே?''

''இதோ, பெண்களா, இதோ!'' என்று அலிமான் சொன்னாளே தவிர, ஒரு வரிகூடப் படிக்க அவளால் முடியவில்லை.

ஜைனுக் பொறுமை இழந்தான்.

''இப்படிக் கொடு கடிதத்தை. மக்களுக்குப் படித்துக் காட்ட வேண்டும்'' என்று சொல்லி விட்டுக் கடிதத்தை வாங்கி உரக்கப் படிக்கலானான்.

அலிமான் குத்திட்டு உட்கார்ந்து, வெண்பனியைப் பிடி பிடியாக அள்ளி நெற்றியில் அப்பிக் கொண்டாள். ஜைனுக் படித்து முடித்து விட்டான். அப்போது அவள் எழுந்தாள். முகத்தைத் துடைத்துக்கொள்ளக்கூட மறந்து விட்டாள். முகத்தில் வெண்பனி உருகி ஓடை ஓடையாய் நீர் வழிய, உற்சாகமும் மகிழ்ச்சியும் பொங்க நின்றாள்.

''நல்லது, இப்போது வேலை செய்யப் போவோம்!'' என்று தணிந்த குரலில் கூறி விட்டு வெண்பனியில் மெல்ல நடந்து சென்றாள்.

அவள் நடந்தவாறே இரு புறமும் பார்வையைச் செலுத்தினாள். அப்போது அவள் எதைப் பற்றி எண்ணினாள்? கோடைகாலத்தில் இங்கே தண்ணீர்க் கூஜாவும் கையுமாக அறுவடை

த்தில் கணவனிடம் தான் ஓடிச் சென்ற தைப் பற்றியா? அல்லது காஸிம் இங்கே அறுவடை இயந்திரத்திடம் எப்படி விடைபெற்றுக் கொண்டான் என்பதைப் பற்றியா? யாருக்குத் தெரியும்? தனக்கு அருமையானவற்றை, மறக்க முடியாதவற்றை எல்லாம் அலிமான் மீண்டும் அனுபவித்துப் பார்த்தாள் என்று எனக்குப் பட்டது. அவளுடைய விழிகள் ஒரு சமயம் ஜ்வலிக்கும், மறு சமயம் இருள் படியும். அவள் நீண்ட நேரம் நெடுஞ்சாலையை நோக்கினாள். காஸிமின் குதிரை சாலையில் சென்றதையும், அதன் குளம்புகள் ஒலித்ததையும், தான் காஸிமின் பின்னே ஓடியதையும் நினைவு கூர்ந்தாள் போலும்.

ஜனுக் அவள் அருகே போய் அவளைக் கேலி செய்து சீண்டத் தொடங்கினேன்:

“இந்தா, நீ ஒருவிதமாகச் சுய உணர்வைப் பெற்று சுதாரித்துக்கொள்! ஊர் முழுவதும் உன்னைக் கேலி செய்து சிரிக்கப் போகிறது. ஒரு கடிதத்தை உன்னால் படிக்க முடியவில்லையே, வெட்கம்! காஸிமுக்கு எழுதுகிறேன், உன் மனைவியை மறுபடி பள்ளிக்கூடத்தில் முதல் வகுப்பில் சேர்த்திருக்கிறேன், அரிச்சுவடி படிப்பதற்கு என்று!”

அலிமான் அவனை அடிக்கக் கிளம்பினாள், அவர்கள் வண்டியை நோக்கி ஒருவரை ஒருவர் முந்த முயன்று கொண்டு ஓடினார்கள்.

நான் போய்க்கொண்டே சிந்தித்தேன். மக்களைக் காப்பது என் மகன்கள் போன்ற ஜிகித்

களின் கடமை இல்லாவிட்டால், அது யாருடைய கடமை? நான் வேண்டுவதெல்லாம் அவர்கள் உயிரோடு, வெற்றியோடு திரும்ப வேண்டும் என்பதே. மற்றவற்றை எல்லாம் சகித்துக்கொள்வோம், அனுபவித்துத் தீர்ப்போம், எலும்பும் தோலும் உயிரோடு எஞ்சியிருந்தால் போதும், வெற்றி பெறும்வரை வாழ்ந்திருந்தால் போதும். வெற்றி விரைவில் கிட்டினால் தேவலை! இது என் விருப்பம் மட்டும் அல்ல, மக்கள் அனைவருடைய கனவாகவும் லட்சியமாகவும் இருந்தது. ஆகையால் இதன் பொருட்டு எல்லாவற்றையும் ஏற்கச் சித்தமாயிருந்தேன், எதற்கும் இணங்கினேன்.

எல்லோரிலும் இளையவனை என் கடைசிப் பையன் ஜைனைக், பதினெட்டு வயது கூட நிரம்பாதிருக்கையிலேயே போர் முனைக்குச் சென்ற போதும் நான் நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டு பேசாமல் பொறுத்துக்கொண்டேன்.

பனிக்கால முடிவு வாக்கில் இராணுவ நிலையத்துக்கு அவன் அடிக்கடி அழைக்கப்பட்டான். அவன் மட்டுமல்ல, வேறு பல பையன்களும் அங்கே அழைக்கப்பட்டுப் போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டார்கள். ஆனால் இது பழகிப்போன விஷயம், நான் இதற்காக நிரம்பக் கவலை கூடப் படவில்லை. ஒரு பத்து நாட்கள் அவர்களை அங்கே ஓட ஓட விரட்டுவார்கள், பின்பு வீட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். ஒரு தடவை எதனாலோ ஜைனைக் சீக்கிரமே, மறு நாளே வீடு திரும்பிவிட்டான்.

''ஏது உன்னை இவ்வளவு விரைவாக விட்டு விட்டார்கள்? ஒருவேளை ஒரேயடியாக விடுதலை அளித்துவிட்டார்களோ?'' என்று வியந்தேன் நான்.

''இல்லை அம்மா, நாளை நான் மறுபடி போய் விடுவேன். ஒரு நாள் வீட்டில் இருக்க அனுமதித் திருக்கிறார்கள். இந்தத் தடவை நாங்கள் கொஞ்சம் நீண்ட காலம் அங்கே இருக்க நேரி டும். அதற்காக நீ கவலைப்படாதே'' என்றான் ஜானுக்.

நானும் நம்பிவிட்டேன். வேறு விதமாக நினைக்க இடமில்லை. நீண்ட பயணத்துக்கு ஆயத் தம் செய்துகொள்பவனைப் போல அன்று அவன் ஏதோ விந்தையாக நடந்துகொண்டான். ஆணி களும் சம்மட்டியுமாகக் காலை நேரம் முழுவதும் எதையோ அடிப்பதும் இறுக்குவதுமாக முனைந் திருந்தான். அப்புறம் விறகு வெட்டிக் குவித் தான், எருவைப் புறக்கடையில் கொண்டு சேமித்தான், கொட்டகைக் கூரைமேல் போட் டிருந்த தீனிப்புல்லை எடுத்துப் பரப்பி உலர்த் தினான். சாயங்காலம் வீடு திரும்பியதும் பார்க் கிறேன், அவன் லாயத்தைக் கழுவிவிட்டான், சிதைந்து போயிருந்த தீவனத் தொட்டிகளைச் செப்பனிட்டுச் சீராக்கினான். தகப்பன் வீட்டில் இருந்தபோது இவை தேவைப்பட்டன: அவ னுக்குக் குதிரைகளை வீட்டோடு வைத்துக்கொள் வது பிடிக்கும்.

''எதற்காகப் பாடுபடுகிறாய், குழந்தாய்? கோடைகாலத்தில் செப்பனிட்டுக் கொள்ள

லாமே'' என்று நான் அவனிடம் சொன்னேன்.

நேரம் இருக்கையிலேயே செய்து முடிப்பது அவசியம், இல்லாவிட்டால் அப்புறம் நேரம் கிடைக்காது என்று பதிலளித்தான் அவன். அப்போது நான் அதன் கருத்தைச் சிந்தித்துப் பார்க்கவில்லை, எதைப் பற்றியும் எண்ணவில்லை. இளம் கம்யூனிஸ்டுகள் சங்க அறைகூவலை ஏற்று அவன் தானுக விரும்பிப் போர்முனைக்குச் சென்முன். ஜைஞக் புறப்பட்டுப் போன பிறகே எங்களுக்கு இந்த விஷயம் தெரிய வந்தது. ரயில் நிலையத்திலிருந்து ஒரு தோழர் மூலம் கடிதம் கொடுத்து அனுப்பினுன். அட உதவாக் கரை, அட என் அப்பாவி மகனே, நீ கடிதம் எழுதியது சரிதான், ஆனுலும் இந்த மாதிரிச் சொல்லாமல் கொள்ளாமல் போகலாமா? அதனுல் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் என்முலும் கூட நீ விடை பெற்றுக் கொண்டுதான் போயிருக்க வேண்டும். தான் பேசாமல் போய் விடுவதற்கு மன்னித்துக் கொள்ளும்படி என்னையும் அலிமானையும் கடிதத்தில் வேண்டிக்கொண்டிருந்தான். இந்த மாதிரி, ஒரே தடவையில் பிய்த்துக் கொண்டு போவது அதிக எளிது என்று எழுதியிருந்தான். நீங்கள் கவலையைக் குறைக்க வேண்டும், என்னுடைய தீர்மானத்தை உடனே அறிந்து கொள்ள வேண்டும். அறிந்துகொண்டு அதை ஒப்புக்கொள்ள வேண்டும், என் கருத்துக்கு இசைய வேண்டும் என்று நான் விரும்பினேன் எனச் சமாதானம் கூறியிருந்தான். அவன் செய்ததே சரியோ என்னவோ, யார் கண்டது?

ன முகத்துக்கு நேரே சொல்லுவது அவ னுக்குக் கடினமாகவே இருந்திருக்கும். நான் அடுத் தொடங்குவேன், மறுதலிப்பேன், கெஞ்சு வேன் என்று அஞ்சினன் போலும்...

இப்போது கூட, நான் அவனைப் பறிகொ டுத்து எத்தனையோ ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், அன்னை நிலத்துடன் பேசுவது போலவே அவனுடன் உரையாடுகிறேன்.

ஜெனுக், நான் சொல்வதைக் கேள்! உன் மனச் சான்று உன்னை உறுத்தாதிருக்குமாக, எனக்கு உன் மேல் மனத்தாங்கல் கிடையாது, கோபமும் கிடையாது. நான் அப்போதே உன்னை மன்னித்து விட்டேன். ஜெனுக், என் ஒட்டகக்குட்டி மகனே, என் குதிரைக்குட்டியே, குதூகலப் பிரியனே! நீ எதற்காகச் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டாய், எதற்காக என் னைத் தனியாக விட்டுச் சென்றாய், உன்னுடைய பிள்ளைப் பருவத்தை, இளமையை, வருங்கால வாழ்வை ஏன் துறந்துவிட்டாய் என்பதை நான் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறாயா? நீ விஷமக்காரனாக, கூச்சல்போடும் வாலிபனாக இருந் தாய். மக்களை நீ எப்படி நேசித்தாய் என்பதை எல்லாரும் அறிந்துகொள்ளவில்லை. எங்களுடைய துன்பத்தைப் பார்க்கப் பொறாமல் நீ போய் விட்டாய். மனிதர்கள் மனிதர்களாகவே இருக்க வேண்டும், மக்களுடைய உயிரோட்டமுள்ள புனித ஆன்மாவைப் போர் ஊனப்படுத்தி விடக் கூடாது, நல்லியல்பையும் பரிவையும் அவர்களிட மிருந்து நஞ்சூட்டி ஒழித்துவிடக் கூடாது

என்று நீ பெரிதும் விரும்பினுய். இந்த விருப் பத்தை நிறைவேற்றும் பொருட்டு நீ எல்லா வகையிலும் பாடுபட்டாய். உலகத்தில் நல்ல செயல்கள் மட்டுமே நிலேத்து வாழ்கின்றன; மற்றவை எல்லாம் மறைந்துவிடுகின்றன. உன் னுடைய நல்ல செயலும் நிலேத்து வாழ்கிறது. நீ எப்போதோ கொல்லப்பட்டுவிட்டாய், தகவல் இல்லாமல் மறைந்துவிட்டாய். நீ பாரஷூட் வீரன், மூன்று தடவை பகைவரின் பின்புலத்தில் சென்ருய் என்று எழுதியிருந்தாய். ஆக, நாற் பத்து நான்காவது ஆண்டு ஏதோ ஓர் இருண்ட இரவில், தேசபக்த கொரில்லா வீரர்களுக்கு உதவுவதற்காக உன் தோழர்களுடன் நீ விமா னத்திலிருந்து குதித்தாய், போன சுவடு தெரி யாமல் மறைந்துவிட்டாய். நீ போரில் கொல் லப்பட்டாயா, வெறியரின் துப்பாக்கிக் குண் டுக்கு இலக்காளுயா, சிறைப் பிடிக்கப்பட்டாயா, அல்லது புதை சேற்றில் அமிழ்ந்து போனுயா என்பது ஒருவருக்கும் தெரியாது. ஆனுல் நீ உயிரோடு இருந்தால் இத்தனே ஆண்டுகளுக் குள் சிறு செய்தித் துணுக்காவது உன்னேப் பற்றி வெளிவந்திருக்கும். ஆமாம், ஜைஞக், இப்படித்தான் நீ மறைந்து போய்விட்டாய். மிக இளவயதில், பதினெட்டு ஆண்டுப் பரு வத்தில் நீ சென்றுவிட்டாய். மக்களின் நினே வில் நீ மிக உறுதியாக நிலேக்கவில்லே. ஆனுல் நான் உன்னே நினேவில் வைத்திருக்கிறேன். என் மீது உனக்கு இருந்த அன்பும் பரிவும் காரண மாக என்னிடம் சொல்லிக் கொள்வதற்குக்

கூடத் துணியாமல் நீ போர்முனைக்குச் சென்றதை ஒவ்வொரு தடவையும் நினைவுகூர்கிறேன். ரயில் நிலையத்தில் ஒரு சிறுவனுக்கு உன் மென்மயிர்த் தோல் மேல்கோட்டை நீ கொடுத்தது எனக்கு நினைவு இருக்கிறது. அபாய இடத்திலிருந்து பாதுகாப்புக்காக வெளியேற்றப்பட்ட, தாயும் நான்கு குழந்தைகளும் கொண்ட குடும்பத்தை ரயில் நிலையத்தில் கண்டு, முற்றிலும் மேல் உடை இன்றியிருந்த மூத்த பையனுக்கு உன் மேல்கோட்டைக் கொடுத்துவிட்டு, உள் [illegible]ட்டு மட்டும் அணிந்தவாறு, குளிரில் பற்கள் கடகடக்க வீடு திரும்பிவந்தாயே. ஒரு வேளை அவனும்—இப்போது அவன் வயது முதிர்ந்த மனிதன் ஆகியிருப்பான்—சிறுவனை உன்னை (ஏனெனில் இப்பொழுது நீ அவனுக்கு எவ்வளவோ இளையவன், அவன் உனக்கு எவ்வளவோ மூத்தவன்) எப்போதாவது நினைத்துக் கொள்வான். நீ அவனுக்கு ஆசானாக விளங்கினாய். ஏனென்றால் உபகாரம் தெருவில் கிடப்பதில்லையே, அதைத் தற்செயலாகப் பொறுக்கிக் கொள்ள முடியாதே. உபகாரத்தை மனிதன் மனிதனிடமிருந்தே கற்றுக்கொள்கிறான்.

ஆம், இப்போது என்னத்தைச் சொல்வது; சொற்களால் என்ன பயன்? எத்தனை மனிதர்களைப் போர் கொன்று தீர்த்துவிட்டது! யுத்தம் மட்டும் மூளாதிருந்தால் என் ஜைனாக் எப்பேர்ப்பட்ட அழகனாக, விசால இதயமுள்ள மனிதனாக உலகில் வாழ்ந்திருப்பான்!

என் மகனே, வாழ்க்கையின பன்னிரு மலர்

களில் ஒன்றைக்கூட நீ கொய்யவில்லையே என் பதுதான் எனக்கு வருத்தம். நீ அப்போது தான் வாழத் தொடங்கியிருந்தாய். எந்தப் பெண்ணை நீ காதலித்தாய் என்பது கூட எனக்குத் தெரியாது...

என் ஆன்மாவில் கடைசி விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது, விரைவில் அதுவும் அணைந்து விடும். ஆயினும் எனக்கு எல்லாம் நினைவு இருக்கிறது. உழவு நிலத்துக்கு அந்தக் கிழவர் வந்தாரே, அந்த ஆக்கங்கெட்ட நாளும் எனக்கு நினைவு இருக்கிறது.

இளவேனில் தொடக்கத்தில் நிகழ்ந்தது இது. 'வெண்பனித்துளி' என்பபடும் மலர்கள் இன் னும் முகிழ்க்கவில்லை. வயல்களில் பரம்படிக்கும் வேலை அப்போதுதான் தொடங்கியிருந்தது. மஞ் சள் பள்ளத்தாக்கிலிருந்து வெப்பக் காற்று கீழ் நோக்கி வீசிற்று. கூதிர்கால உழுநிலம் உலர ஆரம்பித்திருந்தது. வெயிலில் புல் பசுமை படர லாயிற்று.

அன்றைக்குத்தான் நாங்கள் உழவு தொடங்கி யிருந்தோம். நான் குதிரை மேல் ஏறி டிராக் டரின் பின்னே மெது நடையாகச் சென்றவாறு உழவுச் சாலின் பனிக்கால மணத்தை முகர்ந் தேன். ஸுவான்குல், காஸிம் இருவரிடமிருந் தும் வெகு காலமாகச் செய்தி ஒன்றும் இல் லையே என்று எண்ணமிட்டேன்.

அதற்குள் இங்கே வந்தார் எங்கள் கிழவர் ஒருவர், ஏதோ அவசர வேலை ஒன்றுமே இல்லா ததைப் போல.

"தகுந்த நேரத்தில் வந்தீர்கள், அக்ஸாகால். உழவு நன்கு தொடங்க ஆசி கூறுங்கள்" என்று நான் அவரிடம் சொன்னேன்.

அவர் குதிரை மேல் அமர்ந்தபடியே உள்ளங் கைகளை வயல்புறம் திருப்பி, ஒரு கையால் தாடியைத் தடவிக்கொண்டே தணிந்த குரலில் ஆசீர்வதித்தார்:

"பயிரிடுவோரின் பாதுகாவலரான தீய்க்கான்-பாபா இங்கே எழுந்தருள்வாராக. வெள்ளமாய் விளைச்சல் பொங்கிப் பெருகுவதாக." பின்பு அவர் என்னைப் பார்த்து "வட்டாரத் தலைமையைச் சேர்ந்த ஏதோ ஒரு நிர்வாகி உன்னை அழைக்கிறார், தல்கோனை. நீ அலுவலகத்துக்கு வர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். உனக்கு இதைத் தெரிவிக்கவே வந்தேன்" என்றார்.

"நல்லது, இதோ போவோம், அக்ஸாகால்."

நான் உழுவோர்களிடம் சென்று மாலையில் வந்து வேலையைச் சரிபார்க்கப் போவதாகக் கூறிவிட்டு, கிழவருடன் ஊரை நோக்கிக் குதிரையைச் செலுத்தினேன். என்னைத் தலைமை நிர்வாகி அழைத்து அனுப்பியதில் எனக்கு எவ்வித வியப்பும் உண்டாகவில்லை. இது வழக்கமான காரியம் தான். விதைப்பு தொடங்கும் காலத்தில் பல்வேறு நிர்வாகிகள் கிராமத்துக்கு வருவதுண்டு. நாங்கள் அவசரப்படாமல், பலவித அன்றாட வாழ்க்கை விஷயங்களைப் பற்றி உரையாடியவாறு சென்றோம். பேச்சுக்கிடையில் கிழவர் எச்சரிக்கையுடன் சொன்னார்:

''இந்த மாதிரி ஆபத்துக் காலத்தில் நீ குதிரை மேல் சவாரி செய்தவாறு மக்களுக்கு ஓடியாடித் தொண்டு செய்கிருயே, அதற்காக உனக்கு நன்றி, தல்கோனே. நீ பெண்ணுகை இருந்தபோதிலும் எங்கள் எல்லோருக்கும் தலைவி. இப்படியே நிலைத்திரு, குதிரைச் சேணத்தில் இன்னும் உறுதியாக அமர்ந்திரு.' ஏதேனும் நேர்ந்தால் நாங்கள் எல்லோரும் உனக்குப் பற்றுக்கால், நீ எங்களுக்கு ஆதரவு. உனக்கும் லேசில்லைதான், அறிவோம். மனிதனுடைய நிலைமை மலைப் பாதை போன்றது: ஏறும், இறங்கும், திடீரென்று கிடுகிடு பள்ளத்தில் சரியும். ஒற்றை ஆளுக்கு விபத்தைத் தாங்கிக் கொள்வது சக்திக்கு மீறியதாக இருக்கலாம், ஆனுல் எல்லோரும் சேர்ந்தால் அதை வெற்றி கொள்ள முடியும்... நம்முடைய ஓட்டசாட்டம் மிகுந்த வாழ்க்கையின் நியதி இதுவே...''

இதற்குள் நாங்கள் வீதியில் சென்றுகொண்டிருந்தோம். எங்கள் வீட்டு முகப்பில் ஆட்கள் கூட்டமாக நிற்பதை நான் கவனித்தேன். அவர்களுடைய தலைகள் வேலிக்கு வெளியே தெரிந்தன. ஆனுலும் எதனுலோ இதை முக்கியம் உள்ளதாக நான் எண்ணவில்லை. கிழவர் திடீரென்று என் குதிரையின் கடிவாளவாரைப் பற்றிக்கொண்டார்.

''இறங்கு தல்கோனே. நீ குதிரை மேலிருந்து இறங்கிவிட வேண்டும்'' என்று என்னை நேரிட்டு நோக்காமலே சொன்னுர்.

நான் வியப்படைந்து அவரை உறுத்துப் பார்த்தேன். அவரோ தானே குதிரையிலிருந்து இறங்கி என் கையைப் பிடித்துக்கொண்டு, "நீ சேணத்திலிருந்து இறங்க வேண்டும், தல்கோனே" என்றார்.

விஷயம் என்ன என்று இன்னும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. எனினும் ஏதோ பயங்கரமான முன்னுணர்வு என்னை ஆட்கொண்டு விட்டது. உயிரற்றவள் போல நான் மெதுவாக இறங்கினேன். மூன்று மாதர்களுடன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்த அலிமானை அப்போது கண்டேன். அன்று அவர்கள் வாய்க்கால்களைச் சுத்தப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அலிமான் தோள்மேல் மண்வெட்டியை வைத்திருந்தாள். ஒரு பெண் அவளுடைய மண்வெட்டியைத் தோள் மேலிருந்து எடுத்துக்கொண்டாள். அப்போதே நான் எல்லாவற்றையும் ஒரே நொடியில் புரிந்து கொண்டேன்.

"என்ன நீங்கள்? என்ன திட்டமிட்டிருக்கிறீர்கள்?" என்று தெரு முழுவதையும் நோக்கிக் கத்தினேன்.

நான் கத்தியதும் அண்டையில் வசித்த ஆயஷாவின் வீட்டு முகப்பிலிருந்து மாதர்கள் வெளியே ஓடிவந்தார்கள். ஒன்றும் பேசாமல் விரைவாக என்னை அணுகி என் கைகளைப் பற்றிக்கொண்டு, "நெஞ்சைத் திடப்படுத்திக் கொள், தல்கோனே. நமது கழுகுகளை நாம் இழந்துவிட்டோம். ஸுவான்குலும் காஸிமும்

வீர மரணம் எய்திவிட்டார்கள்'' என்று கூறி ஞர்கள்.

அந்தக் கணத்தில் அலிமான் வீரிட்டதையும் எல்லோரும் ஒரு குரலாக ஓலமிட்டதையும் நான் கேட்டேன்:

''பொவொருமோய் — எங்கள் சோதரர்களே! பொவொருமோய்!''

அதற்கு மேல் எதையும் நான் கேட்கவில்லை, உடனே செவிடு ஆகிவிட்டேன். நான் போட்ட கூப்பாட்டிலேயே செவிடு ஆகிவிட்டேன் போலும். வீதி அசைந்தாடிற்று, மரங்கள் விழுவது போலவும் வீடுகள் தகர்ந்து சரிவது போலவும் எனக்குப் பிரமை உண்டாயிற்று. பயங்கரமான நிசப்தத்தில் கண்களுக்கு முன் ஒரு முறை வானில் மேகங்கள் பளிச்சிட்டன, மறு முறை எவையோ, கோணிய ஊமை முகங்கள் தென் பட்டன. நான் திமிறினேன், யாருடைய கைகளிலோ இறுகப் பிடிபட்டிருந்த என் கரங் களைப் பலவந்தமாக விடுவித்துக்கொண்டேன். என்னைத் தடுத்து நிறுத்துவது யார், வாயிலில் கூட்டம் எதற்காக என்பது ஒன்றும் எனக்குப் புரியவில்லை. அலிமானை மட்டுமே நான் பார்த் தேன். நிர்த்தாட்சண்ணியமான தெளிவுடன் நான் அவளைக் கண்டேன். குருதி சோரும் கீறல்கள் நிறைந்த முகமும், பறட்டையாய்க் கலைந்து கிடந்த கேசமும், தாறுமாருகக் கிழிந்த உடை யுமாக அவள் பயங்கரத் தோற்றம் அளித்தாள். மாதர்கள் அவள் முதுகுக்குப் பின் கைகளைக் கோர்த்துக்கொண்டு அவளைத் தடுத்து நிறுத்திக்

கொண்டிருந்தார்கள். அவள் தன் பலமெல்லாம் கொண்டு திமிறி என்னிடம் பாய்ந்துவர முயன்ற வாறு தொண்டை கிழிய வீரிட்டாள். ஆனால் எனக்கு ஒன்றுமே காதில் படவில்லை. நானும் அவளை நோக்கித் திமிறிக்கொண்டு போக முயன்றேன். விரைவாக அவள் அருகே துணைக்குச் செல்ல வேண்டும் என்ற ஒரே விருப்பம்தான் என் உள்ளத்தில் நிறைந்திருந்தது. ஆனால் நாங் கள் இருவரும் கடைசியில் ஒன்று சேர்வதற்குள் ஒரு யுகமே கழிந்துவிட்டது போலப் பட்டது. அலிமான் என் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதறிய போதுதான் அவளுடைய நெஞ்சைப் பிளக்கும், கம்மிய அலறல் என் காதில் விழுந் தது:

''அம்மா, நாம் விதவைகள், அம்மா! ஆக்கங் கெட்ட விதவைகள்! நமது சூரியன் மறைந்து விட்டது. கரி நாள்! அம்மா! கரி நாள்!''

ஆம், நாங்கள் விதவைகள் ஆகிவிட்டோம். இரண்டு விதவைகள் — மாமியாரும் மருமகளும் — ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு கொதிக் கும் கண்ணீரை ஒருவர் மீது ஒருவர் பெருக்கிக் கொண்டு எங்கள் விதியை நொந்து அழுதோம்.

ஆனால் எனக்கும் அலிமானுக்கும் இஷ்டப்படி அழுது புலம்பக்கூட வாய்க்கவில்லை. உயிர் துறந்தவர்களின் நினைவுக்கு மீண்டும் அஞ்சலி செலுத்துவதற்காகக் கூட்டுப் பண்ணைக்காரர்கள் ஏழாம் நாள் வந்தார்கள்.

''ஓர் ஆண்டு முழுவதும் துக்கம் கொண்டா டினாலும் போதாது, நாம் அவர்களை நினைவில்

வைத்துப் போற்றுவோம், ஆனால் உயிரோடு இருக்கும் மனிதன் வாழ வேண்டும். அவர்கள் வாழாத முழு ஆயுளை மாஸெல்பேக்கும் ஜைனுக் கும் வாழட்டும். (அப்போது ஜைனுக்கிடமிருந்து எங்களுக்கு அனேகமாக வாரந்தோறும் கடிதம் வந்து கொண்டிருந்தது.) அவர்கள் வெற்றி யுடன் திரும்பி வருவார்களாக, உங்களை வேலைக்குச் செல்ல நாங்கள் அனுமதிக்கிறோம். இப்போது விதைப்புக் காலம். நிலம் காத் திராது. நெஞ்சைக் கையில் பிடித்துக் கொள் ளுங்கள். எங்களோடு இருங்கள். இதுவே பகை வனைப் பழிவாங்கும் நமது வழியாக இருக்கட் டும்'' என்று எங்களிடம் சொன்னார்கள்.

அலிமானும் நானும் கலந்து ஆலோசித்து, மக்கள் சொன்னதை ஏற்றுக் கொண்டோம்.

காலையில் நாங்கள் வேலைக்குப் புறப்பட்ட போது கூட்டுப்பண்ணைத் தலைவன் உஸேன்பாய் இரண்டு காகிதங்களைக் கொண்டுவந்தான். இவை மரணச் செய்திகள், இவற்றைப் பத்திர மாக வைத்திருங்கள் என்றான். காஸிம் இறந்த செய்தி பதினைந்து நாட்களுக்கு முன்பே கூட்டுப் பண்ணைக்கு வந்துவிட்டதாம். மாஸ்கோ அருகே நடந்த தாக்குப் போரில், அரேஹோவ்க்கா என்ற கிராமத்தில் அவன் கொல்லப் பட்டானாம். இந்தத் தகவலைத் தெரிவிக்க ஆயத்தம் நடந்து கொண்டிருக்கும் போதே ஸுவான்குல் வீர மரணம் அடைந்த செய்தியும் கிடைத்து விட் டதாம். யேல்த்ஸ் என்னும் இடத்தின் அருகே நிகழ்ந்த பெரிய தாக்குதலின் போது அவன்

சொல்லப் பட்டானும். ஆகவே எங்களுக்கு உண்மையைத் தெரிவிப்பதைத் தவிரக் கிராமத்தாருக்கு வேறு வழி இல்லாமல் போயிற்றும். ஒரே நாளில் இரண்டு செய்திகளையும் அவர்கள் தெரிவிக்க வேண்டியதாயிற்று. மேலே விவரிப்பதற்கு ஒன்றும் இல்லை. மறுபடியும் இடுப்புவாரை இறுக வரிந்து கட்டிக்கொண்டு தழுத் தலைவியின் குதிரை மேல் மீண்டும் அமர்ந்து கொண்டேன்.

நானே அழுது புலம்பவும் விதியைச் சபிக்கவும் தொடங்கிக் கைசோர்ந்து உட்கார்ந்து விட்டேன். ஆனல் அலிமானின் கதி என்னவாகும்? அவள் ஒரேயடியாக நைந்து நலிந்து போனதைக் கண்டு நான் திகில் கொண்டேன். எனது சோகம் அவளுக்குக் குறைந்ததில்லை; ஏககாலத்தில் கணவனையும் மகனையும் பறிகொடுத்து விட்டு நின்றேன். எனது இழப்பு இரு மடங்கானது. ஆனலும் எனது நிலைமை வேருயிருந்தது. கொஞ்சமோ அதிகமோ, நானும் ஸுவான்தனும் பெரு வாழ்வு வாழ்ந்து விட்டோம். எவ்வளவோ பார்த்து விட்டோம், எத்தனையோ அனுபவித்து விட்டோம். கஷ்டமும் பட்டோம், சுகமும் பட்டோம். குழந்தைகள் பெற்ரேம், குடித்தனம் நடத்திேனும், சேர்ந்து பாடுபட்டோம். போர் இல்லாவிட்டால் ஆயுட்காலம் முழுவதும் சேர்ந்தே வாழ்ந்திருப்போம். ஆனல் அலிமானும் காஸிமும் நிறைய அனுபவித்து அறிந்தார்களா என்ன? அவர்களுடைய வாழ்க்கை எல்லாமே வருங்காலத்தில் இருந்தது, கனவு

களிலேயே நிலவிற்று. புத்திளமைப் பருவத்தி லேயே யுத்தம் அவர்களைக் கோடரி கொண்டு துணித்து விட்டது. அலிமானின் உளப்புண் கள் நாளடைவில் ஆறியிருக்கும் என்பது உண் மையே. உலகத்தில் மனிதர்கள் இல்லாமல் போய்விடவில்லை. யாரேனும் ஒருவன் அவ ளுக்குக் கிடைத்திருப்பான், அவனை அவள் காத லிக்கக்கூடச் செய்திருப்பாள். வாழ்க்கை புதிய எதிர்பார்ப்புக்களுடன் திரும்ப மலர்ந்திருக்கும். மற்றப் படைவீரர் மனைவிகள் அப்படித்தான் செய்தார்கள். போர் முடிந்ததும் அவர்கள் மறு மணம் செய்து கொண்டார்கள். சிலருக்கு நல்ல கணவர்கள் வாய்த்தார்கள், சிலருக்கு வாய்க்க வில்லை, ஆனால் அவர்கள் தனிக்கட்டைகளாக இருக்கவில்லை. அவர்கள் எல்லோருமே இப்போது தாய்கள், மனைவிகள். அவர்களில் பெரும்பா லோருக்கு இன்பம் கிட்டியது. எல்லோருமே தனி யாட்களாக இருப்பதில்லையே. சிலர் துயரத்தை விரைவில் மறந்து விடுகிறார்கள், புதிய பாதை யில் விரைவாக அடியெடுத்து வைக்கிறார்கள். வேறு சிலரோ, கடுந் துன்பத்துடன், நிராசை யுடன் ஒரே இடத்தில் தயங்கி நின்று கொண் டிருக்கிறார்கள். கடந்தகால நினைவுகளிலிருந்து விலகிச் செல்வதற்கு வேண்டிய வலிமை அவர் களிடம் இருப்பதில்லை. அலிமானின் போதாத காலம், அவள் இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவளாக இருந்தாள். நடந்தவற்றை மறந்துவிட அவளால் முடியவில்லை. விதிக்கு இணங்கிப் போக அவளுக்கு இயலவில்லை. இதில்

தான் என்னுடைய மன்னிக்க முடியாத குற்றம் இருக்கிறது. நான் வலுவற்றவள் என்பதைக் காட்டிக்கொண்டேன். சொந்தக் கழிவிரக்கத்தை வெற்றிகொள்ள என்னால் முடியவில்லை...

இளவேனிலில் எங்கள் குழு, பிரதான வாய்க் கால்களை ஆழப்படுத்தியது. நானும் அங்கே இருந்தேன். ஒரு தரம் நாங்கள் சூரியன் மறை வதற்கு முன்பே வேலையை முடித்துவிட்டோம். ஆட்கள் அவரவர் வீடுகளுக்குப் புறப்படலானார் கள். நான் உழவு வேலைக்காரர்களிடமும் போக வேண்டியிருந்ததால் எனக்காகக் காத்திருக்க வேண்டாம் என்று அலிமானிடம் சொன்னேன். உழவு வேலைக்காரர்களின் கூடாரம் தொலை விலில்லை. அப்போது அவர்கள் மாலை உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நான் அவர் களிடம் வேலையைப் பற்றிப் பேச்சு நடத்தி விட்டு, கூடாரத்திலிருந்து வெளியே வந்து குதிரை மேல் அமரப் போனவள் அலிமானைக் கண்ணுற்றேன். அவள் போகவில்லை என்று தெரிந்தது. தனியாகப் புறம் போக்கு நிலத்தில் நடந்தவாறு ட்யூலிப் மலர்களைக் கொய்து சேர்த்துக்கொண்டிருந்தாள். அவளுக்குத்தான் சின்னப் பெண் போலப் பூக்கள் மேல் ஒரே மோகம் ஆயிற்றே. ஐயோ, அலிமான், அலி மான், ஆக்கங்கெட்ட என் மருமகளே! அவள் கைகளில் பத்து பெரிய ட்யூலிப் மலர்கள் இருந் தன. அவற்றை வீட்டுக்கு எடுத்துச் செல்வதற் காகப் பறித்தாள் போலும். மலர்களும் கையு மாக அவளைக் கண்டதும் என் நெற்றியில்

கொதிக்கும் வியர்வை குப்பென்று துளிர்த்தது. முன் ஒரு தடவை வயலோரச் சரிவில் காட்டு மால்வா மலர்களைப் பறித்து இதே போல் பூக்களும் கையுமாக அவள் நின்ற நிலை எனக்கு நினைவு வந்தது. ஒரே வித்தியாசம் என்னவென்றால் அப்போது அவள் சிவப்புத் தலைக்குட்டை அணிந்து வெண் மலர்களைக் கையில் வைத்திருந்தாள், இப்போதோ, கறுப்புத் தலைக்குட்டை கட்டிக்கொண்டு கையில் சிவப்புப் பூக்களுடன் நின்றாள். ஆனால் இது என் இதயத்தை எப்படி வாள் கொண்டு அறுத்தது! அலிமான் தலை நிமிர்ந்தாள், சுற்றுமுற்றும் பார்வையைச் செலுத்தினாள், அப்புறம் சிரம் தாழ்த்தி, மலர்களைச் சோர்வுடன் நோக்கினாள். இவற்றை இப்போது யாருக்கு, அளிப்பது, எங்கே? இப்படி எண்ணமிட்டாள் போலும். திடீரென்று உடம்பைக் குலுக்கிக் கொண்டாள், முகங்குப்புறத் தரையில் விழுந்தாள், பூக்களை நார்நாராகப் பிய்த்துப் போட்டாள், அவற்றால் நிலத்தை அடித்தாள், அப்புறம் அமைதியுற்றாள், கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, தோள்கள் குலுங்க அப்படியே விழுந்து கிடந்தாள். நான் கூடாரத்தின் பின்னே மறைந்து கொண்டேன். அவளைக் கலவரப்படுத்த நான் விரும்பவில்லை. அழட்டும், அவளுக்குக் கொஞ்சம் ஆறுதல் ஏற்படும் என்று எண்ணினேன். அவளோ, துள்ளியெழுந்து புறம்போக்கு நிலத்தின் வழியாக நெடுஞ்சாலைக்கு ஓடினாள். நான் திகில் அடைந்து குதிரை மேல் அவள் பின்னே சென்றேன். என் மருமகள்

ஓடுவதை, கறுப்புத் தலைக்குட்டையுடன் செம் மண் நிலத்தில் அவள் பாய்ந்து போவதைக் காண எனக்குப் பயங்கரமாக இருந்தது.

''அலிமான்! நில்! உனக்கு என்ன? நில், அலிமான்!'' என்று நான் அவளைக் கூவித் தடுத் தேன். அவளோ, நிற்கவே இல்லை.

காஸிமின் குதிரை ஒரு காலத்தில் சென்ற சாலை வரையில் அவள் ஓடினாள். அங்கே தான் நான் அவளை எட்டிப்பிடித்தேன்.

''அம்மா! என்னிடம் ஒன்றும் சொல்லாதே. அம்மா, என்னிடம் ஒன்றுமே சொல்லாதே. வேண்டாம்!''

நான் கடிவாளத்தை இழுத்துப் பிடித்தேன். அவள் அருகே ஓடிவந்து குதிரையின் பிடரியைப் பிடித்துக் கொண்டு என் காலில் முகத்தை வைத்தவாறு கதறினாள். நான் பேசாதிருந் தேன். அவளிடம் நான் சொல்வதற்கு என்ன இருந்தது? அப்புறம் அவள் தலையை நிமிர்த் தினாள். முகம் முழுவதும் சேறும் கண்ணீரு மாக இருந்தது.

''பார் அம்மா, வெயில் எப்படி எறிக்கிறது என்று! பார், வானம் எப்படித் துலங்குகிறது, ஸ்தெப்பி வெளி எப்படிப் பூத்துக் குலுங்கு கிறது பார்! ஆனால் காஸிம் திரும்பி வர மாட்டானா, ஊம்? வரவே மாட்டானா?'' என்று தேம்பலுடன் வினவினாள்.

''ஊஹும். திரும்பிவர மாட்டான்'' என்று நான் பதில் அளித்தேன்.

அலிமான் ஏக்கப் பெருமூச்செறிந்தாள்.

''என்னை மன்னித்துவிடு, அம்மா. அங்கே ஓடிப்போய் அவனோடு சேர்ந்து உயிர் துறக்க எண்ணினேன்'' என்று மெல்ல மொழிந்தாள்.

என்றாலும் தாங்க முடியவில்லை. அழுகை பீறிட்டது. நான் ஒன்றுமே சொல்லவில்லை. ஆனால் நான் விவேகியாக, முன்னெச்சரிக்கையுள்ள தாயாக இருந்தால் அவளைக் கண்டிப்பாகக் கடிந்து கொண்டிருக்க வேண்டும்: ''நீ என்ன, பச்சைக் குழந்தையா? நீ ஒருத்தி மட்டுமல்ல, விதவை ஆனவர்கள் எத்தனையோ பேர் — எண்ணித் தொலையாது அவர்களை. பொறுத்துக் கொள். இதைக் கேட்பது உனக்கு எவ்வளவு தான் கொடூரமாக இருந்த போதிலும் — காஸிமை மறந்துவிடு. போனது திரும்பி வராது. வேளை வந்ததும் மனதுக்கு உகந்த மனிதன் கிடைப்பான். உன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ளா விட்டால் உனக்குத்தான் கெடுதல். இப்படித் தன்னையே மாய்த்துக் கொள்ளாதே. நீ இன்னும் இளம்பெண். வாழ வேண்டியவள்.'' முரட்டுத்தனமான, இந்த ஒரே உண்மையைச் சொல்லத் துணியாததற்காக இப்போது நான் எவ்வளவு வருந்துகிறேன்! அப்புறம் எத்தனை தடவை தகுந்த சந்தர்ப்பங்கள் வாய்த்தன, இந்தச் சொற்கள் நாக்கு நுனி வரை வந்துவிட்டன, அப்படியும் அவற்றை என்னால் உச்சரிக்க முடியவில்லை. மீற முடியாத ஏதோ ஒரு சக்தி என்னைத் தடுத்துவிட்டது. அலிமானும் என் சொற்களை முடிவு வரை கேட்க விரும்பவில்லை.

ஒவ்வொரு சொல்லுக்கும் அதற்கேற்ற வேளை இருக்கிறது: அப்போது அது பழுக்கக் காய்ந்த இரும்பு போலத் துவண்டு கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. சரியான வேளையைத் தவற விட்டு விட்டால் சொல் ஆறி இறுகிக் கல்லாகிப் பெருஞ் சுமை போல நெஞ்சில் கிடந்துவிடுகிறது. அதிலிருந்து விடுபடுவது எளிதல்ல. இத்தனை ஆண்டுகள் கழிந்துவிட்ட பின்னர் நான் இதைச் சொல்லுகிறேன். அப்போதோ, அன்றாட வேலை நெருக்கடியில், கூட்டுப் பண்ணையின் தினப்படிக் கவலைகளிலும் பற்றுக் குறைகளிலும் நிதானமாகச் சிந்திப்பதற்கு, எந்த விஷயத்தையும் தெளிவாக எண்ணிச் சீர்படுத்திக் கொள்வதற்கு நேரமே கிடைக்கவில்லை. எல்லா எதிர்பார்ப்புக்களும், எல்லாச் சிந்தனைகளும் ஒன்றைப் பற்றியவையாகவே இருந்தன, அதாவது விரைவில் வெற்றி கிட்ட வேண்டும், யுத்தத்துக்கு விரைவில் முடிவு வர வேண்டும் என்பதே. மற்றவை எல்லாம் அப்புறம்தான். போர் முடிந்து விட்டால் எல்லாம் தாமாகவே சரிப்பட்டுவிடும் என்று எண்ணப் பட்டது. உண்மையோ, முற்றிலும் வேறு...

8

''அன்னை நிலமே! ஸுவான்குலையும் காஸிமையும் போன்ற மனிதர்கள் கொல்லப்படும் போது மலைகள் சரிந்து விழாதது ஏன்? ஏரிகள்

கரைகளை உடைத்துக் கொண்டு பெருகாதது ஏன்? அவர்கள் இருவரும் — தகப்பனும் மகனும் — பேருழவர்களாக விளங்கினுர்கள். இத்தகைய மனிதர்களாலேயே உலகம் நிலைத்திருக்கிறது. அவர்கள் அதற்கு உணவூட்டுகிருர்கள், பருகப் பானம் தருகிருர்கள், போரில் அவர்களே அதைக் காக்கிருர்கள், முதன்முதலில் படைவீரர் களாக அவர்களே சேர்கிருர்கள். போர் மட்டும் இல்லாவிட்டால் ஸுவான்குலும் காஸிமும் இன்னும் எத்தனை செயல்களை ஆற்றியிருப்பார் கள், தங்கள் உழைப்பின் விளைவுகளை இன்னும் எத்தனை மக்களுக்கு அளித்திருப்பார்கள், இன்னும் எத்தனை வயல்களில் பயிர் செய்திருப்பார்கள், இன்னும் எவ்வளவு தானியம் கதிரடித்திருப் பார்கள். தாங்களும் பதிலுக்கு மற்றவர்களால் பரிசளிக்கப் பட்டு வாழ்வின் இன்பங்களை இன்னும் எவ்வளவு துய்த்திருப்பார்கள்! சொல் எனக்கு, அன்னை நிலமே, உண்மையைச் சொல்: யுத்தம் இல்லாமல் வாழ மக்களால் முடி யாதா?''

''நீ கடினமான கேள்வி கேட்டுவிட்டாய், தல்கோனை. மக்கள் இனங்கள் இருந்தன, அவை போரில் இருந்த சுவடு தெரியாமல் நிர்மூலமாகி விட்டன. நகரங்கள் இருந்தன, அவை நெருப் பால் எரிந்து மணலால் மூடப்பட்டு ஒழிந்தன. யுகங்கள் நிலவின, அப்போது நான் மனித அடிச் சுவட்டைக் காண்போமா எனக் கனவு கண்டேன். ஒவ்வொரு முறையும் மக்கள் போர் மூட்டிய போதெல்லாம் நான் அவர்களிடம்

சொன்னேன்: 'நிறுத்துங்கள், குருதி பெருக்காதீர்கள்!' என்று. இப்போதும் நான் திரும்பச் சொல்கிறேன். 'மலைகளுக்கு அப்பாலும் கடல்களுக்கு மறு புறமும் வாழும் ஏ மக்களே! ஆதவன் ஒளியில் வாழும் ஏ மாந்தரே! உங்களுக்கு என்ன வேண்டும்? நிலமா? இதோ இருக்கிறேன் நான்—நிலம்! உங்கள் அனைவருக்கும் நான் ஒரே மாதிரி. நீங்கள் யாவரும் எனக்குச் சமமானவர்கள். உங்களுடைய பிணக்குகள் எனக்கு வேண்டாம். எனக்கு வேண்டியது உங்கள் நட்பு, உங்கள் உழைப்பு! உழவுச்சாலில் ஒரு தானியத்தைப் போடுங்கள். நான் உங்களுக்கு நூறு தானிய மணிகளைத் தருகிறேன். ஒரு கொம்பை நடுங்கள், ஒரு பெரிய மரத்தைத் தழைத்து வளரச் செய்கிறேன். தோட்டம் போடுங்கள், நான் பழங்களாகச் சொரிகிறேன். கால்நடை வளருங்கள், நான் புல்லாகிறேன். வீடு கட்டுங்கள், நான் சுவர் ஆகிறேன். பல்கிப் பெருகுங்கள், நான் உங்கள் அனைவருக்கும் இருப்பிடமாக விளங்குகிறேன். நான் முடிவற்றவள். எல்லையற்றவள், ஆழ்ந்தவள், உயர்ந்தவள். உங்கள் யாவருக்கும் நான் தாராளமாகப் போதும்!' யுத்தம் இல்லாமல் வாழ மக்களால் முடியுமா என்று நீ கேட்கிறாய், தல்கோனே. இது என்னை அல்ல, உங்களை, மக்களை, உங்கள் சித்தத்தையும் பகுத்தறிவையும் பொறுத்திருக்கிறது.''

"நீ எப்படி நினைக்கிறாய், என் அருமை [illegible] உனது மக்கள் யாவரிலும் சிறந்த

உழைப்பாளிகள், யாவரிலும் தேர்ந்த நிபுணர்கள் போரினுல் அழிக்கப் படுகிருர்கள். நான் இதை ஏற்க மாட்டேன், என்வாழ்வு முழுவதும் போவதாளுலும் ஏற்க மாட்டேன்.''

''தல்கோனே! போரினுல் நான் இடர்ப்படுவதில்லை என்று நினைக்கிருயா? இல்லை, நான் பெரிதும் இடர்ப்படுகிறேன். குடியானவர்களின் கரங்களுக்காக நான் மிகவும் ஏங்கித் தவிக்கிறேன். என் குழந்தைகளான உழவர்களின் இழப்பால் நான் எப்போதும் அழுது துடிக்கிறேன். ஸுவான்குல், காஸிம், ஜைனுக் ஆகியோரும் கொல்லப்பட்ட எல்லாப் படைவீரர்களும் எனக்கு எப்போதும் தேவை. நான் உழப்படாதிருக்கையில், பயிர் நிலம் அறுவடை செய்யப்படாமல் இருக்கையில், அறுவடையான கதிர்க்கட்டுகள் போரடிக்கப் படாமல் இருக்கும் போது நான் அவர்களைக் கூவி அழைக்கிறேன்: 'எங்கே நீங்கள், என் உழவர்களே, எங்கே நீங்கள், என் விதைப்போரே? எழுங்கள், என் குழந்தைகளே, பயிர்த் தொழிலாளரே, வாருங்கள், உதவுங்கள் எனக்கு! நான் மூச்சு விட முடியாமல் திணறுகிறேன், இறந்து கொண்டிருக்கிறேன்!' அப்போது மட்டும் ஸுவான்குல் மண்வெட்டியுடன் வந்தால், காஸிம் தன் அறுவடை இயந்திரத்தை ஓட்டி வந்தால், ஜைனுக் தன் வண்டியை விரட்டிக் கொண்டு வந்து சேர்ந்தால், எவ்வளவு நன்ருய் இருக்கும்!.. ஆனுல் அவர்கள் பதில் குரல்கூடக் கொடுப்பதில்லை...''

''இதற்காக உனக்கு நன்றி, நிலமே. அவர்களுக்காக நீயும் என்னைப் போலவே ஏங்குகிறாய், அவர்களை நினைத்து என் மாதிரியே அழுகிறாய் என்று தெரிகிறது. உனக்கு நன்றி, நிலமே.''

9

போரின் மூன்றாவது, நான்காவது ஆண்டுகள் மகிழ்ச்சி ஊட்டின, அதே சமயம் ஏங்கச் செய்தன. பகைவர்கள் மேலும் மேலும் பின்னே தள்ளப் பட்டார்கள். அதனால் உள்ளம் களி துள்ளியது. ஆனால் நாளுக்கு நாள் வாழ்க்கை முன்னிலும் கடினம் ஆகிக்கொண்டு போயிற்று. இலையுதிர் காலத்தில் நிலைமை இன்னும் மட்டு மீறிப் போய்விடவில்லை. தானியக் கதிர்களை அரிதாள்களுக்கு இடையிலிருந்து பொறுக்கித் திரட்டினோம், காய்கறித் தோட்டங்களில் உருளைக் கிழங்கை அகழ்ந்து எடுத்தோம். ஆனால் பனிக் கால நடுவில் பஞ்சம் தலை தூக்கிற்று. இளவேனிலிலும் வறண்ட கோடை நாட்களிலுமோ, நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது, மற்றவர்கள் காட்டுவேர்களையும் புல்லையும் ஒரு துளி பால் கலந்து வெள்ளையாக்கிய தண்ணீரையும் உணவாகக் கொண்டு வெகு சிரமத்துடன் நாட்களை ஓட்டினார்கள். நானும் அலிமானும் வேலை செய்தோம். மேலும் குழந்தைகள் எங்கள் காலைச் சுற்றிக்கொண்டிருக்கவில்லை. பல குழந்

தைகள் உள்ள மற்றவர்களின் வீடுகளில் சூனு வயிறுகளும் குழிப்பை தட்டிய முகங்களும் கொண்ட மதலைகள் மௌனமாக உணவு வேண் டியவாறு கைகளைப் பார்க்கும் போது நெஞ்சு பொறுக்க முடியாத தவிப்பு ஏற்படும். ''நீ போர் முனைக்குப் போய் அங்கே உயிரை விடு. உடனே யுத்தம் முடிந்துவிடும். குழந்தைகளுக்கு வயிறார உணவு கிடைக்கும்'' என்று என்னிடம் யாராவது சொல்லியிருந்தால் நான் மறுயோ சனையின்றி அப்படியே செய்திருப்பேன், குழந் தைகளின் பசித்த விழிகளைப் பாராதிருக்க முடிந் தால் அதுவே போதும். ஒரு நாள் எனது இந்த எண்ணத்தை அலிமானிடம் வெளியிட் டேன். அவள் என்னை உற்றுப்பார்த்தாள். அப்புறம் சொன்னாள்:

''நானும் அப்படியே செய்திருப்பேன். எல்லா வற்றிலும் பயங்கரம் என்னவென்றால் தாங்கள் பட்டினி கிடக்க வேண்டியிருப்பது ஏன் என் பதைக் குழந்தைகளால் புரிந்து கொள்ள முடி யாததுதான். பெரியவர்களுக்காவது காரணங் கள் தெரியும், இதற்கு எப்போதேனும் முடிவு ஏற்பட்டுத் தீரும் என்று அவர்கள் அறிவார் கள், அதனால் தங்களைத் தேற்றிக் கொள்கிறார் கள். குழந்தைகளுக்கோ ஒன்றும் புரியவில்லை. அவர்களுடைய தகப்பனார்கள் திரும்பி வரும் வரையில் நாம் அவர்களுக்கு உணவு தேடித் தர வேண்டும். உனக்கும் எனக்கும் எஞ்சியிருப் பது இது தானே அம்மா! இல்லாவிட்டால் வாழ்வதே பயனற்றது...''

அனைத்தும் யுத்தத்திற்கே அர்ப்பணிக்கப் பட்டன: உயிரும் உழைப்பும் சித்தமும் குழந்தைகளின் கூழும்கூட—எல்லாம், சிறு குறுணை வரையில் யாவுமே யுத்தத்தின் நிரப்பி மாளாத பாழ்வயிற்றுக்கே போய்க் கொண்டிருந்தன. எனினும், யுத்தத்துடன் எதையும் பகிர்ந்துகொள்ள விரும்பாதவர்களும் இருந்தார்கள். ஆம், எதற்காக மறைக்க வேண்டும்? அம்மாதிரி ஆட்கள் இருக்கத்தான் செய்தார்கள். எங்களுடைய அற்பக் கவளத்தை அவர்களும் பிடுங்கிக் கொண்டார்கள்.

ஒரு தரம் எனக்கு வழி தவறிவிட்டது. இது நடந்தது நாற்பத்து மூன்றுவது ஆண்டில், பனிக்கால மத்தியில் அல்லது பனிக்கால இறுதியில் நடந்திருக்கலாம். ஸ்தெப்பியில் வெற்றுத் தரைப் பகுதிகள் கருமையோடத் தொடங்கியிருந்தன, ஆனால் இரவு நேரங்களில் சன்னல்கள் குளிரில் பனி உறைந்து காணப்பட்டன.

இரவு எத்தனை மணி இருக்குமோ தெரியாது—எல்லோரும் வெகு நேரத்துக்கு முன்பே உறங்கி விட்டார்கள். திடீரென்று யாரோ சன்னலைத் தடதடவென்று தட்டினார்கள், கண்ணாடிகளை உடைத்துவிடுவதைப் போல.

''தல்கோனே! குழுத் தலைவி! எழுந்திரு! விழித்துக்கொள்!'' என்று தெருவிலிருந்து யாரோ கூவினார்கள்.

நாங்கள் அரண்டுபோனோம். அலிமான், நான் இருவரும் படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்தோம்.

''அம்மா!'' என்று இருட்டில் கிசுகிசுத்தாள் அலிமான். ஏதோ அற்புதத்தை எதிர்பார்ப்ப வள் போன்ற கலவரம் அவள் குரலில் ஒலித் தது.

ஒருபோதும் அகலாத, பாழாய்ப்போகிற எதிர்பார்ப்பு! எனக்கும் திகிலாலும் இனந்தெரி யாத களிப்பாலும் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது: ''ஒருவேளை நம்மவர் யாரேனும் திரும்பி வந்திருக்கிறார்களோ?'' நான் அக்கணமே சன்னலருகே தாவினேன்.

''யார் அங்கே? யார் நீ?''

''வெளியே வா, தல்கோனே! சீக்கிரம்! குதி ரைகள் திருடப் பட்டன!'' என்று சன்னலுக்கு வெளியே ஒரு குரல் பதிலளித்தது.

அலிமான் விளக்கைப் பொருத்துவதற்குள் நான் மளமளவென்று காலணிகளை மாட்டிக் கொண்டு மேல்கோட்டை அணிந்து தெருவுக்குப் பாய்ந்து சென்றேன். நாங்கள் குதிரை லாயத் துக்கு ஓடினோம். அங்கே ஏற்கனவே ஆட்கள் இருந்தார்கள், கூட்டுப்பண்ணைத் தலைவனும் இருந்தான். திருடர்கள் மூன்று குதிரைகளை ஓட்டிச் சென்று விட்டார்கள் என்று தெரிந்தது. எங்களுடைய சவாரிக் குதிரையும்—அதை நான் கூட்டுப் பண்ணைக்கு வழங்கியிருந்தேன்—அவற் றில் ஒன்று. காயடித்த குதிரைகளில் சிறந் தவை இவை. உழவுக்காக அவற்றைத் தயார் படுத்தியிருந்தோம். குதிரைகளுக்கு நடுநிசித் தீனி போடுவதற்காகத் தீனிப் புல் கொண்டு வரப் போயிருந்ததாகவும் திரும்பி வந்த

போது லாயத்தில் இருட்டாயிருந்ததாகவும் விளக்கு எரியவில்லை என்றும் காற்றில் அணைந்து போயிருக்கும் என்று நினைத்து அவசரப் படாமல் விளக்கை ஏற்றியதாகவும், ஓரத்தில் மூன்று குதிரைகளின் இடங்கள் காலியாக இருந்ததைக் கண்டதாகவும் லாயக்காரன் கூறினான்.

அந்தச் சமயத்தில் மூன்று உழைப்புக் குதிரைகளை இழப்பது கூட்டுப்பண்ணைக்கு இந்தக் காலத்தில் பத்து டிராக்டர்களை இழப்பதற்கு ஒப்பாகும். இன்னும் ஆழ்ந்து சிந்தித்தால் இது போர்முனையிலுள்ள ஒவ்வொரு படைவீரனிடமிருந்தும் ஒரு துண்டு ரொட்டியைப் பறித்துக் கொள்வதற்குச் சமமாகும். நாங்கள் குதிரைகளுக்குச் சேணம் பூட்டினோம். சிலர் துப்பாக்கிகளை எடுத்துக் கொண்டார்கள். எல்லோரும் திருடர்களை விரட்டிக்கொண்டு சென்றோம். திருடர்களை மட்டும் எட்டிப் பிடித்திருந்தால் இரக்கமே காட்டியிருக்க மாட்டோம். சத்தியமாக, இரக்கமே காட்டியிருக்க மாட்டோம்.

ஊருக்கு வெளியே நாங்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு திசைகளில் போனோம். நான் ஏறியிருந்தது நல்ல ஜாதிக் குதிரை, உற்சாகமுள்ளது, கட்டுக்கு அடங்காதது, விரைந்த ஓட்டத்துக்குத் துடிப்பது. நான் அதைப் பாய்ச்சலில் விட்டேன். நெடுஞ்சாலையைக் குறுக்கே கடந்து மலைகளின் பக்கமாகத் திரும்பினேன் என்பது நினைவிருக்கிறது. என்னோடு எங்களவர் இருவர் குதிரைகள் மேல் வந்தார்கள். திடீரென்று பின்னே பார்த்தேன் —

அவர்களைக் காணவில்லை. ஒன்று அவர்கள் வேறு பக்கம் திரும்பியிருக்க வேண்டும், இல்லாவிட்டால் நான் திரும்பியிருக்க வேண்டும். தவறு ஏற்படுவது ஒன்றும் கடினமல்ல: நிலவு வீசியது என்றாலும் அதன் ஒளி மயக்கந் தருவதாக இருந்தது—ஒரு இருபது தப்படிக்கு மேல் எல்லாம் இருண்ட மூட்டத்தில் குழம்பிக் கலந்து விட்டன. ஆனால் அப்போது நான் நினைத்தது இதைப்பற்றி அல்ல. குதிரைத் திருடர்களை எப்படியாவது எட்டிப் பிடித்துவிட வேண்டும் என்பது ஒன்றே என் குறியாயிருந்தது. குதிரை என்னை எங்கே இட்டுச் செல்கிறது என்பதைக் கவனிக்காதிருந்ததில் எனக்கு ஒரே வருத்தமாகவும் மனத்தாங்கலாகவும் இருந்தது. திடீரென்று குதிரை நின்றபொழுது பார்க்கிறேன்—எதிரில் ஆழமான மலைப் பள்ளம். நான் நேரே மலையடிவாரத்துக்கு வந்துவிட்டேன். சந்திரன் இருண்ட மலைத் தொடருக்கு மேலே நிதானமாக நகர்ந்தது. விண்மீன்கள் ஒளி மங்கின. சுற்றிலும் விளக்கே கிடையாது. கீழ்நோக்கிக் குப்குப்பென்று அடித்தது காற்று. மொட்டை மரக் காடு அசைந்தது, மெல்லெனச் சீட்டி அடித்தது. மண்ணாலான பழங்காலச் சமாதிகளின் இடிபாடுகளின் மேல் ஆந்தைகள் கிறீச்சிட்டன.

நான் குதிரையை மலைப் பதிவில் செலுத்தினேன். ஒன்றுமே காதில் படவில்லை. ஒரு நரிதான் வெருண்டு ஓடிற்று. அது பாறைக்கு அடியிலிருந்து வெளியே பாய்ந்து நிலவில் வெண்

ணிலமாக ஓடிமறைந்தது. நாற்புறமும் வேறு எதுவும் தென்படவில்லை.

நான் கிராமத்துக்குத் திரும்பினேன். ஜென் ஷென்குல் — அப்படி ஒருவன் எங்கள் ஊரில் இருந்தான் — படையிலிருந்து ஓடிவந்துவிட்டதாகவும் எங்கோ மஞ்சள் சமவெளியிலிருந்து வந்த அவனைப் போன்ற இருவர் அவனோடு இருப்பதாகவும் மூவரும் மலையில் ஒளிந்து கொண்டிருப்பதாகவும் ஜனங்கள் பேசிக்கொள்வது சரியில் சென்று கொண்டிருக்கையில் எனக்கு நினைவு வந்தது. இந்த வதந்திகளை நான் வெகுவாக நம்பவில்லை. எல்லாம் ஆபத்துக்கு உள்ளாகியிருக்கும் போது தலைமறைவாய் இருப்பது எப்படி முடியும் என்று எனக்கு விளங்கவில்லை. அப்படியானால் ஒருவன் போரிட்டு மடிய வேண்டும், மற்றொருவன் அவன் முதுகுக்குப்பின் அக்கடாவென்று உட்கார்ந்திருக்கலாம் என்று அர்த்தம் ஆகிறது. இல்லை, இவ்வளவு வெட்கமற்ற செயலில் எவனும் ஈடுபடமாட்டான் என்று நான் எண்ணினேன். இப்போது சட்டென எனக்கு ஐயம் உண்டாயிற்று, கிராமத்தில் எல்லோரும் ஒருவரையொருவர் உள்ளும் புறமும் அறிவோம். குதிரைத்திருட்டில் இறங்கக் கூடியவர்கள் யாரும் அங்கே இல்லை எனலாம். தவிர, குதிரை என்ன ஊசியா, கழுத்துப்பட்டையில் சொருகிக் கொள்வதற்கு? அதிலும் ஏககாலத்தில் மூன்று குதிரைகள். ஆகவே திருடர்கள் வேறு எங்காவது இருந்துதான் வந்திருப்பார்கள். இப்போது அவர்கள்

ஓநாய்கள் போல மலையிலும் ஸ்தெப்பி வெளியிலும் திரிந்துகொண்டிருக்க வேண்டும். ஜென்ஷென்குல் படையிலிருந்து ஓடிவந்து விட்டது மெய்யானால் இது ஒருவேளை அவன் வேலையாகவே இருக்கலாம் என்று எனக்குப் பட்டது. எனினும் இதில் உறுதியான நம்பிக்கை ஏற்படவில்லை. எப்படியானாலும் பிடிக்கப்படாதவன் திருடன் அல்ல. திருட்டு நடக்கையில் ஒருவரும் பார்க்கவும் இல்லையே.

மூன்று குதிரைகள் — இரு சால் கலப்பைக்கு வேண்டிய ஜோடி. இந்த ஜோடியை நாங்கள் அரும்பாடு பட்டு ஈடுகட்டினோம். குட்டிக் குதிரைகள் நான்கைப் பழக்கிக் கலப்பையில் பூட்டினோம். வருத்தமாயிருந்தது, ஆனால் வேறு எதுவும் செய்வதற்கில்லை. விதைப்புக் காலம் எதிர்பார்ப்பதற்கு முன்பே வந்துவிட்டது. வேலை ஒரேயடியாக நெரிந்ததில் திருடர்களைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ கூட நினைப்பதற்கு நேரமில்லை. என் வாழ்க்கையில் யாவற்றிலும் துன்பம் மிக்க இளவேனில் இது, மக்களைச் சொல்லி என்ன, மக்கள் மேல் குற்றம் இல்லை. ஆட்கள் வேலை செய்ய விரும்பினார்கள், முயன்றார்கள். ஆனால் வெறும் வயிற்றுடன் கடுமையாக வேலை செய்ய முடியுமா என்ன? முன்பு ஒரு நாளில் செய்த வேலைக்கு இப்போது ஒரு வாரம் பிடித்தது. வேலைகள் சுணங்கின, விதைப்பு இழுத்துக் கொண்டு போயிற்று. இந்த அழகில் கூட்டுப்பண்ணையில் விதைகள் இல்லை. ஒரு தானியம் மீதமில்லாமல் துடைத்துக் கூட்டி

விட்டோம், தானியக் களஞ்சியங்களை அடியோடச் சுரண்டிவிட்டோம், எப்படியோ திரட்டிப் பொறுக்கி எங்கள் குழுவின் திட்டத்தை ஒரு வகையாக நிறைவேற்றித் தீர்த்து விட்டோம்.

இந்த நாட்களில் நான் எங்களுடைய வாழ்க்கையைப் பற்றித் தீவிரமாகச் சிந்தனை செய்தேன். வேலை நாட்களுக்குக் கூலியாக எங்களுக்கு ஒன்றுமே தரப்படவில்லை. முந்திய சேமிப்புக்களில் மிச்சம் இருந்ததை எல்லாம் எப்போதோ தின்று தீர்த்து விட்டோம். என்ன செய்வது? ஊர் ஊராகப் பிச்சை வாங்கித் திரிவதா? கால்போன திக்கில் சுற்றி அலைவதா? இல்லை, அப்படிச் செய்வது தன்னையே இழப்பதாகும். ஆனால் இனிமேல் என்ன? நல்லது, எப்படியே கூதிர்காலம் வரை இழுத்துப் பிடித்துச் சமாளிக்கிறோம், பனிக்காலத்தையும் ஒருவாறாக ஓட்டிவிடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அப்புறம் வசந்த காலம் மீண்டும் வருமே, அரைப் பட்டினியாய்த் தளர்ந்து மெலிந்திருக்கும் ஆட்களை மீண்டும் கட்டாயப்படுத்தி வேலை செய்ய வைக்க வேண்டி வருமே. வேலை செய்யாதிருக்கவோ முடியாது.

எல்லா வகையாகவும் நான் எண்ணிப் பார்த்தேன், இரவுகளில் தூங்காமல் சிந்தித்தேன். கடைசியில் எனக்கு ஓர் எண்ணம் உதித்தது: தரிசு நிலத்தை உழுது பயிரிட்டு அதில் விளைவதைக் குடும்பங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வது என்று. இந்த மாதிரிச் சிறு தரிசு நிலம்

எங்களிடம் இருந்தது. கூட்டுப்பண்ணைத் தலைவருடன் கலந்தாலோசித்தேன், வட்டாரத் தலைமையகம் சென்றேன். திட்டத்தை நாங்கள் நிறைவேற்றி விட்டோம், இது திட்டத்துக்கு உபரியானது, சொந்தச் சக்தியைக் கொண்டு, வேலை நாள் கூலி கொடுப்பதற்கென்று, மக்களுக்கு ஆதரவு அளிப்பதற்கென்று விசேஷமாகப் பண்படுத்துகிறோம் என்று விளக்கினேன்.

''கூட்டுப்பண்ணை பற்றிய ஸ்டாலினின் விதிகளை நீ மீறுகிறாய்!'' என்று மேசைக்குப் பின்னிருந்து ஒருவன் கூறினான்.

என்னால் பொறுக்க முடியவில்லை.

''நாசமாய்ப் போகட்டும் இந்த விதிகள்! நாங்கள் பட்டினி கிடந்தால் உங்களுக்கு யார் உணவு ஊட்டுவார்கள்?'' என்றேன்.

''மக்கார் கன்றுகளை மேய்க்காமல் இருப்பது எங்கே, தெரியுமா உனக்கு?''* என்று குத்தலாகக் கேட்டான் அவன்.

''தெரியும். அதனால் நிலைமை எளிதாகிவிடுமானால் என்னை அனுப்புங்கள். ஒன்றை மட்டும் முதலில் சிந்தனை செய்யுங்கள்: போர்முனையில் உள்ள படைவீரர்களுக்காகத் தானியம் பயிரிடப் போவது யார்?''

நாங்கள் கூச்சலிட்டோம். வட்டாரக் கமிட்டியில் முட்டிக் கொண்டோம். கடைசியில் எங்

---

* ''சைபீரியச் சிறை முகாமுக்கு அனுப்பப்படுவாய்'' என்ற அச்சுறுத்தல் இப்படி மறைபொருளாகக் குறிக்கப்படுகிறது. — (மொ-ர்.)

களுக்கு அனுமதி தரப்பட்டது, ''சொந்தப் பொறுப்பின் பேரில்'' என்று சொல்லப்பட்டது. எங்கள் தலைவலி பொறுப்பு பற்றியதல்ல, விதைகளைப் பற்றியது. கூட்டுப் பண்ணையிலோ, இருந்தது எல்லாம் விதைக்கப்பட்டு விட்டது. சல்லடை போட்டுச் சலித்தாலும் ஒரு தானிய மணி கிடைக்காது. நான் மண்டையை உடைத்துக்கொண்டேன். பின்பு சிறுவர் முதல் பெரியவர்கள் வரை குழுவினர் எல்லோரையும் கூட்டினேன். சடங்கு முறைக் கூட்டமாக இன்றி, குடும்ப ஆலோசனைக் கூட்டம் போல ஏற்பாடு செய்தோம்.

நான் சொன்னேன்: ''வாருங்கள், என்ன செய்வது என்று சிந்திப்போம். வயல்களில் விளையப் போவதிலிருந்து நமக்கு எதுவும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை. உங்களுக்கே தெரியும், அந்த விளைச்சல் முழுவதும் போர்முனைக்குப் போய்விடும், கொஞ்ச நஞ்சம் மிஞ்சுவது விதைப்புக்குத் தேவைப்படும். ஆனால் விதை மட்டும் கிடைக்குமானால், பல குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்காகவும் கிழவர்கள், அநாதைகளுக்காகவும் தானியம் பயிர் செய்வதற்கு நம்மிடம் வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் என்னை நம்பினால் இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்போது தேவைப்படுவது என்னவென்றால் நம்மில் ஒவ்வொருவரும் தங்கம் போன்ற தானிய மணிகளை, கோணிப் பைகளுக்கும் குதிர்களுக்கும் அடியில் நாம் இன்னும் காப்பாற்றி வைத்திருப்பவற்றை

விதைக்காகக் கொடுக்க வேண்டியதுதான். என் மீது கோபித்துக் கொள்ளாதீர்கள். நாம் நமது வாய்க் கவளத்தைப் பிய்த்துக் கொடுப்போம், பட்டினி கிடப்போம், அறுவடை வரையில் எப்படியோ பாலை வைத்துக்கொண்டு கடத்தி விடுவோம், ஆனால் மாற்றாக நமது ஒவ்வொரு தானிய மணியும் நூறு மடங்காக நமக்குத் திரும்பக் கிடைக்கும். வயிற்றை இறுக்கிக் கொள்ளுங்கள், அன்பர்களே, பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்ளுங்கள். உங்களுக் காகவும் உங்கள் குழந்தைகளின் பொருட்டும் இந்த அருஞ்செயலைத் துணிவுடன் மேற்கொள் ளுங்கள். நீங்கள் வருந்த நேரிடாது. தாய் போன்ற என் சொற்களை நம்புங்கள். இன்னும் விதைப்பு நடத்த நேரம் இருக்கையிலேயே என்னை நம்புங்கள்...''

கூட்டத்தில் எல்லோரும் என்னை ஒருவகை யில் ஆதரித்தார்கள். ஆனால் செயலுக்கு வந் ததும் மிகச் சங்கடமாக, பயங்கரமாகக் கூடப் போயிற்று. அதிலும் பல குழந்தைகள் உள்ள தாய்மார் தங்கள் வீடுகளிலிருந்து வெளியே ஓடிவிட்ட போது, யுத்தத்தையும் இம்மாதிரி வாழ்க்கையையும் குழந்தைகளையும் கூட்டுப்பண் ணையையும் என்னையும் — எல்லாவற்றையுமே அவர் கள் சபித்த போது எனக்கு மிகவும் பயங்கர மாக இருந்தது. ஆயினும் ஜனங்கள் தங்கள் இதயத்திலிருந்து குருதி சோரும் துண்டைப் பிய்த்துக் கொடுப்பது போலத் தங்களால் எது முடியுமோ எவ்வளவு முடியுமோ கொடுத்தார்

சிலர் அரைப் 'பூட்'* தந்தார்கள், ஒரு கைப்பிடி மட்டுமே. மக்கள் தங் கடைசித் தானியங்களைக் கொடுத்து விட் கள் என்பது எனக்குப் புரியத்தான் செய் ஆயினும் நான் வாங்கிக் கொண்டேன். வற்றையும் திரட்டினேன், கோணிப் களைக் கவிழ்த்து உதறிச் சிறு கையளவு அரித்துப் பொறுக்கினேன். வண்டியைக் க்கொண்டு இந்த மாதிரி வீடு வீடாகப் க் கெஞ்சினேன், இறைஞ்சினேன், கடிந்து ண்டேன், கையிலிருந்து வலியப் பிடுங்கி . இலையுதிர் காலத்தில் மக்கள் எனக்கு கூறுவார்கள், இலையுதிர் காலத்தில் ஒவ் ந கைப்பிடி தானியமும் ஒரு பூட் அள பெருகிவிடும் என்ற ஒரு நம்பிக்கைதான் ஆறுதலாக இருந்தது.

அண்டை வீட்டுக்காரி ஆய்ஷாவிடம் நடந்து கொண்டதை என்னால் ஒருபோ மறக்க முடியாது. அவள் நோயாளி. சிறு லேயே விதவை ஆகிவிட்டாள். அவ ய கணவன் ஜாமன்பாய் போருக்கு பெ காலமாகி விட்டான். ஆக அவள் திக்காரி; தனிக்கட்டையாக ஒரே மகன் தாஷூடன் வாழ்ந்து வந்தாள். நோய் ப்படாத நாட்களில் கூட்டுப்பண்ணையில் செய்தாள், தன் காய்கறித் தோட்டத் பாடுபட்டாள், அவளிடம் ஒரு பசு இருந்

* 'பூட்' என்பது 16.38 கிலோகிராம் கொண்ட ருஷ்ய — (மொ-ர்.)

தது. அதைக் கொண்டே மகனை ஊட்டி வளர்த் தாள். நான் குறிப்பிடும் காலத்தில் பெக்தாஷ் தொழிலாளி ஆகிவிட்டான், நம்பிக்கை யூட்டும் இளைஞனாக வளர்ந்திருந்தான். அன்றைக்கு அவ னுடைய வண்டியில்தான் நாங்கள் வீடு வீடாகச் சென்றோம். அவர்கள் வீட்டெதிரே வந்ததும், ''பெக்தாஷ், உங்கள் வீட்டில் ஏதா வது இருக்கிறதா?'' என்று கேட்டேன்.

''கொஞ்சம் போல இருக்கிறது, கோணிப் பையில், அடுப்புக்குப் பின்னால்'' என்று வண் டியை நிறுத்த முயன்றவாறு பதில் அளித்தான் இளைஞன்.

''அப்படியானால் போய் எடுத்துக் கொண்டு வா'' என்றேன்.

''இல்லை, தல்கோனை அத்தை. நீங்களே போங்கள்'' என்று கெஞ்சினான்.

அந்த நாட்களில் ஆயஷாவுக்கு உடம்பு சரி யில்லை. கம்பளித் துணியால் இடுப்பைப் போர்த்துக் கொண்டு ஆட்டுத்தோல் மெத்தைக் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள்.

''எல்லோரும் கொடுப்பதை உன்னிடமும் பெற்றுப் போக வந்திருக்கிறேன், ஆய்ஷா'' என்று சொன்னேன்.

''எங்களிடம் உள்ளது எல்லாம் அதோ இருக் கிறது'' என்று அடுப்புக்குப் பின்னே இருந்த கோணிப்பையைக் காட்டினாள்.

''இருப்பதைக் கொடு. என்னைக் குஷிப்படுத்து வதற்காக இல்லை, விதைகளுக்காகக் கொடுக் கிறாய். வயல் தயாராயிருக்கிறது, விதைப்பு

நடக்க வேண்டும். தாமதப் படுத்தாதே, ஆய்ஷா'' என்று அவசரப்படுத்தினேன்.

அவள் உதட்டைக் கடித்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் தலையைக் குனிந்து கொண்டாள். நாசமாய்ப் போகிற வறுமை ஜனங்களை எந்த நிலைக்கு இழுத்துச் சென்றுவிடுகிறது!

''ஆய்ஷா, எண்ணிப்பார். பத்துப் பதினைந்து நாட்களுக்கு உனக்கு எளிதாயிருக்கும். ஆனால் வரப் போகும் பனிக்காலத்தையும் சிந்தித்துப் பார். வசந்தகாலத்தை நினைத்துப்பார். உன் மகனுக்காகக் கேட்கிறேன், ஆய்ஷா. அவன் தெரு வில் வண்டியுடன் காத்திருக்கிறான்.''

அவள் விழிகளை நிமிர்த்தி வேண்டுகோளுடன் என்னை நோக்கினாள்.

''என்னிடம் இருந்தால் கொடுப்பதற்குத் தயங்குவேனா? நீ என் அண்டைவீட்டுக்காரி, நம் கோனை உனக்கே தெரியுமே...''

அவளுடைய கெஞ்சலுக்கு முன் என்னால் உறுதியாய் இருக்க முடியாது என்று உணர்ந் தேன். ஆனால் அக்கணமே இரக்கத்தை ஒரு புறம் ஒதுக்கி விட்டேன்.

''இப்போது நான் உன் அண்டைவீட்டுக்காரி அல்ல. குழுத்தலைவி! மக்கள் பெயரால் உன்னி டமிருந்து இந்தத் தானியத்தை எடுத்துக் கொள்கிறேன்!'' என்று வெட்டொன்று துண் டொண்டாகச் சொல்லி விட்டு எழுந்து கோணிப் பையைக் கையில் எடுத்தேன்.

ஆய்ஷா முகத்தைத் திருப்பிக்கொண்டாள். கோணிப்பையில் ஏழு கிலோகிராம் போலத்

தானியம் இருந்தது. எல்லாவற்றையுமே எடுத்துக் கொள்ள விரும்பினேன், ஆனால் நெஞ்சு துணிய வில்லை. பாதித் தானியத்தைக் காலி வாளியில் கொட்டினேன்.

''இதோ பார், ஆய்ஷா, நான் பாதிதான் எடுத்துக்கொள்கிறேன். வருத்தப்படாதே'' என் றேன்.

அவள் சட்டென்று திரும்பினாள். கண்ணீர் அவள் முகத்தில் பெருகி மோவாய் வரை வழிந்ததைக் கண்டேன். எனக்கு நெஞ்சு விண்டு விடும்போல் ஆகிவிட்டது. மளமளவென்று வெளி யேறினேன். ஐயோ, கோணிப்பையை இருந்த இடத்திலேயே நான் ஏன் வைக்கவில்லை? ஆனால் நான் சேகரித்த தானியத்துக்கு எக்கதி நேரப் போகிறதென்று அப்போது நான் கண்டேனா?

தானியம் இரண்டு பெரிய மூட்டைகள் சேர்ந் திருந்தது. நாங்கள் அதைச் சலித்துப் புடைத்துத் தூற்றி, பதர் இல்லாமல் சுத்தப் படுத்தித் தானியங்களாகப் பொறுக்கி எடுத்து வைத் தோம். நானே தானியத்தை வயலுக்குக் கொண்டு போனேன். அன்றைக்கே விதைப்பு நடத்துவதாக என் திட்டம். ஆனால் வயல் கோடியில் உழவு நடத்துவது பாக்கி இருந்தது. எனக்கோ விரைவாக விதைப்பை நடத்திவிட வேண்டுமென்று துடித்தது, அதி காலையில் நானே கையால் விதை தெளிப்பது என்று முடிவு செய்தேன். விதைகள், உழுத நிலம், எல்லாம் தயாராக இருந்தன. நான் எண்ணிய படியே எல்லாம் நடந்திருந்தன.

மாலையில் பண்ணை வேலை முடிந்து வீடு திரும்பியதும் என் நெஞ்சு நிலை கொள்ளாமல் தவித்தது. பரம்புச் சட்டத்தை வண்டியில் ஏற்றி வயலுக்குக் கொண்டு போகும்படி பெக்காஷிடமும் இன்னொரு சிறுவனிடமும் பகலில் சொல்லியிருந்தேன். என்னதான் சொன்னாலும் குழந்தைகள் குழந்தைகள் தாமே. நான் கொடுத்த வேலையை அவர்கள் செய்து முடித்தார்களா இல்லையா என்று எனக்கு நிச்சயப்படவில்லை.

"பையன்களிடம் ஒரு நொடியில் போய்விட்டு வருகிறேன். என்ன செய்கிறார்கள் என்று பார்க்கிறேன்'' என அலிமானிடம் கூறினேன்.

குதிரையில் ஏறிப் புறப்பட்டேன்.

ஊருக்கு வெளியே மெது நடையாக ஓட்டிக் கொண்டு போனேன். மங்குல் அடர்ந்தது. அதற்குள் இருட்டத் தொடங்கி விட்டது. வயலுக்குப் போய்ப் பார்க்கிறேனே, எருதுகள் நிலத்தில் நுகம் மாட்டப்பட்டு நிற்கின்றன. அங்கே எவரும் இல்லை. உழவுக்காரப் பையன் மேல் எனக்கு எரிச்சல் மண்டிக் கொண்டு வந்தது: மாடுகள் இன்னும் அவிழ்த்து விடப்படாமல் நுகத்தடியில் திணறிக் கொண்டிருக்கின்றன. 'இரு, இரு, பயலே. என்னிடம் அகப்பட்டுக் கொண்டதும் என்ன பாடு படுத்துகிறேன் பார் உன்னை' என்று எண்ணிக் கொண்டேன். தேடுவதற்காகக் கிளம்பினேன். பரம்புச் சட்டம் ஏற்றிய வண்டி ஒரு பக்கமாகக் குடை சாய்ந்து கிடக்கிறது. இங்கேயும் ஒருவருமில்லை.

''டேய், பையன்களா! எங்கே இருக்கிறீர்கள்? பதில் கொடுங்கள்!'' என்று கூவி அழைத்தேன்.

யாரும் பதில் குரல் கொடுக்கவில்லை. அக்கம் பக்கம் ஒரு புதரைக் கூடக் காணோம். இவன்களுக்கு என்ன வந்துவிட்டது? எங்கே போய்த் தொலைந்து விட்டார்கள்? பாய்ச்சலாகக் கூடாரத்துக்குப் போய்க் குதிரை மீதிருந்து குதித்து இறங்கினேன். நெருப்புக் குச்சியைக் கிழித்தேன். பையன்கள் கைகால்கள் கட்டப்பட்டு, இரத்த விளாருக அடிக்கப்பட்டுக் கிழிந்த உடைகளுடன் கூடாரத்தில் கிடந்தார்கள். அவர்கள் வாய்களில் துணி அடைக்கப்பட்டிருந்தது. நான் பெக்தாஷின் வாயிலிருந்து துணிப் பந்தை உருவினேன்.

''விதைகள்? எங்கே விதைகள்?'' என்று ஆவேசக் குரலில் கேட்டேன்.

''பிடுங்கிக் கொண்டார்கள்! அடித்துப் பறித்து விட்டார்கள்!'' என்று கம்மிய குரலில் கூறித் திருடர்கள் சென்ற திசையைத் தலையசைப்பால் சுட்டினுன் பெக்தாஷ்.

அப்புறம் என்ன நடந்ததோ எனக்கு நினைவு இல்லை. அன்று இரவு நான் குதிரையை விரட்டியது போல, வாழ்நாளில் என்றுமே விரட்டியதில்லை. இரவாவது ஒன்ருவது! கல்லறைக்குள் இருக்கும் காரிருள் கூட எனக்கு ஒரு பொருட்டாயிராது. என் வீட்டுக்கு நெருப்பு வைத்துக் கொள்ளையடித்திருந்தார்களாஞல் நான் ஒன்றுமே சொல்லியிருக்க மாட்டேன். இலையுதிர்

காலத்தில் களஞ்சியத்திலிருந்து பத்து மூட்டை கோதுமை களவு போயிருந்தால் கூடப் பொறுத்துக்கொண்டிருப்பேன்: எலிகள் கூடத்தான் பொறுக்கிச் செல்கின்றன. ஆனால் இந்த விதைகளுக்காக, எங்கள் வருங்காலத்தின் இந்தக் கோதுமைக்காக, நான் என் கைகளாலேயே திருடன் கழுத்தை நெரித்துக்கொல்வேன்.

நான் திருடர்களைப் பின் தொடர்ந்து விரட்டிச் சென்று, விரைவிலேயே அவர்களைக் கண்டுவிட்டேன். குதிரைக் குளம்புகளுக்கு அடியிலிருந்து நெருப்புப் பொறிகள் பறந்தன. தானிய மூட்டைகளைத் திருடர்கள் சேணத்தின் மேல் தங்களுக்கு முன்னே வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அவர்கள் தென்பட்டதும் நான் கத்தினேன். ''மூட்டைகளை விட்டுவிடுங்கள், இவை விதைகள்! விட்டுவிடுங்கள், இவை விதைகள்! விதைகள் இவை!'' என்று கெஞ்சினேன்.

அவர்கள் திரும்பவே இல்லை. எங்களுக்கு இடையில் தூரம் விரைவாகக் குறுகிக் கொண்டு போயிற்று. திருடர்களில் ஒருவன், ஓரத்தில் இருந்தவன், எங்கள் குதிரை மேல் ஏறிச் செல்வது எனக்குத் தெரிந்தது. குதிரையை நான் உடனே அடையாளம் கண்டுகொண்டேன். சொந்தக் குதிரையை இனங்கண்டு கொள்ளாமல் இருக்க முடியுமா? அதன் ஓட்டம் அதன் பின் முழங்கால்களுக்குக் கீழே இருந்த வெண்மயிர் ஆகியவற்றைக் கொண்டு நான் அதைத் தெரிந்து கொண்டேன்.

''நில்! உன்னை எனக்குத் தெரியும்! நீ ஜென் ஷென்குல்! நீ தான் ஜென்ஷென்குல்! இப் போது நீ என்னிடமிருந்து தப்பமுடியாது! நில்!'' என்று கத்தினேன்.

அவன் உண்மையிலேயே ஜென்ஷென்குல் தான். மற்றவர்களிடமிருந்து விலகி அவன் திரும்பி என்னை நோக்கி வந்தான். இருளில் நெருப்பு பளிச்சிட்டது, ஏதோ முழுங்கி அதிர்ந் தது. குதிரை மேலிருந்து விழும் போதுதான் அது துப்பாக்கிக் குண்டு என்பதைப் புரிந்து கொண்டேன். குதிரை இடறி விழுந்ததாக்கும் என்று முதலில் எண்ணினேன்.

உணர்வுக்கு வந்ததும் முதுகை முறிக்கும் கடுமையான ஊமைக் காயத்தின் வலி எனக்கு உண்டாயிற்று. தலையிலிருந்து இரத்தம் கசிந்து பிடரியில் குளிர்ந்த தாரையாக வழிந்தது. பக்கத்தில் உயிரை விட்டுக்கொண்டிருந்த குதிரை செருமிற்று. எழுந்திருக்க முயன்றவாறு அது இன்னும் கால்களை உதைத்துக் கொண்டிருந் தது. மரணத்துக்கு முந்திய இறுதி மூச்சு அதன் நெஞ்சுக்குள்ளிருந்து பீறிட்டு வெளிவந்தது, அதன் தலை மட்மட்டென்று தரையில் மோதிற்று, பின்பு அது ஓய்ந்து போயிற்று. சுற்றுமுற்றும் எல்லாமே ஓய்ந்துவிட்டன—வாழ்வு அனைத்தும் ஓய்ந்து விட்டது. நான் எழுந்திருக்கக்கூட முய லாமல் அசைவின்றிக் கிடந்தேன். எனக்கு இப் போது எல்லாமே ஒன்றுதான். வாழ்க்கை கூட அர்த்தமற்றது ஆகிவிட்டது. தற்கொலை செய்து கொள்வது எப்படி என்று யோசித்தேன். அரு

தரையில் செங்குத்துச் சரிவு இருந்தால் ஊர்ந்து போய்த் தலை கீழாக விழுந்திருப்பேன். எப்படி, எந்தக் கண்கொண்டு மக்களைப் பார்ப்பேன் என்று என்னால் நினைக்கவே முடியவில்லை. அந்தச் சமயத்தில் வானில் ‘வைக்கோல்காரன் பாதையைக் கண்டேன். கலங்கிய, மூடுபனி படர்ந்த ஆறு போன்ற ஆகாச கங்கை, ஆய்ஷாவின் முகத்தில் வழிந்த கண்ணீரை எனக்கு நினைவுபடுத்திற்று. நான் முழந்தாளிட்டு எழுந்தேன். பின்பு நிமிர்ந்து நின்றேன், தள்ளாடினேன். மறுபடி விழுந்து விட்டேன். துக்கமும் ஆத்திரமும் பொங்க வீரிட்டுச் சாபவார்த்தைகளைக் கத்தலானேன்:

“போரின் இரத்தம் உன்னைச் சபிக்குமாக, ஜென்ஷென்குல்! கொல்லப்பட்டவர்கள் உன்னைச் சபிப்பார்களாக, ஜென்ஷென்குல்! குழந்தைகள் உன்னைச் சபிப்பார்களாக, ஜென்ஷென்குல்!”

என் வலிமை எல்லாம் அற்றுப் போகும் வரை அழுது கத்திக் கொண்டிருந்தேன்.

நான் நெடு நேரம் கிடந்தேன். அப்புறம் யாருடைய காலடிச் சத்தமோ கேட்டது, யாரோ என்னை அழைத்தான்:

“தல்கோனே அத்தை! எங்கே இருக்கிறீர் நீர்? தல்கோனே அத்தை!”

குரலிலிருந்து பெக்தாஷை அடையாளம் தெரிந்துகொண்டு பதில் குரல் கொடுத்தேன். பெக்தாஷ் மூச்சு இரைக்க ஓடி வந்து, முழந்தாள் மடித்து அமர்ந்து என் தலையைத் தாங்கி நிமிர்த்தினான்.

''தல்கோனே அத்தை, உங்களுக்கு என்ன? காயம் பட்டிருக்கிறதா?''

''இல்லே, கீழே விழுந்ததில் அடி பட்டிருக் கிறது. இதோ குதிரை குண்டுபட்டு இறந்து கிடக்கிறது'' என்றேன்.

''இது அவ்வளவு மோசமில்லே. நாங்கள் இதோ உங்களுக்கு ஒத்தாசை செய்கிறோம்!'' என்று சந்தோஷத்துடன் கூவினான் பெக்தாஷ். ''குதிரை இறைச்சி வீண்போகாது. வீட்டுக்குக் கொஞ்சமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவோம்'' என்று கூடவே உரைத்தான்.

பையன்கள் என்னே வண்டியில் ஏற்றி வீடு சேர்த்தார்கள். மூன்று நாட்கள் போலப் படுக் கையில் கிடந்தேன், முதுகு வலி போகவே இல்லே. இப்போது கூடப் பருவநிலே மோசமா யிருக்கும் போது சில சமயங்களில் வலிக்கிறது. அந்த நாட்களில் பலர் என்னேப் பார்த்து நலம் விசாரிக்க வந்தார்கள். இதற்காக மக்களுக்கு நன்றி. ஒருவரும் என்னேக் கடிந்து கொள்ள வில்லே, நடந்த்தை ஒருவரும் நினேவுபடுத்த வில்லே, ஏதோ ஒன்றுமே நிகழாதது போல் இருந்து விட்டார்கள். இதற்காக அவர்களுக்கு இன்னும் அதிக நன்றி செலுத்துகிறேன். ஏற் கனவே எனக்குத் துயரம் அதிகம் என்பதை மக்கள் கண்டு கொண்டார்கள் போலும். எங் களது உழைப்பெல்லாம் வீணுகி விட்டது, நிலம் விதைப்பின்றியே கிடந்து விட்டது, அழும் மதலேகளிடமிருந்து நான் பறித்துக் கொண்ட தானியம் இந்தக் கடை கெட்ட கொள்ளேக்

நாயர்களுக்கு வேட்டையாகி விட்டது என்பதை நினைக்கும் போதெல்லாம் என் நெஞ்சு ஒரேயடியாகப் பற்றி எரிந்தது. அதன் அனல் என் கண்களிலும் வீசியது.

10

''ஆமாம், தல்கோனே, நீ மட்டுமே அல்ல, நிலமாகிய நானும் இந்த வலியை உணர்ந்தேன். அந்த வெற்று வயல், திறந்த புண் போலக் கோடைகாலம் முழுவதும் என்னை வேதனையால் துடிக்கச் செய்து கொண்டிருந்தது. நீண்ட காலம் வரை வலி ஆறவில்லை. வயல் விதைப்பு இல்லாமல் தரிசாகக் கிடக்கும் போதுதான் எனக்கு யாவற்றிலும் கொடிய வலி ஏற்படுகிறது. தல்கோனே. யுத்தத்தின் காரணமாக எத்தனை வயல்கள் பலனின்றிப் பாழாய்க் கிடந்தன. எனது மிகக் கொடிய ஜன்மப் பகைவன் யுத்தம் தொடங்குபவன் தான்.''

''நீ சொல்வது உண்மை, அன்னை நிலமே. என் மகன் மாஸெல்பேக்கும் இதைத்தானே எழுதினான்? மாஸெல்பேக்கின் கடிதம் உனக்கு நினைவு இருக்கிறதா, நிலமே?''

''நினைவு இருக்கிறது, தல்கோனே.''

''ஆம், நீயும் நானும் நினைவு வைத்திருக்கிறோம். இன்று நினைவு நாள், அன்னை நிலமே. இன்று நாம் மீண்டும் எல்லாவற்றையும் நினைவு கூர்வோம்.''

''நினைவு கூர்வோம், தல்கோனே. மாஸெல் பேக் உன் மகன் மட்டும் அல்லவே. அவன் என் மகன், நிலத்தின் மகனும் கூடத் தானே. அவனுடைய கடிதத்தை எனக்கு மறுபடி படித்துக்காட்டு, தல்கோனே.''

11

ஆட்கள் என்னைக் கண்டு நலம் விசாரிக்க வந்த போது என் மீது உள்ள பரிவால் அவர்கள் நடந்த விஷயத்தைப் பற்றி எப்படியேனும் பேசாதிருக்க முயன்றது போலவும் அந்தக் காரணத்திஞல் தான் பெரும்பாலும் பதினங்கள் பற்றியும் வேலையைப் பற்றியும் பருவநிலை பற்றியும் உரையாடியது போலவும் நான் எண்ணினேன். ஆஞல் இதற்கு இன்னும் ஒரு காரணமும் இருந்தது போலும். அப்புறம்தான் நான் அதை ஊகித்துக் கொண்டேன். எனக்கு என்ன காத்திருக்கிறது என்பதை அவர்கள்தாம் அறிந்திருந்தார்களே.

ஒரு நாள் ஆய்ஷா ஒரு கிண்ணம் புளித்த பாலாடை எடுத்துக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்தாள். அவள் நிலை வாயிலைக் கடந்து உள்ளே புகுந்ததும் எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. என்ன சொல்வது என்று தெரியாமல், கட்டிலில் உட்கார்ந்த படி மௌனமாயிருந்தேன். அவளே பேச்சைத் தொடங்கிஞள்:

''நடந்ததைப் பற்றி எண்ணிக் கொண்

ாதே, தல்கோனே. என் பலவீனத்துக்காக என்னை மன்னித்து விடு. நான் எதையும் மனதில் போட்டுக் கொள்ளவில்லை. உனக்காகத் தேவைப் பட்டால் உயிரையே கொடுக்கக்கூடத் தயங்க மாட்டேன். இனி நமது பெக்தாஷ் நம் இருவர் களுக்கும் துணையாள். தல்கோனே, என்னைக் காட்டிலும் உன் மீது அவனுக்கு அதிக வாஞ்சை. எனக்கு இதில் மகிழ்ச்சிதான். அவன் அறிவுள் ளவனாக வளர்கிறான் என்பதற்காகச் சொல் கிறேன்...''

''இந்தச் சொற்களுக்காக உனக்கு நன்றி, ஆய்ஷா'' என்று மட்டுமே நான் கூறினேன்.

மறு நாள் காலை எனக்கு உடம்பு கொஞ் சம் சரியாகியிருந்தது. வீட்டு வேலை எதையே னும் செய்வோம் என்று நான் வெளிமுகப் புக்கு வந்தேன். ஆனால் விரைவில் களைத்துப் போய் சன்னல் அருகே வெயிலில் உட்கார்ந் தேன். அலிமானும் வீட்டில் இருந்தாள். தடுப்புக் கொடியில் துணிகளை உலர்த்திக் கொண்டிருந்தாள். அவளை வேலைக்குப் போகச் சொன்னேன். ஒரு நாள் வீட்டிலேயே இருக்கும் படியும் என்னைத் தனியாக விட வேண்டாம் என்றும் கூட்டுப்பண்ணைத் தலைவனே தன்னிடம் கூறியதாக அவள் உரைத்தாள்.

எங்கள் வீட்டு முகப்பில் இருந்த பெரிய, புதிய ஆப்பிள் மரம்—ஸுவான்குல் தன் கையால் நட்டு வளர்த்தது—அந்த இளவேனிலில் புதிதாக வலிமையைத் திரட்டிக் கொண்டு இளமை அடைந்து விட்டது போல அடர்த்தி

யாகப் பூத்துக் குலுங்கியது. தோட்டம் பூக்கும் போது காற்று தூயதாகி, நெடுந்தொலை வரை பார்வை செல்லுகிறது. நான் சும்மா உட்கார்ந்து சுற்றிலும் எல்லாவற்றையும் நோக்கிக் கொண் டிருந்தேன். அப்போது எங்கள் தபால்காரக் கிழவன் தெமிர்ச்சால் எனக்கு முகமன் கூறினான், ''வணக்கம் தல்கோனே, எப்படியிருக்கிறாய்?'' என்று. ஆனால் வழக்கத்துக்கு மாறாக அவன் பெருத்த அவசரத்தில் இருந்தான், ஏதோ இருப்பு கொள்ளாமல் தவித்தான், பரிதாபமாக இருமினான், இருமலைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டான். முந்திய வாரம் குளிர் தாக்கி விட்டதாகவும் அதனால் நிரம்பத் தொல்லைப் பட்டுவிட்டதாகவும் சொன்னான். அப்புறம் பேச்சோடு பேச்சாகச் சொல்வது போல, ''உனக்கு ஏதோ கடிதம் இருக்கிறது என்று தோன்றுகிறது'' எனக் கூறி, பையிலிருந்து அதை எடுத்துக் கொடுத்தான்.

அவனது இம்மாதிரி அசட்டை எனக்கு மனத்தாங்கலாகக் கூட இருந்தது.

''அப்படியா? நீ ஏன் உடனே சொல்ல வில்லை? யாரிடமிருந்து வந்திருக்கிறது?'' என்று கேட்டேன்.

''மாஸெல்பேக்கிடமிருந்து'' என்று அவன் முணுமுணுத்தான்.

இந்தக் கடிதம் எப்போதும் போல முக்கோண மடிப்பாக இல்லாமல் அழுத்தமான வெள்ளை உறையில் தட்டெழுத்துக்களில் முகவரி இடப் பட்டிருந்ததை மகிழ்ச்சிப் பெருக்கில் நான்

முதலில் கவனிக்கக்கூட இல்லை. அந்தச் சமயத்தில் முட்டுக்கோலை ஊன்றிக் கொண்டு வந்து சேர்ந்தான் முன்னணி வீரன் பெக்துர்ஸூன், எங்கள் அண்டை வீட்டுக்காரன். அவன் மிகுந்த சிரமத்துடன் நொண்டி வந்ததைக் கண்டு அவனுடைய காயமடைந்த கால் முன்னிலும் மோசமாகி விட்டது என்று எண்ணினேன். சில வேளைகளில் அவன் எங்கள் வீட்டுக்கு வந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பது உண்டு. பெக்துர்ஸூன் வணக்கம் கூறிவிட்டுக் கடித உறையை எடுத்துப் பார்த்தான். மாஸெல்பேக்கிடமிருந்து வந்திருப்பதாகக் கூறினான்.

''உன் கைகள் என்ன நடுங்குகின்றன? நீ முட்டுக்கோலை ஊன்றிக் கொண்டு நிற்காதே. உட்கார்ந்து படித்துக்காட்டு'' என்றேன்.

அவன் அரும் பாடு பட்டுக் கட்டிலில் உட்கார்ந்தான். அவன் கால் வளையவில்லை. நடுங்கும் விரல்களால் உறையைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான். அட என் மகனே, முதல் வார்த்தைகளிலிருந்தே நான் எல்லாவற்றையும் புரிந்து கொண்டேன்.

மாஸெல்பேக் எழுதியிருந்தான்: ''புரிந்து கொள்கிறாயா, அம்மா? நான் செய்தது சரிதான் என்பதைக் காலம் கடந்த பிறகு நீ தெரிந்து கொள்வாய். உன் மகன் நேர்மையுடன் நடந்து கொண்டான் என்று நீ கட்டாயம் சொல்லுவாய். எனினும், நீ புரிந்து கொண்டாலும் கூட, உன்னுடைய இதயத்தின் ஆழத்தில் எங்காவது என்னிடம் சொல்லப்

படாத சொற்கள் எஞ்சியிருக்கும்: 'இந்த ஒளி மிக்க உலகை இவ்வளவு எளிதாக விட்டுச் சென்று விட உன்னல் எப்படி முடிந்தது, மகனே? எதற்காக நான் உன்னைப் பெற்றேன்? எதன் பொருட்டு வளர்த்தேன்?' ஆமாம் அம்மா, நீ என் தாய், என்னைக் கேட்க உனக்கு உரிமை உண்டு. ஆனால் உன்னுடைய கேள்வி களுக்கு வரலாறு பின்னர் விடை கூறும். இப் போது நான் உனக்குச் சொல்லக் கூடியதெல் லாம் ஒன்று மட்டுமே: போர் வேண்டும் என்று நாம் கேட்கவில்லை, போரை நாம் தொடங்க வில்லை. இது நம் அனைவரதும், எல்லா மக்களு டையவும் மிகப் பெரிய விபத்து. இந்தப் பூதத் தைத் தகர்த்து நொறுக்கும் பொருட்டு, இதை அழித்து ஒழிக்கும் பொருட்டுக் குருதி சிந்து வது, உயிரைக் கொடுப்பது நம் கடமை. இவ் வாறு செய்யா விட்டால் மனிதன் என்ற பெய ருக்குத் தகுதியாக மாட்டோம். போரில் வீரம் காட்ட நான் ஒருபோதும் ஆசைப்படவில்லை. மிகவும் அடக்கமான தொழிலுக்கு நான் என்னை ஆயத்தப்படுத்திக் கொண்டேன், பள்ளி ஆசி ரியன் ஆக விரும்பினேன். ஆசிரியத் தொழில் செய்ய மிகவும் விழைந்தேன். ஆனல் சாக் கட்டிக்கும் பிரம்புக்கும் பதிலாகக் கையில் துப் பாக்கி பிடித்துப் படைவீரன் ஆக நேர்ந்தது. இது என் குற்றம் அல்ல. நான் வாழ்ந்த காலம் அத்தகையது. குழந்தைகளுக்கு ஒரு பாடம் கூடக் கற்றுத் தர எனக்கு வாய்க்கவில்லை.

''ஒரு மணி நேரத்தில் தாய்நாட்டுக்கு

என் கடமையை ஆற்ற நான் செல்வேன். நான் உயிருடன் திரும்புவது அரிதுதான். தாக்குதலில் எனது தோழர்கள் பலரின் உயிர்களைக் காப்பாற்று வதற்காக நான் அங்கே போகிறேன். மக்களின் பொருட்டு, வெற்றியின் பொருட்டு, மனிதனிடம் உள்ள சிறப்பு மிக்க தன்மைகள் அனைத்தின் பொருட்டும் நான் செல்கிறேன்.

''இது என் கடைசிக் கடிதம். இவை என் இறுதிச் சொற்கள். அம்மா! அம்மா என்ற உன் பெயரை ஆயிரம் தடவை நான் உச்சரித்தாலும் உனக்கு ஆற்ற வேண்டிய கடனைத் தீர்த்தவன் ஆகமாட்டேன். உனக்கு நான் விளைவிக்கும் துயருக்காக என்னை மன்னித்துவிடு, அம்மா. ஆனால் இது தீர்க்காலோசனை அற்ற தியாகம் அல்ல. வாழ்வே எனக்கு இவ்வாறு செய்யக் கற்பித்திருக்கிறது. எந்தக் குழந்தைகளுக்கு நான் கற்பித்திருக்க வேண்டுமோ அவர்களுக்கு இதுவே எனது முதல் பாடம். கடைசிப் பாடமும் இதுதான். சொந்த விருப்பத்தின் பேரிலும் நம்பிக்கையின் பேரிலும் நான் செல்கிறேன். யாவற்றிலும் உயர்ந்த கடமையை என் மக்களுக்கு ஆற்றுவது குறித்துப் பெருமை அடைகிறேன்.

''அழாதே, அம்மா. ஒருவருமே அழ வேண்டாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒருவரும் அழக் கூடாது.

''மன்னித்துக்கொள், அம்மா, விடை கொடு.

''எனது ஆலாத்தூ மலைகளே, விடை கொடுங்கள்! நான் உங்களை எப்படி நேசித்தேன்!

உன் மகன் — ஆசிரியன், லெப்டினண்டு மாஸெல் பேக் ஸுவான்குலோவ்.

போர்முனை, 1943, மார்ச் 9, நள்ளிரவு 12 மணி.''

கனத்த தலையைக் கனவில் போல நிமிர்த்தினேன். முகப்பில் மௌனமான கூட்டமாக மக்கள் நிறைந்திருந்தார்கள். ஒருவரும் அழவில்லை. ஒருவரும் அழக் கூடாது என்று மாஸெல்பேக் கேட்டுக் கொண்டிருந்தானே. மாதர்கள் என்னைக் கைகளால் தாங்கித் தூக்கினார்கள். நான் எழுந்து நின்றதும் காற்று ஆப்பிள் மரத்தின் மீது வீசியது, வெள்ளிய மலர் இதழ்கள் மேகம் போலத் திரளாக உதிர்ந்தன. அவை ஓசையின்றி எங்கள் தலைகள் மீது விழுந்தன. எங்களுடைய வெண்ணிற ஆப்பிள் மரத்துக்கு அப்பால், தொலைவிலிருந்த மலைகளின் வெண் முடிகளுக்கு அப்பால் நீலமாக ஒளிர்ந்தது எல்லையற்ற தூய்மையுடைய முடிவில்லாத வானம். எனக்குள், என் இதயத்தில் கூக்குரல் எழுந்தது. உலகம் முழுவதையும் நோக்கி ஓலமிட வேண்டும் போல இருந்தது எனக்கு. ஆனால் நான் பேசாதிருந்தேன். நான் அழாதிருக்க வேண்டும் என்று என் மகன் வேண்டிக் கொண்டிருந்தான். அவனுடைய கடைசி விருப்பத்தை நான் நிறைவேற்றிவிட்டேன். அலிமான் என்ன செய்தாளோ அறியேன். முன்னே நீட்டிய கரங்களுடன் அவள் என்னை நோக்கி மெதுவாக வந்ததைக் கண்

டேன். மிக அருகே நெருங்கி என் விழிகளில் தன் விழிகள் பொருந்த நோக்கியவள், திரும்பி முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு அப்பால் போய்விட்டாள்.

இந்த மாதிரி என் இரண்டாவது மகனையும் நான் இழந்து விட்டேன். அவனுடைய தொப்பி என்னிடம் மிஞ்சியிருக்கிறது.

12

''என்னிடமோ, அவன் பெயர் எஞ்சியிருக்கிறது, தல்கோனே. நான் அவனுடைய தாய் நிலம். மக்களிடம் அவன் சொல் எஞ்சியிருக்கிறது, தல்கோனே. அவர்கள் அவன் நாட்டவர்.''

''ஆம், அன்னை நிலமே. இது உண்மையே. நமது கூட்டுப்பண்ணை அவன் பெயரையே சூடிக்கொண்டிருக்கிறது. அவனுடைய சக படைவீரர்கள் தங்கள் கடிதத்துடன் அவன் கடிதத்தைக் கிராம சோவியத்துக்கு அனுப்பினார்கள். தங்கள் தோழனை ஒருக்காலும் தங்களால் மறக்க முடியாது என்றும், அவனது அருஞ் செயல் குறித்துப் பெருமை கொள்வதாகவும், தாய் நாடு அவனது நினைவுக்கு என்றும் அஞ்சலி செலுத்தும் என்றும் அவர்கள் எழுதியிருந்தார்கள். பெருத்த தாக்குதலுக்கு முன்னர் மாஸெல் பேக் பகைவர்களின் போர்த்தளவாடச் சாலையை வெடிவைத்துத் தகர்த்து விட்டதாகவும் இந்த

வெடியினுல் சுற்றிலும் உள்ள உயிர்ப் பிராணி கள் எல்லாம் துடைத்து ஒழிக்கப்பட்டு விட்ட தாகவும் அவர்கள் கடிதத்தில் விவரித்திருந்தார் கள். வீரர்களின் முன்பும் என் மகன் மாஸெல் பேக் முன்பும் தலே தாழ்த்தி வணங்குகிறேன், அவனுடைய புகழில் பெருமை கொள்கிறேன். ஆனுல் எதுவும், எந்த மாதிரியான புகழும் அவனே எனக்கு உயிரோடு திருப்பி அளிக்காது. எந்தத் தாயை வேண்டுமாலுைம் கேட்டுப் பார்க்கட்டுமே, ஒருத்தியும் இவ்விதப் புகழை வேண்டுவதில்லே. தாய்மார்கள் குழந்தைகளேப் பெற்று வளர்ப்பது வாழ்வதற்காக, சாதாரண மான, உலக இன்பத்தின் பொருட்டு...''

''நீ சொல்வது மெய்தான், தல்கோனே. வெற்றி கிடைத்த இளவேனிலே நான் எப்போ தும் நினேவு கூர்கிறேன். மக்களாகிய நீங்கள் போர் முனேயிலிருந்து திரும்பிய படைவீரர்களே எதிர் கொண்டு வரவேற்ற அந்த நாள் என்றும் என் நினேவில் இருக்கும். ஆயினும் எனக்கு அதிகமாக ஏற்பட்டது எது—மகிழ்ச்சியா அல்லது துயரமா—என்று இன்றளவும் என்னுல் கூற முடியவில்லே.''

13

அன்றைய தினம் எங்கள் தோட்டத்தைக் கூட்டுப்பண்ணேக் கலப்பையால் உழுவதற்கான எங்கள் முறை வந்திருந்தது. நாங்கள் உழவை

முடித்து விட்ட சமயத்தில் தெருவில் ஓட்டமும் ஆரவாரமும் கேட்டன. விஷயம் என்ன என்று அறிந்து வருவதற்காக ஓடிய அலிமான் மறு கணமே திரும்பி வந்தாள்.

''அம்மா, துரிதப்படுத்து. மக்கள் படைவீரர் களை வரவேற்கப் போகிறார்கள்'' என்று என்னை அவசரப்படுத்தினாள்.

கலப்பையும் நுகத்தில் பூட்டிய எருதுகளும் நிலத்தில் அப்படியே விடப்பட்டு விட்டன. குதி ரைச் சவாரி செய்பவர்களும் கால்நடையாகச் செல்பவர்களும் கூன் விழுந்த கிழவர்களும் கிழவி களும், குழந்தைகளும், முட்டுக் கோல் ஊன்றி நடக்கும் காயமடைந்தவர்களும் கிராமத்தினர் எல்லோருமே எங்கோ ஓடினார்கள். படை வீரர் கள் தம் தம் வீடுகளுக்குத் திரும்புவதாகவும், ரயில் நிலையத்தில் இரண்டு ரயில் வண்டிகள் வந்திருப்பதாகவும் எல்லா கிராமங்களையும் சேர்ந்த இளைஞர்கள் அங்கே இருப்பதாகவும் அவர்கள் ஏற்கனவே புறப்பட்டு விட்டதாகவும் எந்த நேரத்திலும் வந்து சேரக் கூடும் என்றும் யாரோ வழியோடு போனவன் (அக்கரைக்கார னயிருக்கும்) யாரிடமோ சொன்னான் என்று ஓடுகிற ஓட்டத்தில் ஜனங்கள் தகவல் தெரிவித் தார்கள். இது உண்மைதானா என்று ஒருவருமே கேட்கவில்லை. இது மெய்யாக வேண்டும் என மக்கள் விரும்பினார்கள், நெடுங்காலமாக எதிர் பார்த்த இந்த நாளைப்பற்றி மக்கள் கனவு கண்டு கொண்டிருந்தார்கள், ஆகவேதான் யாருக்கும் எவ்விதச் சந்தேகமும் ஏற்படவில்லை.

நாங்கள் கிராமத்தின் கோடிக்கு, யுத்தத்துக்கு முன் புதிய வீதி அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த இடத்துக்கு ஓடிச் சென்றோம். குதிரையேறிவந்தவர்கள் குதிரைகளிலிருந்து இறங்கவில்லை. கால் நடையாகச் சென்றவர்கள் வாய்க்கால் அருகே இருந்த திடலில் ஏறிக் கொண்டார்கள், சிறுவர்கள் அரைகுறையாகக் கட்டப்பட்ட வீடுகளின் சுவர்கள் மேல் தொற்றிக் கொண்டார்கள், சிலர் மரங்களில் ஏறினார்கள். எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்தவாறு சாலையையே நோக்கினார்கள். சிலர் ஒருவர் பேச்சில் ஒருவர் குறுக்கிட்டவாறு தாங்கள் கண்ட நற் கனவுகளை வர்ணித்தார்கள். வேறு சிலர் கை நிறையச் சிறு கற்களை அள்ளி அவற்றை வைத்துக்கொண்டு குறி பார்க்க முயன்றார்கள். சொப்பனங்களிலும் ஊகங்களிலும் மற்ற முன்னுணர்வுகளிலும் அடையாளங்களிலும் எல்லாவற்றிலும் மக்கள் நல்லவற்றை, தங்கள் விருப்பத்துக்கு உகந்த நற்குறிகளைக் கண்டார்கள். நாங்கள் எப்படி எதிர்பார்த்தோமோ, நேசித்தோமோ அப்படியே உலகு அனைத்திலும் உள்ள மக்கள் தங்கள் புதல்வர்களையும் சோதரர்களையும் தந்தையரையும் கணவர்களையும் ஒரே உணர்வால் ஆட்கொள்ளப்பட்டு எப்போதும் எதிர்பார்க்கவும் எப்போதும் நேசிக்கவும் செய்வார்களானால் பூமியில் ஒருகால் போரே நிகழாது என்று இப்போது நினைத்துப் பார்க்கையில் எண்ணுகிறேன்.

கூட்டத்தில் உரையாடல்கள் ஓய்ந்து போன

தும் ஒவ்வொருவரும் மௌனமாகத் தலையைத் தொங்கப் போட்டபடி தன்னவர்களைப் பற்றிச் சிந்தனை செய்யலாயினர். விதியின் தீர்ப்பை மக்கள் எதிர்பார்த்தனர். யார் திரும்புவார் கள், யார் திரும்ப மாட்டார்கள்? யாருடைய எதிர்பார்ப்பு நிறைவேறும், யாருடையது நிறை வேறாது? இந்தக் கேள்வியை ஒவ்வொருவரும் தம்மையே கேட்டுக் கொண்டனர். வாழ்வும் அடுத்து வரும் விதியும் இதையே பொறுத் திருந்தன.

இந்த மாதிரி ஒரு கணத்தில் ஒரு சிறுவன் திடீரென ''வருகிறார்கள்!'' என்று கூவினான். எல்லோரும் கல்லாய்ச் சமைந்து, கொமூஸ் வாத்தியத்தின் தந்திகள் போன்று விண்ணென முறுக்கேறி விட்டனர். பின்பு ''வருகிறார்கள்!'' எனக் கம்மிய குரலில் எல்லோரும் ஒரே சமயத் தில் திரும்பக் கூறினார்கள். மறுபடி எல்லோரும் எதிர் பார்த்தவாறு மௌனமாயினர். மீண்டும் நிசப்தம் நிலவியது. ஒரே நிசப்தம். பிறகு ஏதோ மூர்ச்சை தெளிந்தவர்கள் போல, ''எங்கே? எங்கே வருகிறார்கள்? எங்கே?'' என்று அனைவரும் பின்னொரு முறை கூச்சலிட்டார்கள். பிற்பாடு மறு தடவை மௌனமாகி விட்டார் கள். நெடுஞ் சாலையில் முன்னால் ஒரு வண்டி தென்பட்டது. அது சாலை வழியே விரைவாக வந்து, எங்கள் கிராமத்திற்குப் பாதை பிரியும் சந்தியில் நின்றது. ஒரு படைவீரன். வண்டி யிலிருந்து குதித்து இறங்கினான். தனது மேல் கோட்டையும் சாமான் மூட்டையையும் எடுத்

துக்கொண்டு அவன் வண்டிக்காரியிடம் விடை பெற்றுக்கொண்டு எங்கள் பக்கமாக நடந்தான். கூட்டத்தில் எவரும் ஒரு வார்த்தை பேசவில்லை. மேல்கோட்டும் தோள் மீது சாமான் மூட்டை யுமாக ஒரே ஒரு படைவீரன் மட்டுமே நடந்து வந்த பாதையை எல்லோரும் மௌனமாக வியப்புடன் நோக்கினார்கள். அவன் அருகே நெருங் கினான், ஆனால் எங்களில் ஒருவராவது இடத்தை விட்டு அசையவில்லை. ஜனங்களின் முகங்களில் விளங்காமை அப்பட்டமாகத் தென்பட்டது. நாங்கள் எல்லோரும் ஏதோ அற்புதத்தை எதிர் பார்த்தோம். நாங்கள் ஒருவனை அல்ல, பலரை எதிர்நோக்கினோம் ஆதலால் எங்கள் கண்கள் மீதே எங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

படைவீரன் மேலும் மேலும் அருகே நெருங்கி னான், பிறகு தயங்கி நின்று விட்டான். ஊர்க் கோடியில் மக்களின் மௌனக் கூட்டத்தைக் கண்டு கூச்சங்கூட அடைந்தான். யார் இவர் கள்? எதற்காக அவர்கள் மௌனமாய் இருக் கிறார்கள்? அடித்த சிலைகள் போல ஏன் நிற்கி றார்கள்? யாரையேனும் எதிர்பார்க்கிறார்களோ ஒருவேளை? — இப்படி அந்தப் படைவீரன் நினைத் திருக்க வேண்டும். ஓரிரு தடவை அவன் பாதை யில் திரும்பிக் கூடப் பார்த்தான். ஆனால் அவனைத் தவிர ஒரு மனிதரையும் காணோம். மறுபடியும் அவன் எங்களை நோக்கி அடியெடுத்து வைத்தவன் மீண்டும் நின்று இன்னொரு தரம் பின்னே திரும்பிப் பார்த்தான். எங்களுக்கு முன் னால் வெறுங்கால்களுடன் நின்று கொண்டிருந்த

சிறுமி, ''இது என் அண்ணன்! ஆஷிரலி! ஆஷிரலி!'' என்று திடீரெனக் கூவி அழைத்து, தலைக்குட்டையைச் சட்டென அவிழ்த்து ஆட்டிக்கொண்டே அவனை நோக்கிப் பாய்ந்து ஓடினாள்.

அவள் அவனை எப்படித்தான் அடையாளம் கண்டு கொண்டாளோ ஆண்டவனே அறிவான். ஆனால் அவளது கூச்சல் உணர்விழந்த நிலையிலிருந்து எங்களைத் துப்பாக்கி வெடி போல உலுக்கி எழுப்பியது. சிறுவரும் இளம் பெண்களும் சிறுமியின் பின்னால் ஓடினார்கள்.

''அடே, இது அவன்தான், ஆஷிரலிதான்! அவனேதான்!'' என்று குரல்கள் ஆர்ப்பரித்தன. அப்புறம் முதியவர்களும் இளையவர்களுமாக நாங்கள் எல்லோரும் கூட்டமாகப் படைவீரனை நோக்கி வெள்ளம் போல் விரைந்தோம்.

ஏதோ ஒரு விறல்மிக்க சக்தி எங்கள் அனைவரையும் ஆட்கொண்டு இறக்கை கட்டித் தூக்கிச் சென்றது. தழுவிக் கொள்வதற்காகக் கைகளை அகல விரித்தவாறு நாங்கள் படைவீரனை நோக்கி ஓடிய போது எங்கள் வாழ்வு முழுவதையும், அனுபவித்தவற்றையும் பட்டவற்றையும் எல்லாம், எங்கள் எதிர்பார்ப்புச் சித்திரவதையையும் உறக்கமற்ற இரவுகளையும், எங்கள் நரையோடிய முடிகளையும் மூத்துப்போன கன்னிகளையும், எங்கள் விதவைகளையும் அனாதைகளையும் எங்கள் கண்ணீரையும் கம்பலையையும் எங்கள் ஆண்மையையும் நாங்கள் வெற்றியாளனை படைவீரனிடம் கொண்டு சென்றோம். மக்கள்

தன்னையே வரவேற்கிறார்கள் என்று புரிந்து கொண்டு அவனும் உடனே எங்களை எதிர் கொள்ள ஓடி வந்தான்.

கூட்டம் அனைத்துடனும் சேர்ந்து நாங்கள் ஓடிய போது, அருகாக ரயில் தடதடத்துச் செல்வது போலவும், காற்று முகத்தில் அடிப் பது போலவும், ''அம்மா-ஆ-ஆ! அலிமா-ஆ-ஆ-ன்!'' என்ற கத்தல் என் காதில் படுவது போலவும், ரயில் சக்கரங்கள் செவிகளில் மேலும் மேலும் இடிப்பது போலவும் எனக்குப் பிரமை உண்டாயிற்று.

குதிரைக்காரர்கள் முதலில் படைவீரனை அணுகி அவனுடைய மேல் கோட்டையும் மூட் டையையும் மேலிருந்த படியே எடுத்துக் கொண்டார்கள். படைவீரனை இரு புறங்களிலு மிருந்து கைகளைப் பற்றித் தூக்கினார்கள்.

ஆகா, வெற்றியே! நாங்கள் எவ்வளவு காலமாக உன்னை எதிர்பார்த்தோம்! வணக் கம், வெற்றியே! வணக்கம்! எங்கள் கண் ணீரை மன்னிப்பாயாக! என் மருமகள் அலி மான் ஆஷிரலியின் மார்பில் தலையால் இடித்து, ''எங்கே? எங்கே என் காஸிம்?'' என்று தோள் கள் குலுங்கக் கேட்டதற்காக அவளை மன் னித்து விடு. எங்கள் அனைவரையும் மன்னிப் பாயாக, வெற்றியே. உனக்காக நாங்கள் அத்தனை தியாகங்கள் செய்திருக்கிறோம்! ''எங்கே மற்ற வர்கள்? என்னவன் எங்கே? என்னவன் எங்கே? மற்ற எல்லோரும் எங்கேதான் போய் விட்டார் கள்?'' என்று எங்கள் கூச்சல்களுக்காக எங்களை

மன்னித்து விடு. ''என் அன்பர்களே, அவர்கள் திரும்புவார்கள், எல்லோரும் திரும்பி வருவார் கள். சீக்கிரமே திரும்புவார்கள், நாளைக்கே திரும்பி வருவார்கள்'' என்று ஆஷிரலி எங்கள் அனைவருக்கும் பதில் அளித்ததற்காக அவனை மன்னித்து விடு. எங்களை மன்னித்துவிடு, வெற்றியே மன்னித்து விடு. ஆஷிரலியை அப்போது அணைத்துக்கொண்டு நான் ஜைஞக் கையும் மாஸெல்பேக்கையும் காஸிமையும் ஸுவான்குலையும் பற்றி எண்ணமிட்டேன்: அவர் களில் ஒருவரும் திரும்பவில்லையே என்று. என்னை மன்னித்துவிடு, வெற்றியே...

நாங்கள் மௌனமாக நடந்தோம். அலி மான் இருந்தாற் போலிருந்து திடீரெனத் தேம் பினுள், ஓசையுடன் ஆழ்ந்த பெருமூச்சு விட் டாள், ஏதோ காற்று போதவில்லை போல. அவள் முகத்தில் துயர் தேங்கியிருந்தது. அவள் தன் பாதங்களையே பார்த்தவாறு குனிந்த தலை யுடன் எதைப் பற்றியோ தீவிரமாகச் சிந்தனை யில் ஆழ்ந்திருந்தாள். ஏக்கம் நிறைந்த எண் ணங்கள் அவளை ஆட்டுகின்றன என நான் கண்டு கோண்டேன். ஆம், அலிமான் கொடுந் துன்பம் உழன்ருள். அவளுடைய வதனத்தி லிருந்தும் ஏங்கிய விழிகளிலிருந்தும் அவள் உதட்டைக் கடிப்பதிலிருந்தும் நான் இதைக் கண்டு கொண்டேன். அவள் என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிருள் என்பதை நான் அறிந்திருந் தேன். மனதுக்குள் அவளிடம் கூறினேன்: ''ஊம், என்ன செய்வது, மருமகளே, நாம்

பிரிய வேண்டியதுதான். இப்பொழுது நீ காஸிமை இறுதியாக அடக்கம் செய்து விட்டாய். நாம் செய்வதற்கு என்ன இருக்கிறது? இறந்தவர் களோடு நாமும் இறக்க முடியாதே. வாழ்நாள் முழுவதும் நீ விதவையாகக் காலங்கழிக்க முடியாதே. எல்லாம் முடிந்து விட்டது. நீ போய்விடுவாய். வேறு வழியில்லை — கட்டாயம் நீ போய்விடுவாய். ஊம், அதற்கென்ன, எனக்கு ஒன்றும் மனத்தாங்கல் இல்லை. உன் சொந்தச் சித்தத்திஞலோ சுய விருப்பத்தி ஞலோ நீ போகவில்லை. நம் விதி அப்படிப் பட்டது. ஐயோ, விதியே, விதியே... உன்னைப் பிரிவது எனக்கு எவ்வளவு வருத்தமாய் இருக் கிறது என்பதை, அலிமான், நீ மட்டும் அறிந் தாயாஞல்! நானும் நீயும் தாயும் மகளும் போல வாழ்ந்தோம். நீ என்னை விட்டுப் போவ தாஞல் சொந்தப் பெண் போல உன்னை ஆசீர் வதிப்பேன், உன் இன்பத்துக்காகப் பிரார்த் தனை செய்வேன். நீ இன்னும் வாழ வேண்டும். நீ இன்னும் யுவதி, அழகி. உனக்கு யாராவது கிடைத்து விடுவான். நல்லவன் வாய்க்க வேண் டும், அதுதான் முக்கியம். அவன் உனக்குக் காஸிம் போல் இருக்க முடியுமா? யார் கண் டது? நானே, உனக்கு எவ்வகையிலும் உதவ முடியாது. என் வேண்டுகோள் ஒன்றுதான்: நீ போய்விட்ட பின்பு எப்போதாவது என்னை நினைத்துக்கொள். உன்னைத் தவிர எனக்கு இப் போது யாரும் இல்லை. வீட்டில் நான் தன்னந் தனியளாக, பரந்த உலகில் ஒற்றைக் கட்டை

யாக இருந்து விடுவேன். நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது. முதுமைப் பருவத்தில் எனக்கு ஆறுதல் எதுவும் இல்லை. எனக்கு ஒரு பேரனைப் பெற்றுக்கொடுக்க உனக்கு வாய்க்கவில்லை. ஆனால் உன் வரையில் இது ஒரு வேளை நல்லதுதான். நீ என்னைப் பொருட்படுத்தாதே. கிழவியான எனக்காக நீ உன் இளமையைப் பாழாக்கிக்கொள்ளக் கூடாது அல்லவா? நான் என் வாழ்வை வாழ்ந்து தீர்த்து விட்டேன். நீ இன்னும் வாழ வேண்டும். தீர்மானம் செய்து கொண்டதும் சொல்லு என்று வேண்டுமானாலும் நீ போகலாம். அமைதியான மனச்சான்றுடன் போய் வா. நான் எப்போதும் உன்னை நினைவு வைத்திருப்பேன், நேசிப்பேன், உனக்கு நன்றி பாராட்டுவேன்...''

இம்மாதிரி நடந்து கொண்டே சிந்தித்தேன், இச்சொற்களைச் சொல்வதற்கு ஆயத்தமானேன். என் மனதில் இருந்ததை அலிமான் அறிந்து கொண்டாள் போலும். ஒருயிரும் ஈருடலுமாக இணைந்து வாழ்பவர்கள் ஒருவரையொருவர் அரை குறைச் சொல் மூலம், சிறு சைகை மூலமாகப் புரிந்து கொள்கிறார்கள். எனினும் அலிமான் நான் எதிர்பார்த்த சொற்களைக் கூற வில்லை.

நாங்கள் அரைகுறையாக விடப் பட்ட வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தோம். அலிமானும் காஸிமும் ஒரு காலத்தில் கட்டத் தொடங்கிய வீட்டைத் துரதிர்ஷ்டவசமாக நான் நோக்கினேன்: முகப்பில் அங்கு எல்லாம்

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போன்றே கிடந்தன. வண்டியில் கொணர்ந்து கொட்டப் பட்ட கற்கள் பிரமாண்டமான சாம்பல் நிறக் குவியலாக இறைந்திருந்தன. செங்கல்களோ, உடைந்த சில்களின் அடுக்குகளாக வெகு காலத் துக்கு முன்பே மாறி விட்டிருந்தன. முற்றிலும் கட்டி அமைக்கப் பெறாத வீடு போர் தொடங் கிய பிறகு முற்றிலும் பாழாகி விட்டது. ஒவ் வொரு கோடைகாலத்திலும் மனையிடங்களில் பல வகை முட் புதர்களும் பூண்டுகளும் தழைத்து மண்டும். சுவர்கள் தாழ்ந்து போய் இடிந்து சரிந்து விட்டன. வீடுகளின் உட்பு றத்தில் முள் புதர்கள் அடர்ந்து வளர்ந்து, சன்னல் ஓட்டைகள் வழியே வெளியே எட்டிப் பார்த்தன. கூதிர்காலம் வரையில் இங்கே மூலை யில் கட்டிய கன்றுகள் மட்டுமே வலைய வந்தன, கொண்டலாத்திகள் சோகமாகக் கூவின. இந்தக் கொண்டைப் பறவைகள் இடுகாடு போன்ற வெறுமையை விரும்பின. நாங்கள் அவ்வழி யாகப் போன நேரத்திலும் அவை கல்லறை களை ஒத்த இடிபாடுகள் மேல் உட்கார்ந்து இளவேனிலின் நிசப்தமான வெதுவெதுப்பை அனுபவித்தவாறு அயர்வுடன் அரைக்குரலில் கீச்சிட்டுக் கொண்டிருந்தன.

அந்த வெறுமையைக் கண்டு நான் மலைத் தேன். ''அட கடவுளே! இங்கே வாழ ஆசைப் பட்டவர்கள், குடித்தனம் நடத்த விழைந்தவர் கள், எங்கே தங்கி விட்டார்கள்? பாவம், என் காஸிமுக்கு இங்கே தன் முதல் வீட்டைக்

கட்டி முடிக்க வாய்க்காது போயிற்று!'' உள்ளம் குழலோடித் துயரில் சாம்பியது. இவ்வாறு பரித பித்துக்கொண்டிருந்த என் கரத்தை ஆதரவுடன் பற்றி முறுவலித்தாள் அலிமான்.

''அம்மா, நீ என்ன ஒரேயடியாகத் துவண்டு போய் விட்டாய்? வாழ்க்கையில் நம்பிக்கையை இழந்து விட்டாயோ ஒருகால்? வேண்டாம் அம்மா. உன் கஷ்டத்தை, அறிவேன். ஆனால் நீ திடசாலி ஆயிற்றே. நீ...'' அவளுக்கு நாக் குழறிற்று. ஏதோ சொல்ல வந்தவள் எண் ணத்தை மாற்றிக் கொண்டு குற்ற உணர்வுடன் புன்னகைத்தாள். ''நீ மிகவும் நல்லவள். இதோ இந்தத் திட்டின் மேல் சற்றே உட்கார்ந்து பேசுவோம் வா, அம்மா,'' என்றாள்.

''ஆயிற்று, அவ்வளவுதான். இதோ சொல்லி விடுவாள். என்னை விட்டுப் போய்விடுவதாகச் சொல்லுவாள்'' என எண்ணினேன். என் பாலும் அவள் பாலும் வருத்தம், கொதிக்கும் அலை போல் என் உள்ளத்தில் பொங்கியது. நடுங்கும் குரலைச் சாந்தப்படுத்த முயன்றவாறு, ''நல்லது, உட்காருவோம், உரையாடுவோம்'' என்று விடையிறுத்தேன்.

பாதை ஓரத்தில் ஒரு திட்டின் மேல் அமர்ந் தோம். ஆம், மாமியாரும் மருமகளுமான நாங் கள் இருவரும், எங்கள் விதியை, மேற்கொண்டு எப்படி வாழ்வது என்பதை நிர்ணயிக்கும் பொருட்டு அந்த மாதிரி உட்கார்ந்தோம்.

அலிமான் தலையைக் குனிந்து கொண்டு நீண்ட பெருமூச்சுடன் கூறலானாள்:

''நல்லது அம்மா, பாழாய்ப்போகிற யுத்தம் ஒருவகையாக முடிந்து விட்டது. மேற்கொண்டு நாம் எப்படி வாழ்வது என்று இப்போது நீ எண்ணமிடுகிறுய் போலும்.'' இவ்வாறு சொல்லி விட்டு அவள் மௌனமானுள், நானும் பேசா திருந்தேன். அலிமான் விழிகளே உயர்த்தி என் முகத்தை ஆழ்ந்த பார்வையுடன் ஏறிட்டு நோக் கிஞள். ''துயரப் படாதே, அம்மா'' என்று வருத்தம் ததும்ப முறுவல் செய்தாள். ''இன்பத் தில் நமக்கு ஒன்றுமே, கொஞ்சம் போல, துளிக் கூட எஞ்சவில்லையே என்று நினைக்கிறுய். நான்கு பேர்களில் ஒருவர் கூடத் திரும்பவில்லை என்பது நடக்கக் கூடாதது. இல்லை, நீ பொறு, அம்மா, இடை முறிக்காதே, நான் சொல்வதைக் கவ னமாகக் கேள். மெய்யாகவே சொல்லுகிறேன், உன்னைத் தேற்றுவதற்கு நான் ஆள் அல்ல. என்னை நானே ஏமாற்றிக் கொள்ளப் போவ தில்லை. என்னை நம்பு, அம்மா, ஜைஞுக் திரும்பி வர வேண்டும் என்று என் உள்ளம் சொல்லு கிறது. தகவல் இல்லாமல் மறைந்து விட்டான் என்ருல் உயிரோடு இருக்கிருன் என்றே அர்த் தம். அவனது கொல்லப்பட்ட உடலை யாருமே காணவில்லையே. ஒருவேளை அவன் சிறைப் பட்டி ருப்பான், அல்லது தேசபக்த கொரில்லா வீரர் களுடன் காட்டில் ஒளிந்து கொண்டிருப்பான். இப்போது திடீரென்று வெளிப்படுவான். இல்லா விட்டால் எங்கேனும் படுகாயமடைந்து கிடக் கிருன் போலிருக்கிறது. அதைப் பற்றிச் செய்தி தெரிவிக்க முடியாதிருக்கலாம். எல்லாம் நடக்கக்

கூடியவையே. பார்த்துக் கொண்டே இரு, திடீ ரென்று திரும்பி வந்து சேருவான், தலை மேல் வெண்பனி போலத் தொப்பென்று குதிப்பான். கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம் அம்மா. நேரத்துக்கு முன்பே அடக்கம் செய்துவிட வேண்டாம். போர்முனையில் தகவலின்றிக் காணா மல் போனவர்கள், எவர்கள் கொல்லப்பட்டு விட்டதாகக் கறுப்புக் கடிதம் வந்திருந்ததோ அவர்கள் கூட உயிரோடிருப்பது பின்னால் தெரி யவந்த சம்பவங்கள் எத்தனையோ நிகழ்ந்திருக் கின்றன—நீயே கேள்விப் பட்டாயே. இதோ நமது பக்கத்துக் கிராமத்திலும் மஞ்சள் சமவெ ளியைச் சேர்ந்த கஸாக்குகளின் கிராமம் ஒன் றிலும் மக்கள் அழுது புலம்பித் துக்கம் கொண் டாடித் தீர்த்து விட்டார்கள், ஆனால் இறந்தவர் கள் உயிரோடு திரும்பி வந்து சேர்ந்தார்கள். நான் நம்புகிறேன், நிச்சயமாக அறிவேன், நமது ஜைனக் உயிரோடு இருக்கிறான், சீக்கிரம் திரும்பி வருவான். நான்கு பெயரில் ஒருவர் கூடத் திரும்பவில்லை என்பது எவ்விதத்திலும் நடக்கக் கூடாதது. சற்றுப் பொறுத்திருப்போம் அம்மா. நீண்ட காலம் எதிர்பார்த்தோம், இன்னும் கொஞ்சம் காத்திருப்போம். என்னைப் பற்றிக் கவலைப் படாதே. முன்பு நான் உன் மரும களாக இருந்தேன் என்றால் இப்போது நான் உன் மகன், எல்லா மைந்தர்களுக்கும் பதி லாக...''

அலிமான் பேச்சை நிறுத்தினாள். 'நாங்கள் அப்புறமும் நீண்ட நேரம் மௌனமாக உட்

கார்ந்திருந்தோம். அது மே மாதத்தின் நடுப் பகுதி. எங்களுக்கு மிக மிகத் தொலைவில் மேகப் படலங்கள் கரும்புகை மண்டுவது போலத் திரண்டன. அங்கே இடி அதிர்ந்தது. மழை யின் குளுமை அங்கிருந்து பரவியது. அந்தத் தொலைவில் வெள்ளி மழை சோவென்று கொட் டியது. மழை ஊற்றும் தாரைகளாகப் பொழிந் தது, வெயிலில் மின்னியது, கண்ணுக்குப் புலப் படாத அகன்ற அடிவைப் புக்களுடன் உலகில் நடை போட்டது: ஒருவேளை மலை மேல் செல்லும், மறு முறை கீழே இறங்கும், மீண்டும் மலை மீது ஏறும், அப்புறம் ஸ்தெப்பி வெளியில் இறங்கிவிடும். நான் வைத்த கண் வாங்காமல் அந்தத் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தேன். தொலைதூர மழைக் காற்று என் கொதிப் படைந்த முகத்தைத் தாக்கியது. நான் அலிமா னிடம் ஒன்றுமே சொல்லவில்லை. அவளுக்கு நான் கூற எண்ணிய சொற்கள் அங்கே இருந் தன: அதோ தொலைவில் பளிச்சிடும் மழை போன்றே வண்மையும் ஒளியும் திகழ்பவை.

ஆம், மழை பொழியும், பயிர் வளரும், மக்கள் வாழ்வார்கள் — நானும் அவர்களோடு வாழ்வேன். நான் இம்மாதிரி நினைத்தது அலி மான் எனக்கு இரங்கியதனால் அல்ல, என்னைத் தனியளாய் விடப் போவதில்லை என்று கருணை காரணமாக அவள் கூறியதனால் அல்ல. இல்லை, நான் மகிழ்வுற்றது வேறொரு காரணத்தால். போர் மக்களைக் கொடியவர்களாக, இழிந்தவர் களாக, பேராசைக்காரர்களாக, வெறுமையான

வர்களாகச் செய்து விடுகிறது என்று யார் சொன்னது? இல்லை போரே, நீ உனது நீள ஜோடுகளால் மக்களை நாற்பது ஆண்டுகள் மிதித்துத் துவை, கொல், சூறையாடு, போகசுக்கு, அழி—ஆயினும் மனிதனை வளைக்க, இழிவு படுத்த, அடிமைப்படுத்த உன்னால் முடியாது.

என் அலிமான் மனிதப் பிறவி! பகைவர்களின் புலத்தில் இருண்ட இரவில் பாரஷூட்டுடன் குதித்து, அதே இரவில் போன சுவடு தெரியாமல் மறைந்து விட்ட எங்கள் ஜைனுக் நிச்சயமாக உயிருடன் இருக்கிறான், நிச்சயமாகத் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையை யார் பொருட்டு அவள் தன் உள்ளத்தில் உறுதிப் படுத்திக்கொண்டாள்? உலகம் நமக்குத் தோன்றுவது போன்று அவ்வளவு நியாயம் அற்றது அல்ல என்று யாருக்காக அவள் தனக்கே நம்பிக்கை ஊட்டிக் கொண்டாள்? அவளுடைய இந்த நம்பிக்கையைச் சிதைக்க நான் துணியவில்லை. அவளது எதிர்பார்ப்பை மங்கடிக்க எனக்குத் துணிவு வரவில்லை. நான் அவளை நம்பக்கூடச் செய்தேன். ஜைனுக் உண்மையாகவே உயிரோடு இருந்தாலோ? ஒரு நாள் அவன் திடுதிப்பெற்று திரும்பி வந்துவிட்டால் அது அற்புதம் ஆகாது என்று கொள்ள வேண்டும். நான் குழந்தை போல நம்பினேன். நான் இதை விரும்பினேன். அந்த நாளைப் பற்றி நான் கனவு காணத் தொடங்கி விட்டேன். அந்தச் சமயத்தில் அலிமான் மௌனத்

தைக் கலைத்தாள். காய்கறித் தோட்டம் உழுது முடிக்கப் படாமல் கிடக்கிறது என்பதை அவள் தான் முதன் முதலாக நினைவு படுத்தினாள்.

''அம்மா, நமது நிலத்தில் கலப்பை அப்படியே கிடக்கிறதே! விரைந்து செல்வோம்! நிலம் காய்ந்து போய்விடும்!'' என்று அவசரப் படுத்தினாள்.

நாங்கள் காய்கறித் தோட்டத்துக்கு ஓடிச் சென்றோம். எருதுகள் கலப்பையை இழுத்துக் கொண்டு நிலத்துக்கு வெளியே போய் வெகு நேரமாகவே புல்மேய்ந்து கொண்டிருந்தன. அலிமான் அவற்றை நிலத்துக்கு ஓட்டினாள், நாங்கள் கலப்பையை மறுபடியும் சாலில் பொருத்தி உழவைத் தொடர்ந்தோம். மனிதனுக்குத் தேவையானது எவ்வளவு கொஞ்சம் என்று நினைக்கவே விந்தையாயிருக்கிறது! சில வேளைகளில் ஒரு நல்ல சொல் போதும் அவன் இறப்பிலிருந்து மறுவுயிர்ப்பு பெறுவதற்கு. அலிமான் விஷயத்திலும் அவ்வாறே நேர்ந்தது. அல்லது ஒருவேளை எனக்குத்தான் அப்படித் தென்பட்டதோ? ஆனால் அவள் சட்டெனப் பழைய, போருக்கு முந்தைய அலிமானாக மாறிவிட்டாள். அவளது உடலும் உள்ளமும் மலர்ந்தன, அவளுடைய ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு புன்னகையும் அசைவும் முன் ஒரு காலத்தில் இருந்தது போலவே திகழலாயிற்று. தன் குட்டை மேல் கோட்டைக் கழற்றி வரப்பில் போட்டாள், இடுப்பு உடையைத் தூக்கிச் செருகிக் கொண்டாள், சட்டைக்கைகளை மடக்கி

விட்டுக்கொண்டாள், பின்னலைப் பிடர்த்தலையில் எடுத்துக் கட்டிக்கொண்டாள், எருதுகளை லாகவமாக ஓட்டத் தொடங்கினாள்.

''ஏய் வெள்ளைத்தலை, ஊம் ட்ரியோ! ஏய் குட்டைவால், ஊம், ட்ரியோ!'' என்று நீண்ட சாட்டையைச் சொடேரெனச் சொடுக்கிக் கொண்டே காளைகளை அதட்டினாள்.

நான் கொஞ்சம் உற்சாகம் அடைய வேண்டும், வேலை செய்ய வேண்டும், வாழ வேண்டும் என்று அலிமான் விரும்பினாள். ஆகவேதான் மறக்க முடியாத அந்த நாளில் அவள் அப்படி நடந்து கொண்டாள். போகிற போக்கில் திரும்பிப் பார்த்து, ''அம்மா, ஏர்க்கால் மேல் லேசாகவே சாய். கற்கள் மேலே வந்து விடும். உன் சக்தியை மட்டாகவே செலவிடு!'' என்று சிரித்துக் கொண்டே என்னிடம் கூறினாள்.

நாங்கள் காய்கறித் தோட்டத்தில் இன்னும் இரண்டு மூன்று சுற்றுக்கள் வருவது பாக்கி இருந்த போது மழை பிடித்துக் கொண்டது. அது ஆரவாரம் நிறைந்த குதூகலமான பெரு மழை. ஆரம்பத்தில் மழை எருதுகளின் முதுகுகளை மிகச் சில முதல் துளிகளால் தொட்டது, சிந்தனையில் ஆழ்ந்தது—அப்புறம் திடீரென தாரைதாரையாக ஊற்றிக் களிநடம் புரியலாயிற்று, கைகள் கொட்டுவது போலத் தாளம் போட்டது, பின்பு நொடிப் போதில் கிராமம் முழுவதையும் உலுக்கிப் போட்டு விட்டது. கொக்கரித்துச் சிறகுகளை அகலப் பரப்பியவாறு

குஞ்சுகளுடன் ஓடின கோழிகள். பெண்கள் கொடிகளிலிருந்து துணிகளைப் பரட்டென உருவிக்கொண்டு வீடுகளுக்குள் ஓடினார்கள். குழந்தைகளும் நாய்களும் தெருவில் கும்மாளம் அடித்தன. மழையின் அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடினார்கள்.

''மழையே, மழையே, கொஞ்சம் நில்,
வழியில் எங்களையும் அழைத்துச் செல்...''

என்று சிறுவர்கள் பாடினார்கள்.

''நனைந்து விடுவோம்! ஓடுவோம் வா, மழை நிற்கும் வரை காத்திருப்போம்!'' என்று நான் அலிமானிடம் கூறினேன்.

அவள் தலையை ஆட்டி மறுத்து விட்டாள்.

''பரவாயில்லை அம்மா, மரத்துப் போய்விட மாட்டோம்!'' என்று சொல்லி விட்டு, மழையின் கிச்சுக்கிச்சு மூட்டலுக்குச் சிறு பெண் போல வாய்விட்டுச் சிரித்துக் கொண்டே எருதுகளை இன்னும் விரைவாக ஓட்டலானாள்.

அவளுடைய குதூகலம் என்னையும் தொற்றிக் கொண்டது. அவளை வியந்து நோக்கியவாறு எனக்குள் சொல்லிக் கொண்டேன்: ''என் ஒளிச் சுடரே, மழையே! நீ எவ்வளவு பாக்கியசாலியாக இருந்தாய்! ஐயோ, வாழ்வே, வாழ்வே...'' இதெல்லாம் அவள் செய்தது எனக்காக என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது. போரையும் துயரத்தையும் நான் மறந்துவிட வேண்டும், வாழ்க்கையை நான்

மகிழ்வுடன் நோக்க வேண்டும் என அவள் விரும்பினாள். மழைத் தாரைக்கு முகத்தையும் கைகளையும் காட்டியபடி அலிமான் என்னிடம் கூறினாள்:

''பார், அம்மா, எப்பேர்ப்பட்ட மழை என்று! எவ்வளவு தூய மழை, பார்! இந்த வருஷம் விளைச்சல் நன்றாய் இருக்கும்! ட்ரியோ, மழையே, கொட்டு, வண்மையாகப் பொழி, ட்ரியோ!''—இப்படிச் சொல்லிச் சாட்டையால் மழைத் தாரைகளையும் எருதுகளின் ஆவி கிளம்பும் முதுகுகளையும் அடித்தாள்.

அவள் கலகலவென்று நகைத்தாள். கொட்டு கிற மழையில், நனைந்த உடையில், ஒடிசலான மேனியும் நிமிர்ந்த மார்பகங்களும் வலிய தொடைகளும் மகிழ்ச்சி சுடர் விடும் விழிகளும் கன்னங்களில் கனலும் செம்மையுமாக அவள் எவ்வளவு அழகாய் இருந்தாள் என்பது அவ ளுக்கே தெரியவில்லை. பாழும் யுத்தமே, நீ எக்காலும் நாசமாய்ப் போக!

மழை அடித்துப் பெய்து விட்டு அப்பால் சுற்றி உலாவச் சென்ற பிறகு அலிமான் மௌன மாகி விட்டாள். போகிற மழையை வருத்தந் தோன்ற நோக்கினாள், ஆற்றின் அக்கரையில் வர வரத் தணியும் அதன் ஓசையைச் செவி மடுத்தாள். மழையும் நிலையானது அல்ல, அதுவும் விரைவில் போய்விடும் என்பது குறித்துச் சிந்தித்தாள் போலும். அவள் துயரத் துடன் பெருமூச்சு விட்டாள். காஸிமையும் வேறு எதையேனும் அவள் நினைவு கூர்ந்

தாளோ இல்லையோ, ஆனால் என்னை நோக்கி மீண்டும் புன்னகை பூத்தாள்.

''நல்லது, இதே கையோடு, மழை பெய்த சமயத்திலேயே மக்காச் சோளம் விதைத்துவிடுவோம்!'' என்று சொல்லி வீட்டுக்குள் ஓடினாள்.

நனைத்த மக்காச் சோளத்தை ஒரு வாளியில் எடுத்துக்கொண்டு அலிமான் வெளியே வந்தாள். வீங்கிய, பருத்த தானிய மணிகளை ஒரு குத்து அள்ளிக் கொண்டாள்.

''அம்மா, ஜைனுக் திரும்பி வரட்டும், அதற்குள் சோளக் கொண்டைகளில் பால் வைத்துவிடும்!'' என்று என்னிடம் கூறிவிட்டு முதல் பிடி விதைகளை நிலத்தில் தெளித்தாள்.

அந்த நாள் எனக்கு ஒருபோதும் மறக்காது. புனிற்றிளம் குழந்தை போல மேகங்களின் பின்னிருந்து எட்டிப்பார்த்தது மழையில் குளித்துச் சுத்தமான சூரியன். கறுத்த ஈர நிலத்தில் வெறுங் கால்களுடன் நடந்தவாறு அலிமான் சிரித்துக் கொண்டே ஒவ்வொரு அடிவைப்புக்குப் பிறகும் விதைகளைத் தூவினாள். அவள் விதைத்தவை வெறும் சோள விதைகள் அல்ல, நம்பிக்கையின், நன்மையின், எதிர்பார்ப்பின் விதைகள்.

''நீயே காண்பாய், அம்மா, என் வாக்கு பலித்தே தீரும். ஜைனுக்குக்குப் பால்கொண்டைகளைத் தணலில் நானே வாட்டிக் கொடுப்பேன். சோளக் கொண்டைகளுக்காக அவன் என்னோடு எப்போதும் சண்டை போடுவானே, நினைவிருக்கிறதா? ஒரு தடவை தணலிலிருந்து

சூடான சோளக் கொண்டையை எடுத்துச் சட்டைக்குள் திணித்துக் கொண்டு என்னிடமிருந்து அப்பால் ஓடினான். சோளக் கொண்டை அவன் வயிற்றைப் பொசுக்கிவிட்டது. துடித்து நெளிந்தான் — ஏதோ தேள் கொட்டி விட்டது போல. ஒரு வாளித் தண்ணீரை மார்பில் ஊற்றிக் கொண்டான். நான் அவனுக்கு ஏதேனும் ஒத்தாசை செய்வதற்குப் பதிலாக, விழுந்து விழுந்து சிரித்துக்கொண்டே 'உனக்கு நன்றாய் வேண்டும்! நன்றாய் வேண்டும் உனக்கு!' என்று மறுபடி மறுபடி நொடித்தேன். நினைவிருக்கிறது அல்லவா அம்மா?'' அந்த வேடிக்கைச் சம்பவத்தை நினைத்து இப்போதும் அலிமான் சிரித்தாள்.

அதற்காகவும் அவளுக்கு நன்றி...

14

''ஆம், தல்கோனே. நீ ஜைனுக்கை நீண்ட காலம் எதிர்பார்த்தாய்.''

''நீண்ட காலம், அன்னை நிலமே. மக்காச் சோளம் ஒரு முறை அல்ல, இரண்டு, மூன்று தடவை முதிர்ந்தது, அப்படியும் எங்கள் ஜைனுக் திரும்பி வரவில்லை. அவனைப் பற்றிய செய்தியும் ஒன்றும் கிடைக்கவில்லை. எத்தனை தரம் நான் உன்னிடம் வந்து என் துயரைப் பகிர்ந்து கொண்டேன் என்பது உனக்கே நினைவு இருக்குமே...''

''வந்தாய், தல்கோனே. ஆம், பல முறை நீ என்னிடம் வந்தாய். அழுதாய், மருமகளை என்ன செய்வது, அவளுடைய இளம் வாழ்க்கையைப் பாழாக்குவது சரியா என்று கேட்டாய். ஆனல் நான் எவ்விதத்திலும் உனக்கு உதவ முடியவில்லை, தல்கோனே. இத்தனை ஆண்டுகள் கடந்துவிட்ட பின்பும், இப்போதும் நான் உனக்கு ஒன்றும் சொல்வதற்கில்லை.''

15

வாழ்க்கை தன் முறைப்படி இயங்கிற்று. கூட்டுப்பண்ணை சிறிது சிறிதாகச் சீரடைந்தது. வாழ்க்கை சுலபமாயிற்று. இவை எல்லாவற்றுடனும் போர் பற்றிய நினைவுகள் மங்கலாயின, மக்களது உள்ளங்களில் அதன் சுவடுகள் அழியத் தொடங்கின.

நானும் அலிமானும் முன்போலவே கூட்டுப் பண்ணையில் வேலை செய்தோம். படைவீரர்கள் போர்முனையிலிருந்து திரும்பியதுமே குழுத் தலைமைப் பொறுப்பை நான் இளைஞர்களிடம் ஒப்படைத்து விட்டேன்.

''மூன்று ஆண்டுகள் நீங்கள் இல்லாமலே உழைத்தேன், படாத பாடெல்லாம் பட்டேன். இப்போது நீங்கள் திரும்பி வந்துவிட்டீர்கள், வேலைப் பொறுப்பை நீங்களே ஏற்றுக்கொள்ளுங்கள். எனக்கு ஓய்வு அளியுங்கள். இந்த ஆண்டுகளில் நான் முதுமை அடைந்து விட்டேன்.

வெறுமே உங்களுக்கு உதவி செய்து வருவேன்'' என்று வாலிபர்களிடம் கூறினேன்.

அந்தக் காலத்து இளைஞர்கள் இன்றைக்கும் என்னைக் ''குழுத்தலைவி அம்மா'' என்றே அழைக்கிறார்கள். இன்னும் மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்று ஆகிறது...

வாழ்க்கை தன் போக்கில் இயங்கியது என்றாலும் அலிமானுக்கும் எனக்கும் அப்படியும் அமைதி கிடைக்கவில்லை. ஒருவரும் இதைக் கவனிக்கவில்லை, ஆயினும் உள்ளுக்குள் நாங்கள் இடைவிடாது துன்பம் உழன்றோம், ஒரே விஷயத்தைக் குறித்தே இடையறாது சிந்தித்த வண்ணமாயிருந்தோம். முதல் பார்வைக்கு எல்லாம் எளிது போலப் படும்—நேருக்கு நேர் மனத்தைத் திறந்து பேசுவது. விஷயம் இப்படி இப்படி, அவரவர் தன் தன் வழியில் போவோம், அவரவர் தன் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம் என்று. ஆம், சங்கதி மிகச் சாதாரணமானதுதான். என் மருமகள் அலிமானாக இல்லாமல் வேறு ஒருத்தியாக இருந்தால், அலிமான் என்னிடம் இவ்வளவு பரிவு காட்டியிரா விட்டால் நான் நீண்ட நேரம்—யோசனை செய்யாமல் அவள் முகத்துக்கு நேரே சொல்லியிருப்பேன்—வெறுமே காத்திருப்பதில் பயனில்லை, காலம் கடந்து போவதற்குள் எவனையாவது மணம் செய்துகொண்டு வெளியேறு என்று. ஆனால் அலிமானிடம் இந்தச் சொற்களைக் கூறத் தயங்கினேன். வார்த்தைகளை எவ்வளவு தான் பதப்படுத்தி மென்மை ஆக்கினா

லும் சரி, அவற்றை எவ்வளவுதான் சலித்துப் பொறுக்கி எடுத்தாலும் சரி, அர்த்தம் ஒன்றேதான், பண்பற்ற, கொடிய அர்த்தம். அவளை விருப்பத்துக்கு மாருக வெளியே விரட்ட எனக்கு உரிமை இல்லை. ஒரு தடவை கைந்தீ என்னும் இடத்திலிருந்து அவளுடைய உறவினர்கள் போகிற வழியில் எங்கள் வீட்டுக்கு வந்தார்கள். என்னுடைய மனச் சாட்சி மாசற்றதாய் இருக்க வேண்டும் என்பதற்காக, அலிமானை நான் கட்டுப்படுத்தவில்லை என்றும் அவளை ஆசீர்வதிக்க நான் தயார் என்றும் சிரமப்பட்டுச் சொல்லித் தீர்த்தேன். ஆனுல் அலிமான் அவர்களிடம் ஒரேயடியாக வெடுக்கென்று பேசவே, அயலாருக்கு முன் என் பொருட்டும் அலிமான் பொருட்டும் எனக்கு மிகவும் சங்கடமாய்ப் போய்விட்டது. இந்த விஷயத்தைப் பற்றிப் பேசவே கூடாது என்று அவள் அவர்களுக்கு வாய்ப்பூட்டுப் போட்டு விட்டாள். எனக்குச் சொந்த மூளை இருக்கிறது, போய்விடுவதா வேண்டாமா, எப்போது போவது என்பது என் விவகாரம், எங்கள் வாழ்க்கையில் குறுக்கிடாதீர்கள் என்று சொல்லிவிட்டாள். அவசரப்பட்டு விட்டதற்காக அப்புறம் நான் வருந்தினேன். அலிமானை நேரிட்டுப் பார்க்கவே கூசினேன். புத்திசாலியான அவளோ, எல்லாவற்றையும் புரிந்துகொண்டாள். வாய் திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை அவள்—எதுவுமே நிகழாதது போல. ஆக இந்த மாதிரி நாங்கள் வாழ்ந்தோம், ஒருவருக்கொருவர் இரங்கினோம், ஜைனைக் திரும்பி

வருவான் என்ற நம்பிக்கையால் எங்களையே ஏமாற்றிக் கொண்டோம். அப்புறம் இந்த நம் பிக்கையும் வற்றிப் போய்விட்டது. காலமோ கழிந்துகொண்டே போயிற்று, எப்போதோ தரு ணம் தப்பி விட்டது...

எப்படி இது நிகழ்ந்தது என்று எனக்கே தெரியாது. எங்கள் கிராமம் கால்நடை மேய்ச் சல் வழியில் இருந்தது. நெடுங்காலமாகவே இவ் வழியாகக் கால்நடைகள் ஓட்டிச் செல்லப்படு வது வழக்கம், வசந்த காலத்தில் மலைகளுக்கும் இலையுதிர் காலத்தில் மலைகளிலிருந்து ஸ்தெப் பிக்கும். சில வேளைகளில் மேய்ப்பர்கள் எங்கள் கிராமத்தில் கொஞ்ச நாட்கள் தங்கிச் செல் வார்கள். தாங்களும் இளைப்பாறுவார்கள், மந் தைகளுக்கும் ஓய்வு கொடுப்பார்கள்.

நாற்பத்தாறும் ஆண்டுக் கூதிர்காலத்தில் பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த இளம் மேய்ப்பன் ஒருவன் தனது மந்தையை இங்கே வெள்ளப்படுகையின் உலர் பகுதிகளில் மேய விட்டிருந்தான். அவன் படைவீரனாக இருந் தவன் என்பது தெரிந்தது. சாம்பல் நிற மேல் கோட்டை இன்னும் அணிந்திருந்தான். துப்பாக் கியைத் தோளில் தொங்க விட்டவாறு நல்ல குதிரையில் சவாரி செய்தான். அவனுடைய மென்மயிர்த்தோல் மேல்கோட்டு சேணத்தின் இரு புறமும் துருத்துமாறு கட்டிவைக்கப் பட்டி ருந்தது. அடிக்கடி அவன் மெது நடையாகக் குதிரையை ஓட்டிக் கொண்டு கிராமத்தில் சுற் றிவருவான். சுற்றி வந்தால் வரட்டுமே! வழி

யில் குதிரை ஏறிச் செல்பவர்கள் கொஞ்சமா என்ன? அவரவருக்கு அவரவர் காரியம். ஆகவே நான் அவனைக் கண்டும் காணுதது போல் இருந்தேன்.

அந்தக் கூதிர்காலத்தில் எங்கள் கிராமத்தில் திருமணங்கள் நிகழ்ந்தன. ஒருவன் தன் மக னுடைய கலியாணத்திற்காகக் குதிரையேற்றக் காரர்களின் ஆடு வெட்டும் போட்டிக்கு ஏற் பாடு செய்தான். நான் முன்னே குறிப்பிட்ட மேய்ப்பன் திறமையுள்ள குதிரையேற்றக்காரன். அலிமானும் நானும் திருமணத்துக்குப் போக ஆயத்தம் செய்து கொண்டிருந்தோம். அவள் அலங்காரம் செய்து கொள்வதற்குள் யாரோ ஒருவன் தெருவில் பாய்ச்சலாகக் குதிரை மேல் வந்து எங்கள் வீட்டு வாயில் அருகே அனேக மாக விழுந்தான். நான் ஓடிப் போய்ப் பார்த் தேன். அது அந்த மேய்ப்பன்தான். குதிரை சீற்றங்கொண்டு முரண்டியவாறு நடனமாடியது. அவனே சாட்டையைப் பற்களால் கவ்விக் கொண்டு சேணத்தின் மேல் அழகுற விளங் கினன். அவனது இராணுவச் சட்டைக் கைகள் மடக்கிவிடப் பட்டிருந்தன. வாயிலின் அருகே வெட்டுண்ட ஆடு கிடந்தது. இந்த விளையாட் டில் வெற்றியாளன் ஆட்டை எந்த வீட்டு வாயிலில் வேண்டுமாலும் போடலாம். நான் தான் எதனுலோ மனக்குழப்பம் அடைந்து, என்ன சொல்வது என்று தெரியாமல் தயங் கினேன்.

''நீ எதற்காக இதைப் போட்டாய், மகனே?''

என்ற சொற்கள் நான் அறியாமலே என் வாயிலிருந்து வெளிப்பட்டன.

அவன் கேட்டான், ''வீட்டில் யார்?'' என்று.

''உனக்கு யார் வேண்டும்?'' என்றேன்.

அப்போது அவன், ஆட்டை நழுவ விட்டு விட்டதாக முணுமுணுத்து அதைத் தரையி லிருந்து எடுத்துக்கொண்டு குதிரையைத் திருப்பி, தெருவின் மறு கோடியை நோக்கி விரைந்து சென்று விட்டான். மற்ற இளைஞர்கள் அவன் ஆட்டுடன் போய்விட்டதைக் கண்டு, போட்டி போட்டுக் கொண்டு அவனைத் துரத்தினார்கள். அவ்வளவு தான். அதன்பின் நான் அவனைச் சந்திக்கவே இல்லை. அப்போது ஒருவகையான மனத்தாங்கல் எனக்கு உண்டாயிற்று. ஒரு தடவை ஆட்டை ஒரு வீட்டுக்குக் கொண்டு வந்த பிறகு, அதை வீட்டுக்காரர்களிடமே விட்டு விட வேண்டும். அது தான் வழக்கம். அல்லது ஒரு வேளை மெய்யாகவே நழுவ விட்டுவிட் டானோ? அப்படியானால் ஆடு வீதியில் கிடக் காமல் வாயிலுக்குள் கிடந்தது ஏன்? அதன் அர்த்தம் என்னவாயிருக்க முடியும்?

அலிமான் வீட்டுக்கு உள்ளிருந்து வெளி வந்ததும் நான் எல்லாவற்றையும் புரிந்துகொண் டேன். பூவேலை செய்த சால்வையும் பட்டு உடையும் அணிந்திருந்தாள் அவள். சட்டென்று ஒரு முறை என்னை ஏறிட்டு நோக்கிவிட்டு நாணத்துடன் தலை கவிழ்ந்தாள்.

''போவோம் அம்மா'' என்று மெல்ல மொழிந்தாள்.

அந்த மேய்ப்பன் குதிரை மேல் இங்கே பாய்ந்து வந்தது ஏன் என்பது சொற்கள் இன் றியே தெளிவாகிவிட்டது. இப்போது சில நாட் களாக அலிமான், வீட்டுக்கு வெளியே வாய்க் காலில் நீர் நிரம்ப ஓடிக்கொண்டிருந்த போதி லும் மாலே வேளேகளில் தண்ணீர் கொண்டுவர ஆற்றுக்குப் போய்விட்டு நேரங் கழித்து வந்தாள் என்பது என் நினேவுக்கு வந்தது. என் நெஞ்சு சுரீர் என்றது. அவள் மேல் நான் பொறுமைப் பட்டேன் என்பதால் அல்ல—ஒரு வேளே பொறுமைப்பட்டும் இருக்கலாம்—ஆனல் வேறு காரணத்தால். அலிமான் நெடுங்காலம் கைம்பெண்ணுக இருக்கக் கூடாது, விரைவில் அவளுக்குக் கணவன் கிடைத்து விட வேண்டும் என்று நானே கடவுளே வேண்டிக் கொண்டேன். அவளுக்கு இவ்வாறு வாய்க்க வேண்டும் என இன்பத்தை விழைவது போன்று நான் விரும் பினேன். ஆனல் இப்போது திடீரென என்னேத் திகில் பற்றிக்கொண்டது. மருமகளே அல்ல, சொந்த மகளேத் திருமணம் செய்து கொடுப் பதைப் போல நான் சஞ்சலமடைந்தேன். புது வீட்டில் அவளுக்கு எப்படி இருக்குமோ, எப் பேர்ப்பட்ட ஆட்களிடையே போய்ச் சேரு வாளோ, கணவன் எத்தகையவனுக வாய்ப் பானே, இந்த விஷயத்தில் அவள் ஏதேனும் தவறு செய்துவிடக் கூடாதே என்று அஞ்சி னேன். திருமண விருந்தின் போதும் திரும்பு காலிலும் வீடு சேர்ந்த பின்னரும் இந்த எண் ணங்கள் என் மனதை விட்டு அகலவே இல்லே.

''நீ அவனை நன்முகத் தெரிந்து கொண்டாயா, அலிமான்? அவசரப்படாதே, மகளே அலிமான், ஜாக்கிரதை, தவறு செய்து விடாதே. ஆளை நன்முக அறிந்து கொள்'' என்று மனதுக்குள் அவளிடம் கேட்டுக்கொண்டேன். யுவதிகளின் வழியில் முட்டுக்கட்டையாக விளங்காமல் இருப்பது எப்படி? அலிமான் என்னிடம் கூச்சப்படாமல் இருக்கும் படி செய்வது எவ்வாறு? நான் அவசியம் என்று கருதும் விதத்தில் நடந்து கொள்ள அவள் சுதந்திரம் உள்ளவள் என்பதை அவளுக்கு எப்படி ஜாக்கிரதையாகத் தெரிவிப்பது?—இவ்வாறெல்லாம் சிந்தித்தேன். எனது கலவரத்தை மறைக்க முயன்றேன். அவளோடு எப்போதும் போல உரையாடினேன், வேடிக்கைகூடச் செய்தேன், சிரித்தேன்—அவள் எச்சரிக்கையாகி விடக் கூடாது, நான் அவளை ஆமோதிக்கவில்லை என்று (ஆண்டவனே, அப்படி நேராது காப்பாற்று) எண்ணி விடக் கூடாது என்பதற்காக. ஆயினும் நான் கலவரப்பட்டது எதைக் குறித்து என்று அவள் அறிந்து கொண்டாள்.

மாலையில் அலிமான் வாளியை எடுத்துக் கொண்டு தண்ணீருக்காகப் புறப்பட்டதும் என் தோள்மேலிருந்து மலை இறங்கியது போல அப்பாடா என்று பெருமூச்சு விட்டேன். நல்லதே இது, அவனைச் சந்திக்கட்டும் என்று நினைத்துக் கொண்டேன். அவளோ, விரைவாகத் திரும்பி வந்து விட்டாள். ஆற்றுக்கே போகாமல் வாய்க்காலிலிருந்து தண்ணீர் கொண்டுவந்தாள்.

''அம்மா, நான் வெந்நீர் போடுகிறேன். தலையைக் கழுவிக்கொள்'' என்று வாளியை இடத்தில் வைத்துவிட்டுக் கூறினாள்.

''அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். நாளைய தினம்தான் இருக்கிறதே. உனக்கு எங்கேனும் போக வேண்டுமானால்...'' என்றேன்.

அவள் என்னை இடை முறித்தாள்:

''நாளைக்கு வேலைக்குப் போக வேண்டுமே. நேரம் இருக்காது. நீ தலையைக் கழுவிக்கொள் அம்மா, நான் உனக்குத் தலை வாருகிறேன்'' என்று கூறினாள்.

கொப்பரையில் நீர் கொதிக்க வைத்து, தானே தலை கழுவிக்கொள்ள முடியாத சிறு பெண்ணுக்குப் போல எனக்குப் பணிவிடை செய்வதில் முனைந்தாள் அலிமான். முதலில் புளித்த பாலாலும் அப்புறம் வாசனை சோப்பா லும் தலையைத் தேய்த்து நீரால் அலம்பி விட்டு இன்னொரு தடவை சோப்பினால் தேய்த்துக் கழு வும்படி என்னைக் கட்டாயப் படுத்தினாள். நேரம் முழுதும் என்னை விட்டு ஓர் அடி அப்பால் நகராமல் நீரை மாற்றுவதும், சுடு நீரில் தண்ணீர் விட்டு விளாவுவதும் செம்பினால் எடுத்து என் தலையில் ஊற்றுவதுமாக வேலை செய்தாள். வேறு சமயமாயிருந்தால் நான் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டேன். என்னை நிம்மதியாக இருக்க விடு என்று சொல் லியிருப்பேன். ஆனால் அன்று மாலை அவ்வாறு செய்ய என்னால் முடியவில்லை. நான் குற்றவாளி போல உணர்ந்தேன், ஏனெனில் என்னால்தான்

அவள் காதலனைச் சந்திக்கப் போகவில்லை. ''அட கஷ்டமே, எதற்காக அவள் இப்படிச் செய்தாள்?'' எனக்கு என்மீதும் அவள்மீதும் வருத்தமாய் இருந்தது. அலிமானோ எல்லாவற்றிலும் மிகுந்த மனநிறைவு அடைந்திருந்தாள். சீப்பினால் வாரி என் கேசத்தைப் பின்னியவாறு துக்கம் பொங்கக் கூறினாள்:

''அம்மா, ஒரு காலத்தில் உன் பின்னல்கள் அடர்த்தியாக இருந்தன. ஆமாம், நீயும் அப்போது யுவதியாக இருந்தாய்.''

அவள் மெதுவாக என் தலையை வருடினாள், உள்ளங்கைகளால் கொஞ்சலாக என் முகத்தைத் தொட்டாள். நான் தலையை நிமிர்த்தவில்லை. என் கண்கள் குளமாயின. ''என்னிடம் விடை பெற்றுக் கொள்கிறாள் போலும்'' என்று ஏக்கத்துடன் நினைத்தேன். அப்புறம் அவள் என் தலையைப் பின்னிவிட்டுத் தன் பழங்கால அத்தரைப் பெட்டியிலிருந்து எடுத்தாள். காஸிம் அதை வாங்கினான், அலிமான் இவ்வளவு காலமாக அதைக் காப்பாற்றி வைத்திருந்தாள். நான் மறுத்து ஒதுக்கினேன்.

''நீ என்ன, அலிமான், கடவுள் உன்னைக் காப்பாராக! இது எனக்கு எதற்கு? கிழ வயதில் வெட்கக் கேடு, ஜனங்கள் சிரிப்பார்கள்!'' என்றேன்.

அவள் என் பேச்சைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. குதூகலமாகச் சிரித்தாள். என் முகம், கழுத்து, தலை எங்கும் அத்தரைப் பூசினாள். சீசாவில் மிஞ்சியிருந்த அத்தர் முழு

வதையும் கவிழ்த்து விட்டாள். பிறகு என்னைத் தழுவிக் கொண்டாள், எல்லாப் புறங்களிலிருந்தும் பார்வையிட்டாள்.

''ஆகா, நீ எவ்வளவு இளமையும் அழகும் உள்ளவள் ஆகிவிட்டாய் பார்!'' என்று தனது வேடிக்கையால் மகிழ்ந்தாள்.

நானும் குதூகலம் அடைந்தேன். தேநீர் பருகிய பின்பு அலிமான் சொன்னாள்:

''இப்போது இளைப்பாறுவோம், அம்மா, இதோ உனக்குப் படுக்கை விரிக்கிறேன்.''

அன்று இரவு நாங்கள் இருவருமே உறங்கவில்லை. அலிமான் ஏதோ தனது எண்ணத்தில் ஆழ்ந்து, மூலையில் பெருமூச்செறிந்தாள், புரண்டு புரண்டு படுத்தாள். என் உள்ளமோ அவளாலேயே நிறைந்திருந்தது. மால்வா மலர்ச் செண்டும் கையுமாக அலிமான் கோதுமை வயல் ஊடே அறுவடை இயந்திரத்தை நோக்கி ஓடியதும், மலர்களை இயந்திரத்தின் படிகளில் வைத்துவிட்டுக் குறும்புத் தோற்றத்துடன் திரும்ப ஓடிவந்தும் ஒரு முறை காட்சி அளித்தது. காஸிமைக் குதிரை மேல் அமர விடாது அவள் தடுத்ததும் சிறு குழந்தை போல அழுது கொண்டே அவன் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டதும் மறு முறை தென்பட்டது. பின் ஒரு தடவை ரயில் நிலையத்துக்கு எங்கள் பயணம் நினைவு வந்தது. நாங்கள் வண்டியில் வேகமாகப் போய்க் கொண்டிருப்பது போலவும், கடும் பனியால் முழுதும் கன்றிச் சிவந்த கன்னங்களும் மேலெல்லாம் அப்பிய வெண்பனி

யுமாக அலிமான் என் அருகே அமர்ந்திருப்பது போலவும் பிரமை உண்டாயிற்று. சால்வை மேலும் வெளித் துருத்திய மயிர்க் குஞ்சங்கள் மீதும், கழுத்துப்பட்டை மேலும் வெண்பனி செறிந்திருந்தது. இதனால் அலிமான் இன்னும் அதிக வனப்புடன் திகழ்ந்தாள். அகல விரித்த கைகளுடன் அவள் என்னை நோக்கிப் பாய்ந்து, ''அம்மா-ஆ! நாம் விதவைகள், ஆக்கங்கெட்ட கைம் பெண்கள்!'' என்று கதறிய காட்சி ஒரு தடவை முன்னே தெரிந்தது. கரிய உடை அணிந்து ட்யூலிப் மலர்களுடன் செம்மண் தரையில் அவள் என்னை விட்டு ஓடிச் சென்றது மறு முறை தோற்றம் அளித்தது. எங்களை ஒன்றிணைத்தவை அனைத்தையும் நான் வரிசையாக நினைவுபடுத்திக் கொண்டு, அலிமான் அந்த மேய்ப்பனுடன் அவனது மந்தையை உலர் படுகை நிலத்தில் மேய்த்தவாறு செல்வதைச் சட்டென்று கற்பனை செய்து கொண்டேன். ''மன்னித்துவிடு, அம்மா, நான் போகிறேன். என்னைப் பற்றிக் கெடுதலாக நினைக்காதே. விடை கொடு, அம்மா!'' என்று அவள் சொல்வது காதில் படுவது போன்று பிரமை உண்டாயிற்று. ஆற்றின் செங்குத்தான கரையோரமாக அவள் பின்னே ஓடியவாறு நான் கையாட்டி, ''போய் வா, என் ஒளியே! என் தாரகை அணைந்து விட்டது. போய்வா, அலிமான்! சுகமாக இரு, போய்வா!..'' என்று அவளை வழியனுப்பினேன். ''டேய் தம்பீ!'' என்று மேய்ப்பனை விளித்து, ''இதோ பார், அவள் மனம் நோகச்

செய்யாதே. என் மருமகளேப் பேணிக் காப் பாற்று. இல்லாவிட்டால் உன்னேச் சபிப்பேன், பயங்கரமான கொடுஞ் சொற்களால் உன்னேச் சபிப்பேன்!'' என்று கத்தினேன். கண்ணீர் என் முகத்தில் பெருகித் தலேயணேயை நனேத்தது. நான் அலிமான் காணுதவாறு தலேயை மூடிக் கொண்டு மெல்ல அழுதேன்.

அடுத்த நாள் வேலேயிலிருந்து திரும்பியதும் அலிமான் எங்குமே போகவில்லே. மாலேயில் வீட்டிலேயே தங்கிவிட்டாள். அதன் பிறகு மேய்ப்பன் மந்தையை எங்கோ ஓட்டிப் போய் விட்டான். அப்புறம் அவனேக் கண்ணிலேயே காணவில்லே. இதனுல் அலிமான் துயரடைந்தது தெரிந்தது.

''அவன் உன் மனதுக்கு ஏற்றவன் என்ற போது நீ என்னேத் தூவென்று தள்ளிவிட்டு அவனேடு போயிருக்க வேண்டியதுதானே! ஐயோ அப்பாவிப் பெண்ணே, அதிர்ஷ்டக்கட் டையே! எதற்காகத்தான் உனக்கே இந்தத் துன்பத்தை விளேத்துக் கொள்ளப் பிறந்தாயோ?'' என்று மனதுக்குள் அவளே நொந்து கொண் டேன், அவளுக்காக இரங்கினேன். ஆனுல் நாட் கள் சென்றன, இவை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து விட்டன.

இளவேனில் தொடக்கத்தில் அந்த மேய்ப்பன் மறுபடி எங்கள் வட்டாரத்தில் தோன்றினுன். வெள்ளப்படுகையில் அவன் ஆடுகளே மேய்த்துக் கொண்டிருந்த இடத்தில் நான் அவனேக் கண் டேன். அலிமான் மீண்டும் மாலே வேளேகளில்

வெளியே போகவும் இரவு வெகு நேரம் கழித்துத் திரும்பவும் ஆரம்பித்தாள். நான் அவளிடம் ஒன்றும் சொல்லவில்லை. அவள் தானே தனது விதியை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு நாள் இரவு நான் நெடு நேரம் அலிமானுக்காகக் காத்திருந்தேன். ஊர் அடங்கலும் உறங்கிற்று. நானும் விளக்கை அணைத்து விட்டுப் படுத்துக்கொண்டேன். ஆனால் எனக்கு உறக்கம் பிடிக்கவில்லை. நெஞ்சு கனத்தது, சஞ் சலப்பட்டது. அலிமானை எதிர்பார்த்தவாறு, சன்னலுக்கு வெளியே ஏற்பட்ட சிறு ஓசை ஒவ்வொன்றையும் உற்றுக் கேட்ட வண்ணமாக இருந்தேன். வெளியே தண்மதி ஒளி வீசியது. மேகங்கள் சில வேளைகளில் விளிம்புகளை முழுமதி மேல் மோதின. சந்தடியற்ற இளவேனில் பருவம். எனக்குக் காய்ச்சல் அடிப்பது போல் இருந்தது. குளிரினால் அல்ல, தனிமையால். மென்மயிர்த்தோல் கோட்டைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்த படியே தூங்கி வழிந் தேன். பிற்பாடு எதனாலோ திகில் கொண்டு கண் விழித்தேன். பார்க்கிறேனே, அலிமான் வீட்டுக்குள் வந்து விட்டாள். அவளது உடை யின் பொத்தான்கள் பிய்ந்திருந்தன, திறந்த மார்பு வெளித் தெரிந்தது, தலைமயிர் கலைந் திருந்தது, கண்கள் கலங்கியிருந்தன. குடித்து மயங்கியிருந்த நிலையில் அவளை அப்போதுதான் முதல் தடவையாகப் பார்த்தேன். நிலைவாயிலைக் கடந்து உள்வரும் போது அவள் தள்ளாடி

அனேகமாக விழத் தெரிந்தவள் அடுப்பை ஆதரவாகப் பிடித்துக் கொண்டு தப்பினாள். அவள் தலை ஆடியது. எனக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது.

''என்ன பார்க்கிறாய்?'' என்று தலையை நிமிர்த்திக் கொண்டு கேட்டாள். ''எதற்காக அப்படி உறுத்து நோக்குகிறாய் என்னை? ஆம், நான் குடிகாரி. ஆம், வோத்கா குடித்தேன். செய்வதற்கு வேறு என்ன இருக்கிறது எனக்கு? நான் குடிக்கா விட்டால் வேறு யார் குடிப்பது? ஊம்? என்ன? கம்மென்று இருக்கிறாயே?'' என்றாள்.

எனக்கு வாய் அடைத்துப் போயிற்று, பேச நா எழவில்லை. என் மருமகள் எந்த நிலைக்கு இழிந்து விட்டாள் என்பதைக் காணவே பயங்கரமாய் இருந்தது. அலிமான் அடுப்பைப் பிடித்துக் கொண்டு அப்படியே நின்றுகொண்டிருந்தாள். தலையைத் தொங்கப் போட்ட படியே திடீரென்று கிசுகிசுத்தாள்:

''அம்மா, உனக்கு ஒன்றும் தெரியாது. நானே... நான்... நான் இன்றைக்கு... நினைவிருக்கிறதா, காஸிமை வழியனுப்பிய போது நாம் ஆற்றுக்குப் போனோமே. அதே இடத்தில்...'' வாக்கியத்தை முடிக்காமலே அவள் வீரிட்டாள், தலையைப் பற்றிக்கொண்டாள், தரையில் விழுந்து கோவென்று கதறலானாள்.

அப்போதுதான் நான் தன் நினைவுக்கு வந்தேன். அவளிடம் பாய்ந்து சென்று, அவளைக் கட்டிக் கொண்டு மார்புடன் அணைத்தேன்.

''உனக்கு என்ன, அலிமான்? எதற்காக அழு கிறாய்? சொல்லேன்? துக்கம் கட்டு மீறிப் போய் விட்டதா? அல்லது யாரேனும் மனத்தைப் புண் படுத்தி விட்டார்களா? சொல்லு, சொல்லு எனக்கு! அல்லது என் மேல் மனத்தாங்கல் கொண்டிருக்கிறாயா? மனத்தாங்கல் கொண்டி ருந்தால் உள்ளத்தில் இருப்பதைச் சொல்லி விடு...'' என்றேன்.

''இல்லை, இல்லை, அம்மா, என் அருமை அம்மா!'' என்று அலிமான் தொண்டை தழு தழுக்கக் கண்ணீருடன் மொழிந்தாள். ''பாவம் என் அம்மா, துர்ப்பாக்கியசாலியே, தனியளே! நீ ஒன்றையுமே அறியாய்... அறிந்தாலும்தான் உன்னால் என்ன செய்ய முடியும்? ஐயோ, அம்மா, அம்மா, ஐயோ, அம்மா!''

நனைந்த முகத்தை என் மார்பில் புதைத்துக் கொண்டு வெகு நேரம் அவள் இப்படியே முனகிக் கொண்டிருந்தாள். பிறகு கொஞ்சங் கொஞ்சமாக நிம்மதி அடைந்து உறங்கிவிட் டாள். ஆனால் தூக்கத்தில் கூட அவள் தேம்பு வதையும் முறையீட்டுடன் முனகுவதையும் தொடர்ந்தாள். விடியும் வரை நான் அவள் தலைமாட்டில் உட்கார்ந்து மேற்கொண்டு நாங் கள் என்ன செய்வது என்று மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தேன். அவளிடம் மனத் தைத் திறந்து பேசிவிடுவது என முடிவு செய் தேன். ஆனால் காலையில் அவள் என்னிடம் முகங் கொடுத்துப் பேசவே தயாராயில்லை. போதாக் குறைக்கு அவளுக்குக் குமட்டல் வேறு

எடுத்தது. முந்திய இரவு நிகழ்ச்சியை நினைவு படுத்த வேண்டாம் என்று மௌனமாக விழிகளால் கெஞ்சினாள். நாங்கள் வேலைக்குப் புறப் பட்ட போது தான் வெளி வாயிலில், ''என்னை மன்னித்துவிடு, அம்மா'' என்று மெல்ல மொழிந்தாள்.

நானும் அவளை மேற்கொண்டு கலவரப் படுத்த விரும்பவில்லை.

மூன்று மாதங்கள் கழிந்தன. படையிலிருந்து ஓடிவந்த அதே ஜென்ஷென்குல் பற்றிய விவகாரத்தின் விசாரணை கோடைகாலத்தில் நடந்தது. போர் முடிந்த பின் வெளிப்படையாகக் கிராமத்துக்கு வர அவன் தயங்கினான், ஆனால் இரவு நேரங்களில் தலைமறைவாக வீட்டுக்கு வந்து போனான் என்று தெரிந்தது. கஸாக்ஸ்தானில் எங்கோ ஒளிந்து கொண்டு, கள்ள வியாபாரத்தில் ஈடுபட்டான், திருடிய கால் நடைகளை விற்றான், அப்போது அகப்பட்டுக் கொண்டான். அவனுடைய முந்திய வேலைத் தனங்கள் வெளிப்பட்டுவிட்டன, ஆகவே நேர்முக விசாரணைக்காக அவன் எங்கள் கிராமத்துக்கு இட்டு வரப்பட்டான். கிராம சோவியத்திலிருந்து அஞ்சல்காரன் என்னிடம் குதிரையேறி வந்து, ''நீ சாட்சியாக அழைக்கப் பட்டிருக்கிறாய்'' என்று தெரிவித்தான்.

நான் புறப்பட்டேன். வழியில் அலிமான் எதிர்ப்பட்டாள். வேலையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தாள். சோர்ந்து, மனமுடைந்து போய் எல்லோரிடமிருந்தும் தனித்து ஒதுங்கி

நடந்தாள். அந்தக் கோடைகாலத்தில் அவள் முகம் கொஞ்சம் கறுத்து விட்டது. எனக்கு அவள் மேல் இரக்கம் உண்டாயிற்று. வீட்டில் அவள் தனியாக உட்கார்ந்திருக்க வேண்டாம் என்பதற்காக, ''வா குழந்தாய், அலுவலகத் துக்குப் போவோம். வீட்டுக்குச் சேர்ந்தாற் போலத் திரும்பலாம்'' என்று அழைத்தேன்.

''இல்லை அம்மா. அங்கே நான் செய்வதற்கு என்ன இருக்கிறது? எனக்குத் தலை வலிப்பது போலிருக்கிறது. வீட்டுக்குப் போகிறேன்'' என்று பதில் அளித்தாள்.

''சரி, போ. ஆனால் படுத்து இளைப்பாறு. பசுவை நானே கறந்துகொள்கிறேன்'' என்று சொன்னேன்.

கிராம சோவியத் அருகே முழுவதும் மூடப் பட்ட மோட்டார் நின்று கொண்டிருந்தது, சாட்சிகளாக அழைக்கப் பட்டவர்களும் வேலை யிலிருந்து திரும்பும் வழியில் இங்கே வந்தவர் களும் வாசலில் குழுமியிருந்தார்கள். வெகு காலமாக, ஒரு ஏழு வருஷங்களாக, நான் ஜென்ஷென்குலைப் பார்க்கவில்லை. மோசடி வாழ்க்கை அவனுக்கு லாபகரமாகவே இருந்தி ருக்கிறது என்பது புலப்பட்டது. தளதளப்புள்ள பருத்துக் கொழுத்த மேனியனாக, முறைப்புடன் கோணலாக நோக்கியவாறு சன்னலருகே பெஞ் சியில் உட்கார்ந்து கொண்டு, யாருடைய கேள் விக்கோ பதிலாக வள்ளென விழுந்து கொண் டிருந்தான்:

''நீ சொல்கிறாய், நான் திருடன் என்று.

நீங்கள் என்னைக் கையுங் களவுமாகப் பிடித்தீர்களா? நான் திருடியதைக் கண்ணுரக் கண்டீர்களா? கிடையாது! ஆகவே வீண் பழி சாட்டாதே. நீ நூறு தரம் சொன்னுலும் இதெல்லாம் வெட்டிப் பேச்சு. எதார்த்த உண்மை வேண்டும், எதார்த்த உண்மை!''

இதைக் கேட்டதும் நான் சன்னலை விரியத் திறந்து, தெருவிலிருந்த படியே கத்தினேன்:

''நீ புளுகுகிருய், பன்றிப் பயலே! உனக்கு எதார்த்த உண்மையா வேண்டும்? இதோ, நான் தான் எதார்த்த உண்மை!''

''அம்மா, உள்ளே வாருங்கள்'' என்று மேசைக்குப் பின்னிருந்து எழுந்து நின்று என்னை அழைத்தார் விசாரணை அதிகாரி.

நான் உள்ளே போய் உடனேயே பேசத் தொடங்கினேன்:

''ஆம், நாங்கள் உன்னைக் கையுங்களவுமாகப் பிடிக்கவில்லைதான். உன்னை விரட்டிக்கொண்டு திரிய எங்களுக்கு நேரமும் இல்லை. அப்போது நாங்கள் நகங்களால் தரையைச் சுறண்டி உழுது கொண்டிருந்தோம், போர்முனைக்காகத் தானியம் பயிரிட்டுக் கொண்டிருந்தோம். குழந்தைகளின் உணவுக்காக நாங்கள் அப்போது உதிர்ந்த தானியக் கதிர்களை அரித்துத் திரட்டிக் கொண்டிருந்தோம். நீயோ, எங்கள் குதிரைகளை ஓட்டிச் சென்ருய், ஏர்க்காலில் பூட்டியிருந்த உழவு மிருகங்களை அவிழ்த்துத் திருடிப் போனுய். ஒவ்வொரு தானியமணியாக நாங்கள் சேகரித்த கடைசி விதைகளை அப்போது நீ பறித்துச்

சென்றாய். குழந்தைகளிடமிருந்து நாங்கள் பிடுங்கிக்கொண்டோம், எங்களிடமிருந்து நீ அபகரித்தாய். எனவே நீ பகைவன் என்று ஆகிறது. நான் உன்னை விரட்டிக் கொண்டு போன போது, ''நில்! நான் உன்னை அறிவேன், ஜென்ஷென் தல், நில்!'' என்று கத்தினேன். நீ சட்டென்று திரும்பி என் மேல் துப்பாக்கியால் சுட்டாய். இதுதான் எதார்த்த உண்மை!''

நான் பேச்சை நிறுத்தினேன்.

''நன்றி உங்களுக்கு, அம்மா. இப்போது நீங்கள் போகலாம். வீட்டுக்குப் போகலாம்'' என்று விசாரணை அதிகாரி என்னிடம் சொன்னார்.

கிராம சோவியத் அலுவலகத்திலிருந்து நான் வெளியே வந்ததும் வராததுமாக ஜென்ஷென் தலின் மனைவி கதவை நோக்கித் தாவி வந்தாள். வெறிபிடித்தவள் போல என்மேல் பாய்ந்து கூச்சலிட்டாள்:

''அட ஒண்டிக் கிழமே! நீ உண்மையைத் தேடுகிறாயா? உண்மையோ உன்னைத் தண்டிக்கிறது. உனக்கு அப்படித்தான் வேண்டும். அழுதது எல்லாம் போதாது, இப்போது இன்னும் அழப் போகிறாய். உன் மருமகளுக்கு வயிறு பெருத்திருப்பது எப்படி, ஊம்? உன் கண்ணெதிரே உன் ஓடுகாலி மருமகள் வயிற்றைப் பானையாக்கிக் கொண்டு வளைய வருகிறாள், நீ என்னடா என்றால் உண்மையைத் தேடுகிறாய். இப்போது இரண்டு பேருமாகச் சேர்ந்து தேடுங்கள் உண்மையை, வெட்கங்கெட்ட ஜென்மங்களா!''

ஆட்கள் அவளை என்னிடமிருந்து அப்பால் விலக்கி மூலையில் தள்ளி அவள் வாயைப் பொத்தினார்கள்.

''அவளை விட்டுவிடுங்கள், தொடாதீர்கள்!'' என்று அவர்களிடம் சொல்லிவிட்டு நான் மௌனமாக வீட்டைப் பார்க்க நடந்தேன்.

வழியில் புழுதிதான் அவ்வளவு கொதித்ததோ, வெட்கம்தான் என் பாதங்களைச் சுட்டதோ, அறியேன். ஆனால் ஆரம்பத்தில் நான் ஓடாத குறையாகத் தரையில் கால் பாவாமல் விரைந்தேன். அப்புறம் மெதுவாக நடந்தவாறு எண்ணங்களை ஒழுங்கு படுத்திக் கொள்ளலானேன். எனக்கு இந்த விஷயம் மூளையில் படவே இல்லை. இதை நான் அனுமானித்திருக்கலாமே. சமீப காலத்தில் அலிமான் விந்தையாக மாறியிருந்தாள், வாய் மூடியாக, ஜனங்களுடன் பழகாமல் ஒதுங்குபவளாக வளைய வந்தாள். சொந்தத் தோழிகளிடமிருந்து கூட விலகி விலகிப் போய்க் கொண்டிருந்தாள். அந்த மேய்ப்பனுக்கும் அவளுக்கும் ஒன்றும் ஒத்து வராததுதான் இதற்குக் காரணமாயிருக்கும் என்று நினைத்தேன். இளவேனிலிலேயே அவன் மலைக்குப் போய்விட்டான், அவன் சுவடு தேய்ந்து மறைந்து விட்டது. அவர்களுக்குள் விஷயம் சரிப்படவில்லை, அதனால்தான் அவள் ஏக்கம் பிடித்துப் போயிருக்கிறாள் என்று எண்ணினேன். உண்மையிலோ, விஷயம் முற்றிலும் வேறாக இருந்தது. ஐயோ, என்ன கஷ்டம்! ஆனால் இப்படி நடக்கும் என்று யார் கண்டார்கள்? என் மூளை குழம்

பிற்று, செய்வதென்ன என்று தெரியாமல் திகைத்தேன். மறுநாள் மாலை விளக்கேற்றும் நேரத்தில் ஆயஷா என்னைத் தன் வீட்டிற்கு அழைத்தாள். தேநீர் பருகிக்கொண்டே, உரை யாடலுக்கு நடுவில் அவள் பேச்சோடு பேச் சாய்ச் சொன்னாள்:

''ஜென்ஷென்குலின் மனைவி இரவோடு இர வாகக் கிராமத்திலிருந்து எங்கோ போய்விட் டாள்.''

நான் பேசாதிருந்தேன். எனக்கு என்ன அக்கறை இதிலே? போய்விட்டாளாக்கும், போகட்டுமே. அவள் இஷ்டம். பிற்பாடு, ஓர் இரண்டு ஆண்டுகள் சென்ற பிறகே உண்மை நிகழ்ச்சி எனக்குத் தெரிய வந்தது. ஜென்ஷென் குலின் மனைவி வீட்டுக்கு இரவில் ஆட்கள் வந்தார்களாம். அவளுடைய சாமான்களை எல் லாம் வண்டியில் ஏற்றினார்களாம். ''எங்கு வேண்டுமோ போ. எங்கள் கிராமத்தில் உனக்கு இடம் இல்லை'' என்றார்களாம். இதன் பின்பு அலிமானுக்கும் எனக்கும் நேர்ந்த துன்பத்தைப் பற்றி ஒருவரும் என்னிடம் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஒருவேளை அவளிடமே யாராவது ஏதேனும் சொல்லியிருக்கலாம். ஜனங்கள் தங்களுக்குள் பலவிதமாக நினைத்திருக்கக் கூடும். சிலர் பரிவு காட்டியிருப்பார்கள், சிலர் அவளை நிந்தித்திருப்பார்கள். ஆனால் என்னிடம் எவரும் ஜாடைமாடையாகக் கூட இதைப்பற்றிக் குறிப் பிடவில்லை. இதற்காக மக்களுக்குப் பெருத்த நன்றி. இத்தனை ஆண்டுகள் கடந்து விட்டன,

14-538

ஆயினும் எல்லோரும் முன்போலவே என்னிடம் மரியாதை காட்டுகிறார்கள்.

அலிமான் கருவுற்றிருப்பது எனக்குத் தெரிய வந்த பிறகு எங்கள் இருவரது உறவிலும் எவ்வித மாறுதலும் நிகழவில்லை. முன் போலவே வாழ்ந்தோம், வேலை செய்தோம், எல்லா விஷயங்களையும் கலந்து ஆலோசித்தோம். தான் தாய் ஆகப் போவதைப் பற்றி மட்டும் அலிமான் வாயே திறக்கவில்லை. தயங்கினளோ, வேளை வரும் போது சொல்லிக் கொள்ளலாம் என்று இருந்தாளோ தெரியாது. நானும் இதைப் பற்றிப் பேச்செடுக்கவில்லை, அவளுடைய தன் மதிப்பைக் காப்பாற்றினேன். முக்கியமானது என்னவென்றால், மனத்தில் நான் அவளை நிந்திக்கவில்லை என்பதே. எனக்கு அதற்கு உரிமை இல்லை, ஏனெனில் அவளுடைய வாழ்க்கை முழுவதும் என் கண்ணெதிரே கழிந்தது, நான் எல்லாவற்றையும் பார்த்தேன், எல்லா நிலவரங்களையும் புரிந்துகொண்டேன், ஓரளவு நானும் குற்றத்தில் பங்கு கொண்டிருந்தேன். அதனால் தான் நான் உடனேயே எனக்குள் சொல்லிக் கொண்டேன்: ''அலிமான் பாவம் செய்திருந்தால் அது நான் செய்த பாவமேதான், அவள் பெற்றெடுத்தால் அது என் குழந்தையேதான். எல்லா வெட்கத்தையும் எல்லாச் சுமைகளையும் துன்பங்களையும் நானே ஏற்றுக்கொள்வேன்'' என்று. விரைவிலோ தாமதித்தோ ஒரு நாள் வரும், அப்போது நாங்கள் தம் வசமின்றியே உரையாடத் தொடங்குவோம், நீண்ட மௌன

னத்திற்காக ஒருவரை ஒருவர் மன்னித்துவிடு வோம் என்பதை அவளும் அறிந்திருந்தாள், நானும் அறிந்திருந்தேன். ஆயினும் நாங்கள் பேச்சை இன்றிலிருந்து நாளைக்கும் நாளையிலி ருந்து மறு நாளுக்கும் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தோம். ஒரு நாள் எப்படியோ நான் பேச்சைத் தொடங்கியே விட்டேன்.

கோடைகால முடிவில், அலிமான் ஐந்து அல் லது ஆறு மாதக் கர்ப்பிணியாக இருக்கையில் ஒரு நாள் அதிகாலையில் நான் மாட்டை மந் தைக்கு ஓட்டிச் சென்றேன். மேய்ப்புக்காரப் பையன் அன்று காலை சேவல் குஞ்சு போலக் கொக்கரித்துக் கொண்டிருந்தான். மந்தை எங் கள் முகப்புக்கு நேரே வந்துவிட்டது. மாடுகளை ஓட்டிய படியே மேய்ப்பன் முகமெல்லாம் மலர என்னை நோக்கி முறுவலித்தான்.

''தல்கோனை அத்தை! வணங்குகிறேன். நல்ல சேதி கொண்டுவந்திருக்கிறேன், இனும் கொடுங் கள்! ஜோரோபேக் தாத்தாவின் மருமகள் குழந்தை பெற்றிருக்கிறாள்!'' என்றான்.

''மெய்யாகவா? எப்போது?''

''விடியற்காலையில்.''

''ஆணா பெண்ணா?''

''பெண், தல்கோனை அத்தை. அதற்கு வானம்பாடி என்று பெயரிடப் போகிறார்களாம். வானம்பாடி போல விடியற்காலையில் பிறந்திருக் கிறதே, அதற்காக!''

''நிரம்ப நல்லது. நீண்ட ஆயுளுடன் வாழட் டும். நல்ல சேதிக்காக நன்றி.''

யாரோ உலகில் பிறந்ததற்காக இந்த அனு தைப் பையன் இவ்வளவு ஆனந்தம் அடைந்தது என் நெஞ்சை மிகவும் உருக்கி விட்டது. இதனுல் நிறைந்த உள்ளத்துடன் நான் வீட்டுக் குள் போனேன். ஆனுல் நான் இரவும் பகலும் எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேனே அந்த விஷயத்தை அக்கணத்தில் நான் மறந்து விட்டது எப்படி நிகழ முடிந்தது? வாயிலுக்குள் வந்ததுமே கத்தினேன்:

''அலிமான், கேட்டாயா செய்தியை? ஜோரோ பேக்கின் மருமகள் பிரசவித்து விட்டாள். பெண் குழந்தை. கேட்டாயா? பாவம், நிரம்பக் கஷ்டப் பட்டுவிட்டாள். ஆண்டவன் புண்ணி யத்தில் எல்லாம் சுகமாக...'' என்று சொல்லி வந்தவள் வலியுற்ற பல்லால் கல்லைக் கடித்து விட்டவள் போல நறுக்கென்று பேச்சைக் கத் தரித்து விட்டேன்.

அலிமான் விழிகளைத் தாழ்த்தியவாறு உதடு களைக் கன்றிச் சிவக்கக் கடித்துக்கொண்டு மௌனமாக நின்ருள். அந்தக் கணத்தில் அவள் என்ன நினைத்தாள்? தான் பிரசவிக்கும் போது அந்தச் செய்தியை இவ்வளவு களிப்புடன் யாரும் மக் களுக்குத் தெரிவிக்கப் போவதில்லை என்ற எண் ணம் அவள் மனதில் பளிச்சிட்டதோ? எனது நைச்சியமின்மை காரணமாக வெட்கத்தினுல் எனக்கு உடம்பெல்லாம் தாங்க முடியாத காந் தல் ஏற்பட்டது. அவளை நேரிட்டு நோக்கத் துணிவு இன்றி நான் கணப்பருகே உட்கார்ந்து வறட்டிகளை நெருப்பில் போடுவதில் முனைந்

தேன் — அதற்கு எவ்வித அவசியமும் இல்லாத போதிலும். நான் திரும்பிப் பார்த்த போது அலிமான் முன் போலவே தரையை நோக்கி யவாறு சுவரருகே நின்று கொண்டிருந்தாள். என் இதயம் இரக்கத்தால் புண்ணுயிற்று. சிர மப்பட்டு எழுந்து அவள் அருகே சென்றேன்.

''உனக்கு என்ன, உடம்பு சரியாயில்லையா?'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை, அம்மா'' என்று பதில் அளித்தாள்.

''ஒருவேளை வேலை செய்வது கஷ்டமாய் இருக்குமோ, வீட்டிலேயே படுத்திரேன்.''

''கஷ்டம் எதுவும் இல்லை அம்மா. புகையிலை தொடுப்பது என்ன பிரமாத சிரமம்?'' என்று கூறி விட்டு அவள் வேலைக்குப் போய் விட்டாள்.

இன்னும் ஒத்திப் போட்டுக்கொண்டிருக்கக் கூடாது என்று அப்போது நான் தீர்மானித் தேன். அவள் நாணுவதற்கு ஒன்றும் இல்லை, புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் ஒரே நிகர்தாம், அவளுடைய குழந்தை எனக்குச் சொந்த மதலையாக விளங்கும் என்பதை அலி மானிடம் உடனே சொல்லிவிட வேண்டும். சொந்தப் புதல்வர்களைச் சீராட்டி வளர்த்தது போலவே அதையும் வளர்ப்பேன். அவள் இதைப் புரிந்து கொள்ளட்டும். தலையைத் தொங்கப்போட வேண்டாம். கர்வத்துடன் வாழட்டும். மக்களைத் துணிவுடன் நேரிட்டு நோக்கட்டும் — தாய் ஆவதற்கு அவளுக்கு உரிமை உண்டு.

இந்த எண்ணங்களுடன் நான் அவள் பின்னே ஓடினேன், அவளைக் கூவி அழைத்தேன்.

''அலிமான், நிமிட நேரம் பொறு. உன்னிடம் பேச வேண்டும், நில்!''

அவள் இது காதில் படாதது போலப் பாவனை செய்து, திரும்பிப் பாராமலே போய் விட்டாள்.

அன்று பூராவும் நான் தவித்துக்கொண்டிருந் தேன். ''இந்த மாதிரி இனி இருக்க முடியாது. சாயங்காலம் கட்டாயமாகச் சொல்லிவிடுகி றேன். அப்பொழுது தான் அவளுக்கும் எனக்கும் சுலபமாக இருக்கும்'' என்று நினைத்துக்கொண் டேன். ஆனால் எனது திட்டத்தைச் செயல் படுத்த எனக்கு வாய்க்கவில்லை. மாலையில் நான் வேலை முடிந்து திரும்பிய போது அலிமான் வீட்டில் இல்லை. நான் காத்திருந்து மனம் உலையலானேன். அவளுக்கு என்ன நேர்ந்தது? இவ்வளவு நேரமாக ஏன் திரும்பாதிருக்கிறாள்? தேடக் கிளம்பியவள் வீட்டிலிருந்து வெளி வந்த தும் பெக்தாஷைக் கண்டேன். பெரிய பசும் புல் கட்டு ஒன்றுடன் அவன் வேலிக் கதவுக்கு உள்ளே பேசாமல் வந்தான், பசு மாட்டின் தீனித் தொட்டியில் புல்லை அதே மாதிரி மௌள னமாகப் போட்டான். அப்புறந்தான் தணிந்த குரலில் சொன்னான்:

''தல்கோனே அத்தை. அலிமான் உங்களிடம் சொல்லச் சொன்னாள், அவளைத் தேட வேண் டாம் என்று. கைந்தீ கிராமத்தில் தன் வீட் டுக்குப் போகிறாளாம்.''

என் கால்கள் துவண்டன. நிலைப்படியில் உட்கார்ந்து விட்டேன்.

''எப்போது போனுள்?''

''மதியச் சாப்பாட்டுக்குப் பிறகு. சுமார் இரண்டு மணிக்கு முன்னுல். வழியோடு சென்ற மோட்டாரில்.''

நான் ஆணி அறைந்தாற் போல உட்கார்ந்திருந்தேன். உள்ளுக்குள் ஒரே குமட்டலாக, ஒரே இருளாக இருந்தது, என் சாவு நேரம் வந்து விட்டாற் போல. பெக்தாஷ் எனக்குத் தேறுதல் சொல்லலானுன்.

''நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள், தல்கோனை அத்தை. லாரி ஓட்டி அவளை முன் அறையில் உட்கார்த்திக்கொண்டார். அங்கே சௌகரியமாயிருக்கும்'' என்ருன்.

''ஐயோ, பெக்தாஷ், பெக்தாஷ். விஷயம் இவ்வளவுதான் என்ருல் எவ்வளவு நன்ருக இருக்கும்'' என்று நான் நினைத்துக் கொண்டேன். ஆயினும் அவனுடைய கள்ளங்கபடு அற்ற தேறுதல் மொழிகளுக்காக நான் அவனுக்கு நன்றி பாராட்டினேன். அந்த நாட்களில் அவன் பக்குவம் அடைந்த வாலிபன் ஆகியிருந்தான். கூட்டுப்பண்ணையில் வண்டி ஓட்டுபவனுகப் பணியாற்றி வந்தான். நான் அவனை உற்றுப் பார்த்தேன். அவன் எவ்வளவு மளமளவென்று உயரமாகி விட்டான், அவன் தோள்கள் திரண்டு அகன்றுவிட்டன என்பதை எண்ணி வியந்தேன். அவனது நடையும் குரலும் ஆண்மகனுக்கு ஏற்றவையாகத் திகழ்ந்தன. சாந்தமான, கவர்ச்சியுள்ள

முகம். அவன் சிறுவனுயிருக்கும் போதே எனக்கு அவன் மேல் பிரியம் உண்டு. எனக்கு மிகவும் துன்பகரமான அந்த நேரத்தில் அவன் என்னிடம் வந்தது எனக்கு இதமாயிருந்தது. பெக்தாஷ் வாய்க்காலிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து, தேநீர் தயாரிப்பதற்காக நீரைக் கொதிக்கவைத்து விட்டு முற்றத்தைத் தெளித்துப் பெருக்கலாணுன்.

''நீங்கள் களைப்பாறுங்கள், தல்கோனே அத்தை. நான் இதோ ஆப்பிள் மரத்தடியில் படுக்கை விரிக்கிறேன். அம்மா வருவாள். உங்கள் தேநீருக்காக ஏங்கிப் போயிருக்கிருள். இதோ வந்து விடுவாள்'' என்ருன்.

அலிமான் போன பிறகு நாட்கள் முடிவு அற்றவையாகத் தோன்றலாயின. அது வரை நான் என்னைத் தனியள் என்று எண்ணவே இடமில்லாதிருந்தது. உண்மையான தனிமை என்ன என்பதையே நான் அறியவில்லை. மூன்று நாட்கள் பொறுத்துப் பார்த்தேன். அப்புறம் எனக்குச் சகிக்க முடியாது போயிற்று. வீடு வீடாயில்லை, வாழ்க்கை வாழ்க்கையாயில்லை. எங்கேனும் ஊர் ஊராகச் சுற்றிஞல் தேவலை போலிருந்தது. அலிமான் என்ன நிலையில் இருக்கிருளோ என்று எண்ணும் போதோ, இன்னும் சங்கடமாக இருந்தது. கைந்தீயில் உள்ள உறவினர்கள் அவளைச் சுமுகமாக வரவேற்றிருந்தால் நல்லது. அப்படியில்லாமல், ''அப்போது எங்கள் பேச்சைக் காதில் வாங்கிக்கொள்ளவே மாட்டேன் என்ருய், இது உங்கள் விவகாரம்

அல்ல, எனக்கே தெரியும், நீங்கள் தலையிடாதீர்கள் என்று எடுத்தெறிந்து பேசினாய், இப்போது மானமிழந்து மறைவிடம் தேடி வந்திருக்கிறாயோ? இப்பொழுது நாங்கள் வேண்டியிருக்கிறதாக்கும்!'' என்று குத்திக்காட்டினாலோ? அவர்கள் அப்படிச் சொல்லக் கூடுமா? கட்டாயமாகச் சொல்லக்கூடும். அவள் தன்மானம் மிக்கவள் ஆயிற்றே. இந்தச் சுடுசொற்களைப் பொறுப்பாளா? தனக்கே ஏதேனும் செய்து கொண்டு விடாமலிருக்க வேண்டுமே, ஆண்டவனே, காப்பாற்று. ஐயோ, அலிமான், அலிமான். என் அருகே இருந்தாயானால் எல்லா அவமானத்தையும் நானே ஏற்றுக்கொண்டிருப்பேன், உன் மனதைப் புண்படுத்த எவரையும் விட்டிருக்க மாட்டேனே! இப்படி என்ன வெல்லாமோ நினைத்தேன், எத்தனையோ விதமாக ஊகங்கள் செய்தேன். பிறகு எனக்குள் சொல்லிக்கொண்டேன்: ''இல்லை. இப்படி இருப்பதில் பயன் கிடையாது. அங்கே புறப்பட்டுப் போகிறேன், விசாரித்து அறிகிறேன், நானே பார்த்துத் தெரிந்து கொள்கிறேன். அவளை மன்றாடிக் கேட்கிறேன். ஒருவேளை என் சொல்லுக்கு இணங்கி அவள் வீடு திரும்பக் கூடும். அவள் மட்டும் மறுபடி திரும்பி வந்தால் எவ்வளவு இன்பமாயிருக்கும்! திரும்பி வர அவள் இஷ்டப்படாவிட்டால், அப்புறம் ஒன்றும் செய்வதற்கில்லை. அவளை ஆசீர்வதித்து அழுது புலம்பி விட்டுத் திரும்பி வருகிறேன்.'' இவ்வாறு தீர்மானித்து அடுத்த நாளே புறப்பட்டேன். வீட்

டையும் பசுவையும் ஆய்ஷாவிடம் ஒப்படைத்தேன். அந்தத் திசையில் போய்க்கொண்டிருந்த லாரி ஒன்றை பெக்தாஷ் நிறுத்தினுன். லாரியின் பின் பகுதியில் நான் ஏறி அமர்ந்து கைந்தீ செல்லலானேன்.

நாங்கள் ஊரைக் கடந்து நாட்டுப்புறச் சாலே வழியே முன்னேறத் தொடங்கிய போது, அறுவடையான நிலத்தில் ஒற்றையடிப் பாதையோடு வந்து கொண்டிருந்த ஒரு பெண்ணேக் கண்டேன். அவள் அலிமான் என்று உடனே எனக்கு அடையாளம் தெரிந்துவிட்டது. என் அன்பு மகள், அருமை அலிமான்! அவள் என்னிடம், வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டாள். லாரியின் முன் அறைத் தடுப்பைக் குத்தித் தட்டி, ''நில்! நில்! நிறுத்து!'' என்று கத்தினேன். லாரி கொஞ்ச தூரம் ஓடிவிட்டு நின்றது. நான் மூட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு லாரியிலிருந்து பாய்ந்து இறங்கினேன். கிளம்பிய புழுதியில் சுற்றிலும் உள்ளவை எல்லாம் அடர்ந்த மூடுபனியில் போலச் சட்டென்று கண்ணுக்கு மறைந்து விட்டன. நான் அலிமானேக் கண்டது சொப்பனத்தில் தாஞே என்று கூட நினேத்து விட்டேன். புழுதி லாரியின் பின்னே கிளம்பி அடங்கியதும் நான் மறுபடி அலிமானேப் பார்த்தேன்.

''அலி-மான்!'' என்று உரக்கக் கூவினேன்.

எப்படி அவளிடம் ஓடினேன் என்பது எனக்கு நினேவில்லே. நாங்கள் ஒருவரையொருவர் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கண்ணீர் பெருக்கிஞேம்

என்பது மட்டுமே நினைவு இருக்கிறது. ஒரு வருக்காக ஒருவர் மிகவும் ஏங்கிப் போயிருந்தோம். ஆகையால் இத்தனை நாட்களாக மனத்தில் குமைந்து கொண்டிருந்த எண்ணங்களை எப்படி வெளியிடுவது என்று தெரியாமல், சொற்கள் அகப்படாமல் திண்டாடினோம். அலிமானை நான் கொஞ்சினேன், அவள் முகத்தை வருடினேன், ஒன்றையே திரும்பத் திரும்ப உரைத்தேன்:

"திரும்பி வந்துவிட்டாயா, ஊம்? திரும்பி வந்துவிட்டாயா, என் அருமை மகளே! என்னிடம், தாயாரிடம் திரும்பி வந்துவிட்டாய்! திரும்பி வந்துவிட்டாய்!"

அலிமான் பதில் சொன்னாள்:

"ஆமாம், திரும்பி வந்துவிட்டேன்! உன்னிடம் திரும்பி வந்துவிட்டேன் அம்மா! திரும்பி வந்துவிட்டேன்!"

நாங்கள் அந்த மாதிரி ஒருவரையொருவர் தழுவியவாறு நின்றுகொண்டிருந்த பொழுது அவளுடைய குழந்தை கருப்பைக்குள் இரண்டொரு தடவை அசைந்து வயிற்றில் காலால் இடித்தது. நாங்கள் இருவரும் இந்த இடிப்பை உணர்ந்தோம். அலிமான் வயிற்றின் மேல் கையை வைத்து உள்ளங்கையால் ஜாக்கிரதையாகத் தடவினாள். அந்தக் கணத்தில் அவளுடைய விழிகள் எனது வாழ்க்கையையே அடியோடு மாற்றி விட்டன. அவளைப் பற்றி இழிவான கருத்துக்கள் என் மனத்தில் எப்படித் தோன்ற முடியும்? ஏ, புனிதமான தாய்மையே!

இத்தகைய இன்பத்தின் ஒரு துளி மட்டுமே உன்னுடைய துன்பக் கடல் முழுவதற்கும் ஈடு செய்து விடுமே. அலிமானின் கன்னத்தோடு முகத்தைப் பொருத்தியவாறு அடக்க மாட்டாமல் விம்மி அழுதேன்.

''என் கண்ணே, என் இதய ஒளியே, என் செல்வமே! உனக்கு என்ன நேர்ந்து விடுமோ என்று எப்படிப் பயந்தேன்!''

''அழாதே, அம்மா. நான் அசடு, என்னை மன்னித்து விடு. உன்னை விட்டு நான் ஒரு போதும் போக மாட்டேன். ஒரு தரம் முயன்று பார்த்தேன், பலிக்கவில்லை. என்னால் தாங்க முடியாது போயிற்று, எப்போதும் உன்னையே நினைத்து ஏங்கிக் கொண்டிருந்தேன்'' என்று அலிமான் என்னைத் தேற்றினாள்.

நாங்கள் மனம் விட்டுப் பேசுவதற்கு மிகவும் ஏற்ற சந்தர்ப்பம் வந்து விட்டது என்று தீர் மானித்து நான் பேச்சைத் தொடங்கினேன்:

''எதற்காக நீ என்னை விட்டுப் போனாய்? என் மேல் கோபமா?''

அவள் என்ன பதில் சொல்வது என்று யோசிப்பவள் போலப் பேசாதிருந்தாள். பிறகு பெருமூச்செறிந்தாள்.

''என்னிடம் இதைப் பற்றிக் கேட்காதே அம்மா. உனக்கு இது எதற்காக? நீ என்னிடம் ஒன்றும் சொல்லாதே, நானும் உன்னிடம் ஒன்றும் கூறப் போவதில்லை. என்னை வதைக்காதே, அம்மா, ஏற்கனவே எனக்கு ஒரே துன்பம்'' என்றாள்.

இம்முறையும் அவள் உரையாட விரும்பாமல் விலகிச் சென்று விட்டாள். இப்படியே ஒவ் வொரு தடவையும். இதனால் தன்னுடைய நிலை மையைத் தான் இன்னும் மோசமாக்கிக் கொண்டாள் என்பதை ஏனோ அவள் புரிந்து கொள்ளவில்லை.

அந்த ஆண்டுக் கூதிர்காலம் மிகவும் நீடித்தது, ஒரே மழையும் தண்ணீருமாயிருந்தது. வானி லிருந்து ஊற்றாத நாள் ஒன்றுகூட இல்லை. ஒரே ஈரமான இந்த நீண்ட மழை நாட்களில் நாங்கள் பெரும்பாலும் வீட்டிலேயே உட்கார்ந் திருந்தோம். கூதிர்காலத்தைப் போலவே அலி மானும் வாடிச் சோர்ந்திருந்தாள். நாளுக்கு நாள் அதிக்க் கவலை தோய்ந்து காணப் பட் டாள். பேசுவதையும் சிரிப்பதையும் அறவே விட்டு விட்டாள். எப்போதும் ஏதோ சிந்தனை யில் ஆழ்ந்திருந்தாள். என் உள்ளம் கருகியது. அவள் பாவம், நிறைமாதக் கர்ப்பிணி. அவ ளுக்குக் கொஞ்சமாவது களிப்பு ஊட்டுவதற்கு, வேடிக்கை பேசியும் கொஞ்சியும் அவளைக் குஷிப் படுத்துவதற்கு நான் என்னவெல்லாமோ முயற்சி செய்தும் பயனில்லை. அவள் சின்னஞ்சிறுமி அல்ல. அவளது துன்ப துயரத்தை வேடிக்கை பேசிப் போக்க முடியாது. நான் மட்டுமே அல்ல, கஷ்ட காலத்தில் அவளுக்கு உதவ மற்ற வர்களும் முயன்றார்கள். ஆனால் என்ன செய்ய முடியும்? ஒரு நாள் பெக்தாஷ் எங்கள் வீட்டுக்கு வைக்கோல் கொண்டுவந்தான். அம்மா மறுபடி யும் வியாதியாய்ப் படுத்து விட்டாள் என்று

சொன்னான். நான் ஆய்ஷாவைப் பார்த்து வரப் போனேன். அவளுக்குக் காய்ச்சல், இருமல். நான் அவளைச் சிறிது கடிந்து கொண்டேன்.

''நீயேதான் பொறுப்பாளி. உடம்பைக் கவனித்துப் பேண வேண்டும் என்பது உனக்கே தெரியும், இருந்தாலும் அசட்டையாயிருக்கிறாய். அயலூருக்கு விருந்துக்குப் போகக் கிளம்பினாய், அதுவும் இந்த மாதிரிப் பருவ நிலையில்...'' என்றேன்.

அவள் குற்றப் பார்வையுடன் புன்னகை செய்தாள். மறுத்துச் சொல்வது அவளுக்குக் கடினமாக இருந்தது, ஏனெனில் அவர்கள் நான்கு மாதர்கள் பெக்தாஷின் வண்டியில் பக்கத்து ஊருக்கு யார் வீட்டுக் கலியாணத்துக்கோ போய் விட்டு அப்போதுதான் திரும்பியிருந்தார்கள். நான் வெளியே செல்ல ஆயத்தமானதும் ஆய்ஷா என்னைத் தடுத்து நிறுத்தினாள்.

''கொஞ்சம் பொறு, தல்கோனை. நீ கோபித்துக் கொள்ளா விட்டால் உன்னிடம் ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கிறது'' என்று கூறினாள்.

வாயில்வரை போனவள் ''சரி, சொல்லு'' என்று திரும்பி வந்தேன்.

''பக்கத்து ஊருக்கு நாங்கள் போனது கலியாணத்திற்கு அல்ல. அங்கே எனக்கு உறவினர் கிடையாது என்பதை நீயே அறிவாய். நாங்கள் ஒரு திட்டம் போட்டோம், உன்னைக் கலந்து கொள்ளாமலேதான்—அதற்காக எங்களை மன்னித்து விடு. நாங்கள் நல்லதையே விரும்பினோம். அந்தப் பையன் இருக்கிறானே,

மேய்ப்பன், அவனைப் பிடித்துக் கொடு கொடு வென்று கொடுத்தோம். இன்னின்ன மாதிரி விஷயம், அலிமான் கர்ப்பமாயிருக்கிறுள், நீ எட்டிக்கூடப் பார்க்க மாட்டேன் என்கிறுய். இது தருமா? நன்ருகவே இல்லை என்ரேம். ஆனல் எங்கள் முயற்சி பலிக்கவில்லை. முதலாவதாக அவனுக்கு மனைவி இருக்கிறுள். இரண்டாவதாக அவனிடம் மனச்சாட்சி இல்லை. எனக்கு ஒன்றும் தெரியாது, தெரிந்து கொள்ள விருப்பமும் இல்லை, எந்த விதத்திலும் இல்லை என்று மூஞ்சியைத் திருப்பிக் கொண்டான். இந்த லட்சணத்தில் அவன் மனைவி வேறு விஷயம் என்ன என்று மோப்பம் பிடித்து விட்டாள். அவள் மகா சண்டைக்காரி. கத்திக் கூப்பாடு போட்டு எங்களை ஏசிஞள். ஒரே வெட்கக்கேடு. எங்களை அவமதித்து விரட்டி விட்டாள். வரும் வழியில் குளிர் மழையில் அகப்பட்டுக் கொண்டோம். தொப்பலாக நனைந்து போனேம். அது தான் என்னைக் கிடத்தி விட்டது.. இது போனல் போகிறது. அலிமான் விஷயம் இப்போது என்ன ஆகும்? ஊம்?'' — இவ்வாறு கூறிவிட்டு ஆய்ஷா வாயைப் பொத்திக் கொண்டு தேம்பிஞள்.

''அழாதே, ஆய்ஷா. நான் உயிரோடு இருக்கும் வரையில் அவள் மனம் நோக விட மாட்டேன்!'' என்று சொல்லிவிட்டு வெளியேறினேன். அவளிடம் வேறு என்ன கூற முடியும் என்ஞல்?

கடினமான நாட்கள் நீடித்துக் கொண்டு

போயின, பிரசவ காலம் சமீபித்தது. நானோ அலிமான் மீது வைத்த பார்வையை அகற்ருமல் கண் காணித்து வந்தேன். அவள் முகப்புக்குப் போனால் நானும் பின்னே போனேன். ஓர் அடி கூடப் பின் தங்கவில்லை. வலியெடுக்கும் போது அருகில் இருக்கத் தவறிவிடுவோமோ என்று அஞ்சினேன். இல்லாவிட்டால் அவளை இப்படித் தொந்தரை செய்வேனு?

ஒரு நாள் அவள் கம்பளி உடை அணிந்து கொண்டு தலைக் குட்டையைக் கட்டிக் கொண்டாள்.

''எங்கே குழந்தாய் புறப்படுகிருய்?'' என்று கேட்டேன்.

''ஆற்றங்கரைக்கு'' என்ருள்.

''இந்த ஈரத்தில் அங்கே என்ன வேலை? போக வேண்டாம். வீட்டிலேயே இரு. அது தான் நல்லது'' என்று சொன்னேன்.

''இல்லை, போகிறேன்.''

''அப்படியானால் நானும் வருகிறேன். உன்னைத் தனியே விட மாட்டேன்'' என்றேன்.

அவள் என்னை உறுத்துப் பார்த்தாள். இத்தனை நாட்களாக அவள் நெஞ்சில் குமுறிக் கொண்டிருந்தவற்றை எல்லாம், தன் ஆத்திரத்தை எல்லாம் என் மேல் கொட்டி விட்டாள்.

''நீ என்ன என் காலைச் சுற்றிக் கொண்டு விட்டாய்? என்னிடம் உனக்கு என்ன வேண்டும்? என் பின்னேடு நிழல் போல வந்துகொண்டிருக்கிருயே, எதற்காக? என்னை நிம்மதியாக இருக்க விடு. நான் செத்துப் போய்விடுவேன் என்று

நினைக்கிறாயா? நான் ஒன்றும் சாக மாட்டேன்!'' என்று சொல்லிக் கதவைப் படீரென்று சாத்திவிட்டு வெளியே போய் விட்டாள்.

என் மனக் கதவை அவள் படீரென்று சாத்தியது போல் இருந்தது, என் மனம் மிகவும் புண்பட்டது, ஆயினும் வீட்டில் உட்காரவில்லை, புறக் கடைக்குப் போய் அலிமான் எங்கே என்று பார்த்தேன். அவளைக் காணவில்லை. வெள்ளப் படுகைக்குப் போய்விட்டாள்.

கண்ணுக்கு அனேகமாகப் புலப்படாத சிறு தூறல் அடித்துக் கொண்டிருந்தது, குளிர்ந்த ஆவி பெய்வது போல. காற்று நரை மேகங்களின் பறட்டைத் தலையைப் பிடித்து இழுத்துப் போய்க் கொண்டிருந்தது. தோட்டத்தில் செளகரியமாக இல்லை. மரங்கள் மொட்டையாக, விறைத்துப் போய், நனைந்து கருண்ட கிளைகளுடன் நின்றன. எல்லா மக்களும் வீடுகளில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். சுற்று முற்றும் ஆள் நடமாட்டமே இல்லை. புகை போன்ற பனி மூட்டத்தில் தொலைவில் மங்கலாகத் தென்பட்டன இருண்ட மலைத் தொடரின் சிகரங்கள்.

நான் சற்று நேரம் எதிர்பார்த்து விட்டு அப்புறம் அலிமானைப் பின் தொடர்ந்தேன். என்னை அவள் எப்படி வேண்டுமானாலும் திட்டிக் கொள்ளட்டும். வலி எடுக்கும் போது எங்கேனும் ஈரத்தில் படுத்துக் கொண்டாளானால் மோசம். காய்கறித் தோட்டத்துக்கு அப்பாலிருந்த ஒற்றையடிப் பாதைக்கு வந்ததும்

நான் அலிமானைக் கண்ணுற்றேன். அவள் திரும்பி வந்து கொண்டிருந்தாள். கால்களைச் சிரமத்துடன் எடுத்து வைத்தவாறு, தலையைத் தொங்கப் போட்டபடி மெதுவாக நடந்து கொண்டிருந்தாள். நான் விடுவிடென்று வீடு திரும்பி, தேநீருக்கு நீர் கொதிக்க வைத்தேன், புளித்த பாலாடையும் முட்டையும் சேர்த்துச் சீக்கிரமாக அடை தட்டினேன். அப்புறம் கம்பளத்தின் மேல் வெளுத்த துணியை விரித்து, குளிர்கால ஆப்பிள்களில் நன்கு சிவந்தவையாகப் பொறுக்கி எடுத்து வைத்தேன். அலிமான் உள்ளே வந்தாள். மேசை விரிப்பைக் கண்டதும் என்னை மௌனமாக நோக்கி முறுவலித்தாள்.

''குளிரில் விறைத்துப் போனாயா, மகளே. உட்கார். தேநீர் பருகு, அடை சாப்பிடு'' என்றேன்.

''இல்லை, எனக்கு ஒன்றுமே சாப்பிட வேண்டும் போல் இல்லை, அம்மா. ஓர் ஆப்பிள் மட்டும் கொடு. சாப்பிட்டுப் பார்க்கிறேன்'' என்று பதிலளித்தாள்.

''ஒருவேளை உனக்கு ஏதேனும் வருத்தமா, அலிமான்? சொல்லு என்னிடம்'' என்று தூண்டித் துளைத்தேன்.

''என்னிடம் கேட்காதே, அம்மா. நானே ஏதோ மாறிப் போயிருக்கிறேன். என் மீதே எனக்கு வெறுப்பாயிருக்கிறது. காரணமில்லாமல் உன் மேல் எரிந்து விழுந்தேன். என்னை நிம்மதியாய் இருக்க விடு, அதுவே மேல்'' என்று

மறுபடி சொல்லி விட்டு அதற்கேற்பக் கையை ஆட்டினுள்.

இரவு வந்தது. இப்போது அலிமானுக்கு நான் சொல்வது எதுவும் பிடிக்காது என்று படுக்கையில் படுத்தவாறு வருத்தத்துடன் எண்ணமிட்டேன், இதே வருத்தத்துடன் தூங்கி விட்டேன். வழக்கமாக நான் இரவில் அடிக்கடி கண்விழித்து அலிமான் எப்படி இருக்கிருள் என்று பார்ப்பதுண்டு. இன்று என்னவோ தூக்கம் பாறுங்கல்லாக என்னை அழுத்தி விட்டது. நடக்கப் போவது மட்டும் எனக்குத் தெரிந்திருந்தால் இமைகளை மூடத்தானும் செய்திருப்பேளு? சேர்ந்தாற் போலப் பத்து இரவுகள் சுவரில் தலையைச் சாய்த்துக்கூட இருக்க மாட்டேனே...

எப்போது, எதற்காகச் சட்டேன்று கண் விழித்தேனே, நினைவில்லை. பார்த்தேன் — அலிமானை அவளுடைய இடத்தில் காணேம். தூக்கக் கலக்கத்தில் எதுவும் உடனே தெளிவுபடுவதில்லையே. அவள் முகப்புப் பக்கம் போயிருப்பாள் என்று முதலில் நினைத்தேன். கொஞ்ச நேரம் காத்திருந்தேன். இல்லை, ஒன்றும் கேட்கவில்லை. பிறகு அலிமானின் படுக்கையைத் தொட்டுப் பார்த்தேன். படுக்கை சில்லிட்டிருந்தது. என் இதயமும் உறைந்து போய்விட்டது. வெகு நேரத்துக்கு முன்பே அவள் எழுந்து விட்டாள்! எப்படியோ உடை மாற்றிக் கொண்டு முகப்புக்கு ஓடினேன். வெளியே மூலை முடுக்கெல்லாம் சுற்றிப் பார்த்தேன், காய்கறித் தோட்டத்துக்கு ஓடிப் போய்த் தேடினேன்.

பிறகு வீதிக்குப் பாய்ந்து சென்றேன். ''அலிமான்! அலிமான்!'' என்று கூவி அழைத்தேன். பதில் இல்லை. நாய்கள்தான் திடுக்கிட்டு வீடு வீடாகக் குலைக்கத் தொடங்கின. என் நெஞ்சு புண்ணாயிற்று. அப்படியானால் போய்விட்டாள் என்று ஆகிறது. இம்மாதிரி இருண்ட இரவில் அவள் எங்கே போய்விட்டாள்? இப்போது என்ன செய்வது? தேடிப்பிடித்து விட முடியுமா? மறுபடி வீட்டுக்குள் போய், விளக்கைக் கொளுத்தி எடுத்துக்கொண்டு தேடக் கிளம்பினேன். வீட்டுக் கதவுக்கு வெளியே போனதும் சவுக்கையில் யாரோ முனகியதும் வீரிட்டதும் கேட்டது போலிருந்தது. வெளி முகப்பைத் தாவிக் கடந்து சவுக்கையின் கதவை விரியத் திறந்தேன் — கையிலிருந்த விளக்கை நழுவ விடத் தெரிந்தேன். என் கண்களையே நம்பாமல் ஸ்தம்பித்து நின்று விட்டேன். வைக்கோல் மேல் மல்லாந்து படுத்திருந்தாள் அலிமான். பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருந்தாள். காய்ச்சலில் புரண்டு கொண்டிருந்தாள்.

''என்ன நீ இப்படி? ஏன் சொல்லவில்லை?'' என்று கத்தி அவளருகே பாய்ந்தேன்.

அவளுக்கு ஒத்தாசை செய்ய விரும்பி அவளைத் தூக்கப்போனவள், இரத்தத்தில் நனைந்து ஊறிய ஆடை நுனி கையில் சுற்றிக்கொண்டதும் நடுநடுங்கினேன். அலிமான் உடம்பு அனலாய்க் கொதித்தது. அவள் சிரமத்துடன் பெருமூச்சு விட்டாள்.

''செத்துக் கொண்டிருக்கிறேன், செத்துக்

கொண்டிருக்கிறேன்'' என்று கரகரத்த குரலில் முனகினாள்...

அவள் வெகு நேரமாக வேதனைப்பட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஆண்டவனே காப்பாற்று! ஆண்டவனே காப்பாற்று!'' என்று நான் வேண்டிக்கொண்டேன். அவளால் தானாகவே பிரசவிக்க முடியாது, டாக்டர்தான் அவளைக் காப்பாற்ற முடியும் என்று எனக்குப் புரிந்துவிட்டது.

அவளை விட்டுவிட்டு ஆய்ஷா வீட்டுக்கு ஓடி முழு பலத்தோடும் சன்னல் கதவைத் தட்டினேன்.

''எழுந்திருங்கள், எழுந்திருங்கள் சீக்கிரம்! பெக்தாஷ், வண்டியைக் கட்டு! அலிமானுக்கு உடம்பு சரியாயில்லை! சீக்கிரம், அப்பனே, அவளுக்கு ரொம்ப மோசமாயிருக்கிறது!'' என்று கத்தினேன்.

அவர்களை எழுப்பிவிட்டுத் திரும்பி ஓடி அலிமானுக்குத் தண்ணீர் பருகக் கொடுத்தேன். அவளுடைய பற்கள் குவளையில் அடித்துக் கொண்டன. குளிர் காய்ச்சல் வந்தவளைப் போல வெடவெடத்தாள். எப்படியோ இரண்டு மடக்கு குடித்தாள், பின்பு முறுக்கிக் கொண்டு புலம்பத் தொடங்கினாள். அதற்குள் ஆய்ஷா அங்கே வந்துவிட்டாள். அவளுக்கு மூச்சு இளைத்தது, நிற்கவே சிரமமாயிருந்தது. அவளே நோயாய்க் கிடந்தாளே. அலிமான் கிடந்த நிலையைக் கண்டதும் முகம் வெளிறிக் கதறத் தொடங்கினாள்:

''அலிமான், என் கண்ணே, என்னம்மா இப்படி? அலிமான், என் அருமை மகளே! பயப்படாதே. ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகிறோம்!''

நல்ல வேளையாக பெக்தாஷ் அன்று நேரங் கழித்து வீடு திரும்பினான், ஆதலால் குதிரை களை லாயத்துக்கு இட்டுச் செல்லாமல் தன் வீட்டுக் கொட்டிலிலேயே கட்டியிருந்தான். விரைவாக வண்டியை வீட்டெதிரே ஓட்டிவந்து நிறுத்தினான். நாங்கள் அதில் மளமளவென்று தீனிப்புல்லைப் பரப்பி, படுக்கை விரித்து, தலையணை போட்டுவிட்டு, மூன்று பேருமாகச் சேர்ந்து அலிமானை எப்படியோ ஒருவிதமாகச் சவுக்கையிலிருந்து வெளியே எடுத்து வந்து வண்டியில் படுக்க வைத்தோம். தாமதிக் காமல் உடனே ஆஸ்பத்திரிக்குப் புறப்பட் டோம்.

ஐயோ, அந்த நொடி விழுந்த கூதிர்காலப் பாதை, ஐயோ, அந்தப் பாழாய்ப் போகிற இருண்ட இரவு... அப்போது ஆஸ்பத்திரி ஆற் றின் மறு கரையில் அமைந்த ஜரேச்யேயில் மட்டுந்தான் இருந்தது. ஆற்றைக் கடக்கப் பாலம் வெகுதூரத்தில் இருந்தது.

நாங்கள் கிராமத்தை விட்டு வெளியேறிய துமே அலிமானுக்கு மறுபடி வலி எடுத்தது. அவள் வீரிட்டாள், தன் மேலிருந்தவற்றை எல்லாம் எடுத்து எறியத் தொடங்கினாள். நான் அவளு டைய தலையை முழங்கால்கள் மேல் வைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டேன். மறுபடி

மறுபடி போர்வையால் மூடிப் போர்த்தினேன், மறுபடி மறுபடி விளக்கை அவள் முகத்தருகே கொண்டுபோய் அவள் விழிகளில் உற்று நோக்கிச் சமாதானப் படுத்தினேன்.

''கொஞ்சம் பொறுத்துக்கொள், அலிமான். இதோ ஆஸ்பத்திரியை அடைந்து விடுவோம். பார்த்துக்கொண்டே இரு, இதோ போய்ச் சேர்ந்து விடுவோம். பாலம் ஓர் எட்டில்தான் இருக்கிறது'' என்று பெக்தாஷும் தேற்றினான்.

உண்மையிலோ, பாலம் எவ்வளவோ தூரத்தில் இருந்தது. குதிரைகளைப் பாய்ச்சலில் விடுவதோ கூடவே கூடாது—அலிமானை உலுக்கிப் போடும். மழை வேறு பலமாகப் பிடித்துக் கொண்டது. கும்மிருட்டு, குளிர் மழை, சேறு, நொடிகள்—எல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டன. அலிமான் வலிப்பு கண்டு துடிதுடித்தாள், முனகினாள், கூச்சலிட்டாள், அப்புறம் திடீரென்று எப்படியோ அமைதி அடைந்து ஈழை இழுக்கத் தொடங்கினாள்.

''அலிமான்! அலிமான்! உனக்கு என்ன?'' என்று நான் திடுக்கிட்டு அவளைத் தழுவிக் கொண்டு விளக்கு வெளிச்சம் அவள் முகத்தில் படும்படி காட்டினேன். அவளுடைய கனலும் விழிகள் என்னை ஏறிட்டு நோக்கின.

''நிறுத்துங்கள்! எனக்கு உயிர் போகிறது! நிறுத்துங்கள்!'' என்று அவள் கறுத்து விறைத்த உதடுகளால் முணுமுணுத்தாள். அவளுக்கு மூச்சு இரைக்கத் தொடங்கிற்று.

நாங்கள் வண்டியை நிறுத்தினோம்.

''என் தலையை இன்னும் உயர்த்து, காற்று போதவில்லை'' என்று கூறி அவள் வாய் விட்டு அழுதாள். பின்பு அவசர அவசரமாகக் கண்ணீரை விழுங்கிவிட்டுச் சொன்னாள்: ''அருமை அம்மா... என் உடம்புக்கு உள்ளே ஒரே எரிச்சலாய் எரிகிறது. சக்தி இல்லை... உயிர் விட்டுக் கொண்டிருக்கிறேன்... எல்லாவற்றுக்காகவும் உனக்கு நன்றி, அம்மா. என்னை மன்னித்து விடு... காஸிம் மட்டும் உயிரோடு இருந்தால்... ஐ-யோ, காஸிம், நான் சாகிறேன்... என்னை மன்னித்து விடு...''

''இல்லை, என் செல்வ மகளே, நீ சாக மாட்டாய். பொறுத்துக்கொள், கண்ணே, தாங்கிக் கொள். பாலம் இதோ கிட்டே தான் இருக்கிறது. கேட்டாயா, நீ சாக மாட்டாய்!'' என்று நான் கெஞ்சித் தேற்றினேன்.

அவளுக்கு மறுபடி முறுக்கியெடுத்தது, உணர்வை இழக்கும் தறுவாயில், பற்களைக் கடித்தவாறு அவள் எஞ்சிய சக்தியைக் கொண்டு போராடினாள்.

''பெக்தாஷ்! அவளைக் கைத்தாங்கலாகப் பிடித்துத் தூக்கு! சீக்கிரம்! அட கூச்சப்படாதே நீ!''

பெக்தாஷ் அலிமானைத் தாங்கி உயர்த்தினான். நான் பிரசவம் பார்க்க முயன்றேன். பிறகு பெக்தாஷ் பொருமிப் பொருமி அழுதான். ரயில் வண்டியின் கடகடப்பு எனக்கு உடனே நினைவுக்கு வந்து விட்டது. ரயில் சக்கரங்கள் உருண்டு ஓடியவாறு என் காதுகளில் பறைய

றைந்தன. ''அம்மா-ஆ! அலிமா-ஆ-ஆ-ன்!'' என்ற உரத்த சத்தம் காற்றில் மிதந்து வந்தது. அதே கணம் பிறந்த குழந்தை வீரிட்டு அல றியது. ஏ வாழ்வே, நீ ஏன் இவ்வளவு கொடி யதாக இருக்கிறுய்? ஏன் இவ்வளவு குருடாக இருக்கிறுய்? குழந்தை பிறந்தது, ஆனுல் அலி மான் உயிர் துறந்தாள். குழந்தையின் ஈரமான வெற்று உடம்பைத் துணி ஓரத்தில் நான் சுருட்டுவதற்குள், தாய் அலிமான் பெக்தாஷின் கைகளில் உயிரற்றுத் தொங்கிக் கொண்டிருந் தாள். தலே ஒரு புறம் சாய்ந்து விட்டது, உயிரற்ற கைகள் ஊசலாடின.

''அலிமான்!'' என்று நான் ஒரே திகிலுடன் கூவி, அவள் கையைப் பிடித்துப் பார்த்தேன். நாடி விழுந்து விட்டது.

ஒரே நொடியில் வாழ்வும் சாவும் என் கண் ணெதிரே மோதிக்கொண்டன!

நாங்கள் வீடு திரும்பும் போது பொல பொல வென்று விடியத் தொடங்கிவிட்டது. காலேக் கருக்கலில் பெரிய வெண்பனிச் சிதள்கள் சுழன்றன. அவை மெத்தென்று பாதையில் படிந்தன. நாற்புறமும் நிசப்தம் நிலவிற்று— ஒலியே இல்லே, உலகம் எங்கும் வெள்ளிய அமைதி திகழ்ந்தது. இந்த வெள்ளிய அமை தியில் வெண் பிடரிகளும் வெள்ளே வால்களும் கொண்ட களேத்த புரவிகள் சந்தடியின்றி வண் டியை இழுத்துச் சென்றன. பெக்தாஷ் வண் டியில் உட்கார்ந்த படியே சத்தமில்லாமல் அழு தான். அவன் குதிரைகளே ஓட்டவில்லே, அவை

தாமே ஓடின. வழி நெடுக அவன் கண்ணீர் பெருக்கினுன். நான் குழந்தையைச் சட்டைக் குள் மார்புற அணைத்துக்கொண்டு வண்டி அருகே பாதை ஓரமாக நடந்தேன். தரை மீது படிந்திருந்த வெண்பனி எனக்குக் கறுப் பாகத் தென்பட்டது.

16

இவ்விதமாக, யுத்தம் கடைசி முறையாகத் தன்னை நினைவு படுத்தியது. அன்று காலையில் நான் நடந்த பாதை என் வாழ்வில் யாவற்றி லும் கடினமான பாதையாக விளங்கிற்று. இந்த மாதிரி வாழ்வதை விடச் சாவதே மேல் என்று எனக்குத் தோன்றியது... என் கைகளில் கதகதப்பாக ஒண்டியிருந்த மதலை, வெது வெதுப்பும் மென்மையும் உள்ள உருண்டை போல அசைந்து நெளிந்தது, அழுவதை நிறுத் தவே இல்லை. அதைச் சுமந்து சென்றவாறு, ''எவ்வளவு ஆக்கங்கெட்டவனுக நீ வந்து பிறந்திருக்கிருய், முதல் கத்தலிலேயே தாயைப் பறிகொடுத்து விட்டாயே'' என்று சொன்னேன். ''ஆனுல் வாழ்க்கை ஒரேயடியாக அழிந்து விட வில்லை, முளை எஞ்சியிருக்கிறது'' என்ற எண்ணம் எங்கோ தொலைவிலிருந்து வந்தது. ''தாய்ப் பாலைக் கூடச் சுவைத்து அறியாத இந்தப் பிள்ளை எந்த விதத்தில் வாழ்பவன் ஆவான்? இல்லை. இவன் உயிர் நீண்ட காலம் நிற்காது''

என்று அப்போதே எண்ணமிட்டேன். ஆனால் குழந்தை பிழைத்திருக்க வேண்டும் என்ற பெருத்த ஆசை உண்டாயிற்று. விதியை இறைஞ்சினேன்: ''இவன் ஒருவனாவது உயி ரோடு இருக்கட்டும்! இவனைச் சாக அடிக் காதே! ஒருவேளை இவன் பிழைத்து விடுவான்! ஒருவேளை எப்படியாவது கண்டங்களுக்குத் தப்பி வாழ்ந்திருப்பானோ?..'' இப்படியே நிரா சையில் விழுவதும் நம்பி எதிர்பார்ப்பதும் மீண்டும் நிராசையில் விழுவதுமாக நடந்தேன். ஆக நாங்கள் கிராமத்தை அடைந்த போது நான் அறியாமலே காலைப் பொழுதாகி விட் டது.

வெண்பனி முன் போலவே ஓசையின்றி அடர்த்தியாகப் பொழிந்தது. எங்கும் முன் மாதிரியே வெள்ளிய நிசப்தம் குடி கொண் டிருந்தது. அரை குறையாகக் கட்டப்பட்ட வீதியில் புதர் மண்டிக் கிடந்த இடிபாடுகள் இந்த நிசப்தத்துக்கு இடையே இன்னும் பயங் கரமாகக் காட்சி அளித்தன. ஏழு ஆண்டு களுக்கு முன்னால் இங்கே தொடங்கிய வேலை யின் பரிதாபகரமான சுவடுகள் மட்டுமே எஞ்சி யிருந்தன. வெண்பனி உயிரற்ற வீதியில் சுழன்று, வெறிச்சோடி வாயைப் பிளந்து கொண்டு நின்ற இடிபாடுகளையும் அமங்கல மாகச் செறிந்து கிடந்த உலர்ந்த முட் புதர் களையும் வேறு செடிகளையும் பனிக்குவைகளால் மூடிக் கொண்டிருந்தது. அலிமானுக்கும் காஸி முக்கும் சொந்தமாயிருந்த மனையிடத்தில், அவர்

களுடைய கவலைகளுக்கும் கனவுகளுக்கும் நினைவுச் சின்னம் போன்று கற்குவியல்களும் செங்கல் அடுக்குகளும் முன் மாதிரியே கிடந்தன.

நிலையாக அமைதி அடைந்து விட்ட அலிமான் வெளிறிப் போய், மூடிய விழிகளுடன் படுத்திருந்தாள். அவள் தலை இப்புறமும் அப்புறமுமாக ஆடிக் கொண்டிருந்தது. அவள் முகத்தின் மேல் விழுந்த வெண்பனி உருகவில்லை.

கிராமத்தின் கோடி வீடுகளுக்கு அருகே பெக்தாஷ் வண்டியிலிருந்து குதித்து வாழ்க்கையிலேயே முதல் தடவையாக இரைந்த ஆண் குரலில் அழுது கொண்டே அலிமானின் மரணச் செய்தியை மக்களுக்கு அறிவித்தான். வீடுகளுக்கு உள்ளிருந்து மக்கள் ஓடிவந்து கண்ணீரும் கம்பலையுமாக எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். ஆய்ஷா தெரு முழுவதும் கேட்கும்படியாக உரக்கப் புலம்பிக் கொண்டே ஓடிவந்து என்னிடமிருந்து குழந்தையை வாங்கித் தன் வீட்டுக்கு எடுத்துப் போனாள்.

ஒரு நாளுக்குப் பிறகு நாங்கள் அலிமானை அடக்கம் செய்தோம். மரபுப் படி பெண்கள் இடுகாடு செல்வது கூடாது. ஆயினும் நான் போனேன். ஒருவரும் என்னை ஒன்றும் சொல்லவில்லை. என் வீட்டில் ஆண்கள் யாரும் இல்லாததால் மரபைப் பின்பற்றுவதற்கு என்னால் முடியவில்லை. அலிமானை நானே அடக்கம் செய்தேன், சவக் குழியின் அடியில் அவளை நானே கிடத்தினேன், முதல் பிடி மண்ணை நானே போட்டேன். அன்றைக்கும் அடர்ந்த பஞ்சு

வெண்பனி பெய்து கொண்டிருந்தது. செம்மண் குவியல் விரைவிலேயே வெண்திட்டு ஆகிவிட்டது.

இளவேனில் காலத்தில் நான் அலிமானின் கல்லறையில் மலர்ச் செடிகள் நட்டேன். ஒவ்வொரு வசந்தத்திலும் அவ்வாறே நடுகிறேன். அவளுக்குப் பூக்கள் மேல் கொள்ளை ஆசை அல்லவா, அதனால்தான்.

நல்லது. மேலே வாழ்க்கை மீண்டும் தொடங்கிற்று. அலிமானின் மகன் ஷான்பொலோத்துக்கு ஆரம்ப நாட்களில் ஜோரோபேக்கின் மருமகள் முலைப்பால் ஊட்டினாள். பிற்பாடு நான் அவனுக்கு ஆட்டுப்பால் கொடுக்கலானேன். நானும் அவனும் போதும் போதும் என்னும் அளவு பாடுபட்டு விட்டோம். அதை விவரிக்கவும் வேண்டுமா என்ன?.. ஒரே வார்த்தையில் சொல்வதானால் பிழைத்திருக்க வேண்டும் என்று அவன் தலையில் எழுதியிருந்தது, அதனால் அவன் பிழைத்து விட்டான். இதற்காக விதிக்கு நன்றி செலுத்துகிறேன். இப்போது அவனுக்குப் பன்னிரண்டு வயது ஆகிறது, அவன் சிறுவனாக இருந்த போது அவனுக்குச் சிகிச்சை செய்த மருத்துவர் இப்போது எங்கள் பிரதேசம் முழுவதிலும் பிரசித்தி பெற்ற மனிதராக விளங்குகிறார். தற்பொழுது என்னைக் காணும் போதெல்லாம் அவர், ''என்ன, பாட்டீ! பேரன் சௌக்கியமாக வளர்ந்து வருகிறானா?'' என்று கேட்கிறார்.

''ஆண்டவன் அருளால் ஏற்கனவே ஜிகித்

தாக வளர்ந்து விட்டான்!'' என்று பதில் அளிக்கிறேன்.

அவர் என்னை நோக்கி முறுவலிக்கிறார்.

''மிகவும் நல்லது. அவனை வளர்த்து மனிதனுக்கு'' என்கிறார் அவர்.

ஷான்பொலோத்தையும் என்னையும் அவர் வெகு காலமாக அறிவார். அப்போது குழந்தைக்கு ஒன்றரை வயது. அவன் நோயாளியாகவே தான் வளர்ந்தான். ஒரு தரம் அவன் படு சீக்காய்க் கிடந்தான். பார்க்கிறேன், உதடுகள் நீலம் பாரித்திருக்கின்றன, கண்கள் திறக்க மாட்டேன் என்கின்றன, மூச்சு விடுவது பெரும் பாடாயிருக்கிறது. நான் அவனைத் தூக்கிக் கொண்டு விடுவிடென்று ஆஸ்பத்திரிக்கு நடந்தேன். பனிக்காலம். ஆற்றுக்குக் குறுக்கே இறங்கிக் கடந்து சென்றேன். மருத்துவன் வாலிபன். சமீபத்தில்தான் படிப்பை முடித்தான் போலிருந்தது. நான் நனைந்த உடையில் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டு நிற்பதைக் கண்டு அரண்டு போய்க் கைகளை வீசி ஆட்டினான்.

''உங்களுக்கு என்ன, பைத்தியமா? தண்ணீரில் நடக்க உங்களை யார் அனுமதித்தது? குழந்தையின் தாயார், தகப்பனார் எங்கே?'' என்று இரைத்தான்.

''நான் தான் இவனுக்கு அப்பனும் அம்மையும், மகனே. இவனைச் சாக விடாதே. இவன் இறந்து போனால் நான் உயிர் தரிக்க மாட்டேன்'' என்றேன்.

ராத்திரி பூராவும் அவன் குழந்தையோடு போராடிக் கொண்டிருந்தான். இரண்டு மணிக்கு ஒரு தரம் ஊசி போட்டான். எனக்கு உலர்ந்த ஆடை கொடுத்தான். மருந்தை ஊட்டினான். ஆனாலும் காலையில் நான் காய்ச்சலில் விழுந்து விட்டேன். இரத்தம் துப்பத் தொடங்கினேன். எனக்கு நினைவிருப்பது இதுதான்: மருத்துவன் என் தலைமாட்டுக்கு வந்து என் நெற்றியில் கையை வைத்து, ''தளர்ந்து விடாதே அம்மா, தாக்குப்பிடி. உன் பேரன் ஏற்கனவே சிரிக்கிறான். அவனுக்கு உடம்பு நேராகி விட்டது'' என்றான்.

''அப்படியானால் நானும் பிழைத்து எழுந்து விடுவேன்'' என்று கிசுகிசுத்தேன்.

ஒருவேளை, பேரன் உயிரோடு இருந்ததால் தான் நானும் பிழைத்து விட்டேன் போலும்.

இந்த ஆண்டுக் கோடையில் ருசிகரமான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. பள்ளிக்கூட விடு முறையின் போது என் பேரன் தெருவோடு ஓடினான், அப்புறம் பார்க்கிறேனோ, காஸிமின் சைக்கிளை முகப்புக்குள் இழுத்து வந்தான். அதே பழைய சைக்கிள், இருபது வருஷங் களாக அது சவுக்கையில் கூரைக்கு அடியில் தொங்கிக் கொண்டிருந்தது. ஆக அதை இழுத்துக் கொண்டுவந்து செப்பனிடத் தொடங் கினானே பார்க்கலாம்! நான் ஒன்றும் சொல்ல வில்லை. சின்னப் பையன்தானே, அதோடு கொஞ்ச நேரம் பாடுபடுவான், பின்பு வீசி எறிந்துவிடுவான் என்று நினைத்தேன். செப்பனிடு

வதற்கு அதில் ஒன்றும் இல்லை. இரும்பெல்லாம் துருவேறிக் கிடந்தது. ரப்பர்ப் பகுதிகள் வெடித்துப் பிய்ந்து போயிருந்தன. அவனுடைய தோழர்களும் வந்து கேலி செய்தார்கள். இது வெறும் கழிவு இரும்பு, பண்டைக் காலப் பாடாவதி என்றார்கள். அவனோ ஒரே பிடிவாதமாக மூக்கை உறிஞ்சிக் கொண்டு தன் வேலையில் முனைந்திருந்தான். பெக்தாஷ் உதவிக்கு வராவிட்டால் அவனால் ஏதேனும் உருப்படியாகச் செய்திருக்க முடியுமா என்பது சந்தேகந்தான். பெக்தாஷும் இந்த வேலையில் கலந்து கொண்டான். கலியாணமாகித் தகப்பன் ஆகி விட்ட போதிலும் அவனும் சின்னப் பையன் போல ஒரே தீவிரமான தோற்றத்துடன் பாடு பட்டான். பெக்தாஷுக்கு ஷான்பொலோத் மேல் பிரியம். ஏதாவது வேண்டுமானால் பள்ளிக் கூடத்திற்கும் போய் ஆசிரியரைப் பார்க்கிறான். ஆய்ஷா உயிரோடு இருக்கும் போதே அவனுக்கு மணம் ஆகிவிட்டது. அலிமான் காலமானதற்கு ஒரு மூன்று ஆண்டுகளுக்கெல்லாம் ஆய்ஷா இறந்து போனாள். என் சிநேகிதியின் மரணத்தால் நான் மனமுடைந்து முட்டி மோதிக் கொண்டேன். அவளும் நானும் தாம் எவ்வளவு துன்பம் அனுபவித்தோம்! பெக்தாஷ் நல்ல மனிதனாக மலர்ந்து விட்டான். புத்திசாலி, உழைப்பாளி. அவனுக்கு மூன்று குழந்தைகள். மனைவி குல்ஸூன் நல்ல அண்டை வீட்டுக்காரி. அவன் வெகு காலமாகவே அறுவடை இயந்திர ஓட்டியாக வேலை செய்து வருகிறான்.

ஆக ஒரு நாள் ஷான்பொலோத் துடைத்து எண்ணெய்போட்ட சைக்கிளோடு, தானும் மேலெல்லாம் எண்ணெயாக வந்து சேர்ந்தான்.

''பாட்டீ, பார், அப்பாவுடைய சைக்கிள் எப்படி ஆகிவிட்டதென்று!'' என்றான்.

என் கைகள்கூட மரத்துப் போயின. இந்தச் சொற்களைக் கேட்டு எனக்கு மகிழ்ச்சியும் துயரமும் ஒருங்கே உண்டாயின. அவனுக்கோ பெருமை பிடிபடவில்லை.

''எனக்கு இப்போதே ஓட்ட முடியும். இதோ பார்!'' என்றான்.

சீட்டில் உட்கார்ந்தால் அவன் கால்கள் பெடலை எட்டவில்லை. ஆகவே சைக்கிளின் பக்க வாட்டில் தொற்றிக்கொண்டு ஒரேயடியாக வளைந்தவாறு இடமும் வலமுமாக உடலை ஆட்டினான்—இதோ விழுந்து விடுவான் போல.

''இறங்கு, விழுந்து விடுவாய்!'' என்று கத்தினேன்.

அவனோ இன்னும் உற்சாகமாக வாயிலைக் கடந்து தெருவுக்குப் போய் விட்டான். நான் அவன் பின்னே ஓடினேன். தெருவில் வேகமாக ஓட்டிக் கொண்டு போனவன் சைக்கிளோடு தொபுகடீர் என்று விழுந்தான். பலத்த காயம். நான் ஓடிப்போய் அவனைத் தரையிலிருந்து தூக்கினேன்.

''சாகப் பார்க்கிறாயா, ஊம்? நல்ல யோசனை செய்தாய் போ! இனிமேல் சைக்கிள் விட்டாயோ, தெரியும் சேதி!'' என்று அதட்டினேன்.

''இனிமேல் விழமாட்டேன், பாட்டீ. நான் சும்மா சோதனை பார்த்தேன். ஒரு தரங்கூடச் சைக்கிளிலிருந்து நான் விழுந்ததில்லை அல்லவா?'' என்றான்.

நான் வாய்விட்டுச் சிரித்தேன். பார்க்கிறேன், பெக்தாஷ் வேலி அருகே நின்றுகொண்டிருந்தான், சும்மா நின்று பார்த்துக்கொண்டிருக்கும் பாவனையில். அவன் ஒன்றும் சொல்லவில்லை, நானும் ஒன்றும் சொல்லவில்லை. சொற்கள் இல்லாமலே நாங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டோம்.

விரைவில் அறுவடை தொடங்கிவிட்டது. ஒரு நாள் சாயங்காலம் பெக்தாஷ் எங்கள் வீட்டுக்குவந்தான்.

''உங்கள் ஷான்பொலோத்தை அறுவடை இயந்திரத்தில் துணையாளாகச் சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன்'' என்றான்.

''ஏற்றவன் என்றால் சேர்த்துக்கொள்'' என்று சொன்னேன்.

என்னவோ அனுமதித்து விட்டேன். ஆயினும் இரண்டு நாட்கள் சென்றதும் அவனைக் கண்டு விசாரிக்கப் போனேன். அவன் இன்னும் குழந்தைதானே. கஷ்டமாக இருந்தாலும் இருக்கும்.

என் ஷான்பொலோத் அறுவடை இயந்திரத்தில் வைக்கோல்காரனாக வேலை செய்துகொண்டிருந்தான். என்னைக் கண்டதும் ஏதோ மலை உச்சியிலிருந்து கத்துபவன் போல, ''பாட்டீ! நான் இதோ இருக்கிறேன்!'' என்று கூவினான்.

இயக்கு சக்கரத்தின் அருகே நின்றுகொண்

டிருந்த பெக்தாஷ் என்னை நோக்கிக் கையை ஆட்டி வணக்கம் தெரிவித்தான்.

நான் வாய்க்கால் கரையில் மர நிழலில் உட்கார்ந்து மாலை வரை அறுவடையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கதிர்க்கட்டுகளைக் களத்துக்கு ஏற்றிச் சென்றவாறு லாரிகள் முன்னும் பின்னும் சாலையில் புழுதிகிளப்பிக் கொண்டு போய் வந்த வண்ணமாயிருந்தன.

மங்குலில் அறுவடை இயந்திர ஓட்டிகள் இளைப்பாற வந்தார்கள். ஷான்பொலோத் பெக்தாஷைப் போலவே களைப்பும் பெருமையும் ததும்ப நடந்து வந்து, அவனைப் போன்றே மௌனமாகவும் செருமிக்கொண்டும் வாய்க் காலில் உடம்பு கழுவிக் கொள்ளலானான். என் கையில் இருந்த முடிச்சைக் கணடதும் களிதுள் ளினான்:

''பாட்டீ, நீ ஆப்பிள் கொண்டுவந்திருக் கிறாயா?''

''ஆம்'' என்றேன்.

''அப்போது அவன் ஓடிவந்து என்னைக் கட்டிக் கொண்டு முத்தம் கொடுத்தான்.

பெக்தாஷ் விழுந்து விழுந்து சிரித்தான்.

''எதற்காகப் பிகு பண்ணிக்கொண்டாய்? அப்போதே பாட்டிக்கு முத்தம் கொடுத்திருக்க வேண்டும். ஊம், அலம்பிக்கொள் உடம்பை, சீக்கிரம். இல்லாவிட்டால் நேரம் கிடைக்காது'' என்றான்.

வயல் வண்டி அருகே சாப்பிட உட்கார்ந் தோம். ரொட்டி அப்போதுதான் தயாராகிச்

சூடாக இருந்தது. ஷான்பொலோத் ரொட்டி களைத் துண்டாக்கி ''எடுத்துக்கொள், பாட்டீ!'' என்றான்.

நான் ரொட்டியை ஆசி கூறி வாழ்த்தி விட்டுத் துண்டைச் சிறிது கடித்து மென்றேன். அறுவடை இயந்திர ஓட்டிகளின் பழக்கமான கை மணத்தை உணர்ந்தேன். மண்ணெண் ணெயும் இரும்பும் வைக்கோலும் முதிர்ந்த கோதுமையும் சேர்ந்த வாசனை ரொட்டியில் கமழ்ந்தது. ஆம், ஆம், எல்லாம் அப்படியே அந்த நாளில் போலவே! நான் கண்ணீருடன் ரொட்டியை விழுங்கினேன். ''கோதுமை இறப்பு அற்றது, கேட்டாயா என் மகனே, காஸிம்! வாழ்க்கையும் இறப்பு அற்றது, உழைப்பும் இறப்பு அற்றது!'' என்று எண்ணிக் கொண் டேன்.

அறுவடை இயந்திர ஓட்டிகள் என்னை வீடு செல்ல விடவில்லை. நீங்கள் எங்கள் விருந்தினர், வயலிலேயே இரவைக் கழியுங்கள் என்றார்கள். வைக்கோலில் எனக்குப் படுக்கை விரித்தார்கள். அந்த இரவில் நான் வானை நோக்கினேன். ஆகாச கங்கையில் புத்தறுவடையான தங்க வைக்கோலும் சிந்திய தானியங்களும் அடிக் கதிரின் உமியும் சிதறிக் கிடப்பது போல எனக்குப் பிரமை உண்டாயிற்று. தாரகைகள் செறிந்த அந்த உயரத்தில், வைக்கோல்காரனின் பாதை எனப்படும் ஆகாசகங்கையின் ஊடாகத் தொலைதூரப் பாட்டுப் போல அப்பால் போகி றது ரயில் வண்டி. அதன் சக்கரங்களின் கட

கடப்பு வரவர எட்டச் செல்கிறது. தணிந்து கொண்டு போகும் இந்தக் கடகடப்பில் உறங்கத் தொடங்கியவாறே நான் எண்ணமிட்டேன்: புதிய பயிர்த் தொழிலாளி ஒருவன் இன்று உலகில் தோன்றி விட்டான்; அவன் நீடு வாழ்க, வானத்தில் எத்தனை விண்மீன்கள் உள்ளனவோ அத்தனை தானியங்கள் அவன் உழைப்பால் விளைக!

கிழக்கு வெளுக்கும் போது நான் கண் விழித்து, அறுவடைக்காரர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது என்பதற்காகக் கிராமத்துக்குப் போய் விட்டேன்.

மலைகளின் பின்னே அத்தகைய அற்புதச் சூரியோதயத்தை நான் வெகு காலமாகக் காணவில்லை. வானம்பாடியின் அம்மாதிரிப் பாட்டை நான் நீண்ட காலமாகக் கேட்கவில்லை. அது தெள்ளிய வானில் மேலும் மேலும் உயரே பறந்து, சாம்பல் நிற உருண்டை போல அங்கே தொங்கியவாறு, மனித இதயமே போன்று அலுப்பின்றி அடித்துக் கொண்டது, படபடத்தது, ஸ்தெப்பி வெளி எங்கும் விடாது இசையைப் பொழிந்தது. ''பார், நம்முடைய வானம்பாடி பாடத் தொடங்கிவிட்டது!'' என்று ஒரு காலத்தில் ஸுவான்குல் சொல்வதுண்டு. விந்தைதான், வானம்பாடி கூட எங்களுக்குச் சொந்தமாக இருந்தது. நீயும் இறவாய், என் வானம்பாடியே!

''ஏ என் அருமை வயலே, இப்போது நீ அறுவடைக்குப் பிறகு இளைப்பாறிக் கொண்டிருக்கிறாய். மக்களின் குரல்கள் இங்கே கேட்கவில்லை, சாலைகளில் லாரிகள் புழுதி கிளப்பவில்லை, அறுவடை இயந்திரங்கள் தென்படவில்லை, அறுவடை முடிந்த நிலத்துக்கு மந்தைகள் இன்னும் வந்து சேரவில்லை. வயலே, நீ உனது விளைச்சலை மக்களுக்கு வழங்கி விட்டு, பிள்ளைப் பேற்றுக்குப் பின் தாய்ச்சி போலக் கிடக்கிறாய். கூதிர்கால உழவு நடக்கும் வரை நீ இளைப்பாறுவாய். இப்போது இங்கே நம் இருவரையும், உன்னையும் என்னையும் தவிர வேறுயாரும் இல்லை. என் வாழ்க்கை முழுவதையும் நீ அறிவாய். இன்று நினைவு நாள். ஸுவான்குல், காஸிம், மாஸெல்பேக், ஜைனக், அலிமான் ஆகியோரின் நினைவுக்கு இன்று நான் அஞ்சலி செலுத்துகிறேன். நான் உயிரோடு இருக்கும் வரையில் அவர்களை ஒருபோதும் மறவேன். வேலை வந்ததும் எல்லாவற்றையும் ஷான்பொலோத்துக்கு விவரிக்கிறேன். பிறப்பிலேயே அறிவும் உள்ளக் கனிவும் வாய்க்கப் பெற்றிருந்தால் அவன் யாவற்றையும் புரிந்து கொள்வான். ஆனால் மற்றவர்கள் விஷயத்தில், பரந்த உலகில் வாழும் எல்லா மக்களுடைய விஷயத்தில் என்ன செய்வது? அவர்களுடன் நான் உரையாட வேண்டி இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்தையும்

அணுகுவது எவ்வாறு?

''வானில் சுடரும் ஏ கதிரவனே, நீ உலகைச் சுற்றிவருகிறாய், மக்களுக்கு உரைப்பாயாக!

''ஏ மழை முகிலே, உலகின் மீது ஒளி மழை பொழிந்து, ஒவ்வொரு துளி வாயிலாகவும் மக்களுக்குப் பகர்வாயாக!

''நிலமகளே, உணவூட்டும் அன்னையே, எங்கள் அனைவரையும் நீ உனது மார்பகத்தே தாங்குகிறாய், உலகின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள மக்களை ஊட்டி வளர்க்கிறாய். சொல்லுவாயாக, அருமை நிலமே, மக்களுக்குச் சொல்லுவாயாக!''

''இல்லை, தல்கோனே, நீயே மொழிந்திடுவாயாக. நீ **மானிடப் பெண்.** நீ எல்லோரிலும் உயர்ந்தவள், எல்லோரிலும் அறிவு மிக்கவள், நீ — **மனித குலத்தினள்!** நீயே புகன்றிடுவாயாக!

18

''போகிறாயா, தல்கோனே?''

''ஆம், போகிறேன். உயிரோடு இருந்தால் மறுபடி வருவேன். மறு சந்திப்பு வரை, வணக்கம், வயலே.''

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41, பி. சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை — 600098

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை — 600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001

87 89, ஒப்பணக்கார தெரு, கோயம்பத்தூர் — 641001

சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008

செர்ரி ரோடு, சேலம் — 636001

விற்பனை நிலையங்கள்

3—22—75— D, மதுரை சாலை; திருநெல்வேலி ஜங்ஷன்

66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்

Перевод сделан по изданию:
Ч. Айтматов. Повести гор и степей.
Изд. „Молодая гвардия", 1965.

கிர்கீஸியாவின் மக்கள் எழுத்தாளரும் சோவியத் யூனியனுடைய அரசுப் பரிசும் லெனின் பரிசும் பெற்ற சிங்கிஸ் ஐத் மாத்தவ் எழுதிய ''முதல் ஆசிரியர்'', ''குல்சாரி'', ''ஜமீலா'', ''சிகப்புத் துண்டு அணிந்த என் சிறிய லின்டன் மரம்'', ''வெள்ளைக் கப்பல்'', ''அன்னை வயல்'' முதலிய நாவல்கள் வாசகர்களின் சிறப்பான வரவேற்பைப் பெற்றிருக் கின்றன. அவை உலகத்தில் ஐம்பதுக் கும் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. பல நாவல் கள் திரைப்படங்களாகத் தயா ரிக்கப்பட்டிருக்கின்றன.

சிங்கிஸ் ஐத்மாத்தவ் எழுதிய ''அன்னை வயல்'' என்ற குறுநாவலின் தமிழ் மொழிபெயர்ப்பைச் சில வருடங்களுக்கு முன்பு நாங்கள் வெளியிட்டோம். பாசிஸ்ட் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து சோவியத் மக்கள் நடத்திய மாபெரும் தேசபக்தப் போர் இந்தக் கதைக்குப் பின்னணியாகும். ஒரு தாய் இந்தப் போரில் தன்னுடைய மூன்று குழந்தைகளையும் இழந்துவிட்டாள். ஆனால் நன்மையின் மீதும் மனித குலத்தின் மீதும் கொண்டிருந்த நம்பிக்கையை அவள் இழக்கவில்லை. அந்த எளிமையான தாயின் சோகக் கதையை ஆசிரியர் உருக்கத்துடன் விவரிக்கிறார். உலகத்தில் மிகச் சிறந்தது, மிகவும் அழகானது ஒரு அன்னையின் தூய நல்லிதயமே. அத்தகைய அன்னையைப் பற்றிய அழியாச் சித்திரம் இக்குறுநாவல். இதை மீண்டும் தமிழ் வாசகர்களுக்குப் படைக்கிறோம்.



''...வாழ்க்கையின் உரைநடையைப் பொற் கவிதையாக மாற்றுகின்ற திறமை சிங்கிஸ் ஐத்மாத்தவிடம் உண்டு...''
லிதெரதுர்னயா கெஜட், மாஸ்கோ, 1976.

''சிங்கிஸ் ஐத்மாத்தவ் நம் காலத்திய வாழ்க்கையின் ஆன்மிகப் பண்பைத் தொன்மையான கீழ்த்திசை மக்களின் வீறுமிக்க துன்பக் கவிதையுடன் மிகவும் அசாதாரணமான முறையில் இணைக்கிறார். அவருடைய எழுத்துக்களில் உள்ள கவித்துவத்தின் ஊற்றுக்கண் இதுவே.''

வெளிநாட்டு வாசகர்களின் விமரிசனங்களிலிருந்து.